www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
පිටු 20 பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஜன. 14-20, 1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU NATIONAL TAMIL WEEKLY முரசு 136

## தொண்டா விடும் தூது !



## அணிதிரளும் கரும்புலிகள்

# அடுத்த குறி எங்கே ?



உவகை பொங்கட்டும்
உள்ளங்கள் மகிழட்டும்
வந்தாள் தைமகள்
வாழ்த்துக்கள் உங்களுக்கு!

ஊ..ஊ..ஊ..
ஊர்மிளாவின் மறுபக்கம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## புன்னகை மறந்த தை மகள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

வசீகரமான வாழ்த்துக்கள்
தந்தவர்கள் அனைவரோடும்
இனிய கைகுலுக்கல்.
மனசெங்கும்
மகிழ்ச்சி மத்தாப்பூ!

வாழ்த்து மடல்களில்
அநேகமானவற்றில்
புறாக்கள் அல்லது பூக்கள்.

எல்லோருக்கும்-
இதய விருப்பமாய் இருப்பது
இனிய சமாதானம்தான்.
எப்போதுமே-
எட்டாத உயரத்தில்
இருப்பதற்குத்தானே மதிப்பு!

ஆனால்-சமாதானம்
அருகில் வந்தால் கூட
அர்த்தமுள்ளதாய்-அற்புதமாய்
அழகாய்த்தான் இருக்கும்.
போரில் பட்டவடுக்களை
வருடிக் கொடுக்கும்.

சமாதானம் எங்கிருந்தாலும்
அதற்கு மதிப்பிருக்கிறது.
ஆனால்-எங்கிருக்கிறது
என்றுதான் எவருக்கும்
இன்றுவரை தெரியவில்லை!

தைபிறந்தால்-
வழி பிறக்கும் என்பார்கள்.
எத்தனை தைகள்
வந்தன-போயின.
எந்த வழி திறந்தது?

போரின் விழிகள்-
தீயெனச் சிவந்து திறந்திருக்கையில்
தீயன பிறக்கவே
இங்கு பல வழிகள் உள்ளன!

வடக்கு-கிழக்கில்
வாழ இருந்த வழிகளும்
யுத்தக் கரங்களால்
வழிமறித்து மூடப்படுகின்றன.

வடக்கு-
இடம்பெயர்ந்த மக்களால்
நிரம்பி வழிகிறது.

வயல்களைவிட்டும்
வாழவைத்த நிலங்களை விட்டும்
உழைக்கும் மக்கள்
வெளியேறிவந்து
வீதியில் நிற்கிறார்கள்.

கிழக்கிலும்-
வயல் செய்யவும்
தொழில் செய்யவும்
தினசரி அவலங்கள்
குறுக்கே நின்று தடுக்கின்றன!

போரில் ஈடுபடும்
இரு தரப்புமே
பொதுமக்களை மறந்து
பலப்பரீட்சையில்
குறியாய் உள்ளனர்!

அவலங்கள் சூழ்ந்த
அகோர நாட்களில்
முகம் காட்டும் தை மகள்
முறுவல் காட்ட
முடியாமல் வாடுவாள்!

நெஞ்சமெனும் பானைகளில்
பாலுக்குப் பதிலாய் கண்ணீர்.
அரிசிக்குப் பதிலாய் அவலம்.
சர்க்கரைக்குப் பதிலாய் சாவுகள்!

தை மகள்-
எப்படி புன்னகைப்பாள்?

வாடிய பயிராய்
மக்கள் வாழ்க்கை!
நீரூற்ற வேண்டியவர்களுக்கு
நெருப்பில்தான் விருப்பம்!

எனவே - தீயணையாது.
தீயவை லேசில் மாளாது.

என்றாலும்-சூரியனுக்கு
நாம் நன்றி சொல்லலாம்.
சூரியனும்
இங்கே இல்லையென்றால்
வீடுகளுக்கும்-முகாம்களுக்கும்
வெளியேகூட
வெளிச்சம் இருக்காதல்லவா!

பொங்கிப் படையலிட
முடியாது போனாலும்
உள்ளத்தில் பொங்கும்
நன்றி போதும்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## தேவ சித்தம்

இயேசு கிறிஸ்து இவ்வுலகத்துக்கு தேவனுடைய சித்தப்படியே வந்தார்: தேவனுடைய சித்தப்படியே எதையும் செய்தார்.
யோவான்: 5:30
யோவான்: 6:38


யோவான்: 5:24ல் "இயேசுவை இவ்வுலக இரட்சகராக ஏற்று, அவரை அனுப்பிய தேவனை விசுவாசிப்பவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு". எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசுவை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு பாவவிமோசனமே இல்லை. என்பதை பரிசுத்த வேதாகமம் நமக்கு யோவான்: 8:24 மூலமாக வலியுறுத்திக் காட்டுகின்றது.

எனவே, இன்றே இயேசுவை கடவுளால் அனுப்பட்ட உலக இரட்சகராக ஏற்றுக் கொண்டு தேவ சித்தத்தை நிறைவேற்றுவோமாக.

ரூபராஜ் தேவதாசன், கெங்கல்ல.

## ஆன்மீகம்



### வருமானக் கணக்கும் வான் மறையும்

இன்று எம்மில் சிலர் எல்லாமே தொழில் என்ற ரீதியில் ஒரு வாத்தகரின் வருமானக் கணக்கை குறைத்து பிறிதொருவர் மற்றையோருக்கு எழுதிக் காட்டுவதன் மூலம் அந்த வர்த்தகரிடம் இருந்து அவர் அதற்காக சம்பளத்தை பெற்றுக் கொள்கிறார்.

தொழில் என்பது ஒருவருக்கொருவர் கலந்து உறவாடி கூட்டாக நிகழ்த்த வேண்டிய ஒரு சமூகப் பணி.

இது பற்றி வான் மறை வளமாகக் கூறுகிறது. இன்னும் நன்மைக்கும் (தீமையைத் தவிர்த்து) நேராக இருப்பதற்கும் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். மேலும் பாபத்துக்கும், அக்கிரமச் செயலுக்கும் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்காதீர்கள்.

அல் குர் ஆன்(5:2)

எத் தொழில் ஆகினும் இறை மறைக்கு ஏற்றதாக அதை அமைத்துக் கொள்ள வேண்டும். அதுவே அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட ஹலாலான தொழிலும் கூட.

எம்.சி.கலீல், கல்முனை05.

## கவிதைப்போட்டி இல-133

### பரிசுக்குரிய கவிதை

### முகவரி?

இருளை எதிர்க்கும்
தற்கொலைத் தாக்குதல்
முடிந்த பின்னர்
இதன்-
முகவரி தெரியாது!

க.விநாயகமூர்த்தி, வவுனியா.

## கவிதைப் போட்டி இல-136



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 20.01.1996.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 136. தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### தேவதை

வீட்டுக்குள் ஒரு
வெளிச்ச தேவதை.
ஆயுள் மட்டும்
அதிகமில்லை.

எஸ்.சாந்தினி, கொழும்பு-05.

### புதிர்

ஒரு நகரத்தின்
வீழ்ச்சிக்கு
இது
கண்ணீர்
வடிக்கிறதோ?

சுபாவரன், கண்டி.

### அமைதி தா

எட்டுத் திக்கும்
எதிரொலித்த
சந்தத் தமிழ்
முட்டுப் பட்டு
முடமாகிக் கிடக்கின்றது.
சுட்டுத் தள்ளிய
சூரியக் கதிர் ஓய
விட்டெறியும்
மெழுகுதிரியே
சட்டென
அமைதி தா.

ரோஜா ஆனந்தராஜா,
ராகலை.

### தீக்குளிப்பு

அந்தகாரத்துக்கு
கண்டனத் தீர்மானம்
சின்ன வர்த்தி
தீக்குளித்தது!

எஸ்.ஜெமீல், புதிய
காத்தான்குடி.

### "சூரியப்பூ"

இந்த
விதவைக்கு,
சூரியப்பூ
சூட்டியவர்
யார்!?

மகீன்.எம்.சகல், மாருகொன.

### உணர வேண்டும் வாழ்வை

மெழுகு வர்த்தி ஏற்றி வைத்து
செய்யவேண்டும் பூஜை
மெல்ல மெல்ல உருகும் போது
உணர வேண்டும் வாழ்வை.

ஹர்ஷன் திங்கோ, வவுனியா.

### நம்பிக்கை ஒளி

நம்பிக்கை ஒளி நாடெல்லாம் பரவவும்,
எண்ணற்ற மாந்தரின் இதய ஏக்கம் தீரவும்,
வன்முறைகள் ஒழியவும், வாழ்வுமுறை சிறக்கவும்
கண்திறந்து பாருங்கள் கருணை நிறை கர்த்தரே!

திருமதி.க.கமலாம்பிகை, வவுனியா.



### நிமிச விளக்கு!

வான
வீதியிலே
புகையணிந்த
வட்ட நிலா
சுற்றுவதால்
யாழெங்கும்
இந்த
நிமிச
விளக்கு!...

செல்வி.பஸ்மியாரகுமான்,
தம்பலகாமம்.

### உவமானம்!

போர்த் தீயினால்
உருகி வரும்
இப்பூமிக்கோர்
உவமானமோ?

சி.பிரசாந்தினி,
பதுளை.

### அழிவு

ஒரு துப்பாக்கி சீறினால்
இறப்பது உங்களினம்.
ஒரு தீக்குச்சி சிரித்தால்
அழிவது எங்களினம்.

திருமதி. ரமனி அன்பழகன்,
கொழும்பு-12.

## வாசகர் சாலை

அரசியல் கட்டுரைகளில் சகல தரப்புக்களின் குறை நிறைகளையும் சுட்டிக்காட்டும் பத்திரிகைகள் தமிழில் இல்லையே என்ற குறை (இலங்கையில்) முரசால்தான் தீர்த்து வைக்கப்பட்டது. தொடரட்டும்.

எல். சஞ்ஜீவன், திருக்கோணமலை.

★★

பொய்க்காத கணிப்புக்கள்தான் முரசின் தனித்துவம். அதனால்தான் பொறாமைப்பட்டு வயிறு எரிகிறார்கள் சிலர். அவர்களும் இரகசியமாக முரசை காதலிப்பவர்கள். எழுத் தெண்ணி வாசிப்பவர்கள்தான்.

வி. அப்துல் ரஹும், கல்முனை.

★★



ரசிகன் தரும் இலக்கிய நயத்திற்கு எனது பாராட்டுக்கள். அஜித்குமாருக்கு ஆசை 2வது படம் என்று முரசு குறிப்பிட்டது தவறு. 3வது படம்தான் ஆசை.

வி.தீப், இலண்டன்.

***அஜித்குமார் தனிக் கதாநாயகனாக நடித்த இரண்டாவது படம் 'ஆசை'. அதனையே 'சினிவிசிட்' குறிப்பிட்டுள்ளது.*** ஆ.ர்.

★★

நீ சுமந்து வருகின்ற அத்தனை அம்சங்களும் பிரமாதம். தினமுரசு என்பதை விட 'தேன்முரசு' என்பதே உனக்குப் பொருத்தமானதாகும். உனது சேவை தொடர மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாழ்க!வளர்க! வளம்பெறுக!

முரசுப் பிரியன் எம்.மங்கேஸ்வரன்,
எம்.பங்கேஸ்வரி,மட்/முறக் கொட்டான்சேனை.

★★

முரசில் 20ம் பக்கம் 'லியோடே' தந்த "தாத்தா தங்கத் தாத்தா" என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட விடயம் நிறச் சேர்க்கைத் தவறு காரணமாக வாசிக்க ரொம்ப சிரமப்பட வேண்டி ஏற்பட்டது. இவ்வாறு இடைக்கிடை நடப்பதால் இவ்விடயங்களிலும் சற்று கவனம் எடுங்களேன்.

சிபாயா சம்சுதீன், மீனோடைக்கட்டு.

அன்பின் வெற்றி முரசே. நீ புவி முழுவதும் பவனி வர என் வாழ்த்துக்கள். ஆன்மீகத்தில் இந்துமத தத்துவங்களையும் இடம் பெறச் செய்தால் என்ன? ரசிகனின் தொடர் இனிக்கிறது.

ஆர். சுரேஸ்குமார், கொழும்பு-11.

**இராமாயணத் தொடர் முடிவுற்ற பின்னர் உங்கள் விருப்பம் நிறைவேறும்.** ஆ.ர்.

★★

அன்பின் முரசே!

நீ நீடூடி வாழ எனது வாழ்த்துக்கள். ஷர்மிளா இஸ்மாயில் எழுதிய 'கண்களில் என்ன ஈரமோ' என்ற கதை நெஞ்சத்தை நெகிழவைத்தது. வெளித் தோற்றத்தை வைத்து மனிதர்களை மதிப்பிட முடியாது என்பதற்கு இக் கதை நல்ல எடுத்துக் காட்டு. காதல் என்பது புனிதமானது என்பது கதை மூலம் புலப்படுத்தப் பட்டுள்ளது.

செ.இ. சுகந்தி, திருகோணமலை.

★★

முரசே! தகவல் பெட்டியிலும், பின் அட்டையிலும் நீ தரும் சின்னச் சின்ன தகவல்கள் வியக்கவைப்பது மட்டுமல்ல, அவற்றிற்கு இடப்படும் தலைப்புக்கள் சுவாரஸ்யமாக உள்ளது. சிந்தியாவின் பதில்கள் சுருக்கமாக இருந்தாலும் ரசிக்க முடிகிறது.

செல்வி.ரணீஸா யாசீன்,அக்குறணை-07.

★★

இராஜதந்திரியாரும், நாரதரும் போட்டி போட்டுக்கொண்டு, வெளுத்து வாங்கியது போல் இருந்தது. இருவரது அலசல்களும்!

அற்புதனின் அரசியல் தொடர் அருமை! சிந்தியாவின் பதில்களில் அதிகபட்ச அனல் பறக்கிறது! (தாங்காது சிந்தியா...!?) தணிக்கை செய்வீராக!!

து.சர்மிளாதேவி, கலஹா.

★★

செமத்தியான தகவல்களை உசத்தியாகவே தரும் ஹலோடாக்டருக்கு 'ஸ்பெஷல்' நன்றிங்கோவ்! டாக்டர் விடுப்பில்லாமல் தொடர வாழ்த்துகிறேன்.

எம்.எம்.ஸன்பர், கின்னியா-06.

★★

ரசிகனின் 'கார்லோஸ்' மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறது. அதே போல் பட்டுக் கோட்டை பிரபாகரின் விலை உயர்ந்த குற்றம் இரண்டு கதைகளும் முரசுக்கு பூமாலை சூட்டுகின்றன.

எம்.டி.செல்வி.ஜெகதீஸ், கொழும்பு-08.

### மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:

* பாயிஷா அலி, பாகிமா சலீம், கிண்ணியா.
* எம்.ரி.ஐ. பாத்திமா பஸ்லா, கம்மல்துறை, கொச்சிக்கடை.
* பூபாலபிள்ளை லிங்கன், அன்னமலையூர்.
* செல்வி. ஏ.எம். நஜீமா, குவைட்.
* எச்.எல். நய்மா ஹமீட், ரியாத்.
* காஞ்ஜனா சுப்பிரமணியம், கொழும்பு-15.
* ம. நித்தியானந்தன், அக்கரைப்பற்று.
* பு. சுகந்தி, கொழும்பு-10
* கே. மோகன்ராஜ், ராக்சாவ.
* எம்.ஆர். ஸியார் முஹம்மது, அக்குறணை.
* றுமைஸா பாரி, மொறட்டுவ.
* எஸ். ஸியாமா ஹுஸைன், கெகுணகொல்லை.
* ராமசாமி ரமேஷ் குமாரி, நானு ஓயா.
* ஆர். குமார், காலி.
* ஜி. திருநாதன், பாலமுனை-6
* ஏ. செபஸ்தியன், உக்குவலை.
* ஜலீங், சம்மாந்துறை.
* கே. லதா, எஸ். தீபா, மட்/புன்னைச் சோலை.
* வீ. யோகேஸ்வரன், பதுளை.
* ஏ.எஸ். விக்னேஸ்வரன், மட்டக்களப்பு.
* மாரிமுத்து யோகராஜன், அக்கரைப்பற்று-08.
* சு. புஸ்பலதா, கொஸ்லாந்தை.
* ம. ரேணுகாதேவி, இறக்குவானை.
* சி. ரவிச்சந்திரன், ஹப்புகஸ்தன்னை.
* பி. பொன்னுத்துரை, உக்குவெல.
* சுரையா காதர், குவைட்.
* சி. ரங்கநாதன், வவுனியா.
* பா. யோகநாதன், கொழும்பு-10.
* எம். உதயகுமார், புத்தளம்.
* பூபாலபிள்ளை லிங்கன், கல்முனை.



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் ஆசீர்வாதத்தோடு மூன்றாவது மத்தியஸ்தம்!

## தமிழ்க் கட்சிகளுக்கிடையே உடன்பாடு ஏற்படுத்த முயற்சி!

# அவுஸ்திரேலியாவின் மத்தியஸ்தம் பெறும் திட்டம்

**இந்திய அரசுக்கும் புலிகளுக்கும் இடையே உள்ள கசப்புணர்வுகளை களையும் முயற்சியில் மேற்கு நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர். மேற்கு நாடொன்றில் வைத்து இந்திய இராஜதந்திரிகளோடு பேச்சு நடந்ததாகவும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக முரசுக்கு கிடைத்துள்ள பிரத்தியேக தகவல்களை கீழே தருகிறோம்:**

### பேட்டியும் முயற்சியும்

இந்தியாவின் விரோதம் நீடிக்குமானால் சர்வதேச அரங்கில் வேறு எந்த நாட்டினுடையவும் வெளிப்படையான ஆதரவைப் பெறமுடியாது என்று வெளிநாடுகளில் உள்ள புலிகளது கிளைகள் பிரபாகரனுக்குச் செய்தி அனுப்பியிருந்தன.

அதன் பின்னர்தான் இந்திய சஞ்சிகையான 'அவுட் லுக்க'ருக்கு புலிகளது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பேட்டி வழங்கியிருந்தார்.

"இந்தியா நமது நண்பன். தொடர்ந்தும் இந்தியா புலிகளை விரோதமாகப் பார்க்கக் கூடாது" என்று அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டிருந்தார்.

அவரது பேட்டி இந்தியா தொடர்பான புலிகளது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதையே காட்டுகிறது என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

இதன் பின்னணியில்தான் மேற்கு நாடொன்றில் இந்திய இராஜதந்திரிகளோடு புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தியா நேரடியாக தலையிடா விட்டாலும், இந்தியாவின் ஆசீர்வாதத்தோடு மூன்றாவது நாடொன்றின் மத்தியஸ்தத்தை ஏற்படுத்துவதே அந்த முயற்சிகளின் நோக்கம் என்று நம்பகமாகத் தெரிகிறது.

### மெல்போர்ணில் சந்திப்பு

அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ண் நகரில்வைத்து அவுஸ்திரேலிய அரசுப் பிரதிநிதிகளோடும் ஒரு பேச்சு வார்த்தை நடந்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தமிழர் அமைப்புக்களும், புலிகளது பிரதிநிதிகளும் கலந்து கொண்ட அப் பேச்சு வார்த்தையில் அவுஸ்திரேலிய அரசின் முக்கிய இராஜதந்திரி ஒருவரும் கலந்துகொண்டார்.

தமிழீழத்துக்கு குறைந்த அல்லது அதற்கு மாற்றாக எவ்வாறான ஒரு தீர்வை புலிகள் விரும்புகிறார்கள்? என்று அவுஸ்திரேலிய இராஜதந்திரியால் வினா எழுப்பப்பட்டதாம். தமிழீழமே ஒரே முடிவு என்று தீர்மானமாக இருந்தால் தம்மால் மத்தியஸ்தம் செய்ய முடியாது என்றும் அவர் கோடிட்டுக் காட்டியிருந்தார்.

அது மட்டுமல்லாமல் இந்தியாவின் மறை முகமான சம்மதம் என்றாலும் பெறப்படாமல் இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிக்க முடியாது என்றும் அவர் சூசகமாக தெரிவித்துவிட்டார். அவுஸ்திரேலியா, கனடா, நோர்வே ஆகிய நாடுகளில் ஒன்றுதான் மூன்றாவது மத்தியஸ்தம் செய்யக்கூடிய நாடுகள் என்று புலிகள் நினைக்கிறார்கள்.

அந்த நாடுகளில் எதுவும் இந்தியாவின் சம்மதம் இல்லாமல் தலையிட விரும்பவில்லை.

இதனையடுத்தே இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையே கசப்புணர்வை நீக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### மாத்தையா விவகாரம்

இந்திய இராஜதந்திரிகளோடு நடைபெற்ற சந்திப்பில் பல விடயங்கள் பேசப்பட்டன. இந்தியாவின் கையாள் என்று குற்றம் சாட்டப்பட்டு, புலிகளது பிரதித் தலைவர் மாத்தையா கொல்லப்பட்ட விடயத்தைப் பற்றியும் இந்திய இராஜதந்திரி பிரஸ்தாபித்ததாகக் கூறப்படுகிறது. அது தொடர்பான கண்டனத்தையும் அவர் தெரிவித்துள்ளாராம்.

இதேவேளையில் அவுஸ்திரேலிய மெல்போர்ண் நகரில் இருந்து ஒரு பிரமுகர் கொழும்பு வந்துள்ளார். அங்குள்ள இலங்கைத் தமிழர் அமைப்பொன்றைச் சேர்ந்தவர் அவர்.

கொழும்பில் உள்ள சகல தமிழ் கட்சிகளையும் சந்தித்து அவர் பேச்சு நடத்தியுள்ளார்.

அவுஸ்திரேலிய அரசின் மூன்றாவது மத்தியஸ்த முயற்சிக்கு ஆதரவு தேடுவதே அவரது விஜயத்தின் நோக்கம் என்று அறியவந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆளுநர் காமினி பொன்சேகாவையும் அந்தப் பிரமுகர் சந்தித்துப் பேசியுள்ளார்.

### பொதுக்கருத்து

இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு, வெளிநாட்டு மத்தியஸ்தம் போன்ற விடயங்களில் தமிழ் கட்சிகளுக்கிடையே பொது உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கு குறிப்பிட்ட பிரமுகர் முயற்சி எடுத்துள்ளார்.

பிரபாகரன் தமிழக தலைவர்களுக்கு அனுப்பிவைத்த கடிதமும், அதற்கு முன்னர் அன்ரன் பாலசிங்கம் வழங்கிய பேட்டியும் புலிகள் இயக்கத்தினர் இந்திய ஆதரவை எதிர்பார்க்கத் தொடங்கியிருப்பதன் அடையாளம் என்று நம்பப்படுகிறது.

# ஜனாதிபதியின் தீர்வுத் திட்டம் சரிவராது

## புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் தெரிவிப்பு

இடம் பெயர்ந்த மக்கள் நிலைகுறித்து அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கும் போது: "தற்போதைய இடம் பெயர்வு சாதாரணமானதல்ல. இந்த இடம் பெயர்வு ஏன் திடீரென்று அறிவிக்கப்பட்டது? ஏன் மக்கள் அவசரப்பட்டு அல்லோலப்பட்டு ஓடவேண்டி வந்தது?

கோப்பாய்க்கு இராணுவம் வந்தது. கோப்பாயிலிருந்து நாவற்குழிப் பாலத்தை மூடி, மண்டைதீவில் இருந்து அரியாலைக்குள் புகுந்து மக்களைச் சுற்றி வளைக்க இராணுவம் திட்டமிட்டது. அப்படியான நேரத்தில்தான் மக்களை வெளியேறச் சொன்னோம்.

சில அறிவிப்புக்களில் பிழை இருந்தது உண்மைதான். ஒன்றைச் சொன்னால் எம் போராளிகள் தீவிரமாகச் சொல்வது வழக்கம். அப்படிச் சொன்னபடியால் மக்கள் அவசரமாக இடம் பெயர்ந்தனர். மக்கள் கூட்டப்பட்டு உடுத்த உடையோடு இடம் பெயர்ந்தது மிக சோகமான நிகழ்வு.

இதில் நன்மை என்னவெனில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்க வேண்டிய நிலை இருந்தது. சில மக்கள் இறந்துள்ளனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் மக்களை விட்டிருந்தால் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்திருப்பர்," என்று தெரிவித்தார்.

தீர்வுத் திட்ட யோசனை வெற்றியளிக்காது என்றும் பாலசிங்கம் கூறினார்.

"புலிகளின் ஒப்புதல் இல்லாமல் இங்கு எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த விடமாட்டோம். சந்திரிக்காவின் தீர்வுத் திட்டம் இங்கு சரிவராது" என்று தெரிவித்துள்ளார் பாலசிங்கம்.

### அது யார் வீடு?

நல்லூர் கந்தசாமி கோவில் அருகே படையினரால் கைப்பற்றப்பட்ட இருமாடிக் கட்டிடம் பிரபாகரன் தங்கியிருந்த வீடல்ல. கம்பன் கழகத்தினரால் கட்டப்பட்ட கட்டிடமே அதுவாகும் என்று 'ஈழநாதம்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

# கூட்டணித்தலைவர் மீது பாலசிங்கம் தாக்குதல்

## நீலன் மீது ஈழநாதம் கடும் சாட்டை

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் கிளிநொச்சியில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் மீது கடும் தாக்குதல் தொடுத்தார்.

அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாவது: "சந்திரிக்கா அம்மையாரிடம் ஒரு பெட்டிக்கு இருப்பது எல்லோருக்கும் தெரியும். தீர்வுத் திட்டமென்று அதனை அறிவித்திருக்கிறார். அதற்குள் என்ன இருக்கிறது என்று அறிவதற்கு சிவசிதம்பரம் ஐயா ஓடித்திரிகிறார். யாழ்ப்பாணம் போய்விட்டது. தமிழ் மக்கள் இன்று கொந்தளித்துப்போய் உள்ளார்கள். ஐந்தரை இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து உள்ளனர். தீர்வுத் திட்டத்தையாவது காட்டுங்கள் என்று சிவசிதம்பரம் சந்திரிக்காவின் காலடியில் வீழ்ந்து கிடக்கிறார். என்று கூறியுள்ளார் பாலசிங்கம்.

இதேவேளை கிளிநொச்சியில் இருந்து வெளிவரும் புலிகளது தினசரியான 'ஈழநாதம்' நீலன் திருச்செல்வம் மீது குற்றம் சாட்டியுள்ளது.

யாழ் நகரில் கொடி ஏற்றும்போது நந்திக் கொடியையும் சேர்த்து ஏற்றுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான நீலன் திருச்செல்வம் சிறீலங்கா ஜனாதிபதிக்கு ஆலோசனை சொல்லியிருந்தார் என்று ஈழநாதம் கட்டம் கட்டிய செய்தி வெளியிட்டுள்ளது.

'இனவாதிகளுக்கு யோசனை கூறும் இனவிரோதி' என்று தலைப்பிட்டு அச் செய்தி பிரசுரமாகியிருந்தது.

# முன்னாள் துணை வேந்தர் விடுதலை

(மட்டக்களப்பு நிருபர்)

கடந்த அக்டோபர் 7ம் திகதி புலிகளால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் உப-வேந்தர் பேராசிரியர் எஸ். சந்தானம் கடந்த ஜனவரி 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை-சரியாக இரண்டு மாதங்களின் பின்னர்-விடுவிக்கப்பட்டார். பணயப் பணமாக ஒரு தொகை செலுத்தியபின்பே போராசிரியர் சந்தானம் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இருமாதங்களாக கிழக்கு பல்கலைக் கழகத்தில் பல மட்டங்களிலும் பணியாற்றும் கல்வி சார்ந்த, கல்விசாராத பணியாளர்களை விசாரித்த பின்பே முன்னாள் உப வேந்தரை புலிகள் விடுவித்துள்ளனர்.

புதிய உப வேந்தர் பேராசிரியர் வண.பிதா ஜி.எவ் இராசேந்திரம் அவர்களுடனும் புலிகள் முக்கியஸ்தர் கரிகாலன் பேச்சு வார்த்தை நடாத்திய பின்பே பேராசிரியர் சந்தானம் விடுவிக்கப்பட்டதாக பேச்சடிபடுகிறது.

# யாழில் பணமில்லாத அரச வங்கிகள்

## போதிய பணத்தோடு புலிகளின் வைப்பகம்

வடபகுதியில் புலிகள் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள வங்கிகளில் பணத் தட்டுப்பாடு நிலவுகிறது.

யாழ் மாவட்டத்துக்கு பத்துக் கோடி ரூபாய் வரை தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் யாழ் குடாநாட்டில் உள்ள புலிகளது வங்கியான தமிழீழ வைப்பகத்தில் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் துரிதமாக நடைபெறுகின்றன. பண நோட்டுக்கள் பற்றாக்குறை இல்லாமல் புழக்கத்தில் உள்ளன.

இதனையடுத்து தமிழீழ வைப்பகத்தில் வாடிக்கையாளர் தொகை அதிகரித்துள்ளது. பெருமளவான மக்கள் அங்கு குழுமியுள்ளனர்.

கணக்கு வைத்திருப்பவர்களுக்கு எவ்வித சிரமமும் இல்லாமல் கேட்டவுடன் பணம் வழங்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்திற்கு பணம் அனுப்பினால் புலிகளிடம் போய்ச் சேர்ந்து விடும் என்று கருதியே பணம் அனுப்புவதை மட்டுப்படுத்துவதாக அரசு கூறிவருகிறது.

ஆனால் புலிகளின் வங்கியில் தாராளமாக பணம் புழங்குவதோடு, தமது வைப்பகத்தின் வாடிக்கையாளர் தொகையையும் புலிகள் இயக்கத்தினர் அதிகரித்துக் கொண்டுள்ளனர்.

# புத்தூருக்கு செல்ல மக்கள் முயற்சி

யாழ்ப்பாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள புத்தூர் பகுதிக்கு செல்ல முயன்ற பொதுமக்கள் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வாகரவத்தையூடாக புத்தூருக்குச் செல்ல முற்பட்டபோதே அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது. இத்தாக்குதலால் ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர். அவர்களில் இருவர் பெண்கள் என்று கூறப்படுகிறது.

காயமடைந்தவர்கள் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத் துப்பாக்கிப் பிரயோகம் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக புலிகளது சர்வதேச செயலகம் அறிவித்துள்ளது. எனினும் உடனடியாக அதனை உறுதி செய்ய இயலவில்லை.

இதேவேளை தென்மராட்சியிலும், வடமராட்சியிலும், வன்னிப்பகுதியிலும் பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை வேறு இடங்களில் குடியமர்த்திவிட்டு, பாடசாலைகளை மீளத் திறக்கும்படி புலிகளது தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவை அறிவித்துள்ளது.

# வன்னியில் புலிகளது நிர்வாக சேவை

## இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவ நடவடிக்கை

யாழ்-குடாநாட்டில் இருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உட்பட பல்வேறு அமைப்புக்கள் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

யாழ்-குடாநாட்டில் இருந்து கிளாலி கடல் ஏரிப் பயணம் உட்பட வன்னிப் பகுதிக்கு செல்லும் தரை வழிப் போக்குவரத்தும் புலிகளால் இலவசமாகவே நடத்தப்படுகின்றன.

கிளிநொச்சி வைத்தியசாலையில் இரண்டு புதிய கட்டடங்கள் புலிகளின் நிர்வாக சேவையினரால் உருவாக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவிலும் புதிய வைத்தியசாலைக் கட்டடங்கள் கட்டப்பட உள்ளன.

இடம் பெயரும் மக்களுக்கான உடனடி பராமரிப்பு வசதிகளை செய்து கொடுக்கும் பணி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் குடியிருப்புக்களை அமைப்பதற்கு ரெட்பானா, ஒக்ஸ்பாம், கெயார் போன்ற நிறுவனங்கள் உதவி வருகின்றன.

இடம்பெயரும் மக்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட காணிகளை வழங்குதல், கால் நடைகளை வழங்குதல், சிறு கைத்தொழில் முயற்சிகளுக்கு ஊக்குவிப்பு அளித்தல் போன்ற நடவடிக்கைகளில் புலிகளின் நிதித்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

வன்னிப் பகுதியில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கான உதவிகளை வழங்குதல், பற்றாக்குறையான இடங்களுக்கு வைத்தியர்களை நியமித்தல், மருத்துவ மனைகளை புதிதாக நிறுவ இடவசதிகளை ஏற்படுத்தல் போன்றவற்றை புலிகளது சுகாதாரப் பிரிவினர் கவனித்து வருகின்றனர்.

வடமராட்சி, தென்மராட்சி நோக்கி படையினரின் நடவடிக்கையை எதிர்பார்த்து இடம்பெயரும் மக்களை நன்கு கவனிக்குமாறு விடுதலைப் புலிகளது தலைவர் பிரபாகரன் விடுத்துள்ள உத்தரவுக்கமையவே மேற்கண்ட பணிகள் நடந்து வருகின்றன.

புலிகளது அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ் செல்வன், அன்ரன் பாலசிங்கம், வே.பாலகுமார் ஆகியோர் வன்னியில் மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர். அரச சார்பற்ற தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர்.

# தாக்குதலால் தொலைபேசிகள் மரணம்!

கல்முனை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தின் மீது கடந்தவாரம் புலிகள் தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்டமையால் 900க்கு மேற்பட்ட தொலைபேசிகள் மௌனமாக உறங்குகின்றன. இதனால் சிவில் நிர்வாக அதிகாரிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகிறார்கள்.

கல்முனை பிரதேசம் தற்போது தொடர்புகளால் துண்டிக்கப்பட்ட பிரதேசமாக மாறியுள்ளது. மட்டக்களப்பு பரிவர்த்தனை நிலையத்திலிருந்து ஏற்கனவே வழங்கப்பட்ட 4 வரிசை டிஜிட்டல் இணைப்புக்கள் 28 மட்டும் இயங்குகின்றன. விரைவில் நூறு 'பாக்ஸ்' இணைப்புக்களை முக்கிய திணைக்களங்கள், பிரமுகர்களுக்கு வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை பரிவர்த்தனை சம்பவத்தைத் தொடர்ந்து தொலைத் தொடர்பு இன்ஸ்பெக்டர் த. நாகராசா, மற்றும் ஊழியர்களான எஸ்.ஸ்ரீ லலிதன், கே.சிவப்பிரகாசம், கே.ஜெயநிதி ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# கிழக்கில் மேலும் கரும்புலித் தாக்குதல்கள்

கிழக்கு மாகாணத்தில் மேலும் புலிகளது' கரும்புலித் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பிரபாகரனால் தெரிவுசெய்யப்பட்ட கரும்புலிகள் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் சமீபத்தில் நடத்தப்பட்ட இரு கரும்புலித் தாக்குதல்கள் தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனையடுத்து வெற்றிகரமான தாக்குதல் ஒன்றை நடத்த கரும்புலிகள் முற்படலாம் என்று நம்பப்படுகிறது.

# மட்டக்களப்பில் பாதைகளுக்கு மூடுவிழா

## திசை தெரியாமல் தடுமாறும் வாகனங்கள்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இராணுவ, விஷேட அதிரடிப்படை முகாம்கள், பொலிஸ் நிலையங்களுக்கு முன்னால் செல்லும் அநேகமான பாதைகள் வாகனப் போக்குவரத்திற்காக மூடப்பட்டேயுள்ளன.

மிஞ்சியிருந்த ஏறாவூர், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய முன்வீதிகளும் கடந்தவாரம் முதல் மூடப்பட்டுவிட்டன. அவ்வாறு மூடப்பட்டுள்ள வீதிகளுக்கு முன்னால் புதிய வீதிகளை படையினர் அமைத்துள்ளனர். அதன் ஊடாகவந்து மீண்டும் பிரதான வீதிகளுக்குவந்தே பயணத்தை தொடரவேண்டும்.

ஆனால் மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்திற்கு முன்னாலுள்ள வீதிகளைத்தவிர, மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள படைமுகாம்களுக்கு முன்னாலுள்ள வீதிகளில் அடுத்தவீதி எங்கு தொடங்கி எங்கு முடிகின்றன, எவ்வாறு பிரதானவீதிக்கு மீண்டும் வருவது என்ற அறிவிப்புக்கள் இல்லை.

இதனால் விடயமறியாமல் உள் வீதிகளால் வரும் வாகனச்சாரதிகள் எங்கோ எல்லாம் சென்று, பாதைதெரியாமல் மீண்டும் நீண்ட தூரம் ஓடி பிரதான வீதிக்கு வர வேண்டியுள்ளது. இதனால் வாகனச் சாரதிகளும், பொதுமக்களும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்.

பிரதான வீதிக்கு மீண்டும் போகும் வழியை விளம்பரப்பலகைகளில் எழுதிவைத்தால், சாரதிகள் அவ்வறிவுப்புப்படி வாகனங்களைச் செலுத்தமுடியும் என வாகனச் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# பேசாது நிற்கும் "பே-ஃபோன்"

(அம்பாறை மாவட்ட நிருபர்)

கல்முனைப்பட்டினத்துக்கு வரும் பொதுமக்கள் இலகுவாகத் தொலைபேசி அழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கென நிறுவப்பட்டுள்ள "பே-ஃபோன்" தான் இங்கு படத்தில் காணப்படுகின்றது.

கடந்த 1994ம் ஆண்டு நவம்பர் மாதம் நிறுவப்பட்ட இந்த "பே-ஃபோன்" ஒருசில மாதங்கள் மட்டுமே இயங்கி வந்தது.

ஆனால் கடந்த பல மாதகாலமாக இந்தப் 'பே-ஃபோன்' இயங்காதநிலையில் வெறும் காட்சிப் பொருளாகவே காணப்படுகின்றது.

பேசாது நிற்கும் இந்தப் "பே-ஃபோனை" சீர்செய்து மக்களுக்குப்பயனளிக்கச் செய்வதில் சிறிலங்கா ரெலிகொம் பாராமுகமாகவே இருந்து வருவதாகப்பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.


கல்முனைப்பிரதேசத்தில் நிறுவப்பட்ட ஒரே ஒரு "பே-ஃபோன்" இதுதான் என்பதால், பே-ஃபோனைப்பற்றி அறியாதவர்கள் கண்டுகளிக்கத்தக்க காட்சிப் பொருளாக



இதனை விட்டுள்ளார்களா? என்றும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

தனியார் தொலைபேசி அழைப்பு நிலையங்கள் (கொமியுனிகேசன்) மக்களால் நிறைந்து வழியும் இக்காலகட்டத்தில் பேசாது நிற்கும் இந்தப் பே-போனைத்திருத்தி அமைத்து மக்களுக்குப் பயன்படச்செய்ய சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவார்களா? என மக்கள் அங்கலாய்க் கின்றனர்.

## காட்டூண் மூலை



நன்றி: விகடன்.

## பயிலுனர் ஆசிரியர்கள்மீது பாராமுகம்

# நிரந்தர நியமனம் தொடர்ந்து தாமதம்

பயிலுனர் ஆசிரியர்களை 01.01.1996 முதல் நிரந்தரமாக்கி தராதரப்பத்திரமற்ற உதவி ஆசிரியர்களாக நியமனம் வழங்குவதென்று கௌரவ அமைச்சர் அமரசிறி தொடங்கொட தலைமையில் குழுவொன்று கூடி தீர்மானம் எடுத்து அதற்கான குறைநிரப்புத் தொகையான 85 கோடி ரூபாவிற்கும் அமைச்சரவையில் கடந்த நவம்பர் மாதம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் அறிந்து பெருமகிழ்ச்சியடைந்தார்கள் பயிலுனர் ஆசியர்கள்.

எனினும் இதுவரை நிரந்தரமாக்குவது சம்பந்தமாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

புதிய ஆசிரியர் சேவை திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படாமலும், கஷ்டப்பிரதேச அலவன்ஸ், ஊக்குவிப்பு அலவன்ஸ் போன்ற கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலும் இவர்கள் மிகவும் இன்னல் உறுகின்றனர். ஆனால், சாதாரண ஆசிரியர்களைப் போலவே-சில இடங்களில் அவர்களை மிஞ்சிய நிலையில்-இவர்களும் பாடசாலைகளில் பாடுபட்டு உழைக்கின்றார்கள்.

சாதாரண ஒரு தொழிலாளிக்கு 2,500/- ரூபாவிற்குக் குறையாத மாதச் சம்பளம் கிடைக்கவேண்டுமென்றே அரசாங்கம் கூறிவரும் நிலையில் இப்பயிலுனர் ஆசிரியர்கள் 1,900/- ரூபாவையே சம்பளமாக (அலவன்ஸ்) பெறுகின்றனர். கடந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் மாற்றம் கொண்டு வந்த இந்த அரசாங்கம் பயிலுனர்கள் விஷயத்தில் அக்கறை செலுத்தாது எவ்வித மாற்றங்களையும் கொண்டு வராதது பெரும் ஆச்சரியத்தையே ஏற்படுத்தியுள்ளது.

பயிற்சியை முடித்த பின்பு நிரந்தரமாக்குவதென்ற நிபந்தனையில் மூன்று வருடப் பயிற்சி நெறிக்கு தேசிய கல்வி நிறுவகத்தின் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தார்கள். தற்போது மூன்று வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் 1ம் கட்டப் பயிற்சியை மட்டுமே முடித்து பரீட்சையையும் எழுதிவிட்டு அங்கலாய்க்கின்றனர். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பித்தால் பயிலுனர் ஆசிரியர் என்ற காரணம் காட்டி அனுமதி நிராகரிக்கப்பட்டது.

இப் பயிலுனர் ஆசிரியர் வர்க்கத்தினுள் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து நியமனம் பெற்றவர்களும், க.பொ.த.(உ.த.)க் கல்வித் தராதரத் தகுதியுடன் போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனம் பெற்ற கணித/விஞ்ஞான ஆசிரியர்களும், ஆரம்ப ஆசிரியர்களும், மௌலவி ஆசிரியர்களும் உள்ளடங்குகின்றார்கள். தொண்டர் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் நியமனம் பெறுவதற்கு முன் ஏற்கனவே தொண்டு புரிந்து களைத்துவிட்டனர். அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் அவர்கள் நியமனம் அமைந்திருந்தாலும் திருப்திப் படுத்தும் வகையில் அமையவில்லை.

மேலும், ஆங்கில ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் நியமனங்களுக்கு க.பொ.த.(சா.த)க் கல்வித் தராதரமே கவனத்தில் எடுக்கப்பட்டு அவர்கள் நிரந்தர ஆசிரியர்களாக நியமனம் பெற்றுக் கொள்கின்ற நிலையில் க.பொ.த.(உ.த)க் கல்வித் தராதரத்துடன் போட்டிப் பரீட்சை மூலம் பயிலுனர் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற கணித/விஞ்ஞான, ஆரம்ப, மௌலவி பயிலுனர் ஆசிரியர்கள் தங்களுக்கு உரிய வகையில் நியமனம் வழங்கப்படவில்லை என அங்கலாய்க்கின்றனர்.

இதனால் இப் பயிலுனர் ஆசிரியர்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். இவர்களுக்கு விமோசனம் அளிக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றார்கள்.

## அம்பாறை றவுண்டப் செய்திகள்

### ☆ குதிரைச்சவாரி!

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நிந்தவூரில் உள்ளூர் வீதிகள் பல புனரமைக்கப்பட்டுள்ளன. கிறவல் போடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ள இந்த வீதிகள் சிலவற்றில் போடப்பட்ட கிறவல்கல் சீராக பரப்பப்பட்டு சமப்படுத்தப் படாததால், மேடு-பள்ளமாக இந்தவீதிகள் அமைந்து பொதுமக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்துவதாகப் புகார் கூறப்படுகின்றது. குறிப்பாக இரண்டாம் குறுக்குத்தெரு போன்ற வீதிகளில் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்வோர் குதிரையேறி சவாரி செய்வது போன்ற "சுகத்தை" அனுபவிக்கின்றனராம். என்னே சுகம் இது!

* * *

### ☆ நூதன சாலை!

கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் நூதனசாலை ஒன்று அம்பாறை மாவட்டத்தில் அமைக்கப்பட விருக்கின்றது. அமைச்சர் அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃபின் ஆலோசனையின் பேரில் அமையவிருக்கும் இந்த நூதன சாலைக்கென கிழக்கிலங்கை முஸ்லிம்களிடையே பேணப்பட்டுவந்த பழமை வாய்ந்த பொருட்கள் திரட்டி எடுக்கப் படவுள்ளன. தென்கிழக்குப் பல்கலைக் கழகம் நிரந்தரமாக அமையவிருக்கும் பகுதியிலுள்ள ஐந்து ஏக்கர் காணியில் இந்த நூதனசாலை அமையவிருக்கின்றது.

* * *

### ☆ இதுதான் ஜனநாயகம்!

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகப்பிரிவு

## எதிரணிக் கட்சிக்கு ஆளும் அணி சிபார்சு

ஒன்றுக்கான சமுர்த்தி நியமனத்திற்கு. (சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நியமனம்) சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப்பரீட்சை அண்மையில் நடைபெற்றபோது 'ஒருவிந்தை' வெளிப்பட்டதாம். அது என்ன தெரியுமா? நேர்முகப்பரீட்சைக்கு வந்தவர் ஒருவர்,-பிரதேச சபை ஒன்றின் ஐக்கிய தேசியக்கட்சி ஊறுப்பினரும், கடந்தபொதுத் தேர்தலின் போது வாக்குச்சாவடி ஒன்றில் ஐ.தே.கட்சி சார்பாக, ஆட்கண்காணிப்பாளராகக் கடமையாற்றியவருமாவார்! இவரை பொது ஜன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம்வகிக்கும் ஒருகட்சிதான் சமுர்த்தி நியமனத்திற்கு சிபார்சு செய்திருந்ததாம். வாழ்க ஜனநாயகம்!

### ☆ அன்பளிப்பு!

சம்மாந்துறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு சுமார் இருபதாயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

* * *

### ☆ வேண்டும் அலுவலகம்!

பிரதேசக்கல்வி அலுவலகங்கள் மறுசீரமைக்கப்படும் பொழுது கல்முனையில் ஒரு மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் அலுவலகம் இயங்க ஆவன செய்யப்பட வேண்டுமென இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், கல்வி, உயர்கல்வி அமைச்சரைக் கோரியுள்ளது.

# விருது வழங்க துரித முயற்சி

## இலக்கியவாதிகள் தொடர்பு கொள்ளலாம்

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண முஸ்லிம் சமய, கல்வி கலாசார அபிவிருத்தி அமைச்சு மத்திய மாகாணத்தில் இலைமறைகாயாக இருக்கும் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் பத்திரிகையாளர்களையும் விருது வழங்கி கௌரவிக்கும் பொருட்டு அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் நாட்டில் இடம் பெற்ற-எழுத்தாளர்களை கௌரவிக்கும் விவகாரங்களில் பலர் ஒதுக்கப்பட்டும் அவர்களை இனங்கண்டு கொள்வதில் பாரபட்சம் காட்டப்பட்டிருப்பதையும் ஏராளமான முஸ்லிம் எழுத்தாளர்கள் இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கத்திற்குச் சுட்டிக் காட்டியதையடுத்து மத்திய மாகாண அமைச்சர் ஜனாப் எம்.எச். எ.ஹலீம் தமது அமைச்சு மூலம் அவ்வாறு கௌரவிப்பதில் விடுபட்டவர்களை கண்டறிந்து உதவ இருப்பதாக முரசுக்குத் தெரிவித்தார். இதன் அடிப்படையில் கடந்த 25 ஆண்டுகளாக இயங்கிவரும், இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கமும் புனரமைப்புச் செய்யப்பட இருப்பதாகவும் மத்திய மாகாணத்தை உள்ளடக்கியதாக அதன் அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ள இருப்பதாகவும் இயக்கத்தின் மூத்த தலைவரான கவிமணி எம்.சீ.எம்.சுபைர் முரசுக்குத் தெரிவித்தார்.

தமது இலக்கியப் பணி தொடர்பான சகல விபரங்களையும் சகல முஸ்லிம் எழுத்தாளர்களும் இதன் பொருட்டு-செயலாளர், இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கம், 24/18 காசல் லேன், கண்டி. என்ற முகவரிக்கு விரைவில் அனுப்பிவைக்குமாறு முரசு மூலம் அவர் வேண்டுகோள் விடுக்கிறார்.

## பாலத்தில் ஏற்படும் தடை

(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பாலமான ஓட்டமாவடிப் பாலம் நீண்ட காலமாக போக்குவரத்துக்காக பாவிக்கப்பட்டு வருகின்றது. இந்த பாலத்தின் ஊடாகவே வாகனப் போக்குவரத்து மாத்திரமன்றி புகையிரத சேவையும் நடைபெற்று வருகின்றது. அதேவேளை இதனூடாகவே பாதசாரிகள், பைசிக்கிள், வண்டிக்காரர்களும் பிரயாணம் செய்யவேண்டியுள்ளது.

இதில் மிகவும் முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது யாதெனில், இந்தப் பாலத்தினூடாகவே தினமும் பல்லாயிரக்கணக்கில் வாழைச்சேனை காகித ஆலைக்குக் கடமைக்காகச் செல்ல வேண்டிய தொழிலாளர்களும், விவசாயத் தொழிலுக்காகச் செல்வோரும் செல்ல வேண்டியுள்ளது. மிக அவசர காரணமாக பாலத்துக்கு அப்பால் இருந்து வாழைச்சேனைக்கோ, அல்லது ஓட்ட மாவடிக்கோ வரவேண்டிய பிரயாணிகள், பாதை போக்குவரத்துத் தடையின் காரணமாக-குறிப்பாக புகையிரத சேவை நடை பெறும்போது பிரவேசிக்க முடியாத நிலைமைக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள்.

எனவே இந்தப் பாலத்தின் அருகே நடைபாதை ஒன்று அமைக்கப்படுமேயானால் இதனூடாக மக்கள் விரைவாக வந்து செல்ல வேண்டிய நிலை உருவாகும். இது மிக நீண்ட காலமாக இப்பகுதி வாசிகளினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுமாகும். என இப்பிரதேசத்தின் நீண்ட கால வாசியும், கோறளை பற்றுப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியுமான டாக்டர். கே.எஸ்.காராளசிங்கம் ஜே.பி. முரசுக்கு கவலையுடன் தெரிவித்தார்.


விளம்பரப் பகுதி



அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாடங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா! அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28


சுவிஸ்/ டென்மார்க்/ இத்தாலி/ ஜேர்மன்
ஃபிரான்ஸ்/ அவுஸ்திரேலியா/ நோர்வே நாடுகளுக்காகன

**தினமுரசு வாரமலர் சந்தா விபரம்**

ஒரு வருடத்திற்கு-தபாற் செலவு உட்பட ரூபா 2250/=
(52 வாரங்கள்)
ஆறு மாதங்களுக்கு-தபாற் செலவு உட்பட ரூபா 1130/=
(26 வாரங்கள்)
மூன்று மாதங்களுக்கு-தபாற் செலவு உட்பட ரூபா 590/=

| மத்திய கிழக்கு நாடுகள் | | அமெரிக்கா/ கனடா | |
|---|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 1865/= | | ஒரு வருடத்திற்கு ரூபா 2790/= | |
| (52 வாரங்கள்) | US $ 38 | (52 வாரங்கள்) | US $ 57 |
| ஆறு மாதங்களுக்கு ரூபா 975/= | | ஆறு மாதங்களுக்கு ரூபா 1420/= | |
| (26 வாரங்கள்) | US $ 20 | (26 வாரங்கள்) | US $ 29 |
| மூன்று மாதங்களுக்கு ரூபா 485/= | | மூன்று மாதங்களுக்கு ரூபா 730/= | |
| (13 வாரங்கள்) | US $ 11 | (13 வாரங்கள்) | US $ 16 |

பெயர் சுயமுகவரி ஆகிய விபரங்களை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி

THINAMURASU VAARAMALAR
P.O.BOX-1772
COLOMBO.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பப் படிவங்கள் எம்மால் அனுப்பிவைக்கப்படும்

**புறூஃப் ரீடர் தேவை**

பதிப்பகம் ஒன்றிற்கு தமிழில் நல்லறிவுள்ள அனுபவமிக்க ஒப்புநோக்காளர் (புறூஃப் ரீடர்) தேவை. தொடர்பு கொள்ளவும்.

மே/பா. தினமுரசு வாரமலர், த.பெ.இல.1772, கொழும்பு.


ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398




படிப்பகம்

www.padippakam.com

# உறுமீனுக்கு வலைவீசும் தொண்டா



## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**தொ**ண்டமான் வாடியிருப்பதும், வலைவீசுவதும் சந்திரசேகரன் என்ற உறுமீனுக்கு.

நன்றாகக் கவனித்துப்பார்த்தால் அமைச்சர் தொண்டமானின் போர்த்தந்திரம் பிடிபடும். அரசுக்கு எதிராக என்றாலும்சரி, மலையகத்தில் தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராக என்றாலும் சரி வாளை ஓங்குவாரே தவிர செருக மாட்டார்.

ஓங்கும் வேகத்தைக் கண்டு எதிரி மிரண்டுவிட்டால் சந்தோசப்படுவார். எதிரி கொஞ்சம் முரண்டு பிடித்தால் சண்டையை தவிர்க்க நல்ல காரணமாக ஒன்றைக் கூறிவிட்டு வாளை உறைக்குள் போட்டுக் கொள்வார்.

பிரதி அமைச்சர் சந்திரசேகரன் இ.தொ.காவை விட்டு விலகியபோது அலட்சியமாகத்தான் நோக்கப்பட்டார்.

மலையக மக்கள் முன்னணி இன்று இ.தொ.காவுக்கு சமமான அமைப்பாக வளர்ந்து விடவில்லை. ஆனால், சவால் விடுமளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற உண்மையைக் கணக்கில் கொள்ளாமல் இருக்க முடியாது.

அதுதான் முன்னர் போல மலையக மக்களது தனி ஒரு கட்சியாக, தனிக்காட்டு ராஜாவாக நின்று வாளைச் சுழற்ற முடியாமல் தொண்டாவின் கரங்களையும் கட்டிப்போடுகிறது. அரசாங்கத்தை நோக்கி வாளை உருவுவதுபோல உருவுவது, பின்னர் உறைக்குள் போடுவதுமாக தொண்டா தந்திரம் செய்ய வேண்டியிருக்கிறது.

அரசுக்கு எதிராக தொண்டா போரை ஆரம்பித்துவிட்டால், சந்திரசேகரன் மேலும் அரசோடு ஒட்டிக்கொள்ளலாம் என்பதுதான் இ.தொ.காவுக்கு உள்ள பெரிய பிரச்சனை.

அதே பிரச்சனை சந்திரசேகரனுக்கும் இருக்கிறது. தனி ஒருவராக நின்று கொண்டு அரசுக்கு எதிராக அவர் வாளை உருவினால், இ.தொ.காவுக்கு கொண்டாட்டமாகிவிடும்.

அரசு சந்திரசேகரனை மெல்ல ஓரம்கட்டிவிட்டு தொண்டாவை நோக்கி நட்புக்கரத்தை உறுதியாக நீட்டத் தொடங்கி விடலாம்.

தற்போது மலையக மக்கள் முன்னணிக்கு நல்ல பெயர் ஏற்பட்டு வருகிறது. சந்திரசேகரன் ஏதோ தன்னால் முடிந்ததைச் செய்கிறார் என்று ஒரு அபிப்பிராயம் தோன்றத் தொடங்கியிருக்கிறது.

அரசில் இருந்து வெளியேறுவதைவிட கிடைப்பதைவைத்து தனது தளத்தை உறுதிசெய்வதுதான் சந்திரசேகரனுக்கு புத்திசாலித்தனமாகப் படுகிறது.

சந்திரசேகரனுக்கு உள்ள மற்றொரு பிரகாசமான வாய்ப்பு, தொண்டாவுக்கு பின்னர் அவரைவிட வேறு தலைவர்கள் இல்லை என்பதுதான்.

இ.தொ.காவுக்குள் தொண்டாவை விட்டால் ஏனையோர் தலைமைத்துவத்துக் குரியவர்களாக முன்நிறுத்தப்படவில்லை.

தொண்டாவின் பேரனும், இ.தொ.கா பொதுச் செயலாளருமான ஆறுமுகம் தொண்டமானால் தனது பாட்டனாரின் இடத்தை நிரப்ப முடியாது. அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை முன்னிறுத்தவும் இ.தொ.கா. தயாராக இல்லை. அதுதான் எதிர்காலத்தில் சந்திரசேகரனுக்கு உள்ள சாதகம்.

இதனையெல்லாம் தொண்டா கணக்குப் போட்டுப் பார்க்காமல் இல்லை.

அதனால்தான் இப்போது மலையக மக்கள் முன்னணிக்கு தூதுவிட்டிருக்கிறார்.

எதிர்த்துப் போராடுவதைவிட சந்திரசேகரனை உள்ளேயே எடுத்துக் கொள்ளலாம். இ.தொ.காவுக்குள் அவருக்கு ஒரு நல்ல பதவிகொடுக்கலாம். அதற்கு விலையாக மலையக மக்கள் முன்னணியை கலைக்கச் சொல்லலாம் என்பது தொண்டாவின் திட்டம்.

தமக்கு வேண்டப்பட்ட பத்திரிகை வட்டாரங்கள் மூலமாக மலையக மக்கள் முன்னணி, இ.தொ.காவுடன் இணையப் போகிறது என்று ஒரு செய்தியை கசியச் செய்தது இ.தொ.கா. வட்டாரம்.

மலையக மக்கள் முன்னணி ஆதரவாளர்களை அச் செய்தி குழப்பிவிட்டது. எனவே இணைப்பு கிடையாது என்று சந்திரசேகரன் மறுப்பு விட வேண்டியதாயிற்று.

ஆறுமுகம் தொண்டமான் பொதுச் செயலாளராக இருக்கக் கூடியதான ஒரு திட்டத்தையே தொண்டா வைத்திருப்பதால் அதற்கு சந்திரசேகரன் இணங்கவில்லை.

பொதுச் செயலாளராக இருந்த திரு.செல்லச்சாமியே மிகச் சுலபமாக தூக்கி வீசப்பட்ட நிலையில், சந்திரசேகரனுக்கு பொதுச் செயலாளர் பதவி கொடுக்கப் பட்டால்கூட அது எந்தளவுக்கு காத்திரமான பதவி என்பது சந்தேகத்துக்குரியதுதான் என்று மலையக மக்கள் முன்னணியின் தீவிர ஆதரவாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

எனவே-உடனடியான இணைப்புக்கு சந்திரசேகரன் தரப்பில் தயக்கம் காட்டப் பட்டிருக்கிறது.

இணைப்புக்கு விலையாக மலையக மக்கள் முன்னணி என்ற அமைப்பை மட்டு மல்ல, தொண்டாவுக்கு எதிரான தலைவர் என்று தன்னை நம்பிவந்த தொண்டர்கள் பலரையும் சந்திரசேகரன் இழக்க வேண்டியிருக்கும்.

உண்மையில் இணைப்பால் சகல வழிகளிலும் லாபம் இ.தொ.காவுக்குத்தான்.

எதிர்க்கடையே இல்லாத கீரைக்கடையாக மாறிவிடலாம். தொண்டாவுக்குப் பின்னரும் இ.தொ.கா. சீராக இயங்கக் கூடியதாகவும் இருக்கும்.

அதேசமயம் மலையக தமிழ் மக்களுக்கும் இணைப்பு சாத்தியப்பட்டால் பெரிய நன்மை ஒன்று இருக்கவே செய்யும்.

தொண்டாவோ, சந்திரசேகரனோ அரசை நோக்கி வாளை உருவி மிரட்டுவதும், உறைக்குள் போடுவதுமாக இருக்காமல் உண்மையாகவே போரைத் தொடங்கக் கூடியதாக இருக்கும்.

சம்பள உயர்வு போன்ற அடிப்படைக் கோரிக்கைகளை விரைவாக சாதிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

ஆனால், தொண்டாவையும், இ.தொ.காவுக்குள் ஊறிப்போன தனிநபர் ஆதிக்கத்தையும் சமாளித்துக் கொண்டு போகமுடியுமா என்றுதான் கடுமையாக யோசிக்கிறார் சந்திரசேகரன்.

முன்னணியைக் கலைத்துவிட்டு உள்ளே போய் பிரச்சனைப்பட்டு திரும்பிவந்தால், தற்போதுள்ள மரியாதை குறைந்துவிடும் என்பதும் அவரது நியாயமான அச்சம்தான்.

எப்படிப்பார்த்தாலும் உடனடியாக இணைப்பு என்பது நினைத்துப்பார்க்க முடியாத ஒன்றுதான்.

இணைப்புக்கு முன்னர் இணைப்புக்கான சூழல் உருவாக வேண்டும். அதுதான் இருதரப்புக்கும் நம்பிக்கைகளை ஏற்படுத்தும்.

அதற்கான சூழலும் அருகில்தான் இருக்கிறது. எதிர்வரும் மாகாணசபை மற்றும் உள்ளாட்சி தேர்தல்களில் இ.தொ.காவும், மலையக மக்கள் முன்னணியும் ஒன்று சேர்ந்து போட்டியிட்டால் இரு தரப்பு தொண்டர்களும் நெருங்கிக்கொள்ள வசதியாக இருக்கும்.

ஆனால், தேர்தலில் ஆசனங்களை பங்கிடும் விடயத்தில் இ.தொ.கா. எந்தளவுக்கு விட்டுக் கொடுக்கும் என்பது ஒரு பிரச்சனையாக மாறலாம்.

மலையக மக்கள் முன்னணியை போட்டித் தரப்பாக நீடிக்கவிடாமல் செய்யத்தான் இணைப்பு என்ற தூண்டிலை போட்டுப் பார்த்திருக்கிறார் தொண்டா.

அவ்வாறான நிலையில் மாகாணசபை தேர்தல்களிலும், உள்ளாட்சித் தேர்தல்களிலும் ம.ம.முன்னணிக்கு கணிசமான ஆசனங்கள் கிடைக்கும் வகையில் இட ஒதுக்கீட்டுக்கு இ.தொ.கா. முன்வருமா என்பது கேள்விக்குறிதான்.

அதேசமயம், எதிர்வரும் குட்டித் தேர்தல்களில் மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிட்டு கணிசமான ஆசனங்களைப் பெற்றுவிட்டாலும் இ.தொ.காவுக்கு சவாலாகி விடும்.

இ.தொ.காவின் வாக்கு வங்கியோடு ஒப்பிடும் போது, மலையக மக்கள் முன்னணியின் வாக்கு வங்கி சின்னதுதான். ஆனால், சென்ற பொதுத் தேர்தலைவிட இம் முறை அதிகமான வாக்குகள் கிடைத்தாலே போதும். மலையக மக்கள் முன்னணிக்கு தெம்பு வந்துவிடும்.

இ.தொ.காவின் வாக்கு வங்கிகள் பறிபோகத் தொடங்கிவிட்டன என்று அர்த்தமாகிவிடும்.

கணக்குப் போட்டுப் பார்த்தால் சென்ற பொதுத்தேர்தலின் பின்னர் மலையக மக்கள் முன்னணியின் செல்வாக்கு ஒரு படி உயர்ந்திருப்பதாகவே தெரிகிறது.

அதனால் மலையக முன்னணிக்கு சற்றுப் போதுமான ஆசனங்களை ஒதுக்கிக் கொடுக்க இ.தொ.கா. முன்வந்தாலும் அதற்கு அரசியல் லாபம்தான்.

ஆனால், இ.தொ.காவுடன் இணைந்து போட்டியிடுவதானால் மலையக மக்கள் முன்னணி இதுவரை இ.தொ.கா பற்றி செய்துவந்த கடும் விமர்சனங்கள் வெறும் அரசியல் போட்டிக்கான சேறுபூசல்கள் என்ற நிலையை அடைந்துவிடும்.

மலையக மக்கள் முன்னணி, இ.தொ.காவுடன் ஒன்றாகக் கலக்கப்போகிறது. வைபவமும் நடக்கப் போகிறது என்று ஒரு செய்தி இ.தொ.கா. வட்டாரங்கள் மூலமாக வெளிவந்ததும் மலையக மக்கள் முன்னணியை சங்கடத்தில் மாட்டத்தான்.

❑❑❑

# பிரபாவின் உயிராயுதம்

## நாரதர்

**வ**டக்கில் ஆரம்பித்த கரும்புலித் தாக்குதல் கிழக்குக்கும் நீண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் படைத்தரப்பு கொடிகளைப் பறக்கவிட்டபின்னர், கிழக்கில் வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதல்களை புலிகள் நடத்தியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாண வெற்றி தொடர்பான பிரச்சார முழக்கங்கள் செவிகளை அடைத்துக் கொண்டிருப்பதால், கிழக்கில் படைத்தரப்புக்கு ஏற்பட்ட தோல்விகள் தெற்கில் கவனிக்கப்படவில்லை.

படைத்தரப்பில் எத்தனைபேர் பலியாகிறார்கள் என்று பார்த்துவிட்டு, புலிகள் தரப்பில் அதைவிட இரண்டு மடங்கு அதிகமானோர் பலியானதாக அரச பிரசார சாதனங்கள் கணக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் புலிகளது அணிகள் நடமாடும் யுத்தம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

உடனடியாக பாரிய தாக்குதல்கள் எதனையும் செய்யாவிட்டாலும், படைத்தரப்பின் மனோவலிமையை மெல்ல, மெல்லச் சீவும் வகையில் கெரில்லாத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

எப்படித்தான் தேடுதல் நடத்தினாலும் யாழ்ப்பாணத்திற்குள் நடமாடும் புலிகளது அணிகளை கண்டறிந்து தாக்குவது முடியாத காரியம்.

சங்கானைப் பகுதியில் தேடுதல் நடத்தினால், புலிகளது அணிகள் அராலிக்குள் சென்று விடலாம். அராலிக்குள் தேடினால் பண்டத்தரிப்புக்குள் போய்விடலாம்.

ஒவ்வொரு அங்குல நிலமும் பழக்கப் பட்டுவிட்ட, அங்கேயே வாழ்ந்தவர்களைக் கொண்ட புலிகளது அணிகளை சுலபத்தில் கண்டுபிடிக்க முடியாது.

யாழ்ப்பாணத்திற்குள் ஒவ்வொரு அங்குல நிலத்திலும் படையினர் நின்றாக வேண்டுமானால் ஒரு இலட்சம் படையினர் இருந்தால்கூடப் போதாது.

கனரக ஆயுதங்களும், ஆட்பலமும் பிரதேசங்களை கைப்பற்ற உதவலாமே தவிர, கெரில்லாக்களை வெற்றி கொள்ளப் போதுமானவையல்ல.

படைபலமும், நவீன ஆயுத பலமும் கொண்ட பிரிட்டிஷ் படைகள்கூட அயர்லாந்து கெரில்லாக்களை அடக்கிவைக்க முடியாமல் நீண்டகாலமாக திணறவேண்டியிருந்தது.

படைத்தரப்பில் குறைந்தது பத்துப் பேருக்கு சமமாக ஒரு கெரில்லா கணிக்கப் படலாம். அதுதான் கெரில்லாப் போரில் உள்ள சாதகம்.

ஆனால், கெரில்லாக்களால் ஒரு பெரிய பிரதேசத்தை தொடர்ந்து தம்வசம் வைத்திருக்க முடியாது.

எனினும், தம்வசம் இல்லாத பிரதேசங்களிலும் கெரில்லாக்கள் மறைந்திருந்து தாக்குதல்களைத் தொடரமுடியும்.

24 மணிநேரமும் தருணம் பார்த்துக் கொண்டு அலைந்து திரியும் கெரில்லாக் குழுக்களின் தாக்குதல்களில் இருந்து தப்பிப்பது கஷ்டமானது.

நிரந்தர இராணுவம் ஒரு பகுதியை கைப்பற்றும்வரை உக்கிரமாக தனது பலத்தை பிரயோகிக்கும். ஒரு குறிப்பிட்ட காலம் வரை விழிப்பாக இருக்கும்.

பின்னர் படிப்படியாக விழிப்பு தளர ஆரம்பிக்கும். நடமாடுவது குறைந்து முகாம்களுக்குள்ளும், காவலரண்களோடும் நின்று கொள்ளும்.

அந்தத் தருணத்தில்தான் கெரில்லாக்கள் தமது தாக்குதலைத் தொடருவார்கள்.

எப்போது வருவார்கள், எங்கேயிருந்து வருகிறார்கள் என்று தெரியாத நிலையில் கெரில்லாக்களை நோக்கி காத்திருப்பதுதான் நிரந்தரப் படைக்கு பெரிய சோதனை. மனச் சோர்வுக்கும் அதுவே காரணமாகி விடும்.

புலிகள் செய்யப்போவதும் அது தான். அதற்கான தயாரிப்புக்கள் தற்போதே ஆரம்பித்து விட்டன.

கரும்புலிகளும் கடற்கரும்புலிகளும் யாழ்ப்பாணத்தில் ஓய்ந்திருப்பது தற்காலிகம் தான்.

அதேவேளையில் கிழக்கில் கரும்புலிகள் பலர் தயாராக்கப்பட்டுள்ளார்கள்.

கொழும்பிலும் கரும்புலிகள் தயார் நிலையில் இருப்பதாகத்தான் தகவல்கள் கூறுகின்றன.

தலைநகரில் தெரிவு செய்யப்படும் இலக்குகள் பொதுமக்களின் உயிரிழப்புக்களை அதிகப்படுத்தினால், வெளியுலகில் அரசுக்குத்தான் சாதகம் ஏற்படும்.

அதனால்தான் தலைநகரில் இலக்குகள் சரியாக அமையும்வரை தாக்குதல்கள் எதிலும் கரும்புலிகள் ஈடுபடுத்தப்படவில்லை என்று தெரிகிறது.

மாகாணசபை தேர்தல்களை எதிர் நோக்கியுள்ள நிலையில் கரும்புலிகள்தான் அரசுக்கு பெரிய சவால்.

கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களை பாதுகாப்பதில் அரசு கூடுதல் கவனம் செலுத்தினாலும், தேர்தல் நேரப் பரபரப்பில் அரசியல்வாதிகளின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்வதுதான் முக்கியமான பிரச்சனை.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய நினைப்பில் அரசு நிம்மதியாக இருந்துவிட முடியாது என்பதை உணர்த்துவதற்காக தலைநகரில் புலிகள் தாக்கக்கூடும் என்று அரசும் எதிர்பார்க்கிறது.

வன்னிக்காட்டில் பிரபாகரன் முன்பாக அணிவகுக்கும் கரும்புலிகள் அடுத்து எந்தத் திசையில் செல்லப் போகிறார்கள்?

பிரபாகரனின் கையில் உள்ள உயிராயுதங்களான கரும்புலிகள் எந்த இலக்கு நோக்கி செலுத்தப்படப் போகிறார்கள்?

விடை தெரிந்தால் அரசு பாதுகாப்பு செய்துவிடலாம். ஆனால் விடை தெரியாது. ஒன்று மட்டும் உறுதியான விஷயம்: போரில் கிடைத்துள்ள வெற்றியை இனப் பிரச்சனை தீர்வுக்காக அரசு பயன்படுத்த தவறும் ஒவ்வொரு நொடியும் நீண்ட காலப் போருக்கான விதைகள் தூவப் பட்டுக் கொண்டிருக்கின்றன.

இனவாத சக்திகள் தமது குரலை உயர்த்த அரசு சந்தர்ப்பம் வழங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தால், புலிகள் இல்லாவிட்டால் தமிழர்களது தரப்பு தலைகவிழவேண்டியிருக்கும் என்ற எண்ணம் வளர, அரசே உரம் போடுவது போலாகிவிட்டது.

அந்த உரம் புலிகளுக்குப் போதும்.

மாகாணசபைகளைக் கலைத்து தனது பலத்தை பரிசீலித்துப் பார்க்க அவசரம் காட்டும் அரசு, இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் ஆறப்போட்டு காரியம் செய்ய நினைக்கிறது.

ஜனாதிபதி சந்திரிக்கா இனவாதம் பேசவில்லை. ஆனால், இனப்பிரச்சனையோடு தொடர்புடைய யுத்தத்தில் பெறும் வெற்றி தோல்விகளை தனது அரசியல் இலக்குகளை அடைய பயன்படுத்துகிறார் என்ற கூற்றில் நியாயம் இல்லாமல் இல்லை.

கடந்தகால தவறான அரசியல் இன்றைய யுத்தத்தின் காரணமாகியது. இன்றைய யுத்தம் தெற்கில் அரசியல் லாபம் தேடும் முயற்சியாக மாறிவருகிறது.

சமாதானத்தை கொண்டுவருவேன் என்று ஆட்சிக்குவந்த பொது ஜன முன்னணி, யுத்த வெற்றிச் செய்தியோடு போய் வாக்காளர்களைக் கவர முயல்வது தான் முரண்பாடு.

இந்த முரண்பாட்டை திருவாளர் பொதுஜனம் கவனிக்கத் தவறுவதும் ஒருவகையில் இனவாதம்தான்.

இனவாதம் தெற்கில் வளர, வடக்கு-கிழக்கிலும் இன உணர்வு வளர்வது தவர்க்கமுடியாததாகிவிடும்.

# அதிரடி அய்யாத்துரை



**த**மிழ் கட்சிகள் சந்திப்பொன்றில் கூட்டான கட்சித் தலைவர் மூன்றாம் தரப்பு தேவையில்லை என்று சொன்னவர். அதனால்தானாம் 9கட்சி மகஜரில் மூன்றாம் தரப்பு தேவை எண்டு கோரிக்கை விடாமல் இருந்தவையாம். ஆனால் பாருங்கோ, நீலமானவர் சொல்லியிருக்கிறார், மூன்றாம் தரப்பு தேவை. அதுதான் கூட்டான கட்சி நிலைப்பாடு எண்டு. அப்படியானால் யார் தலைவர்?

**தீ**ர்வுத் திட்டத்தை தமிழ் கட்சிகள் ஆதரித்தால் யுத்தத்தை தொடர்ந்து நடத்த தோதாக இருக்கும் என்று அதிகாரத்தரப்பு நினைக்குதாம். தோள் கொடுப்போம் எண்டு நீலமானவர் உறுதி கொடுத்துவிட்டாராம். ஏனைய தமிழ் கட்சிகள் இணைப்பில்லாமல் திட்டம் வந்தால் ஏற்க முடியாது எண்டு சொல்லுகினமாம். போர் வேண்டாம் எண்டு சொல்லிக்கொண்டு போருக்கு பொல்லைக் கொடுக்கத்தயாராக இருக்கினம் கூட்டான கட்சியினர். சனத்துக்கு சூட்சமம் விளங்காது எண்டு நினைக்கினமாக்கும்.

**கொ**ழும்பில் ஒரு விருந்து நிகழ்ச்சியில் தமிழ் கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் கூடியிருந்தவையாம். எல்லோருமே நல்ல வாட்டசாட்டமாய் இருந்தவையாம். அதைப்பார்த்துப் போட்டு ஒரு குறும்பர் சொன்னாராம், "இனத்தின் பலம் குறையவில்லை என்று தெரியுது."

**அ**ம்பாறையை கொடுக்கத் தயார் எண்டு பேசியிருக்கிறார் திருவானமலை பிரதிநிதி மிஸ்டர் தங்கத்தார். அவை சேரவேண்டியதை தாறதைப் பற்றியே இன்னும் பேசேல்லை. இவர் ஏன் பாருங்கோ கொடுப்பதற்கு ஒற்றைக் காலில் நிற்கிறார்?

**தி**ருவானமலையில் பிஸ்ரல் குறூப் ஒண்டு 'போடுதல்கள்' பல வற்றை செய்து கொண்டிருக்குதல்லோ. பலருக்கு வயிற்றிலை புளியாம். ஒரு வெகுஜனப் பிரதிநிதி தனது பாதுகாப்பை கூட்டித் தருமாறு உரிமைக்குரல் கொடுத்திருப்பதாகக் கேள்வி.

**வ**ன்னியிலை அகதி முகாம் பொறுப்பாளர் போடப்பட்டதுக்கும் ரெண்டு எழுத்தாருக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பது பரவலான கதை. பலியானவர் நல்ல பொடியனாம். உண்மையாகவே பலர் கவலைப் பட்டு கண்ணீர் சிந்தினவை. மற்றுமொரு உரிமை கோரப்படாத கொலை. நல்லதுக்கு காலமில்லை.

**தே**னகத்திலை ரெண்டு எழுத்தார் இடுப்பில் கட்டிக்கொண்டு பாயுறதாலை, வாகனத்தில் நடமாடவே கூச்சமாய் இருக்குதாம். ரெண்டு எழுத்தாரின் மனம் புண்படாமல் பேசினாலும், அதிலும் ஒரு குறை கண்டுபிடிச்சிடுவானுங்கள் எண்டு கவலைப்பட்டாராம் ஒரு சிங்கத்தார். (இரு சிங்கங்களில் ஒரு சிங்கம்) சமீபத்தில் பச்சை அணி வெகுஜனப் பிரதிநிதியின் வாகனம்மீது சூடு விழுந்தது அல்லோ. அதுக்குப்பிறகு வந்த வாகனம் ஒன்றை மறிச்சு ரெண்டு எழுத்தார் கேட்ட கேள்விதான் பெரிய சிங்கத்தாரின் இதயத் துடிப்பை ஏற்றிப் போட்டுதாம். அப்படி என்ன கேட்டவை? "சிங்கத்தாரின் வாகனம் வாறமாதிரி ஏதாவது தகவல் உண்டோ?" எண்டு கேட்டவையாம். இனிப் பிளேன்தான்.

**ஜ**னநாயக கட்சிக்கு ரெண்டு எழுத்தார் உற்சாகமான போத்தல் அனுப்பரெடிபண்ணியதாக வந்த தகவலில் பல ஓட்டைகள் இருக்குதாம். ஜனநாயகக் கட்சித் தலைவர் உற்சாகபானம் பாவிப்பதில்லை என்பது ரெண்டு எழுத்தாருக்கு தெரியும். போத்தலில் உள்ளது பிரச்சனையானது எண்டு தெரிந்தும் நண்பர்கள் குடித்து அதில் ஒருவர் சாகும்வரை, போத்தலை வைத்திருந்த ரெண்டு எழுத்து ஆதரவாளர் எண்டு சொல்லப்படுபவர் என்னவாம் செய்து கொண்டிருந்தவர்? போத்தலை வைத்திருந்தவரை ஜனநாயக கட்சிக்காரருக்கு முன்பின் தெரியாதாம். அப்படியான ஒருவரிடம் போத்தலை கொடுத்துவிட ரெண்டு எழுத்தார் விபரமில்லாதவையோ? ஆக யாரோ தலையைச் சுத்தி குழப்பம் செய்கினம் போல கிடக்கு.

**ம**லைப்பகுதி ..னித்துவ தலைவருக்கு நல்ல புத்திசாலித்தனம். சந்திரமானவர் விடயத்தில் ஒரு பூட்டுப்போட்டு மடக்கத்தான் எல்லாம் ஒன்றாச்சு எண்டு தகவலை தட்டிவிட்டவராம். பத்திரிகைகளைப் பார்த்துவிட்டு சந்திரமானவர் மயங்கிவிழாத குறையாக அதிர்ந்து போனவராம். அவரது அணிச் செயலாளரும் இணைப்பு பொறி எண்டுதான் சொல்கிறாராம்.

**மூ**ன்றுவரிக் ஹைக்கூ கவிதைகள் இரண்டு. (ஜப்பான் கவிதைகள்)

"திருடன்
விட்டுச் சென்றுவிட்டான்
ஜன்னலில் நிலாவொளியை!"

❑❑

"விழுந்தமலர்
திரும்ப கிளைக்குச் செல்கிறது
வண்ணத்துப் பூச்சி."



படிப்பகம்

www.padippakam.com

# 61 யாழில் நடந்த கோவில் கொள்ளைகள்

**அரசியல் தொடர் அற்புதன் - எழுதுவது**

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## கிழக்கில் நடந்த கண்ணிவெடித் தாக்குதல்கள்

**திருமலையில் தாக்குதல்**

திருகோணமலையில் கன்னியா பகுதியில் இராணுவத்தினர் ரோந்து சென்று கொண்டிருந்தனர்.

வாகனத் தொடர்களில் முப்பது இராணுவத்தினர்வரை பயணம் செய்து கொண்டிருந்தனர்.

திடீர் என்று கண்ணிவெடிகள் முழங்கத் தொடங்கின.

பின்னால் வந்த வாகனங்களில் இருந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி பின்வாங்கிச் சென்றனர்.

கண்ணிவெடியில் சிக்கி 9 இராணுவத்தினர் வரை பலியானார்கள். வர்ண குலசூரியா, தென்னக்கோன், தயானந்த, கொல்மன, திலகரட்ன, ரணவீர, புஞ்சிநிலமே, பியதாச, விஜித்த ஆகியோரது பெயர்கள் பலியான இராணுவத்தினரின் பட்டியலில் வெளியாகியிருந்தன.

இத்தாக்குதல் 28.3.86 இல் நடைபெற்றது. திருமலை மாவட்ட புலிகளின் பொறுப்பாளர்களில் ஒருவரான புலேந்தி அம்மான் தலைமையில் மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டது.

31.3.86 அன்று அதிகாலையில் மட்டக்களப்பு வந்தாறுமூலையில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சென்று கொண்டிருந்தனர்.

எதிரே வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் அவர்களைக் கண்டுவிட்டனர்.

தப்பி ஓடினால் இராணுவத்தினர் சரமாரியாகச் சுடுவார்கள். வேறு வழியில்லை என்பதால் புலிகளும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர்.

இராணுவத்தினர் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை.

திடீர் துப்பாக்கிப் பிரயோகத்தினால் அதிர்ச்சியடைந்து விட்டனர்.

சுதாகரித்துக்கொண்டு பதிலடியில் இறங்குவதற்கிடையில் இராணுவத்தினரின் தரப்பில் ஐந்துபேர் வரை பலியானார்கள். புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

**கறுப்பு உடை**

பாகிஸ்தானில் இலங்கை இராணுவத்தினருக்கு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் விசேஷ பயிற்சி வழங்கப்பட்டது.

அவ்வாறு பயிற்சி பெற்றுவந்த இராணுவத்தினருக்கு கறுப்பு உடை கொடுக்கப்பட்டது.

கறுப்பு உடை அணிந்த இராணுவத்தினர் மாங்குளம்–கொக்காவில் பகுதிகளுக்கு இடையே புலிகளது தாக்குதலை எதிர்கொண்டனர்.

2.4.86 அதிகாலையில் புலிகளது அணியொன்று பதுங்கியிருந்து அத்தாக்குதலைத் தொடுத்தது.

அதிகாலை நேரம் என்பதால் இராணுவத்தினர் பலத்த தாக்குதலை எதிர்பார்த்திருக்கவில்லை. அலட்சிய மனோபாவத்தோடு ரோந்தில் ஈடுபட்டனர்.

ஆர்.பி.ஜி ரொக்கட் லோஞ்சர், ஏ.கே.47 போன்ற ஆயுதங்களால் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

இரண்டாவது லெப்ரினன்ட் எம்.ஏ.எம்.ஜி. மல்லவராய்ச்சி, கோப்ரல் பியதாசா, கோப்ரல் செனரத் பண்டா, லான்ஸ் கோப்ரல் கருணாதிலக ஆகியோர் உட்பட ஒன்பது இராணுவத்தினர் பலியானார்கள்.

இராணுவத்தினரிடமிருந்து T.56-1, ரவைக்கூடுகள்-5, மோட்டார் ஷெல்-2, ஏ.கே.ரவைகள்-125 ஆகியவை புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதல் மாத்தையாவின் வழிநடத்தலின் கீழ் நடத்தப்பட்டது.

புலிகளின் தரப்பில் எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

**துப்பாக்கிச் சமர்**

5.4.86 சனிக்கிழமை. மட்டக்களப்பு கரடியனாற்றில் புலிகளது கெரில்லா அணியொன்று காத்திருந்தது.

கரடியனாறு வழியாக இராணுவத்தினர் தொடர்வண்டிகளில் ரோந்துசெல்வது வழக்கம்.

காலையிலிருந்து புலிகளது அணி காத்திருந்தது.

நண்பகல் 12 மணியாகியும் இராணுவத்தினர் ரோந்து வருவதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை.



பிற்பகல் ஒரு மணியை நெருங்கிக் கொண்டிருந்தபோது, தூரத்தில் ஒரு புள்ளியாக வாகனம் ஒன்று தெரிந்தது.

'வருகிறார்கள்' என்று ஊகித்து தயாராக காத்திருந்தார்கள்.

அவர்கள் காத்திருப்பது தெரியாமல் தொடர் வாகனங்களில் வேகமாக வந்து கொண்டிருந்தனர் இராணுவத்தினர்.

வாகனத் தொடரின் முதல் வாகனமாக வந்த கவசவண்டி தமது எல்லைக்குள் வந்ததும் புலிகளது ரொக்கட் லொஞ்சர் பறந்தது. கவச வண்டி சேதமாகி நகராமல் நின்றுவிட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடு பட்டனர் கெரில்லாக்கள். டிரக் வண்டிகளில் வந்த இராணுவத்தினர் கீழே குதித்து டிரக் மறைவில் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

சுமார் இரண்டு மணிநேரம் துப்பாக்கிச் சமர் நடைபெற்றது.

இராணுவத்தினர் தரப்பில் ஏழுபேர் பலியானதாக ஞாபகம். புலிகள் தரப்பில் ஒருவர் பலியானார்.

**வீடுகளில் கொள்ளைகள்**

86ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில தனியார் வீடுகளில் பரவலான கொள்ளைகள் நடைபெறத் தொடங்கின.

யாழ்ப்பாணத்தில் இருந்த பிரபல பணக்காரர்கள், வர்த்தகர்கள் ஆகியோரது வீடுகள்தான் குறிவைத்து கொள்ளையிடப்பட்டன.

நவீனரக ஆயுதங்களோடு கொள்ளையர்கள் தோன்றியதால் அவர்கள் தனிப்பட்ட நபர்கள் அல்ல: இயக்கங்கள்தான் கொள்ளைகளுக்கு பின்னணியில் நிற்கின்றன என்று மக்கள் புரிந்து கொண்டனர்.

எந்த இயக்கம் கொள்ளையில் ஈடுபடுகிறது என்பது தெரியாமல்போனதால் மக்கள் மத்தியில் இருந்து கொள்ளைகளைக் கண்டித்து பொதுவான கோரிக்கைகள் விடப்பட்டன.

கொள்ளையர்களை பிடித்துத் தாருங்கள் என்று கேட்டார்கள் மக்கள்.

நாங்களும் அவர்களைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம் என்றன இயக்கங்கள்.

வெறுத்துப்போன மக்கள் வீதித் தடைகளை போட்டார்கள். கொள்ளையர்களை பிடித்துத் தந்தால்தான் வீதியைத் திறப்போம் என்று எதிர்ப்புக் காட்டினார்கள்.

சகல இயக்கங்களும் தனியார் வீடுகளில் நடைபெற்ற கொள்ளைகளைக் கண்டித்து பத்திரிகைகளில் அறிக்கை விட்டன.

**இரு கொள்ளைகள்**

86 இல் நடைபெற்ற இரண்டு கோவில் கொள்ளைகள்தான் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியிருந்தன.

ஒன்று யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் கொள்ளை. இன்னொன்று தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில் கொள்ளை.

பெருமாள் கோவில் கொள்ளையில் ஈடுபட்டது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். மக்கள் விடுதலைப் படையின் யாழ் மாவட்ட தொடர்பாளராக இருந்தவர் கபூர் என்று அழைக்கப்பட்ட பாலா.

அவரது தலைமையில்தான் பெருமாள் கோவில் கொள்ளை நடத்தப்பட்டது.

கொள்ளை நடவடிக்கைக்காக வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது பெருமாள் கோவிலுக்கு அருகே ரெலோ உறுப்பினர்கள் அந்த வாகனத்தை மறித்தனர்.

ஒவ்வொரு இயக்கமும் வீதிப்பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவது வழக்கம். வீதியில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த ரெலோ உறுப்பினர்தான் வாகனத்தை மறித்தார்.

"யார் நீங்கள்?" என்று அந்த உறுப்பினர் கேட்டார். தாமதம் இல்லாமல் வேனில் இருந்தவர்கள் சொன்னார்கள்: "நாங்கள் எல்.ரி.ரி.ஈ."

வாகனத்தை மறித்தவர் வழிவிட்டு விலகிக் கொண்டார்.

எந்தவொரு இயக்க வாகனம் என்றாலும் மற்றொரு இயக்கம் சோதனையிடவோ, தடுக்கவோ முற்படுவதில்லை.

யாழ் நகருக்குள் பெருமாள் கோவில் இருப்பதால் அப்பாதை வழியாக அடிக்கடி இயக்க வாகனங்கள் சென்று வருவது வழக்கம்.

அப்படியிருந்தும் இரவோடு இரவாக பெருமாள் கோவில் நகைகள் சுத்தமாக துடைத்து எடுக்கப்பட்டன.

**விசாரிக்க வந்தவர்கள்**

மறுநாள் காலையில் பெருமாள் கோவில் கொள்ளைச் சம்பவம் காட்டுத்தீபோலப் பரவிவிட்டது.

இயக்கங்கள் கோவிலில் கைவைக்கத் துணிவார்களா? என்றும் பலர் சந்தேகப்பட்டனர்.

கொள்ளைபற்றி விசாரிக்கவும், என்ன நடந்தது என்று அறியவும் பெருமாள் கோவிலுக்கு வந்தனர் இயக்கங்களின் முக்கியஸ்தர்கள்.

விசாரிக்க வந்த இயக்கங்களில் ஒன்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். கொள்ளையர்களை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கிறோம். ஏதாவது தகவல் கிடைத்தால் எமக்குத் தெரியப்படுத்துங்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாகவும் பெருமாள் கோவில் நிர்வாகத்தினரிடம் சொல்லப்பட்டது.

முதல்நாள் இரவு தன்னால் மறிக்கப்பட்ட வேன்தான் கொள்ளையில் சம்பந்தப்பட்டது என்று புரிந்து கொண்ட ரெலோ உறுப்பினர் விஷயத்தை அவிழ்த்து விட்டார்.

புலிகள்தான் கொள்ளை நடத்தியிருக்க வேண்டும். அவர்களது வாகனம்தான் சந்தேகத்திற்கு இடமாக நடமாடியது என்று ரெலோ மூலம் செய்தி பரவிவிட்டது.

யாரோ தமது பெயரை பாவித்து விட்டார்கள் என்று தெரிந்து புலிகளும் விசாரணையில் இறங்கினர்.

அவர்களுக்கு ரெலோமீதுதான் முதலில் சந்தேகம். பின்னர் விசாரித்துக் கொண்டு போனபோதுதான் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தான் கைவரிசை காட்டியிருக்கிறது என்று ஓரளவு தெரிந்து கொண்டனர்.

எனினும், கிட்டு அதனை பெரிதுபடுத்த விரும்பவில்லை. நிரூபிக்கக்கூடிய ஆதாரமில்லாதது மட்டும் அதற்கு காரணமல்ல.

வேறு ஒரு காரணம் இருந்தது. அதுதான் துர்க்கை அம்மன் கோவில் கொள்ளை.

பெருமாள் கோவில் கொள்ளையை புலிகள் வெளிப்படுத்த நினைத்தால், துர்க்கை அம்மன் கோவில் கொள்ளையை ஈ.பி.ஆர்.எல்.எஃப். அம்பலப்படுத்திவிடும்.

**புலிகளின் உத்தரவாதம்**

தெல்லிப்பளையில் உள்ள துர்க்கை அம்மன் கோவில் கொள்ளை கிட்டுவின் தலைமையில்தான் நடந்தது.

புலிகள் இயக்கத்தில் யாழ் மாவட்ட முக்கியஸ்தர்கள் மட்டுமே பொறுக்கி எடுக்கப்பட்டு மிக இரகசியமாக நடத்தப்பட்ட கொள்ளை அது.

கிட்டு, திலீபன், அருணா ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர்.

இரவோடு இரவாக, அப்போதைய மதிப்பில் கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட நகைகள் கொள்ளையிடப்பட்டன.

கொள்ளைச் செய்தியால் தெல்லிப்பளையில் மக்கள் கொதித்துப்போனார்கள்.

நகைகளைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்று வீதித்தடைகளைப் போட்டு எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

வழக்கம்போல சகல இயக்கங்களும் சென்று விசாரணை நடத்தின. புலிகள் அமைப்பினரும் 'கொள்ளையர்களை பிடித்தே தீருவோம்' என்று உத்தரவாதம் வழங்கிவிட்டு வந்துவிட்டார்கள்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் என்பதால் கோவில் கொள்ளைகளில் அவர்கள் ஈடுபட மாட்டார்கள் என்று பொதுமக்களில் ஒரு சாரார் பேசிக்கொண்டனர்.



ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பு கம்யூனிச சித்தாந்தம் கொண்ட அமைப்பு என்பதும், கடவுள் நம்பிக்கை அவர்களுக்கு கிடையாது என்றும் மக்களுக்கு தெரியும்.

எனவே-இரண்டு கொள்ளைகளையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செய்திருக்கலாம் என்று பரவலான பேச்சுக்கள் அடிபடத் தொடங்கியிருந்தன.

**நல்லூரில் கண்**

இதற்கிடையே யாழ்ப்பாணத்தில் பிரபலமானதும், வருமானம் கூடியதுமான நல்லூர் கந்தசாமி கோவில் மீதும் இயக்கங்களுக்கு ஒரு கண்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கும் புலிகள் அமைப்புக்கும் இடையே யார் முந்திக்கொள்வது என்று இரகசியமாக ஒரு போட்டியே நடந்து கொண்டிருந்தது.

அதற்கிடையே ரெலோ முந்திக்கொள்ள இருப்பதாக கிட்டுவுக்கு யார் மூலமோ தகவல் கிடைத்துவிட்டது.

நல்லூர் தேர் திருவிழாவுக்கு முதல்நாள் இரவு கொள்ளையை நடத்த ரெலோ திட்டமிட்டிருப்பதாக கிட்டுவுக்கு தெரிந்து விட்டது.

உடனே கிட்டு ஒரு காரியம் செய்தார். 'நல்லூர் கோவிலுக்குள் குண்டு' என்று ஒரு வதந்தியைப் பரப்பிவிட்டார்.

நினைத்தது போலவே வதந்தி காட்டுத் தீயாகப் பரவிவிட்டது.

குண்டு இருக்கிறதா, இல்லையா என்று தெரிந்தால்தான் தேர் திருவிழா நடத்தலாம்.

பக்தர்கள் கோவிலுக்கு வெளியே திரண்டு நின்று என்ன ஆகுமோ என்று பயந்து கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு வாகனம் வந்து நின்றது.

வாகனத்தில் இருந்து ஒரு பக்தர்போன்ற தோற்றத்தோடு கிட்டு இறங்கிவந்தார்.

கிட்டுவைக் கண்டதும் பக்தர்கள் முறையிட்டனர். "பயப்படாதீர்கள் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று சொன்னார் கிட்டு.

கிட்டுவும் சிலரும் கோவிலுக்குள் சென்று தேடுதல் நடத்தினார்கள்.

வெளியே நின்றவர்களுக்கு ஒரே திக்.திக். எந்த நேரமும் வெடிச்சத்தம் கேட்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு.

உள்ளேயிருந்து வந்த கிட்டு சொன்னார்: "யாரோ புரளி கிளப்பிவிட்டார்கள். குண்டும் இல்லை, ஒன்றும் இல்லை."

பக்தர்களுக்கு நிம்மதி. கிட்டுவுக்கு நன்றி சொல்லிக்கொண்டார்கள்.

அதன்பின்னர் கோவிலைச் சுற்றி வெளிவீதியில் கிட்டு அங்கப் பிரதட்சணம் செய்த காட்சியும் பக்தர்களின் நெஞ்சங்களை நெகிழச் செய்துவிட்டது.

கிட்டுவின் அங்கப்பிரதட்சணமும் கோவில் கொள்ளைகளோடு புலிகளை இணைத்துப் பேசமுடியாதளவுக்கு செய்திருந்தது.

**திருப்பி ஒப்படைப்பு**

துர்க்கை அம்மன் கோவில் கொள்ளையை அடுத்து நடைபெற்ற சில சம்பவங்கள் புலிகள் இயக்கத் தலைமைக்கு ஒரு சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டன.

கொள்ளையில் பங்குகொண்ட உறுப்பினர்களில் சிலரும், ஏனைய உறுப்பினர்களும் படகில் தமிழகம் சென்றபோது கடற்படைத் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

கொள்ளையில் பங்கு கொண்டவரான அருணா தமிழகம் சென்று திரும்பிவரும் போது படகு தாக்குதலுக்கு உள்ளானது. படகில் இருந்தவர்கள் பலியானார்கள். அருணா கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து படகில் தமிழகம் புறப்பட்டார் திலீபன். படகை ஹெலிகொப்டர் ஒன்று தாழப்பறந்து துரத்தத் தொடங்கியது.

ஹெலிக்கொப்டரில் இருந்து கொடுக்கப்பட்ட தகவலையடுத்து கடற்படைப் படகுகளும் திலீபன் சென்ற படகை குறிவைத்து விரைந்தன.

படகு ஓட்டியின் சாமர்த்தியத்தால் படகு திரும்பி கரைக்கு விரைந்தது.

கடலில் நடைபெற்ற பல்வேறு தாக்குதல்களில் பலியானவர்களில் பலர் துர்க்கை அம்மன் கோவில் கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற உண்மை கிட்டுவுக்கு உறுத்தலாகிவிட்டது.

திலீபன் தப்பியதும் மயிரிழையில் தான். அடுத்தது தனக்குத்தான் என்று நினைத்துவிட்டார் கிட்டு.

தெய்வக் குற்றம்தான் துரத்துகிறது என்ற சந்தேகம் ஆழமாய்ப் பதிந்துவிட்டது.

கொள்ளை நடந்து பல மாதங்கள் ஆகிவிட்டபோதும் நகைகள் பத்திரமாக இருந்தன.

கிட்டு ஒரு முடிவுக்கு வந்து விட்டார்.

இரவோடு இரவாக துர்க்கை அம்மன் ஆலயத்துக்குள் கொண்டுபோய் நகைகளைப் போட்டுவிட்டு திரும்பிவந்து விட்டார்கள்.

விடிந்தபோது கோவில் நிர்வாகத்தினருக்கு பேராச்சரியம்.

"திருப்பி ஒப்படைத்தவர்களுக்கு நன்றி. அம்பாள் கருணை காட்டுவார்." என்று ஒரு அறிக்கை விட்டது கோவில் நிர்வாகம்.

ஒரு சில நகைகளைத் தவிர மீதி அனைத்தும் அப்படியே இருந்தன.

ஒரு சில நகைகளைக் காணவில்லை என்ற விடயத்தைப் பற்றி கோவில் நிர்வாகம் வெளியே சொல்லவிரும்பவில்லை.

கிடைத்ததே பெரும் பாக்கியம். திருப்பி ஒப்படைக்கப்பட்டதே அம்பாளின் அருள் என்று பேசாதிருந்துவிட்டனர்.

உண்மையில் புலிகள் இயக்கத்தினரிடம் இருந்த காரணத்தால்தான் நகைகள் பத்திரமாக திருப்பி ஒப்படைக்கக் கூடியதாக இருந்தது என்பதும் உண்மை தான்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது – இராஜதந்திரி

# பழைய கசப்புணர்வுகளில் வாழ்ந்தால் புதிய புத்துணர்வுகளைப் பெறமுடியாது

**தை** மாதம் பிறந்துள்ளது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமது அரசியல் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்ற தெரிவுக்குழு முன்பாக தை மாதத்திலேயே முன்வைக்கப் போவதாகக் கூறியிருந்தார்.

தைமாதத்தை தமிழர்கள் சுபகாரியங்களுக்குரிய மாதமாகவே கருதுவதுண்டு. இதனால்தான் தை பிறந்தால் வழி பிறக்கும் என்று கூறப்படுவதுண்டு.

ஆனால் ஒரு நல்லவழியை, நிரந்தரமான அரசியல் தீர்வை எதிர்பார்த்திருக்கும் யாழ்ப்பாண மக்கள் கடந்த கால அனுபவங்கள் காரணமாக சகுனங்கள், சுபகாரியங்கள் போன்ற எதிலுமே நம்பிக்கை கொள்ளத் தயாரற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

தமது இஷ்டதெய்வங்கள், தாம் வழிபட்ட கோயில்கள் என்பன கூட தம்மை ஏமாற்றி விட்டன என்ற



பரிதவிப்பிலேயே அவர்கள் கஷ்டங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள்.

இந்நிலையில் தைமாதம், சித்திரைமாதம் என்று மாதங்கள், நாட்களில் நம்பிக்கை வைத்து அரசியல் நடத்துவதை அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள மக்கள் எவ்வகையிலும் ஏற்க முன்வரமாட்டார்கள்.

எந்தவொரு மாதமாகவும் இருக்கலாம்; தமக்கு ஒரு விரைவான கௌரவமான அரசியல் தீர்வு கிடைக்கவேண்டுமென்பதே இன்று வடக்கு-கிழக்கு மக்களின் எதிர்ப்பார்ப்பாக இருக்கின்றது.

இன்று இலட்சக்கணக்கான அகதிகள்

கூடவே தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கும் இன்றைய வடக்கு-கிழக்கு நெருக்கடியில் ஓர் அரசியல் தீர்வைக்காண ஒத்துழைக்கும்படி கோரிக்கைவிடுத்துக் கடிதங்களை எல்.ரி.ரி.ஈ.தலைவர் வே.பிரபாகரன் அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வடக்கு-கிழக்கு நெருக்கடியை அவதானிக்கையில், இந்த நெருக்கடி இலங்கையில் சிக்கலடைந்துள்ள அதேசமயம், தகுந்தவகையில் சர்வதேச ரீதியாக அரசியல் மயப்படுத்தப்படாத நிலைமையே காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னையுடன் இந்தியாவே நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தது. 1983ம் ஆண்டுமுதல் 1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகும் வரை வடக்கு-கிழக்குப் பிரச்னையில் இந்தியாவின் பங்களிப்பு பாரியதாகவே இருந்தது.

தீர்க்க இராணுவ அழுத்தங்களை இந்தியா பிரயோகித்ததும் ஒரு தவறான நடவடிக்கையாகவே விளங்கியிருந்தது.

ஏனெனில் இலங்கையின் ஆயுதப்படைகள், அவற்றின் கெடுபிடித்தன்மை ஆகியவற்றிக்கு எதிராகவே வடக்கு-கிழக்கின் தமிழ்பேசும் மக்கள் ஆயுதங்களை கையில் எடுத்தார்கள்.

எவ்வகையிலும் பலாத்காரமான முறையில், இராணுவ அழுத்தங்களுக்கு மத்தியில் எந்தவொரு தீர்வையும் ஏற்கக் கூடாது என்பதே வடக்கு-கிழக்குத் தமிழர்களின் நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்தது முதற்கொண்டு தமது உரிமைகளை வென்றெடுக்க அப்பளுக்கற்ற சாத்வீகப் போராட்டங்களையே வடக்கு-கிழக்குத் தமிழர்கள் நடத்திவந்தனர்.

தமது பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிறந்த அரசியலாளர்களை அவர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்துவந்தனர்.

ஜனநாயகரீதியாக தமது உரிமைகளைவென்றெடுக்க வேண்டும்; தாம் மேற்கொள்ளும் போராட்டங்கள்யாவும் நேர்மையானவையாகவும் சாத்வீகமானவையாகவும் இருக்க வேண்டுமென்பதில் வடக்கு-கிழக்கு தமிழர்கள் முனைப்பாக இருந்தனர்.

ஆனால் பேரினவாதிகள் வடக்கு-கிழக்குத் தமிழர்களின் இந்த சாத்வீக அணுகுமுறைகளை ஒரு பலவீனமாகவே கருதினர்.

இதன் காரணமாகவே அன்றைய ஆட்சியாளரான மறைந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் காலம் முதற் கொண்டு அவரது புதல்வியான இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவின் காலம் வரை வடக்கு-கிழக்குத் தமிழர்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகள் பெரும்பாலும் தட்டிக் கழிக்கப்பட்டே வந்துள்ளன. அத்துடன் அக்கோரிக்கைகள் காலத்துக்குக்காலம் ஆட்பலம், ஆயுதபலம் மூலமாக நசுக்கப்பட்டும் வந்துள்ளன.

இவ்வகையில் வடக்கு-கிழக்குப் பிரச்னை சம்பந்தமாக முழு அளவிலான புதிய சிந்தனைகள் தோற்றம் பெறவேண்டியது இன்றியமையாததாகின்றது.

யுத்தம் நீடிப்பது எவ்வகையிலும், எவருக்குமே நன்மையளிக்கப்போவதில்லை.

ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது ஆயுதப்படைகளும் மட்டுமல்ல, வே.பிரபாகனும், எல்.ரி.ரி.ஈ. இயக்கமும் கூட இதனை நன்குணரவேண்டும்.


வடக்கே யாழ்ப்பாணத்தை ஆயுதப்படையினர் கைப்பற்றியுள்ளனர். ஆனால் கிழக்கில் எல்.ரி.ரி.ஈ.யினர் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

வடக்கே தமக்கு ஏற்பட்ட பின்னடைவுகளை நிவர்த்திசெய்யும் வகையில் கிழக்கில் எல்.ரி.ரி.ஈ.யினர் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கிற்கும், கிழக்கிற்குமிடையே பிரதேசவாரியாக வேறுபாடுகள் பல இருப்பதைக் காணமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஆயுதப் படையினரின் கட்டுப்பாட்டினுள் வந்துள்ள பிரதேசங்கள் குடிமனைப் பகுதிகளாகும்.

இருந்தபோதிலும் வடக்கிலும், கிழக்கிலும் பெருமளவிலான பிரதேசங்களில்



எல்.ரி.ரி.ஈ.யினர் தொடர்ந்து இயங்கிவருகின்றனர்.

வடக்கே வவுனியாவுக்குப்பால் உள்ள வன்னிக் காட்டுப் பிரதேசங்கள், மற்றும் கிழக்கின் வனப்பகுதிகள் பலவும் எல்.ரி.ரி.ஈ.யினரது நடமாட்டத்துக்குரிய பிரதேசங்களாக இருக்கின்றன.

இந்நிலையில் மோதல்கள் தொடர்ந்து இடம்பெறுமானால் இழப்புக்களும் நீண்டுகொண்டே செல்லுமே தவிர நிதானமான அரசியல் அணுகுமுறைகள் காத்திரமடையமாட்டா.

ஜனாதிபதி சந்திரிகா புதிய ஆண்டில் பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக தமது அரசாங்கத்தின்அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு என்னும் போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியே பிரதான ஸ்தானத்தை வகிக்கும்.

ஏனைய கட்சிகள் பலவும் பொது ஜனஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளன. அத்துடன் அக் கட்சிகள் அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்தையும் சாதகமான முறையில் பரிசிலனை செய்யவும் தயாராக இருக்கின்றன.

பாராளுமன்றத் தெரிவுக்குழு என்னும் போது கடந்த ஆட்சியில் காணப்பட்ட பாராளுமன்றத்தெரிவுக்குழு பற்றியும் இன்றைய ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும்.

வெறுமனே ஒரு கண்துடைப்பாகவே கடந்த கால பராளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

சகல கட்சிகளுமே அன்று பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் உறுதியான தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வரவில்லை.

அன்றைய ஆளுங்கட்சியான ஐ.தே.கவும் எதிர்க்கட்சியான ஸ்ரீ.ல.சுகவும் கூட எதுவித தீர்வுயோசனைகளையும் முன்வைக்காது அனைத்தையுமே காலந்தாழ்த்தி வந்தன.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையே ஒற்றுமை காணப்படவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனக்கென ஒரு தனிப்பாணியை வகுத்துக் கொண்டிருந்தது.

இதன் காரணமாக வடக்கு-கிழக்குப் பிரச்னை கடந்தகாலத்தில் வெறுமனே கேலிக் கூத்தாகியிருந்தது.

எனவே தற்போது சந்திரிகா ஆட்சியாளர்கள் மீண்டும் பாராளுமன்றத் தெரிவுக்குழு பற்றி பிரஸ்தாபிக்க ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஆட்சியாளர்கள் பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக தீர்வுத் திட்டம் எதனையும் முன்வைக்கவில்லை. ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் தமது தீர்வு யோசனைகளை முன்வைக்க முன்வந்துள்ளார்கள். இது வரவேற்கத்தக்கதே.

ஆயினும் இத்தீர்வுயோசனைகள் இறுதியும், முடிவுமானவையல்ல.

சந்திரிகா ஆட்சியாளர்கள் எல்.ரி.ரி.ஈ.யினரும் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்ற வேண்டும், அரசியல் அணுகுமுறைகளில் குதிக்க வேண்டும் என்று கூறி வருவதால் எல்.ரி.ரி.ஈ.யினருடனும் தீர்வு யோசனைகள் குறித்து பேச்சுக்களை நடத்த வேண்டியது இன்றியமையாததாகின்றது.

ஒரு புறம் இராணுவ நடவடிக்கைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், மறுபுறம் அரசியல் அணுகுமுறைகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா 'கட்டியம்' கூறியுள்ளார்.

புதிய ஆண்டில் புதிய சிந்தனைகள் நேர்த்தியான அரசியில் சார்ந்தவையாகவே இருக்கவேண்டும்.

எல்.ரி.ரி.ஈ.யினரும் அரசியல் அணுகுமுறைகளுக்கு கூடுதல் பங்களிப்பைச் செய்ய வேண்டியதும் காலத்தின் தேவையாக இருக்கின்றது. ●

## பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அரசியல் அணுகு முறைகள் துரிதம் பெற வேண்டிய நிலை

புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி சந்திரிகா, இந்த ஆண்டில் வடக்கு-கிழக்குப் பிரச்னையை தீர்ப்பதற்கான அரசியல் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என்று கூறியிருந்தார்.

மறுபுறத்தே எல்.ரி.ரி.ஈ.அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டுள்ள செய்தியிலும் இராணுவத்தை யாழ்ப்பாணத்திலிருந்து அகற்றினால் தாம் பேச்சுவார்த்தைகளுக்கு வரத்தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை எல்.ரி.ரி.ஈ. ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் புதிய பேச்சு வார்த்தைகளை வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் நடத்துவதற்குத்தாம் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

புகலிடம் கோருவதற்கு வழியின்றி தமது பிரதேசத்திலேயே அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளார்கள்.

ஆனால் கடந்த காலங்களில் இந்தியா வடக்கு-கிழக்கின் அரசியல் பிரச்னையில் கரிசனை காட்டியதோடு மட்டுமல்லாமல், இலட்சக்கணக்கான வடக்கு- கிழக்கு அகதிகளையும் அரவணைத்துத் தஞ்சமளித்திருந்தது.

கோடிக்கணக்கான ரூபாய்களையும் அகதிகளின் நலன்களுக்காகச் செலவிட்டிருந்தது.

அரசியல்ரீதியாக இந்தியாவின்அணுகுமுறைகளில் தவறுகள் ஏற்பட்டிருக்க முடியும். அத்துடன் அமைதிப்படை என்ற பெயரில் பெரும்பலத்துடன் பட்டாளங்களை அனுப்பி வடக்கு-கிழக்குப் பிரச்னையைத்

இந்நிலையில் இந்தியா இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழர்கள் விவகாரத்தில் கரிசனை காட்டி, அவர்களுக்கு பல்வேறுவகையிலும் உதவி, ஒத்தாசைகளை வழங்கியபோதிலும், இலங்கைக்கு அமைதிப்படை என்ற ரீதியில் பெரும் பலத்துடன் இராணுவத்தை அனுப்பிவைத்ததை ஒரு பெருந்தவறாகவே கருதமுடியும்.

இந்தியாவின் இந்த இராணுவ அணுகுமுறையே காலப் போக்கில் வடக்கு-கிழக்கு தமிழர் விவகாரத்தில் இந்தியா மீது கசப்புணர்வுகள் தோன்றும் சூழ்நிலைகளை உருவாக்கியிருந்தன.

ஆனால் எப்போதுமே கடந்த கால கசப்புணர்வுகளில் வாழ்ந்தால், எதிர்காலத்தில் ஒரு போதும் புத்துணர்வைப் பெற்று விட முடியாது.



படிப்பகம்

# அப்பாவா—அம்மாவா?

## சுவையான குழப்பம்

மிஸ்டர் டானாவுக்கு திடிரென்று என்ன நடந்ததோ தெரியவில்லை, பெண்களைக் கண்டாலே பிடிக்கவில்லை.

அமெரிக்க தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த டானாவுக்கு மேலதிகாரியாக இருந்தது ஒரு பெண். மேலதிகாரிக்கு அந்த அழகான இளைஞன் மீது ஒரு கண். டானாவுக்கும் ஆரம்பத்தில் விருப்பம்தான். பின்னர் படிப்படியாக விருப்பம் குறைந்து போனது.

இரவை பகிர்ந்து கொள்ள அழைத்தாள் மேலதிகாரி. அலறியடித்துக் கொண்டு ஓடினான் டானா. அவனுக்கே ஆச்சரியம். உடலிலும் மாற்றங்கள். பெண்கள் போல தனது உணர்வுகளும், உறுப்புக்களும் மாறிக் கொண்டிருப்பதாக உணர்ந்தான்.

டாக்டரிடம் ஓடினான். "மிஸ்டர் டானா நீ மிஸ்ஸாக மாறிக்கொண்டிருக்கிறாய்" என்று அந்த அதிர்ச்சியான செய்தியைச் சொன்னார் டாக்டர்.

டானா ஒரு முடிவுக்கு வந்தான். ஒப்பரேசன் மூலம் தனது உடலை பெண்ணாக மாற்றிக் கொண்டான். வேறு ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தான் மன்னிக்கவும் சேர்ந்தாள். பெயரையும் டானா ஜோய்ஸ் என்று மாற்றிக் கொண்டாள்.

மீண்டும் தொடர்ந்தது தொல்லை. அந்த நிறுவனத்தில் அவளது உதவியாளராக பணிபுரியும் இளைஞன் சில்மிஷம் செய்யத் தொடங்கினான். ஆணாக இருந்து பெண்ணாக மாறிய விஷயம் மெல்லக்



கசியவும் தொடங்கியதால் எல்லோரும் ஒருவிதமாகப் பார்க்கிறார்களாம்.

என்றாலும், ஒப்பரேசனின் பின்னர் டானாஜோய்ஸ் கவர்ச்சிகரமான கட்டழகியாக இருக்கிறார்(ள்).

மற்றும் ஒரு சங்கதி. டானா ஏற்கெனவே திருமணமானவர். ஒரு பெண் குழந்தையும் உண்டு. பெண்ணாக மாறி விட்டதால் விவாகரத்து செய்யப் போகிறார். டானாவுக்கு பிறந்த குழந்தைக்கு அவரை அப்பா என்று அழைப்பதா, அம்மா என்று அழைப்பதா என்று குழப்பம் வரக்கூடாதல்லவா. அதனால்தான் விவாகரத்து.

# ஹலோ டாக்டர்

## ஈரலைக் கெடுக்காதே

**"வணக்கம், டாக்டர். கடந்த வாரம் புத்தாண்டு ஓய்வு. அதனால் சந்திக்கவில்லை. இந்த வாரம் கேள்விகள் தயார். எல்லாம் ஈரலைப் பற்றிய கேள்விகள்."**

"நல்லது கேளுங்கள்"

**"மது அருந்தாமலும், புகை பிடிக்காமலும் இருப்பவர்களுக்கும் ஈரல் பாதிப்பு ஏற்படுமா டாக்டர்?"**

"மது அருந்துவதால் மட்டும் ஈரல் பாதிக்கும் என்பது இல்லை. வைரஸ் கிருமிகளாலும் கல்லீரல் பாதிக்கப்படும். குழந்தை பிறந்தவுடன் தொப்புள் கொடியை அகற்ற துருப்பிடித்த கத்தி அல்லது பிளேட் பயன்படுத்தினாலும் பிற்காலத்தில் ஈரலுக்கு செல்லும் ரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு கல்லீரல் ரசாயணப் பொருளை சுரந்து கல்லீரலில் புற்றுநோயை ஏற்படுத்தும்."

**"சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியுமா டாக்டர்"**

"கல்லீரல் புற்றுநோயை தொடக்க நிலையில் கண்டறிந்தால் சிகிச்சை செய்வது சுலபம். அல்லது ஈரலில் புற்றுநோய் பாதித்த பகுதியை ஒப்பரேசன் செய்து அகற்றிக் குணப்படுத்தலாம். இதற்கும் ஈரல் மாற்று சிகிச்சை செய்யப்படுகிறது. இதன் மூலம் ஏனைய உறுப்புகளுக்கு ஈரலில் இருந்து புற்றுநோய் பரவாமல் தடுக்கலாம்."

பாதிக்கும். தொப்புள் புண் ஆறுவதற்கு சாம்பல், சாணம் முதலியவற்றை பாவித்தாலும் அது போல் ஈரலுக்கு செல்லும் இரத்தக் குழாயில் பாதிப்பு ஏற்படும்."



**"எனது உறவுப் பெண் ஒருத்தி திருமணமான சில மாதங்களில் திடீர் என்று ஈரல் கசிவு ஏற்பட்டு இறந்து விட்டாள். இதற்கு காரணம் என்ன டாக்டர்?"**

"இப்படியான திடீர் ஈரல் கசிவு கர்ப்பிணி பெண்களுக்கே ஏற்படுகிறது. இதற்கு காரணம் தெரியவில்லை. பொதுவாகக் கூற வேண்டுமானால் கர்ப்ப காலத்தில் வலி நிவாரண மாத்திரைகளை டாக்டர்களின் ஆலோசனை இல்லாமல் கடைகளில் வாங்கி அதிகம் சாப்பிட்டாலும் திடீர் என்று ஈரல் செயல் இழப்பு ஏற்படலாம்."

**"ஈரல் செயல் இழப்பு ஏற்பட்டால் என்ன செய்யவேண்டும்?"**

"ஈரல் செயல் இழந்தவர்களுக்கு மாற்று ஈரலைப் பொருத்தலாம். மாற்று ஈரலைப் பொருத்தும் போது 40 முதல் 50 வீதம்தான் வெற்றி கிடைக்கும்."

**"ஈரல் புற்றுநோய் எப்படி ஏற்படுகிறது?"**

"பல காரணங்கள். உதாரணமாக ஒன்று சொல்கிறேன். கெட்டுப்போன நிலக்கடலையை சாப்பிடுவதாலும் ஈரலில் புற்றுநோய் வரலாம். கெட்டுப்போன நிலக்கடலையில் காளான் வளர்ச்சி இருக்கும். இந்த காளான் ஒருவகை

**"பிறக்கும்போதே ஈரல் பாதிப்புடன் குழந்தை பிறந்தால் சிகிச்சை செய்ய முடியுமா டாக்டர்?"**

"நிச்சயமாக சிகிச்சை செய்து உயிர் பிழைக்க வைக்கலாம். பிறக்கும் போதே ஈரல் பாதித்த நிலையில் குழந்தைகள் பிறப்பதுண்டு.

பொதுவாக கல்லீரலில் இருந்து வெளியேறும் பித்தநீர் சிறு குடலில் சென்று சேர வேண்டும். இப்படி பித்தநீர் சிறுகுடலுக்கு வரும் குழாய் பிறவியிலேயே ஒழுங்காக அமையாமல் போனால் பித்தநீர் அடைப்பு ஏற்பட்டு ஈரல் பாதிக்கப்படும்.

இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு 30 நாட்களுக்குள் ஒப்பரேசன் செய்து, அந்த பித்தநீரை நேரடியாக சிறு குடலுக்கு செல்லும்படி செய்துவிட்டால் குழந்தையின் உயிரைக் காப்பாற்றி விடலாம். இதற்கு 'பைபாஸ்' அறுவைச்சிகிச்சை செய்யப்படுகிறது."

**"சிலருக்கு பிறவியிலேயே இரத்தத்தில் கொழுப்பு இருக்கமுடியுமா டாக்டர்?"**

"இரத்தக் கொழுப்பை ஈரல்தான் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. சிலருக்கு பிறவியிலேயே இரத்தக் கொழுப்பைக் கட்டுப்படுத்தும் சக்தி ஈரலுக்கு இல்லாமல் போகலாம். இப்படியானவர்களுக்கு இரத்தத்தில் கொழுப்பு அதிகரித்து மாரடைப்பு ஏற்படலாம்.

இதற்கு இதய மாற்று சிகிச்சையோடு, ஈரல் மாற்றுச் சிகிச்சையும் செய்ய வேண்டும்."

**"நன்றி டாக்டர். மறுபடி சந்திப்போம்."**

# காதலர்கள் பட்டியல்



பிரிட்டிஷ் அரச குடும்பத்தினர் என்றாலே பிரபலமும் சர்ச்சைகளும் தானாக வந்து ஒட்டிக் கொள்ளும்.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் டயானாதான் அழகென்றால் அழகு என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். அது தப்பு.

இளவரசர் சார்ள்ஸ்சுக்கு ஒரு பாட்டியம்மா இருக்கிறார். 95 வயது. அந்தக் காலத்திலே அவர் இருந்த அழுகுதான் சூப்பர். 'தி குயின் மதர்' என்றொரு புத்தகம் வந்தது. அதில் பாட்டியின் காதலர்கள் பற்றி ஒரு பட்டியலே இருக்கிறதாம். அந்தப் புத்தகத்தை மீண்டும் மறு பதிப்பு செய்யப் போகிறார்கள். டயானாவால் பிரிட்டிஷ் அரச பரம்பரை பாதிக்கப் பட்டுவிட்டது என்று மூக்கைச் சிந்தும் எலிசபெத்தின் வாயை அடைக்கத் தான் பாட்டியின் பழைய கதை தூசுதட்டப்படுகிறது.

## சென்றவாரம்

ஈராக் எண்ணை வியாபாரத்தில் நினைத்ததைச் சாதிக்க தடையாக இருந்தன சவுதி அரேபியாவும், ஈரானும்.

1975 இல் ஈராக் உபஅதிபராக இருந்தவர் சதாம் ஹுசைன்.

அந்த இரண்டு நாடுகளதும் எண்ணைவள அமைச்சர்களை தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டினார் சதாம் ஹுசைன்.

திட்டத்தை நிறைவேற்ற அவர் நம்பியது கார்லோஸை.

தனது பொறுப்பாளரை கொலை செய்த குற்றத்திற்கான மரண தண்டனையை எதிர் நோக்கிய கார்லோஸுக்கு- சதாம் ஹுசைனின் திட்டத்தால் விடுதலை கிடைத்தது.

இனி......

# தவறக்கூடாத தலைகள்

தருவது ரசிகன் 18

வீட்டுக்காவல் தளர்த்தப்பட்டு கார்லோஸுக்கு தடபுடலான உபசரிப்புக்கள் நடக்கத் தொடங்கியிருந்தன.

பலியாட்டுக்கு நடக்கும் உபசாரமா அல்லது உண்மையாகவே முடிவை மாற்றி விட்டார்களா என்று தெரியாமல் குழம்பிப் போனான் கார்லோஸ்.

மீண்டும் தளபதி வாடி ஹாட்டாட் கார்லோஸை அழைத்தார். போனான். இம்முறை போனதடவை போல வாடி ஹாட்டாட்டின் முகத்தில் கடுமை இல்லை. இயல்பாகப் புன்னகைத்தார்.

"இரு.. பேச வேண்டும்" என்று சோபாவில் அமர்த்தி தானும் அவன் எதிரே அமர்ந்து, "நீ செய்தது நியாயம்தான். நிறைய விசாரித்து விட்டேன்." என்றார். பொய்!

"சதாம் ஹுசைன் என்னை சந்திக்க வேண்டும் என்கிறார். உன்னையும் அழைத்துப் போகலாம் என்று நினைக்கிறேன்" என்று சொன்னதிலும் பாதி பொய்.

சதாம் ஹுசைன் கார்லோஸை கட்டாயமாக அழைத்துவரச் சொன்னதை மறைத்து, தானாக அவனை அழைத்துச் செல்வது போல வாடி ஹாட்டாட் நடந்து கொண்டார்.

♥—♥—♥

அடர்த்தியான மீசை, தடித்த உதடுகள், எதிரில் இருப்பவரை ஊடுருவும் தீர்க்கமான பார்வை, படிய வாரிய முடி, முதல் பார்வையிலேயே கார்லோஸுக்கு சதாம் ஹுசைனை பிடித்துவிட்டது.

"எங்கே கார்லோஸை அழைத்து வராமல் இருந்து விடுவீர்களோ என்று நினைத்துவிட்டேன்" என்று சதாம் ஹுசைன் சொன்னபோது, முகத்தில் அறைவிழுந்தது போலானார் வாடி ஹாட்டாட்.

கார்லோஸ் எதையுமே கவனியாதது போல நடந்துகொண்டான். ஒருவேளை சதாம் சொன்னது கார்லோஸுக்கு சரியாக விளங்கியிருக்காதோ என்று நினைத்தார், விளங்கியிருக்கக் கூடாது என்றும் விரும்பினார் தளபதி வாடி ஹாட்டாட்.

*சவுதி அரேபியா எண்ணைவள அமைச்சர் யமானி, ஈரான் எண்ணைவள அமைச்சர் ஜாம்ஷிட்,*

*இருவரும்தான் குறி.*

*தப்பவேகூடாது.*

*ஆனால் ஒரு முக்கிய நிபந்தனை,*

*ஈராக் இதிலே சம்பந்தம் என்று சின்னக் கசிவு கூட இருக்கக்கூடாது.*

திட்டத்தை விளக்கினார். திட்டம் வெற்றியளித்தால் பாலஸ்தீன மக்கள் முன்னணிக்கு தேவையான பணம் தரப்படும். உதவிகளும் செய்யப்படும். தூண்டில்.

வாடி ஹாட்டாட் சம்மதித்தார். கார்லோஸ் புன்னகைத்தான்.

"உன்னால் முடியும் கார்லோஸ்" என்றார் சதாம்.

எண்ணைவள அமைச்சர்கள் கூடும் இடம் 'ஒப்பேக்' மாநாடு.

அந்த மாநாட்டில்தான் கைவரிசையைக் காட்டவேண்டும்.

1975 டிசம்பர் மூன்றாவது வாரத்தில் ஒஸ்ரியா நாட்டில் வியன்னா நகரில் ஒப்பேக் மாநாடு. அந்த மாநாடுதான் யமானியும், ஜாம்ஷிட்டும் கலந்து கொள்ளும் கடைசி மாநாடாக இருக்க வேண்டும்.

முடிவுகள் செய்யப்பட்டன.

நடக்கும் என்ற நம்பிக்கையோடு சந்திப்பு முடிந்தது.

✢◇◇◇✢

திட்டத்தை நிறைவேற்றுவது எப்படி என்று கார்லோஸும், தளபதி வாடி ஹாட்டாட்டும் தனியாக விவாதித்தனர்.

தாக்குதல் குழுவுக்கான ஆட்களை தெரிவு செய்வதுதான் முதல் வேலை.

தாக்குதலுக்கான பிரதான குழுவில் கார்லோஸ் தலைமையில் ஐந்து பேர் இருப்பார்கள். மூவர் பாலஸ்தீனியர்கள். இருவர் ஜெர்மன்காரர்கள்.

பாலஸ்தீனியனான காலிட் துடிப்பான இளைஞன். அவனை தனக்கு அடுத்த நிலையில் இருக்கக் கூடியவனாக வைத்துக் கொண்டான் கார்லோஸ்.

பாலஸ்தீனர்கள் மூவரில் ஒரு பெண்ணுமிருந்தாள். முழுப்பெயர் கபிரியேல் குரோச்சர் ரியெட்மான். நாம் சுருக்கமாக குரோச்சர் என்று அழைக்கலாம்.

குரோச்சர் சகல இராணுவப் பயிற்சியிலும் தேர்ந்தவள். குறி தவறாமல் சுடக் கூடியவள். மிக முக்கியமாக வாடி ஹாட்டாட்டின் நம்பிக்கைக்கு பாத்திரமானவள்.

கார்லோஸ் தெரிவு செய்த ஜெர்மன்காரர்களில் ஒருவன் கலீன், மற்றொருவன் வில்ஃபிரட் போஸ்.

கார்லோஸின் பெயர் ஒப்பேக் நடவடிக்கை சம்பந்தப்பட்ட சகல விடயங்களிலும் 'சலம்' அல்லது 'ஜொனி' என்றுதான் அழைக்கப்பட வேண்டும்.





## மனித வெடிகுண்டு

பிரதான தாக்குதல் குழுவுக்கு உதவுவதற்காக மற்றொரு துணைக்குழு தெரிவு செய்யப்பட்டது.

அந்தக் குழுவில் ஐந்து ஜெர்மனியர்கள் இருப்பார்கள்.

எங்கே தாக்குதல் நடத்தப்படப் போகிறது என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது.

பிரதான குழுவுக்கு தேவையான உதவிகளை செய்வது, பாதுகாப்பான வீடுகளை ஏற்பாடு செய்வது போன்ற வேலைகள் அவர்களுக்கு.

திட்டங்களை ஆலோசித்து, குழுக்களை ஒழுங்கு படுத்தி, வியன்னாவுக்கு கார்லோஸ் புறப்படும் போது, வாடி ஹாட்டாட் கார்லோஸிடம் தனியாகச் சொன்னார்;

"ஒப்பேக் ஒப்பரேசன் முடியும் வரை மூன்றைக் குறைத்துக் கொள்."

"மூன்று..?"

"யெஸ்! அதிகப்படியான உணவு, அதிகப்படியான பெண்கள். அதிகப்படியான மதுவகைகள்."

"கட்டளையா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்."

●✻✻●

வியன்னாவுக்கு தனியாக ரயிலில் சென்று, ஹில்டன் ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கினான் கார்லோஸ்.

பிரதான குழுவில் இருந்தவர்கள் அனைவரும் தனித்தனியாக வந்து சேர்ந்தனர். அதற்கு முன்னரே வந்து சேர்ந்துவிட்ட துணைக்குழு அவர்களுக்கான வீடுகளை ஏற்பாடு செய்து வைத்திருந்தது.

ஆயுதங்கள் வந்து சேரவேண்டியதான் பாக்கி. ஏனைய ஏற்பாடுகள் யாவும் முடிந்து விட்டன.

'ஒப்பேக்' மாநாடு நடைபெறும் மண்டபப் பகுதியை கண்காணித்து தகவல் எடுத்து முடித்தாகிவிட்டது.

மண்டப உள் அமைப்புப் பற்றி அறியவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

'ஒப்பேக்' மாநாட்டுக்கு ஈராக் சார்பாக வரும் தூதுக்குழுவில் ஒருவர் மூலமாக மண்டப உள் இரகசியங்களை அறிவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஆயுதங்கள் வந்து சேர்ந்தன. கொண்டு வந்தது ஈராக் தூதுக்குழு.

தூதரகங்களுக்கு வரும் பொதிகளை சுங்கப் பகுதி சோதனையிடுவதில்லை என்ற விதியை ஈராக் பயன்படுத்திக் கொண்டது.

டிசம்பர், 20-1995 இல்தான் 'ஒப்பேக்' மாநாடு ஆரம்பம்.

டிசம்பர் 19ம் திகதி இரவு வரை ஒஸ்ரியாவில் ஈராக் தூதரகத்தில் ஆயுதங்கள் பத்திரமாக இருந்தன. இரவுதான் கார்லோஸின் கைக்கு மாற்றப்பட்டன.

இரண்டு இயந்திரத் துப்பாக்கிகள், ஆறு பிஸ்டல்கள், எட்டு எறிகுண்டுகள், அவசியம் ஏற்பட்டால் மாநாட்டு மண்டபத்தை தகர்க்கக்கூடிய வெடி மருந்துகள்.

பிரதான குழுவில் இருந்தவர்களையும், துணைக் குழுவினரையும் அழைத்தான் கார்லோஸ்.

இப்போதுதான் முதன்முதலாக தாக்குதல் இலக்கு எதுவென்று அவர்கள் அனைவரும் அறிந்து கொண்டனர். கார்லோஸ் தொண்டையைச் செருமி சரிபடுத்திக் கொண்டு பேசத் தொடங்கினான்.

"நடவடிக்கை நாளை ஆரம்பம். குழுத் தலைவன் என்றமுறையில் எனக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டால், குழுவில் உள்ள கலிட் உங்கள் பொறுப்பாளராக இருப்பார். தேவையான ஆயுதங்கள் இருக்கின்றன. கையில் ஆயுதம் இருந்தால் போதாது. நெஞ்சில் துணிவு வேண்டும். கட்டுப்பாடு முக்கியம். நாம் பணயமாகப் பிடிக்கப் போகும் நபர்கள் ஒத்துழைக்க மறுத்தால் அவர்களை உடனே சுட்டுவிடலாம்."

சொல்லிவிட்டு ஒரு நொடி தாமதித்து தன் குரலை உயர்த்திய கார்லோஸ்!

"எனது குழுவில் கட்டளையை மீறுகிறவர்கள் என்னிடம் இரக்கத்தை எதிர் பார்க்கக்கூடாது. இலக்குத்தான் முக்கியம். நபர்கள் அல்ல. மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை."

✻▢▢✻

டிசம்பர் 21 தாக்குதல் குழு புறப்பட்டது. டிசம்பர் 20ம் திகதி தொடக்க நாள் என்பதால் சம்பிரதாய நிகழ்ச்சிகள் மட்டுமே நடக்கும். முக்கிய அமைச்சர்கள் வராமல் போகலாம்.

ஆகவே, டிசம்பர் 21 திகதிதான் துல்லியமான நாளாகத் தெரிவு செய்யப்பட்டது.

குழு புறப்பட்டது. தோளில் பைகள். பைகளின் உள்ளே துப்பாக்கிகள், வெடி குண்டுகள்.

பல நாடுகளின் அமைச்சர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டு மண்டபத்தின் வாயிலில் ஒரேயொரு இன்ஸ்பெக்டர்தான் நின்றுகொண்டிருந்தார்.

ஒரு புன்னகையோடு கார்லோஸ் அந்த இன்ஸ்பெக்டரை தாண்டி உள்ளே போனான்.

அடுத்துவந்த காலிட் இன்ஸ்பெக்டரை நோக்கி "குட்டே" என்றான். பதிலுக்கு "குட்டே" சொல்லி அவனையும், அவனுக்கு பின்னால் தோளில் பைகளோடு வந்தவர்களையும் உள்ளே அனுமதித்தார் இன்ஸ்பெக்டர்.

கார்லோஸும் குழுவினரும் மண்டபத்துக்குள் சென்ற போது முதலில் எதிர்ப்பட்டது செய்தியாளர்கள்தான்.

செய்தியாளர்களில் ஒருவர் தனக்கு விஷய ஞானம் அதிகமிருப்பதாகக் காட்டிக் கொள்ள நினைத்து; "இதோ வந்து விட்டார்கள் அங்கோலியன் நாட்டு பிரதிநிதிகள்" என்று சக செய்தியாளர்களுக்கு சொல்லிக்கொண்டிருக்க, கார்லோஸ் அதை செவிகளில் வாங்கிக்கொண்டு, மாநாடு நடைபெறும் மேல்மாடிக்கு செல்லும் 'லிஃப்ட்'டில் தனது குழுவுடன் நுழைந்தான்.

லிஃப்ட் உயர்ந்து கொண்டிருந்தது. உள்ளே அனைவரும் தமது பைகளில் இருந்து ஆயுதங்களை வெளியே எடுத்து தயார் நிலைக்கு வந்து, லிஃப்ட் நின்று, கதவு திறக்கப் படுவதற்காகக் காத்திருந்தனர்.

(தொடர்ந்துவரும்)

www.padippakam.com

# குண்டு... குண்டு... மனிதக் குண்டு

தகவல் பெட்டி

மனிதக் குண்டுத் தாக்குதலோ என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா. மனிதக் குண்டுதான். ஆனால் யாருக்கும் ஆபத்தில்லாதது. ஆச்சரியம் மட்டும்தான் ஏற்படும். அதாகப்பட்டது. இது ஒரு சாகச விளையாட்டு.

பீரங்கிக் குழாய்க்குள் இருந்து கொள்ளவேண்டியது. பீரங்கி இயக்கப்பட்டவுடன் வெடி மருந்தின்அதிர்வில் குழாய்க்குள் உள்ள மனிதர் உயரத்துக்கு வீசப்படுவார். அதாவது குண்டுக்கு பதிலாக மனிதன். இந்த சாகசத்தை ஆரம்பித்து வைத்தவர் ஹுகோ ஷச்சினி. 1922ம் ஆண்டு எகிப்து நாட்டில் ஷச்சினியும் அவரது சகோதரரும் இந்த சாகசத்தை முதன் முதலில் நடத்தினார்கள்.

ஷச்சினியின் சகோதரர் எட்மண்டோ பீரங்கிக்குழாய்க்குள் இருந்து கொள்ள, வெடி அதிர்வு ஏற்படுத்தப்பட்டது.

அதிர்விலே உயரத் தூக்கப்பட்ட எட்மண்டோ கீழே விழுந்தபோது அவரது கால் ஒன்று முறிந்துபோனது.

அதனால் மனம் சோர்ந்துவிடவில்லை. தொடர்ந்து முயன்றார்கள். வெற்றியும் பெற்றார்கள். மொத்தம் 1000 தடவைக்கு மேல் இந்தச் சாகசத்தை செய்து காட்டினார்கள். சில சமயங்களில் மட்டும் காயப்பட்டும் கொண்டார்கள்.

தற்போது ஷச்சினியும், அவரது சகோதரரும் உயிருடன் இல்லை. ஆனால் அவர்கள் அறிமுகப்படுத்திய இந்த பீரங்கி மனிதக் குண்டு சாகசம் 'கனன் போல் சாகசம்' என்ற பெயரில் பலநாடுகளில் செய்து காண்பிக்கப்படுகிறது.


படத்தில் மனிதக் குண்டாக புகைமுட்டம் மத்தியில் உயர்பவர் ஷச்சினி. 1922இல் எடுக்கப்பட்ட அபூர்வ புகைப்படம் இது.






## வயது 2700

படத்தில் இருக்கும் எலும்புக் கூட்டுக்கு எத்தனை வயதிருக்கும் என்கிறீர்கள்? இரண்டாயிரத்தி எழுநூறு வயது. எகிப்தில் 1838ம் ஆண்டுவரை பராமரிக்கப்பட்ட இந்த உடலை பிரிட்டிஷ் நாட்டில் உள்ள தொல் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றுக்கு அன்பளிப்பாக கொடுத்தது எகிப்து. இன்றுவரை அங்குதான் பத்திரமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் அதனை குளிக்கவைத்து புத்தாடை அணிவித்தபோது எடுத்த படம்தான் இது. மரணித்த பின்னும் என்ன மரியாதை பாருங்கள். கொடுத்துவைத்த உடல். எத்தனை வயதில் இந்த உடலை விட்டு உயிர் பிரிந்தது என்று யாருக்கும் தெரியாது. செத்த பின்னர் 2700 வயது பூர்த்தியானது மட்டும் உறுதியான தகவல்.



## பெண் 'சிவிங்கி'

கழுத்து நீ...ள...மான பெண் என்று நினைத்துவிடாதீர்கள். இது ஒரு புகைப்பட அதிசயம். கமரா செய்த சாகசத்தால் புகைப்படத்தில் மட்டும் கழுத்து நீ...நீ...ண்டு விட்டது. உலகில் மிகச் சிறந்த புகைப்பட விந்தைகளில் ஒன்றாக இடம்பிடித்துவிட்டது. கமராவால் இந்த விந்தையைச் செய்தவர் மத்தியூ ரொல்ஸ்ரொன்.



## அச்சம் என்பது மரத்திலடா!

நாயைக் கண்டு பூனை பயந்தோடுவதைப் பார்த்திருப்பீர்கள். படத்தில் ஒரு ஆச்சரியக் காட்சியைப் பாருங்கள். பூனையைக் கண்டு மிரண்டு ஓடிய நாயார் மரத்தில் தொத்திக்கொண்டு உச்சிவரை சென்றுவிட்டார். மரத்தின் கீழே நின்று நோட்டமிடுகிறார் பூனையார். இலண்டனில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. பயந்தாங் கொள்ளி நாயாரை பூனையார் அடிக்கடி பயம்காட்டுவதைக் கவனித்த ஒரு கமராக் காரர் 'கிளிக்'கிய காட்சி தான் இது. சர்வதேச சஞ்சிகைகளில் இந்தப் படம் பிரசுரமாகியதில் கமராக்காரருக்கு நல்ல வருமானம் கிடைத்தது.



படிப்பகம்

www.padippakam.com

## ரேவதி ஒரு தேனீ

நடிகர்களில் என்றும் இளமையானவர் சிவகுமார். ஆர்ப்பாட்டம் எதுவும் இல்லாதவர். அதே போல் நடிகைகளில் ஒருவர் இருக்கிறார். அவர்தான் ரேவதி. ரேவதி பல நல்ல காரியங்களை மகா ஈடுபாட்டோடு செய்து வருகிறார். சென்னையில் உள்ள மனநிலை பாதிக்கப்பட்ட பெண்களுக்கான அமைப்பில் தீவிர தொண்டராக இருக்கிறார். அது தவிர கணவர் சுரேஸ் மேனனோடு சேர்ந்து தொலைக்காட்சித் தொடர்களையும் இயக்கிக் கொண்டிருக்கிறார். ரேவதி உற்சாகத்தில் தேனீ.

## 16 நிறையாத நாயகி கமலுக்கு ஜோடி

'அம்மயாண சத்யம்' என்னும் மலையாளப்படத்தை சிறு மாற்றங்களோடு தமிழில் தயாரிக்கிறார்கள்.

'கண்டேன் சீதையை' என்ற பெயரில் தமிழில் தயாராகும் படத்தில் கமல்தான் கதாநாயகன்.

கதாநாயகியாக நடிக்க புதுமுகம் தேடினார்கள். ஆயிரம் ஆயிரம் விண்ணப்பங்கள் வந்து குவிந்தன. அதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட முத்தின் பெயர் ருசிதா. (என்ன அர்த்தம்?) பாடசாலையில் படித்துக் கொண்டிருக்கிறார். 16 வயதாகவில்லை என்று சத்தியம் பண்ணுகிறார். கடந்த வருடம் மிஸ் பெங்களூராக வெற்றி பெற்றவர். அப்பா ஒரு தொழிலதிபராம்.

"முதல் படத்திலேயே கமலுடன் நடிக்க கிடைத்தது மகா அதிஷ்டம். எனக்கு தேவையானதை நல்ல முறையில் சொல்லித் தருகிறார் கமல்" என்கிறார் ருசிதா. படத்திற்காக கூந்தலை வெட்டி ஆண்போல வேசமிட்டும் நடிக்கிறார் ருசிதா. அதுசரி பெயரின் அர்த்தம் என்ன? அது சொந்தப் பெயர்தானாம்.

## கடன்ராஜன்

'ஆண்பாவம்' படத்தை இந்தியில் தயாரித்தார் பாண்டியராஜன். இன்னமும் படம் வெளிவரவில்லை. தயாரிப்புக்காக வாங்கிய கடனை மெல்ல மெல்ல தீர்த்துக் கொண்டிருக்கிறார். வருவாயில் பாதி கடன் அடைப்பதில் போகிறதாம். பாவம், பாண்டியராஜன்.

## வம்புகளுக்கு ஊர்மிளாவின் மறுப்பு

### பம்பாய் பத்திரிகைகள் மீது பாய்ச்சல்

பம்பாய் பத்திரிகைகள் மீது தீராத கோபத்தில் இருக்கிறார் ஊர்மிளா. 'ரங்கீலா' படம் வெளுத்து வாங்கிக் கொண்டிருப்பதால் ஊர்மிளாவைப் பற்றியும் மனம் போன போக்கில் எழுதித் தள்ளுகிறார்களாம். "பம்பாய் பத்திரிகைகள் மோசம்" என்கிறார் ஊர்மிளா.

ஊர்மிளா பற்றி வெளியாகும் வம்புகளையும், அதற்கு ஊர்மிளா சொல்லும் விளக்கங்களையும், அறிந்து கொள்ள ஆசையா. அப்படியானால் வாருங்கள்.

ரங்கீலா பட இயக்குநர் ராம் கோபால் வர்மாவுடன் ஊர்மிளாவுக்கு தொடர்பு உள்ளது. அதனால்தான் ரங்கீலாவில் செக்ஸியான உடைகளில் நடிக்க சம்மதித்தார்.

படம் வளரும் போது கதாநாயகன் ஜாக்கி ஷெராப் ஊர்மிளாவை வளைத்துப் பிடித்து விட்டார். முதலில் ராம் கோபால் வர்மா சற்றே அதிர்ந்தாலும், படத்தின் வெற்றிக்கு அந்த நெருக்கம் உதவும் என்று பேசாமல் இருந்து விட்டார்.

மேற் கண்ட இரண்டு வம்புகளையும் வன்மையாக நிராகரித்திருக்கிறார் ஊர்மிளா.


"அவர்களோடு உண்மையாகவே தொடர்பு இருந்தால் என்னை அந்தமாதிரி நடிக்க விட்டிருப்பார்களா? என் உடலை அப்படிக் காட்டியிருப்பார்களா?" என்று தனது தரப்பு வாதத்தை முன் வைக்கிறார் ஊர்மிளா.

சற்றுப் பலவீனமான வாதமாக எமக்குப் படுகிறது. இயக்குநர் ஆர்.கே.செல்வமணி ரோஜாவைக் காதலிப்பது பிரபலமான சமாச்சாரம். அப்படியிருந்தும் ரோஜாவை தனது படங்களில் என்ன பாடுபடுத்துகிறார் செல்வமணி? ஆகவே ஊர்மிளாவின் வாதம் சத்துக் குறைந்துவிட்டது.

இனி அடுத்த வம்பு. ஊர்மிளா நடிக்கும் படங்களில் கதாநாயகர்களோடு பிரச்சனைப்படுகிறார். சில நடிகைகளோடு அவர்களை சின்டு முடித்து விடுகிறார்.

இந்த வம்பையும் வன்மையாக மறுக்கிறார் ஊர்மிளா. "என் சுபாவம் தெரியாமல் அப்படிப் பேசுகிறார்கள். நானாக வலியப் போய் யாரோடும் சேர மாட்டேன். வந்து சேரும் நல்ல நண்பர்களை இழக்கவும் மாட்டேன்" என்கிறார். ஊர்மிளா சொல்லும் இந்த வாக்குமூலத்தை ஓரளவு நம்பலாம்.

கமலுடன் 'சாணக்கியன்' படத்தில் நடித்துவிட்டு இப்போது 'இந்தியன்' படத்திற்கும் கமலால் அழைக்கப்பட்டவர் ஊர்மிளா. அதனால் பழகத் தெரியாதவர் என்ற வாதம் அடிபட்டு போய்விட்டதல்லவா.



நாசர்- ராஜேஷ்
படம் : அருவாவேலு

## ஜலதோஷம் பி…

குறைத்தார்கள். பின்ன…
போனார்கள். ஆனால்…
இழுக்கிறார். அந்த அ…
மலையாளப் படவுல…
கலக்க அவரது மார்க்…
சில்க் சுமிதாவுக்கு இ…
சமீபத்தில் ஒரு மலையாளப்…
சில்க் தாங்குவார்.







## மாணிக்கம் தாமதம்

தைப்பொங்கல் வெளியீடாக வரவிருந்த ராஜ்கிரணின் மாணிக்கம் தாமதமாகும். பந்தயக் களத்தில் பல படங்கள் போட்டிக்கு வருவதால் பயந்து விட்டார்களோ? அப்படியொன்றும் இல்லை. அவசரப்பட்டு படத்தை முடித்தால் ரசிகர்களுக்கு ஒரு திருப்தி இருக்காது பாருங்கள். அதுதான் நிதானமாக படப்பிடிப்பை முடிக்கப் போகிறார்களாம்.

ராஜ்கிரணுக்கு ஜோடி வனிதா விஜயகுமார். ராஜ்கிரண் சொல்லிக் கொடுத்ததையெல்லாம் கற்பூரம் போல சட்டென்று பற்றிக் கொண்டாராம் வனிதா.

## ஐஸ்வர்யாராய்-மனிஷா மோதல்

முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய் நொந்து போயிருக்கிறார். மனிஷா கொய்ராலாதான் அவரது மனதை நோகச் செய்து விட்டார்.

எல்லாவற்றுக்கும் காரணம் ஒரு ஆண். அவரது பெயர் ராஜீவ் முல்சந்தானி. ஐஸ்வர்யாராய் மொடலிங் செய்து கொண்டிருந்தபோதே அவரோடு பழக்கம். நல்ல நெருக்கம்.

ராஜீவ் முல்சந்தானியும் மொடலிங் துறையில்தான் இருக்கிறார்.

ராஜீவ் முல்சந்தானியை மனிஷாவுக்கும் தெரியும். இருவரும் ஒரு தடவை தனியாகத் தங்கி தமது நட்பை உறுதிசெய்து கொண்டவர்கள் என்று சொல்கிறார் ஐஸ்வர்யாராய். அது அவர்களின் தனிப்பட்ட விவகாரம் என்றும் சாதாரணமாகச் சொல்லுகிறார் ஐஸ்வர்யாராய்.

ஆனால் மனிஷா கொய்ராலா ராஜீவ் முல் சந்தானிமீதும் ஐஸ்வர்யாராய் மீதும் கோபமாக இருக்கிறார். ராஜீவை மயக்கிவிட்டார் ஐஸ்வர்யாராய் என்ற கடுப்பில் இருக்கிறார் மனிஷா.

"ராஜீவ் எனக்கு நல்ல நண்பர். அவர் நண்பர் மட்டும்தான் என்றால் யாரும் நம்ப மாட்டேன் என்கிறார்கள். எனது சிறந்த நண்பர்களில் பலர் ஆண்கள்தான்" என்கிறார் ஐஸ்வர்யாராய்.

## பயங்கரவாதியாக ரகுவரன்

பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் படம் தாவூத் இப்ராஹிம் என்பது தெரிந்த செய்தி. பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தேடப்பட்டுவரும் நபர்தான் தாவூத் இப்ராஹிம். படத்தில் தாவூத் இப்ராஹிமாக நடிப்பவர் ரகுவரன். உண்மையான தாவூத் இப்ராஹிமை இந்தியா கைது செய்ய முடியாவிட்டாலும், தமிழ் படத்திற்கு ஒரு கதை கிடைத்துவிட்டது அதிஷ்டம்.

படத்தில் அரசியல் வாடையோடு, கவர்ச்சி மற்றும் அதிரடி சண்டைகள் கலக்கப்பட்டு மசாலாவாகத் தரப்படுமாம்.

## மறுபடியும் அரவிந்தசாமி

மோகன்லால்-ஐஸ்வர்யாராய் நடிக்கும் 'ஆனந்தம்' படம் வேலைகளை சுறுசுறுப்பாக ஆரம்பித்துவிட்டார் மணிரத்னம். தானா பட்டேகர் நடிப்பதாக இருந்தது. ஏதோ காரணத்தால்…

… மணிரத்னம் படத்தில் மீண்டும் தோன்… முதல் தோன்றவைத்த நன்றிக்காக மற்றும் ந…

காலை
மணியோசை
கால்தமணி
நெல்லோசை
வாழை
இலையோசை
தஞ்சியங்கை
வளையோசை
பேர் கொழிக்க…
வந்த பெட்டக…
உதைப்பாவாய்…



அர்ஜுன்-மீனா
படம் : செங்கோட்டை

## நிலைக்குமா இசை

ஏ.ஆர்.ரகுமானின் இசை ஹிந்தி மிலும் (நம்நாட்டில் சிங்களத்திலும்தான்) புகழ் பரப்பிவிட்டதால் ரகுமான் இசை பற்றிய சர்ச்சைகளும் கிளம்பியுள்ளன. ஹிந்திப்பட பாடலாசிரியர் சமீர் என்பவர் ஒரு பேட்டியில் ரகுமானின் இசை நீடிக்காது என்று சொல்லியிருக்கிறார்.

"ஏ.ஆர்.ரகுமானின் இசை தமிழ், தெலுங்கு வார்த்தைகளுக்குத்தான் பொருத்தமாக இருக்கும். இந்தி மொழிக்கு கொஞ்சம் கஷ்டம். வார்த்தைகள் அமுங்கிவிடுகின்றன. டிஸ்கோவில் ஆட உற்சாகமாகக் கேட்க, அப்போதைக்கு அவரது இசை பிரமாதம். ஆனால் ஒரு வருடம் கேட்காமல் விட்டுவிட்டால் அப்போதும் அது நிலைத்திருக்குமா என்பது சந்தேகம்தான்" என்கிறார் சமீர்.

## காதோடு சொல்லுகிறோம்

**கா**தலன் நாயகிக்கு அள்ளக்குறையாத வருமானம். பிரமாண்டமான பங்களா ஒன்று கட்டியிருக்கிறார். எந்த நடிகையும் இதுவரை கட்டாதளவுக்கு பெரிய பங்களாவாம். நீச்சலடிக்க, டென்னிஸ் விளையாட என்று பற்பல வசதிகள். சினிமாவில் நடித்து மட்டும் சேர்ந்த பணமல்ல என்று பரவலான அபிப்பிராயம். அப்படியானால்..?

**இ**ரண்டு சர்வதேச லெவல் அழகிகளும் நடிக்க வந்துவிட்டார்கள். பிரபலமான ஹீரோக்கள், இயக்குநர்கள் மட்டுமே நெருங்க முடிகிறதாம். அழகி 'கல்' புதிய படம் ஒன்றில் அமல நடிகையின் கணவரோடு இணைகிறார். அமல நடிகை கவலையோடு இருப்பதாகக் கேள்வி.

**'ரோ'** என்று ஆரம்பிக்கும் பூவின் பெயர் உள்ள நடிகை இயக்குநர் இமயம் 'ராஜாவை' அந்த மாதிரிப் புகழ்கிறாராம். எனக்குப் பெயர் வைத்தவரே அவர்தானே. அவர் கையால் குட்டுப்பட கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்கிறார் நடிகை. அவரது காதலரான இயக்குநர் காதில் இது விழுந்தால் நிச்சயம் கவலைப்படுவார்.

**மீ**ன் நடிகைக்கு மார்க்கெட் நிலவரம் டல்லடிக்கிறதாம். அதனால் நடிகையின் தாய்க்குலம் சில பிரபல இயக்குநர்களுக்கு தூது விட்டுள்ளாராம்.

## நக்மாவின் ஒரே காதலர்

நக்மா படு சீரியஸாக சிம்புகபூரைக் காதலித்தார். முன்னர் அது கிசு-கிசு. இப்போது நக்மாவே ஒப்புதல் வாக்குமூலம் தருகிறார்.

"நான் காதலித்த ஒரேயொரு ஆண் சிம்புகபூர்தான். ஆனால் பல்வேறு காரணங்களுக்காக நாங்கள் பிரிய வேண்டியதாகிவிட்டது. 94 இல் பிரிந்தோம் ரொம்பவும் பாதிக்கப்பட்டேன். இப்போது தேறிவிட்டேன். இப்போது நான் சந்தோசமாக இருக்க வேண்டும் என்று அவர் நினைக்கிறார். அவர் சந்தோசமாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். கசப்பு எதுவும் இல்லை. வாழ்க்கையில் எது நமக்கு வரவேண்டுமோ.. எது நமக்கு நிலைக்குமோ அதுதான் வரும்." என்று தத்துவமும், மெல்லிய சோகமும் கலந்து சொல்லியிருக்கிறார் நக்மா.


படிப்பகம்

www.padippakam.com

# சினி விசிட்

## ...க்காத சில்க்

எத்தனையோ பேர் அவருக்குப் பின்னர் வந்தார்கள். துள்ளினார்கள். குதித்தார்கள். சென்சார் அனுமதிக்கும்வரை ஆடைகளைக் ...அவர்களது ஆடைகளைப் போலவே அவர்களும் காணாமல் ...அவர் மட்டும் இன்னும் நிற்கிறார். இன்னும் ரசிகர்களை ...ான் சில்க் சுமிதா.

சில்க் கொடி பறக்கிறது: ரசிகர்களின் விசில் ஒரு கலக்குக் சூடு பிடிக்கிறது.

...ல் ஜல தோஷமே பிடிக்காது. அந்தளவுக்கு நனைந்து பழகிவிட்டது. ...நிற்காக மார்கழிப் பனியில் விடிய விடிய நனைந்து நடிக்கவைத்தார்களாம்.

## பாம்போடு விளையாட்டு

அரவிந்தசாமி வெளிப்புறப்படப்பிடிப்புக்களுக்கு சென்றால் ஒரு பெண்கள் பட்டாளம் தேடிவருகிறதாம். பார்த்துவிட்டுப் போனால் பரவாயில்லை, தொட்டும் பார்க்கிறார்கள். மனிதர் கூச்சப்பட்டுப் போகிறார்.

அரவிந்தசாமியின் துணைவியார் அமெரிக்காவில் உயர் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார். பெயர், காயத்திரி.

அரவிந்தசாமியின் பொழுது போக்குகளில் ஒன்று பாம்புகளோடு விளையாடுவது.



விஜய்-கவுண்டமணி
படம்: கோயமுத்தூர் மாப்ளே



ராம்கி-பிரகதி-சின்னா
படம் : புதல்வன்

முகப்பில்
மீனா
படம்: செங்கோட்டை
குஷ்பூ

## தமிழுக்கு வருகிறார் சுஷ்மிதா
## கோடம்பாக்கத்தில் உலக அழகிகள்

தமிழ் பட உலகை இனிமேல் குறைத்து மதிப்பிட முடியாது. உலக அழகிகள் கூட அதனை ஏற்றுக் கொள்கிறார்கள். ஐஸ்வர்யாராய் ஏற்கெனவே 'ஆனந்தம்' படத்தில் நடிக்கிறார் என்பது தெரிந்த சங்கதி.

இப்போது மற்றொரு முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென் தமிழ் படம் ஒன்றில் நடிக்க வருகிறார். வந்துவிட்டார். பூஜையிலும் கலந்து கொண்டார்.

படத்தின் பெயர் 'ரட்சகன்! கதாநாயகனாக நடிப்பவர் நாகார்ஜுனா. படத்தை தயாரிப்பவர் குஞ்சுமோன். காதலன் படத்தை தயாரித்த பசையுள்ள தயாரிப்பாளர். தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் படம் தயாராகிறது.

தமிழில் தனக்கு பொருத்தமான உயரமான ஹீரோக்கள் குறைவாக இருப்பதாக ஒரு பேட்டியில் சொல்லியிருந்தார் சுஷ்மிதா சென். கதாநாயகன் நாகார்ஜுனா என்று தெரிந்ததும் சுஷ்மிதா சொன்ன கருத்து: "அப்பாடா, என் உயரத்துக்கு அவர்தான்சரி."

கவர்ச்சியாக நடிக்க மறுப்பில்லை என்ற முக்கிய தகவலையும் தெரிவிக்கத் தவறவில்லை சுஷ்மிதா.

## ரம்பாவின் நெருக்கம்

கார்த்திக் முதன் முதலாக ஒரு முழு நீள நகைச்சுவைப் படத்தில் நடிக்கிறார். கார்த்திக்கின் ஜோடி ரம்பா. அமர்க்களமான கவர்ச்சி. அட்டகாசமான நெருக்கம். கார்த்திக் படு ஜாலியாக இருக்கிறார். படத்தின் பெயர் 'உள்ளத்தை அள்ளித்தா.' 'கவர்ச்சியை அள்ளித்தா' என்று வைத்திருக்கலாம்.

மணிவண்ணன் முதன் முதலாக இரட்டை வேடத்தில் நடிக்கும் படமும் இதுதான்.

'முறைமாமன்' படத்தை இயக்கி குஷ்புவோடு ராசியானவர் சி.சுந்தர். அதன் பின்னர் முறை மாப்பிள்ளை என்றொரு படத்தை இயக்கினார். அதுவும் திரைக்கு வந்துவிட்டது. இப்போது 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தில் ரசிகர்கள் எதிர்பார்ப்பதையெல்லாம் அள்ளித்தரும் பிஸியில் இருக்கிறார்.

'செங்கோட்டை' படத்தில் அர்ஜுனின் ஜோடியாக நடித்துவரும் ரம்பாவுக்கு தமிழில் பல பட வாய்ப்புக்கள் தேடிப் போயுள்ளன. வாய்ப்புக்களை தன் வளம் மூலம் பயன்படுத்திக் கொள்ள ரம்பா தயார். ரசிகர்கள்தான் என்ன பாடு படப்போகிறார்களோ?!

## ஊர்வசிக் கள்ளி

'அருவாவேலு' படத்தின் மூலம் பெண்களின் கோடிக்கணக்கான இதயங்களுக்கு குறிவைத்திருக்கிறார் ஊர்வசி.

'மகளிர் மட்டும்' படத்தின் மூலம் தமிழ் படரசிகைகளின் இதயங்களை கொள்ளையடித்து மீண்டும் ஒரு ரவுண்ட் வந்து கொண்டிருப்பவர் ஊர்வசி. 'அருவாவேலு' படத்தின் மூலம் தாய்க்குலத்தை நெகிழ வைக்கப் போகிறார்.

படத்தின் கதையைக் கேட்டவுடன் ஏனைய படங்களில் நடிப்பதைக் கூட தள்ளிப் போட்டுவிட்டு வந்து நடித்துக் கொடுத்தாராம் ஊர்வசி. ஈடுபாடு உயர்வு தரும். ஊர்வசி திறமைசாலி.

## ஸ்ரீதேவிக்கு ரேவதி

அரவிந்தசாமி-ஸ்ரீதேவி நடிக்க பரதன் இயக்கிவரும் 'தேவராகம்' படம் முடியும் தறுவாயில் இருக்கிறது. தேவராகம் படத்தில் ஸ்ரீதேவி வாயசைக்க, நம் செவியில் விழப் போகும் குரல் யாருடையது என்கிறீர்களா? ரேவதியின் குரல்.



அபிநயா-கஸ்தூரி
படம் : முத்து மச்சான்



ஜாக்கி ஷெரப்-கௌதமி
படம் : திரிமூர்த்தி (இந்தி)

## அசத்திவிட்டார் குஷ்பு

சிவகுமார்-குஷ்பு ஜோடியாக நடித்துள்ள படம் 'நாட்டுப்புறப் பாட்டு'. குஷ்புவுக்கு ஒரு அசத்தலான காட்சி. கையிலே குழந்தை. கண்களிலே கனல். உதட்டிலே நெருப்பு வசனங்கள். பல பக்கங்களில் நீண்ட வசனம். முதலில் தயங்கினார் குஷ்பு. ஆரம்பத் தயக்கத்தை போக்கி வைத்தார் சிவகுமார். பிறகென்ன சிவகுமார் தட்டிக் கொடுத்த உஷாரில் புகுந்து அசத்திவிட்டார் குஷ்பு. படத்தில் ரசிகர்களின் கரகோசத்தை பெறும் காட்சியாக இருக்குமாம்.

## மினி சினி

*'மாணிக்கம்', 'அரவிந்தன்'ஆகிய படங்களைத் தயாரித்து வரும் டி.சிவா அடுத்து விஜய் நடிக்கும் படத்தைத் தயாரிக்கவுள்ளார். இந்தப் படத்தை ஆர்.வி.உதயகுமார் இயக்கவுள்ளார்.

*பிரபுதேவாவின் 'ராசய்யா' படத்தில் வில்லனாக நடித்தவர் ஹேமந்த் ராவன். இவர் தற்போது சரத்குமார் நடிக்கும் 'அரவிந்தன்' படத்தில் வில்லனாக நடிக்கிறார்.

*ஆர்.கே.செல்வமணி இயக்கிய 'அதிரடிப்படை' படத்தைத் தயாரித்தவர் ரோஜா. இவர் மீண்டும் புதிய படமொன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார். இப்படத்தை ஆர்.கே.செல்வமணி இயக்குவார்.

*பாக்யராஜின் அறிமுகமான மோகனா தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார் என்பதை அறிவீர்கள். இவர் அமெரிக்கா புறப்படுமுன் 'சோத்துக் கட்சி','புதையல்' ஆகிய படங்களில் நடிக்க வந்த வாய்ப்புக்களை மறுத்து விட்டார்.

*ரஜினியின் 'வள்ளி' படத்தில் அறிமுகமான சஞ்சய்க்கு தமிழில் ஒரு படமும் இல்லை. தெலுங்கில் நான்கு படங்களிலும், மலையாளத்திலும், இந்தியிலும் தலா ஒவ்வொரு படங்களிலும் நடித்து வருகிறார்.

*இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர், தனது 'டூயட்' படத்தில் வில்லனாக அறிமுகப்படுத்திய பிரகாஷ்ராஜை, தனது அடுத்த படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்திருக்கிறார்.

*'நிலா', 'சந்திரலேகா'ஆகிய படங்களை இயக்கிய நம்பிராஜ், முன்னர் ரஞ்சித் குமார் என்ற பெயரில் 'மஞ்சள் நிலா', 'அன்பே ஓடி வா','குங்குமப் பொட்டு' ஆகிய படங்களை இயக்கியுள்ளார்.

*தமிழில் 'ஆசை'நாயகி சுவலட்சுமியுடன் இணைந்து 'வாணிமஹால்' என்ற படத்தில் நடித்து வரும் விக்னேஷ் முதன் முறையாக தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

*'பம்பாய்' படத்திற்கு இரண்டு லட்சமும், '1942 ஏ லவ் ஸ்டோரி' படத்திற்கு ஒரு லட்சமும் ஊதியமாகப் பெற்ற மனிஷா கொய்ராலா, இவ்விரண்டு படங்களின் வெற்றிக்குப் பின்னர் ஒரு படத்திற்கு 35 லட்சம் ரூபாய் ஊதியமாகப் பெறுகிறார்.

*நெப்போலியன் முதன் முறையாக கதாநாயகனாக நடித்த 'சீவலப்பேரி பாண்டி' தற்போது நடித்து வரும் 'முஸ்தபா' ஆகிய படங்களின் தயாரிப்பாளர் பி.ஜி.ஸ்ரீகாந்த். இவர் அடுத்து நெப்போலியனின் 50 வது படத்தையும் தயாரிக்கிறார்.


படிப்பகம்

# எப்படி — எப்படி உங்கள் குழந்தை எப்படி?



நீங்கள் உங்கள் குழந்தைகளைப் பற்றி என்ன தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்? அவர்கள் உங்களைப் பற்றி என்ன தெரிந்து கொள்கிறார்கள் என்பதை அறிய வேண்டுமா? கீழே காணும் இருபது கேள்விகளையும் தாய், தந்தையர் படித்து தனியே ஒரு தாளில் பதிலைக் குறித்துக் கொள்ளுங்கள். பிறகு குழந்தைகளிடம் கேட்க வேண்டிய கேள்விகளை அவர்களிடம் கேட்டுப் பாருங்கள்.

1. உங்கள் குழந்தையின் சிறந்த நண்பன் யார்?

2. உங்கள் பையனையோ, பெண்ணையோ தர்ம சங்கடத்தில் ஆழ்த்துவது எது?

3. உங்கள் பையனோ, பெண்ணோ எதற்குப் பயம் கொள்கிறார்கள்?

4. உங்கள் பையனுக்கோ, பெண்ணுக்கோ பிடித்த சங்கீதம் எது?

5. உங்கள் குழந்தையின் வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுத்திய உங்கள் குடும்பத்தினரல்லாத நபர் யார்?

6. குழந்தைக்குப் பள்ளியில் மிகவும் பிடித்தமான, பிடிக்காத பாடங்கள் எவை?

7. தன்னுடைய எந்தச் செயலைப்பற்றிக் குழந்தை பெருமை கொள்கிறது?

8. குடும்பத்தைப் பற்றி உங்கள் குழந்தையுடைய மிகப்பெரிய புகார் என்ன?

9. நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஏதோ ஒரு சாமான் வாங்கிக் கொடுக்க விரும்பினால் அக்குழந்தையின் முதல் விருப்பம் என்னவாக இருக்கும்?

10. உங்கள் குழந்தையைக் கோபம் கொள்ளச் செய்வது எது?

11. உங்கள் பையனோ, பெண்ணோ வளர்ந்து பெரியவர்களாகும்போது என்னவாக விரும்புகிறார்கள்?

12. கடந்த ஆண்டில் உங்கள் குழந்தையின் வாழ்க்கையில் நடந்த மிகப் பெரிய ஏமாற்றம் என்ன?

13. உங்கள் பையனோ, பெண்ணோ தங்கள் வயதுக்கு மிகச் சிறியவர்களாகவோ, மிகப் பெரியவர்களாகவோ நடந்து கொள்கிறார்களா?

14. உங்களிடமிருந்து பெற்ற பரிசுகளில் எதை மிகவும் போற்றுகிறார்கள்?

15. அண்மையில் உங்கள் பையனோ, பெண்ணோ படித்த பாடமில்லாத புத்தகம் எது?

16. உங்கள் மகனுக்கோ, மகளுக்கோ பிடித்த குடும்ப விஷேசம் என்ன?

17. உங்கள் குழந்தை எந்த ஆகாரத்தை மிகவும் விரும்புகிறது? வெறுக்கிறது?

18. பாடசாலையில் குழந்தையை எந்தப்பெயரில் (பட்டப்பெயர்) அழைக்கிறார்கள்?

19. வீட்டுப்பாடத்தை எப்போது செய்ய விரும்புகிறது? பாடசாலையில் இருந்து வந்ததும், இரவில், காலை பாடசாலை செல்ல முன்பு?

20. உங்கள் குழந்தை பாதுகாத்து வைத்திருக்கும் பொருள் என்ன?

இப்போது குழந்தைகள் சொன்ன பதில்களையும், நீங்கள் குறித்த வைத்துள்ள பதில்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

* 20 விடைகளும் குழந்தைகளின் விடைகளோடு சரியாக இருப்பின், நீங்கள் ஓர் இலட்சியப் பெற்றோர்தான்.

* 10–15 விடைகள் ஒரே மாதியாக இருப்பின், உங்களுடைய குழந்தையைப் பற்றி ஓரளவு தெரிந்து வைத்திருக்கிறீர்கள். ஆனாலும் மேலும் தெரிந்து கொள்ள முயல வேண்டும்.

* 10 இற்குக் குறைவாக விடைகள் ஒரே மாதிரி இருப்பின், குழந்தைகளோடு நீங்கள் அளவளாவும் நேரம் போதாது. குழந்தைகளோடு அதிகநேரம் செலவிடுங்கள். குழந்தைகள் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்.




## வினோத நெருப்பு

அப்துல்ரகுமான்



காதல் செய்யப்படுவதல்ல; ஏற்படுவது. ஒரு பூவைப் போல் தானே மலர்வது.

காதல் நம் வசத்தில் இல்லை. நாம்தாம் காதலின் வசப்படுகிறோம்.

காதலுக்கு நாம் கட்டளையிட முடியாது. அது 'வா' என்றால் வராது. 'போ' என்றால் போகாது.

காதல் தான் நமக்குக் கட்டளையிடுகிறது. நாம் எல்லோரும் அதற்குக் கீழ்ப்படிகிறோம். ஏனெனில் காதல் கடவுளின் அரசாட்சி.

காதல் ஆட்டுவிக்கிறது; நாம் ஆடுகிறோம். நாம் வெறும் பொம்மைகள்.

காதல் ஒரு நெருப்பு. அதிலும் வெளிச்சமும் உண்டு; வெப்பமும் உண்டு.

இந்த நெருப்புத்தான் மனிதத் திரிகளில் சுடர் ஏற்றுகிறது.

இந்த நெருப்புத்தான் பச்சையாக இருக்கும் மனிதனைச் சமைக்கிறது.

இந்த நெருப்புத்தான் அழுக்கான மனிதனைப் புடம் போட்டு மாற்றை உயர்த்துகிறது.

காதல் நெருப்பில் எரிவதில் ஒரு சுகமும் இருக்கிறது. அதனால் தான் விட்டிலைப் போல் அந்த நெருப்பில் வசியமாகி விழுகிறோம்.

ஆனால் காதல் ஒரு விநோதமான நெருப்பு.

நமக்கு வேண்டியபோது ஒரு தீக்குச்சியைக் கிழித்து உண்டாக்கிக் கொள்ளும் நெருப்பைப் போல் காதலை உண்டாக்க முடியாது.

காதல் நெருப்பு நாம் பற்ற வைத்தால் பற்றாது. அதாகவே பற்றினால் தான் உண்டு.

அது தீக்கடை கோல்களின் உரசலில் உண்டாகும் நெருப்பல்ல.

தான் பற்றி எரிவதற்காக இரண்டு இதயங்களைத் தானே தேர்ந்தெடுக்கும் நெருப்பு அது.

அது ஒரு விறகில் எரியாது. அதற்கு இரண்டு விறகுகள் வேண்டும்.

காதல் ஒரு தீ விபத்து. அது எதிர்பாராத வகையில் நேர்ந்து விடுகிறது. அதைத் தடுக்க முடியாது.

காதல் நெருப்பைப் பற்றிக்கொண்டால், பிறகு அதை அணைப்பது கடினம்.

காதல் பற்றிக் கொண்டால் அதை யாரும் அணைக்க முடியாது. அணைக்கும் முயற்சிகளையே எண்ணெயாக்கிக் கொண்டு எரியும் நெருப்பு அது!

உருது 'கஜ'லை உன்னதமான சிகரத்தில் ஏற்றி வைத்த மிர்ஸா காலிப் சொல்கிறார்:

காதல் என்பது
நம் வசத்தில் இல்லை
அது ஒரு விநோத நெருப்பு;
பற்ற வைத்தால் பற்றாது
அணைத்தால் அணையாது!

## எரிவாயு சேமிப்பு

சமையல் எரிவாயு (GAS) வைச் சேமிக்க பின்வரும் வழிகளைக் கடைப்பிடியுங்கள்:

1. சமையல் செய்வதற்கு முன் அதற்குத் தேவையான பொருட்களை அருகில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

2. பின்பு நறுக்கிய காய்கறிகளை தண்ணீரில் அலசி சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்.

3. இப்போது எரிவாயுவைப் பற்ற வைத்து சமைக்க ஆரம்பியுங்கள்.

4. காய்கறி வேகக்கூடிய மற்றும் அரிசி போன்றவை வேகக்கூடிய அளவுக்கு மட்டும் உள்ள பாத்திரங்களை உபயோகியுங்கள். இதனால் விரைவில் வெந்து எரிவாயுவும் மிச்சமாகும். பெரிய பெரிய பாத்திரங்களை உபயோகிக்காதீர்கள்.

5. சோறு சமைக்கும்போது தேவையான அளவு நீரை மட்டும் பயன்படுத்துங்கள்.

6. சோறு சமைப்பதற்கு பிரஷர் குக்கரைப் பயன்படுத்துவது நல்ல பலனைக் கொடுக்கும்.

7. பிரஷர் குக்கரைப் பயன்படுத்தும் போது அதனோடு மற்ற காய்கறிகளையும் வேகவையுங்கள். இதனால் ஒரே நேரத்தில்

லேடீஸ் ஸ்பெஷல்

சோற்றையும், காய்கறிகளையும் சமைக்கலாம். எரிவாயுவையும் மிச்சப்படுத்தலாம்.

8. வீட்டில் உள்ள அனைவரும் ஒரே நேரத்தில் சாப்பிடப் பழகுங்கள். இதனால் அடிக்கடி சூடாக்க வேண்டிய அவசியம் இருக்காது.

## மாயையும் உண்மையும்

**மாயை :** மாதவிடாய் நின்றவுடன் (MENOPAUSE) செக்ஸ் வாழ்க்கையும் முடிந்துவிடும்.

**உண்மை :** மாதவிடாய் நின்ற பிறகும் பெண்களுக்கு செக்ஸ் வாழ்க்கை நீடிக்கும். சொல்லப்போனால், இறக்கும்வரை பெண்களால் இல்லற இன்பம் காண முடியும். ❑❑

**மாயை :** ஆணின் உயிரணுக்களை பாதுகாப்பது முக்கியம். ஆராக்கியமான உடம்பும், நீண்ட ஆயுளும் வேண்டுமென்றால் உயிரணு வெளியேறுவதை குறைத்துக் கொள்ள வேண்டும். உயிரணுவில் 1 சொட்டு 100 சொட்டு இரத்தத்திற்குச் சமமானது.

**உண்மை :** இரத்தத்திற்கும், உயிரணுவுக்கும் சம்பந்தமே கிடையாது. அது வெளியேறுவதைக் குறைத்துக் கொள்வதால் ஆரோக்கியமோ, ஆயுளோ அதிகரிக்கப் போவதில்லை. ஒரு ஆணின் வாழ்வில் சராசரி 5,000 தடவைகள் உயிரணு வெளியேற ஏற்றதாக உடலமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. எச்சில் போன்று இதுவும் ஒரு சுரப்பியின் மூலம் கிடைக்கும் திரவமே. ❑❑

**மாயை :** அசைவ உணவு சாப்பிடுகின்றவர்கள் அதிக இன்பம் பெறுவர்.

**உண்மை :** தவறு. சைவ உணவிலேயே போதுமான சக்தியுள்ளது. உண்மையில், செக்ஸ் வாழ்க்கைக்கு அசைவ உணவைவிட சைவ உணவே சிறந்தது. ❑❑

**மாயை :** மது, போதை மருந்துகள் எடுத்துக் கொண்டால் இல்வாழ்வை அதிக நேரம் அனுபவிக்க முடியும்.



**உண்மை :** இல்லவே இல்லை. பார்க்கப் போனால், அத்தகைய சமயங்களில் இல்லற இன்பம் குறைந்து தான் போய்விடும். மது அருந்தியவுடன் அது மூளையைத் தாக்கி நரம்புகளைப் பலவீனப்படுத்துகிறது. STAMINA குறைகிறது. சுயநினைவு மங்குகிறது. இத்தகைய சூழ்நிலையில் நரம்புகளாலான உறுப்பும் பலவீனமே அடைகிறது. மது அருந்துகின்றவர்கள் நினைவு தடுமாறி இருப்பதால் இரண்டு நிமிடம்கூட இருபது நிமிடம் போலத் தோன்றும். ❑❑

**மாயை :** வாசெக்டமி, டியூபெக்டமி போன்ற கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின் இல்வாழ்க்கை சுவைக்காது.

**உண்மை :** இந்த அறுவை சிகிக்சைகளுக்குப்பின் விரும்பாத கருத்தரிப்பு ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் நீங்கிப் போவதால் அதிக மகிழ்ச்சி உண்டு. இன்பமும் உண்டு. ❑❑

**மாயை :** பெண்ணை விட ஆணுக்கு இன்பத்தில் ஆர்வம் அதிகம்.

**உண்மை :** ஆணும், பெண்ணும் இதிலும் சரி சமமே. ❑❑

டாக்டர் எஸ்.கே. அரோரா.

## ஸ்போர்ட்ஸ்

இந்தியாவின் மிகச் சிறந்த பந்து வீச்சாளர்களில் ஒருவரான மனோஜ் பிரபாகர் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 150 விக்கெட்டுக்களை சாய்த்து சாதனை படைத்துள்ளார்.

கடந்த பத்துவருட காலமாக இந்திய கிரிக்கெட் அணிக்காக விளையாடிவரும் மனோஜ் பிரபாகர் இதுவரை 39 டெஸ்ட் போட்டிகளிலும், 122 சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடி இருக்கிறார்.

84–85ம் ஆண்டுகளில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிகள் மூலமாக மனோஜ் பிரபாகரும், அசாருதீனும் தமது டெஸ்ட் வாழ்க்கையை ஆரம்பித்தனர்.

ஆனாலும் அசாருதீன் தனது பேட்டிங்

### பிரபாகர் படைக்கப்போகும் இரட்டைச்சாதனை

திறமையால் அணியில் இடம் பிடித்துக் கொண்டார். மனோஜ் பிரபாகர் ஜொலிக்கத் தவறியதால் 89ம் ஆண்டுவரை அணியில் சேர்க்கப்படாமல் கழற்றிவிடப்பட்டிருந்தார்.

89ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு இந்திய அணி சென்றபோது அதில் பிரபாகரும் இடம் பெற்றிருந்தார்.

பேட்டிங் வரிசையிலும் பிரபாகருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுவந்தது. இடையில் அந்த இடம் பறிபோய் மீண்டும் கிடைத்துள்ளது.

பிரபாகருக்கு இப்போது 32 வயது. டெஸ்ட் போட்டிகளில் 100 விக்கெட் வீழ்த்தி 1000 ரன்களை கடந்த வீரர்களின் பட்டியலில் அவர் இடம்பெறப் போகிறார். அதற்காக இன்னும் நான்கு விக்கெட்டுக்களை அவர் வீழ்த்தியாக வேண்டும்.

அவர் இந்த சாதனையை எட்டிவிட்டால் முன்னர் இந்த இரட்டைச் சாதனை புரிந்த கபில்தேவ், வினுமன்காட், ரவி சாஸ்திரி ஆகியோரின் பட்டியலில் சேர்ந்துவிடுவார்.



சிறந்த சகல துறை ஆட்டக்காரரான மனோஜ் பிரபாகர் தன்னம்பிக்கையும், போராடும் மனோபலமும் கொண்டவர். அதனால்தான் பல பின்னடைவுகளில் இருந்து அவரால் மீண்டு வர முடிந்தது.

## இந்தியாவில் பயிற்சி முகாம்

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளுக்கான பயிற்சி முகாம் இந்தியாவில் ஆரம்பமாகிவிட்டது.

பயிற்சி முகாமுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவீரர்களில் இருந்துதான் இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

பயிற்சி முகாமுக்காக 20 வீரர்களின் பெயரை இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

அவர்களின் பெயர் விபரங்கள்: அசாருதீன், சச்சின் டெண்டுல்கர், நவஜோத்சிங் சித்து, அஜய் ஜடேஜா, சஞ்சய் மஞ்ரேக்கர், வினோத் காம்ளி, விக்ரம் ராத்தோர், ராகுல் ட்ராவிட், நயன் மொங்கியா, ஜவகல் ஸ்ரீநாத், மனோஜ் பிரபாகர், பி.கே. வெங்கடேஷ் பிரசாத், பரஸ்மாம்பிரே, சலீல் அங்கோலா, அனில் கும்ளே, நரேந்திர ஹிர்வானி, ஆஷிஸ்கபூர், ராஜேஷ் சௌகான், உத்பால் சட்டர்ஜி, வெங்கடபதி ராஜு ஆகியோரே அந்த இருபது பேருமாவர்.

## கிரிக்கெட் துணுக்ஸ்

* 1983ம் ஆண்டு உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் விளையாடப்பட்ட பந்து கவாஸ்கரின் வீட்டில் பொக்கிஷமாகக் காட்சி அளிக்கின்றது.



* மேற்கிந்தியத்தீவு அணியின் முன்னாள் கப்டன் காரி சோபர்ஸிற்கு 'சேர்' பட்டம் அளிக்கப்பட்டது இங்கிலாந்தில் அல்ல; 1975ம் ஆண்டு மேற்கிந்தியத்தீவின் பார்படோசில் வழங்கப்பட்டது.

* டேர்பனில் ஒரு முறை இங்கிலாந்திற்கும், தென் ஆபிரிக்காவிற்கும் இடையே நடைபெற்ற டெஸ்ட் போட்டி 10 நாட்கள் நடைபெற்றது. இப்போட்டியில் மொத்தமாக எடுக்கப்பட்ட ஓட்டங்கள் 1981. மழையின் காரணமாக இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

* 1000 வது டெஸ்ட் பந்தயம் பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்துக்கு எதிராக நடைபெற்றது. இதில் பாகிஸ்தானிய வீரர் ஜாவெட் மியாண்டாட் இரண்டு இனிங்ஸிலும் சதம் அடித்தார்.

* இந்தியாவின் பிரபல சுழற்பந்து வீச்சாளர்களான பிரசன்னா, பிஷன் சிங் பேடி, சந்திரசேகர், வெங்கட்ராகவன் ஆகிய நால்வரும் சேர்ந்து விளையாடியது ஒரே ஒரு டெஸ்ட் போட்டிதான். இங்கிலாந்திற்கெதிராக 1967ல் இப்போட்டி நடைபெற்றது.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 21

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி


* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## திக்குத் தெரியாமல்



வசதியின்றி..
வருமானமின்றி..
தொடரமுடியாமல்..
நிறுத்தப்பட்டது..
என் உயர் கல்வி..
☆☆☆
திசையறியா..
பாலை வனத்தில்..
என் மனதினை..
இறக்கி விட்டு..
ஓடி ஒளிந்து விட்ட..
என் காதலி..
☆☆☆
"உதவாக்கரை..
ஒரு சதத்திற்கும்..
பெறுமதியில்லாதவன்-
தண்டச் சோறு; என்று.."
'பழி'பதக்கமிடும்..
என் உறவினர்கள்..
☆☆☆
"ஆளைப் பாரு..
மதன் ஸ்டைல்.."
"நடையைப் பாரு..
ரஜினி ஸ்டைல்.."
"அசப்பில்..
கமலஹாசன் மாதிரி.."
கிண்டலடிக்கும்..
குமரிப் பெண்கள்..
☆☆☆
"உன் காதலிக்கு..
கல்யாணமாம்..
தேவ தாஸ் மாதிரி..
தாடி வைத்துக் கொண்டு..
அலைந்து திரி.."
அட்வைஸ் வழங்கும்..
என் நண்பர்கள்..
☆☆☆
"ஏன் கலங்குகிறாய்..?
உனக்கென ஒரு காலம்..
பிறக்காமலா போகும்..?
அதுவரையும் நான்..
எப்பாடு பட்டாவது..
சாப்பாடு தருகின்றேன்.."
ஆறுதல் அளித்து..
"அமரத்துவம்" அடைந்த..
என் தாய்..

என்.சஹாப்தீன், ஒட்டமாவடி.




## நளினம் காட்டும் நங்கை!

### குறும்பா

சங்கொத்த கழுத்து; மயில் சாயல்
சாற்றுமொழி முக்கனியின் தோயல்
நுங்கொத்த மார்பழகி
நுதல் நிலவுக் காரியவள்,
சங்கமத்தில் கங்கை நதி பாயில்!
♥♥
முத்தனைய தாமவளின் முரல்
முலையிரண்டும் இமயத்தின் சாரல்
சித்தத்தைச் சிறை கொண்ட
சிங்காரி அயலிருந்தால்
சத்தந்தான் உல்லாசம் தேரில்!
♥♥
நகங்களவை பவளத்தின் கீற்று
நங்கையவள் சிற்றின்ப ஊற்று
அகம் வெள்ளை ஆனவளின்
அன்புக்குத் தாரணியில்,
நிகரில்லை; அவள் உலவும் காற்று!
♥♥
தக்காளிப் பழமொத்த கன்னம்
தையல் நடை உவமையிலே அன்னம்
எக்காலும் தவசிகளும்
எழில் கண்டு மோகிக்கும்
அக்கன்னி மது கொண்ட கிண்ணம்!
♥♥
சடையழகு கருக்கொண்ட மேகம்
சாற்றுமொழி இன்வீணை ராகம்
கடைந்தெடுத்த சந்தனமாம்
கவின்கொண்ட தேகத்தாள்
உடைகளைவேன்; உளம் கொள்ளும் மோகம்!
♥♥
வில்லனைய தாமவளின் புருவம்
விளையாடற் கேற்றதவள் பருவம்
இல்லையெனும் படியாக
இடை பெற்றாள் கொடியாக-
சொல்லவொணா இ(அ)வள் காட்டும் நளினம்!

அ.கௌரிதாசன், ஆலங்கேணி கிழக்கு.

## சந்தேகச் சாயல்.....

யாரும்....
சோகப் போர்வையை
விரும்பி அணிவதில்லை...!
இங்கு..
நாங்கள் விரும்பாமலேயே..
அதனால்,
போர்த்தப்பட்டிருக்கிறோம்....!
••
மேகம் சூழ்ந்த வானத்தில்
நிலா,
பதுங்கி விடுவது போல்,
சோகம் சூழ்ந்த வாழ்வில்...
நாங்கள்,
விழி பிதுங்கி சாகின்றோம்...!
••
நடு இரவில்,
வீட்டின்...
முன் கதவு தட்டப்படும்;
நாங்கள்..
ஓடித் திறப்பதுவோ பின் கதவு...
••
இது நாள் வரை...
நெஞ்சை நிமிர்த்தி,
நேர்மையாய் வாழ்ந்த
மனிதம்...
முதுகை வளைத்து,
தலையைச் சொறிந்து...
பிச்சைப் பாத்திரம் ஏந்துகிறது-
உயிருக்காக...!
••
ஏன் என்று தெரியவில்லை;
சொந்த வீட்டிற்குள்ளேயே
ஓர்...
அன்னியத் தன்மை.
••
பழகியவர் மேலேயே
தவிர்க்க முடியாமல்
சந்தேகச் சாயல்...!
••
இப்போ...
நாங்கள் அதிகம் பயப்படுவது...
பாம்பிற்கல்ல,
பக்கத்தில் படுத்திருக்கும்
மனிதனுக்கே...!

ஏ.எஸ்.சலீம், மூதூர்-06.



## அவன்



அவளது
அலட்சியப்
பார்வையைக்கூட
அர்த்தமாக்கி சிந்தித்தவன்...
❣❤❣
மௌனப் புன்னகையிலும்
மயங்கி வீழ்ந்தவன்...!
❣❤❣
நினைவெல்லாம்
அவளைக் கண்டு
கனவில் மாத்திரம்
அவளோடு வாழ்ந்தவன்...!
❣❤❣
இதயம்
கனத்தபோது மட்டும்
ஏதோ எழுதி
அவற்றினால்,
"கவிஞன்" எனப்பட்டவன்..!.
அவனது
ஆக்கங்களுக்கும்
ஒரு முறை
விமர்சனம் வந்தது...!
❣❤❣
"ஏன்
வெறும் காதலுக்காகவே
கண்ணீர் வடிக்கிறீர்கள்?
சுற்றியுள்ளவர்களுக்காக
எழுதுங்கள்.
உலகம் உங்களிடம்
அதிகம் எதிர்பார்க்கிறது."!?

அ. டக்ளஸ் ஜெய சேகரன், வவுனியா.

## கொழுந்துக் கூடை

தேசவருமான...
குழந்தைகளை(ப்)
பிரசவிக்கும்
கற்பப்பை!
▫ ▫
தனக்குமட்டுமல்லாமல்
தேசத்திற்காகவும்
தூக்கிச் செல்லும்
உண்டில்!
▫ ▫
மலைகளின்
தலைகளில்
ஊர்ந்து செல்லும்
மூங்கில் கூடு!
▫ ▫
தொழிலாளர்களின்
தோள்களில்
தொங்கும் தேன் கூடு!
▫ ▫
இது
காலையில்
சுகமாய்...
மலையேறும்!
மாலையில்
சுமையாய்
மலை இறங்கும்!
▫ ▫
தேசத்திற்கிது
அட்சயப் பாத்திரம்;
ஆனால்-
மலைமாந்தருக்கிது
பிச்சைப் பாத்திரம்!

சோ. ஸ்ரீதரன், பொகவந்தலாவை.



## விலங்கியல்

விழிகள் திறந்து
வெறித்துப் பார்த்தபடி,
பல் இளித்து,
குடற் கொத்தை
வெளியே இழுத்து
காக்கைகள் கொத்தியபடி....
வீதியில்
அடிபட்டுக் கிடந்தது.
தெருநாயொன்று.
▫ ▫
ஐயோ-என்று
பதைபதைத்து
துடிதுடித்து
கூடி நின்றவர்கள் மத்தியில்
நானும்.....!
▫ ▫
யாரோ ஒருவன்
தெரு ஓரத்துக்கு
இழுத்துப் போட்டுவிட்டு
நடந்தான்.....!
பெரியவர் வாய்
முணுமுணுத்தது-
"புண்ணியவான்"-என்று.
▫ ▫
பல் இளித்து,
விழிகள் வெறித்து,
பெருங்குடலை
வெளியே இழுத்து,
காக்கைகள்
குதறிக் கொத்தியபடி.....
இதோ,
இளைஞன் ஒருவன்
வீதியில்......
மல்லாக்க கிடந்தபடி......!
▫ ▫
ஒன்றுமே நடக்காததுபோல்,
எல்லோருமே
போய்க்கொண்டிருக்கும்போது...
நானும்
மௌனமாக
என் பாட்டில்
நடந்துகொண்டிருக்கின்றேன்!

கருங்கொடியூர் கவியூரன்.







## விரைந்துவா

காதலி....!
நம் காதலை அங்கீகரிக்க
உறவுகள் தேவையில்லை!
▫ ▫
ஆர்ப்பரிக்கும் கடலையும்
தவழ்ந்து வரும் அருவியையும்
சேர்த்து ஒரு முடிச்சப்போடு!
▫ ▫
கருமேகக் கூட்டங்களை
அழைத்து வந்து
வெள்ளை நிலவுக்கு வேலிபோடு!
மலைமீது தவழ்ந்து வரும்
மந்த மாருதம்-
விலகிப் போகாமல் வலைவீசு....!
அது போதும்!
▫ ▫
நீயும் நானும் பூசிக்கொண்ட
மானிடச்சாயம் வெளுத்துப்
போகும் வரை-
சூரியக் குளத்தில் தீக்குளிப்போம்;
சாதிகள் அங்கு சுட்டெரிக்கப்படட்டும்!
அப்போது....
நிரந்தரமாய்....
நிம்மதியாய்.. இணைவோம்!
காதல்... அதுவரை
கல்லறையில் காத்திருப்பேன்!
விரைந்துவா!


களுவாஞ்சிகுடி-சுகந்தி.

## சுதந்திர கீதம்



இந்தத் தசாப்தத்தில்
இப்படியொரு சுதந்திரம்
எனக்குத்தான்
கிடைத்திருக்கும்!

இவ்வளவு காலமும்
இடிந்து, இடிந்து விழுந்து
என்னைப் புதைத்திருந்த
பொல்லாத நினைவுகளைப்
பூகம்பமொன்று
பொத்திக் கொண்டது!



எனது
இதய வாசலின் குறுக்கே
படுத்திருந்த - நீ
செத்துப் போய்விட்டாய்!

உனது காதலியாக
வாழ்ந்த போதிருந்த
பாரங்கள் இப்போது
என் நெஞ்சத்திலில்லை!

சமூக விழிகள்
எனது அசைவுகளைக்
கட்டிப் போட்டிருந்த
சர்வாதிகாரப் பிடியிலிருந்து
மீனைப் போல
நழுவி ஓடிவிட்டேன்!

மீண்டும் நான்
பிஞ்சப்பருவக் கனவுகளுக்குள்
துள்ளிக் குதிக்கிறேன்!

மனதை, நினைவுகள்
மிதித்துக் கொண்டிருக்கும் வரை
நிரந்தரச் சித்திரவதைதான்
என்ற உண்மையை
கண்ணீரின் பாரத்தால்
கூனிப் போயுள்ள
ஒற்றை இதயங்களிடையே
உபதேசிக்கப் போகிறேன்!

பஹீமா ஜஹான், மெல்சிரிபுர.

## கதி!

தமிழனுக்கு
சந்தேகநபரென்று
பேர்!
**
அடையாள அட்டையின்றி
போனால்....
'தீவிரவாத சந்தேக நபர்'
என்று கைதாவான்!
**
அடையாள அட்டையுடன்
போனால்...
சந்தேகமின்றி
'தீவிர வாதிதான்' என்று
'கைது' செய்யப் படுவான்!

காராளன்

## ஒரு டெலிபோன் சம்பாஷணை

### சுஜாதா சொன்ன ஜோக்



"ஹலோ"
"ஹலோ"
"யார் பேசுறது?".
"நான்தான்!"
"நான் தான் என்றால் யார்?"
"நான் தான் ரேவதி"
"ரேவதி! அப்பா இல்லையா?"
"இல்லை."
"அம்மா?"
"இல்லை."
"சரி, அப்பா வந்தால் ராமன் போன் பண்ணியதாகச் சொல்கிறாயா?"
"யாரு?"
"ராமன். எழுதிக் கோ-ரா-ம-ன்"
"ரா எப்படி எழுதுவது?"
"நான் சொன்னேனா இல்லையா, அவன் போட்டோ எடுத்தால் ஒன்றும் விழாது என்று."
"சரிதான்! பாப்பா வீட்டிலே வேற ஒருத்தரும் இல்லையா?"
"சேகர் இருக்கான்."
"சரி சேகரைக் கூப்பிடு"
"சேகர் இந்தா" என்ற ரேவதி சேகரிடம் (வயது 1) போனைக் கொடுக்கிறாள்.

## கம்பன் ஏமாந்தான்!

பார்த்த போது
மனம் சொல்லியது
"தொட்டால் நல்லது"
தொட்ட போது
மனம் சொல்லியது
"அணைத்தால் நல்லது"
அணைத்த போது
மனம் சொல்லியது
"ச்சே! நீ ஏமாந்துவிட்டாய்!"

## ஆசை

நீ சிரிப்பதை
நிறுத்திவிடு
நான் இறப்பதை
நிறுத்தி விடுகிறேன்.

எம். சுரேஸ்

## சமாதானம் என்றால்.......?

எனது
காதலும்
இலங்கையின்
இனப்பிரச்சனையும் ஒன்று—!



மாறி மாறி
மனதை வாட்டி
ஆறிவிடாமல்
அடைகாக்கப்பட்டு..



பேச்சுவார்த்தையும்
யுத்தமும்..
யுத்தமும்,
பேச்சு வார்த்தையும்..

புறா பறந்தால் சந்தோசம்
புயலைக் கண்டால் சங்கடம்
'செக்' பொயின்டில் நிற்பது போல்
செயலிழந்த நிலமைகள்...

என்னை அவர் புரிந்து கொண்டு
அவரை நானும் புரிந்து கொண்டால்...?
சமாதானம் சகவாழ்வு
சந்தோசமாய் இருக்கும்? (!)



"அது சரி..
'சமாதானம்' என்றால்
என்னங்க..?
ஐயோ..
சரியான அர்த்தமே
மறந்து போச்சு போங்க."

சிவா, திராய்மடு.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு-தொழில் நிலை கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, தொழில் விருத்தி. | காலை 6 மணி |
| வெள்ளி -உயர்ந்த நிலை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், உறவினர் உதவி. | காலை 7 மணி |
| வியாழன்-தொழில் விருத்தி, பணச் செலவு. | காலை 6 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, கடன் தொல்லை. | மு.ப. 9 மணி |
| சனி- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, கடன் தொல்லை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம். | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, துயர் நீங்கும். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | காலை 7 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், பிரயாணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் நிலை மந்தம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| திங்கள்- துயர்நீங்கும், தேகசுக நன்மை. | காலை 7 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்-தொழில் உயர்ச்சி, மனக்கலக்கம். | காலை 6 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் நட்பு, துயர் நீங்கும். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

## இந்த வாரம் உங்கள் பலன்

( 14.01.96 முதல் 20.01.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | -சூரியன், வியாழன், புதன். |
| மகரம் | -செவ்வாய், வெள்ளி. |
| கும்பம் | -சனி. |
| மீனம் | -கேது. |
| கன்னி | -இராகு. |

சந்திரன்-கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

15.01.1996- மகரச் சூரியன்-தைப்பொங்கல்.

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, புதிய முயற்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- பணக் கஷ்டம், கடன் தொல்லை. | காலை 7 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, தொழில் மந்தம். | பகல் 12 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, வீண் குறைகேட்டல். | காலை 6 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பயனுள்ள செயல். | காலை 7 மணி |
| செவ்வாய்-தொழில் விருத்தி, கடன்தொல்லை நீங்கும். | பி.ப. 1 மணி |
| புதன் - உறவினர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் 12 மணி |
| சனி- வீண் குறைகேட்டம், மனக்கலக்கம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கலக்கம். | காலை 6 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, கடன் தொல்லை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| வியாழன்- வீண் முயற்சி, செலவு அதிகம். | காலை 6 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, சுபகாரிய மகழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- முயற்சி பலிதம், மனக்குறை நீங்கும் | காலை 7 மணி |
| வியாழன்-வீண் முயற்சி, பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணக்கஷ்டம் நீங்கும். | காலை 6 மணி |
| சனி- முயற்சி பலிதம், கடன் தொல்லை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில்கஷ்டம் தீரும், முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, முன்னேற்றம். | காலை 7 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, துயர் நீங்கும். | காலை 6 மணி |
| வெள்ளி- மனமகிழ்ச்சி, தேகசுக நன்மை. | பி.ப 2 மணி |
| சனி- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- இனசன நன்மை, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பெரியோர் நட்பு. | காலை 7 மணி |
| புதன்- வீண் முயற்சி, பயனுள்ள செயல். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, கடன் தொல்லை நீங்கும். | காலை 6 மணி |
| சனி- பிரயாண மிகுதி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள் செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- பயனுள்ள செயல், கடன் தொல்லை. | காலை 7 மணி |
| வியாழன்- இனசன விரோதம், துயர் அதிகம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், வீண் மனஸ்தாபம். | காலை 7 மணி |
| சனி- துயர் நீங்கும், கடன் தொல்லை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6



படிப்பகம்





## பாப்பாவுக்கு ஒரு பாட்டு

பாப்பா உனக் கொரு பாட்டிசைப்பேன்
பண்புடன் வாழ்ந்திடப் பழகிடுவாய்!
நாட்டின் நலன் தனில் நாட்டமுடன்
நாளும் உழைத்திட வேணுமம்மா!

எண்ணையும் எழுத்தையும் கண்ணெனக் கொள்
என்றும் இனியவை இயம்பிடுவாய்!
மண்ணில் உயர்ந்திட வழியதுவே
மகிமை நிலை பெறத் துணையதுவே!

உண்மைப் பேச்சே உயர்வு தரும்
உயிர்த் துணையாக அது காக்கும்!
விண்ணே இடிந்து வீழ்ந்திடினும்
வீணே கவலை கொள்ளாதே!

நல்லவர் சேர்க்கை நல்வழியாம்
நன்மைகள் பொலிய நலமதுவாம்!
பொல்லாப் பகைமை அணுகாதெம்மை
பெரியோர் துணையே காத்திடுமாம்!

சுதேசன்.

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி,
வஞ்சனை சொல் வாரடி-கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி!!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# நீயா? நானா?



ஒரு வீட்டின் பரண் மேல் ஒரு தேள் வசித்து வந்தது. அந்தப் பரணில் ஒரு குளவி கூடு கட்டியது. இதனால் இருவரும் நண்பர்களாயினர்.

ஒருநாள் இவர்கள் வெளியில் உள்ள தோட்டத்திற்குப் போன போது ஒரு தேனீயைச் சந்தித்தன. தேனீயும் இவர்களுடன் பேசி நண்பராகியது.

மூன்று நண்பர்களும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது தேள்,

"நாம் மூவரும் இனத்தால் வேறுபட்டிருந்தாலும், கொட்டும் விஷத்தன்மை கொண்ட விஷ ஜந்துகள் என்ற ஒற்றுமையில், ஒரே இனத்தில் இருக்கிறோம்" என்று சொன்னது.

தேனீயும், குளவியும் அதற்கு ஆமோதித்தன.

நாட்கள் ஓடின. இம்மூவரும் நல்ல நண்பர்களாக இருந்து வந்தனர்.

ஆனால் தேள் மட்டும், 'மற்ற இருவரைவிட தனக்குத்தான் விஷம் அதிகம்' என்று பெருமைப்பட்டது.

ஒரு நாள் தேள்,

"நம் மூவரில் விஷம் யாருக்கு அதிகம்?" என்று மற்ற இருவரையும் பார்த்துக் கேட்டது.

"நண்பா! இப்போது ஏன் இந்தக் கேள்வி?" என்று கேட்டது குளவி.

"எனக்குத்தான் விஷம் அதிகம்" என்றது தேனீ.

"இல்லை எனக்குத்தான் அதிகம்" என்றது குளவி.

இவற்றைக் கேட்டுச் சிரித்த தேள்,

"நீங்கள் இருவரும் அற்ப பூச்சிகள். நீங்கள் இருவரும் மனிதனைக் கடித்தால், ஒரு எறும்பு கடித்தது போல் தான் அவனுக்கு வலிக்கும். ஆனால் நான் கொட்டினேன் என்றால் அவனுக்கு உயிர் போகிற வலி ஏற்படும். அதனால் நான் தான் பெரியவன் எனக்குத் தான் விஷம் அதிகம்" என்றது இறுமாப்புடன்.

தேளிற்குத் தலைக்கனம் பிடித்து விட்டதை தேனீயும், குளவியும் நன்கு உணர்ந்தன. தேள் போன பின்னர், இரண்டும் தனியாகச் சந்தித்தன. தேளிற்குச் சரியான பாடம் கற்பிக்க இரண்டும் முடிவு செய்தன.

மறுநாள் வழக்கம் போல் தேனீ, குளவி, தேள் ஆகிய மூன்றும் சந்தித்துக் கொண்டன.

"என்ன நண்பர்களே எனக்குத் தான் விஷம் அதிகம் உள்ளது என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று கேட்டது தேள்.

"இல்லை நண்பா! நமக்குள் விஷம் கூடக் குறைய இருக்கலாம். ஆனால் நான் கொட்டினால் கூட ஒரு மனிதன் இறந்து விடலாம்" என்றது தேனீ.

"என் கொட்டிற்கும் அந்தத் தன்மை உள்ளது!" என்றது குளவி.

இதைக் கேட்ட தேள் கோபத்துடன்," யாருடைய விஷத்திற்கு வீரியம் அதிகம் என்று பார்த்து விடலாமா?" என்று கேட்டது.

"பார்த்து விடலாம்" என்று சவால் விட்டது தேனீ.

"இதோ பாருங்கள், இந்த வீட்டுக்காரனை நாம் மூவரும் தனித்தனியாகக் கொட்டுவோம். அவன்படும் வேதனை, அலறல் ஆகியவற்றை வைத்து யாருடைய விஷத்திற்கு வீரியம் அதிகம் என்று பார்ப்போம்" என்று தனது திட்டத்தைக் கூறியது குளவி.

தேளும், தேனீயும் இதற்குச் சம்மதித்தன.

முதல் நாள் தேனீயின் முறை. வீட்டுச் சொந்தக்காரன் படுத்திருந்த போது அவனின் காலில் கொட்டி விட்டுப் பறந்தது தேனீ.

வீட்டுக்காரன் அலறித் துடித்து எழுந்தான். காலைப் பிடித்துக் கொண்டு "ஆ....ஊ.." என்று கத்தினான். வேதனையால் முனகினான். நீண்ட நேரம் கழித்தே அவனது முனகல் நின்றது.

மறைந்திருந்த தேளும், குளவியும் இவற்றைப் பார்த்துக் கொண்டன.

அடுத்த நாள் வீட்டுக்காரன் கதிரையில் இருந்தபோது, அவனது கையில் குளவி கொட்டி விட்டுப் பறந்து சென்றது.

வீட்டுக்காரனின் அலறலையும், முனகலையும் அவை மூன்றும் மறைந்திருந்து அவதானித்தன.

மூன்றாம் நாள் - தேளின் முறை.

வீட்டுக்காரன் பகல் நேரத்தில் சாப்பிட்டு விட்டுத் திண்ணையில் படுத்திருந்தான். தேள் மெதுவாக ஊர்ந்து சென்று அவனது இடுப்பில் ஒரு கொட்டு கொட்டியது.

"அம்மா!" என்று அலறித் துடித்த அவன், விருட்டென்று எழுந்தான்.

வேகமாக ஓடிய தேளைப்பார்த்து விட்டான்.

"ஓஹோ உன்னுடைய வேலைதானா? இரண்டு நாள் விளையாடியது போதாதென்று இன்றும் வந்து கொட்டி விட்டாயா?" என்று சொல்லி வேகமாகத் தாவி, அருகில் இருந்த செருப்பை எடுத்தான்.

கனமான அந்தத் தோல் செருப்பால் தேளை நோக்கி ஒரு போடுபோட்டான். தேள் நசுங்கியது.

'நீயா? நானா? பெரியவன் என்ற எனது தலைக்கனத்தால் எனது உயிர் போகிறதே' என்று நினைத்தபடி உயிரை விட்டது தேள்.

## இளமையில் இவர்கள்

* உலகம் போற்றும் 'அற்புத உலகத்தைப்' படைத்த வால்ட் டிஸ்னி இரண்டாம் உலகப் போரில் அம்புலன்ஸ் வண்டியை ஓட்டும் ஓட்டுனராக பணியாற்றியிருக்கிறார். அப்போது அவருக்கு வயது 17.

* நிலவில் முதலில் காலடி எடுத்து வைத்த நீல் ஆம்ஸ்ரோங் தனது பதினாறாவது வயதிலேயே விமானம் ஓட்டுவதற்கான லைசென்சைப் பெற்றிருந்தார்.

* ஜோர்ஜ் வோஷிங்டன், ஜக்ஸன், வாண்பரன், பில்மோர், ஆபிரகாம் லிங்கன், ஜோண்சன், கிளைவ்லோண்ட், ட்ருமென் ஆகிய எட்டு அமெரிக்க ஜனாதி பதிகளும் கல்லூரிப் படிப்பே படிக்கவில்லை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20.01.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 124
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 122

பரிசுக்குரியவர்:
ஆர்.மதியழகன்
ப/சரஸ்வதி தேசிய கல்லூரி, பதுளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வி.கே.கிருஷ்ணசாந்தினி<br>பது/தமிழ் மகா வித்தியாலயம்,பசறை. | திருச் செல்வம் சபேஷன்<br>விநாயகர் வீதி, சேத்துக்குடா, மட்டக்களப்பு. |
| செல்வி.அருசியா அபூபக்கர்<br>இல.282,பிரதான வீதி, மருதானை-05. | ஏ.சி.முஹம்மது ரிஸ்வான்<br>சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| ச.யோகேஸ்வரி<br>நல்லிளைப் பாற்றியர் கன்னியர் /பா. நுவரெலியா. | ஏ.எச்.ஹாரிஷ்<br>நஸ்றியா மகா வித்தியாலயம், சிலாபம். |
| எல்.ரஜீவ்<br>இ/பரி.யோவான் த.ம.வி, இறக்குவானை. | ரா.முகுந்தன்<br>மட்டக்குளி, கொழும்பு-15. |
| ஐ.எம்.எ.ப்.சஹாமா<br>282,யோனகபுர, திக்குவல்லை. | செல்லத்துரை கலையரசன்.<br>மட்/முனைத்தீவு,பெரியபோரதீவு. |

## குவார்ட்ஸ்

* **குவார்ட்ஸ் என்றால் என்ன?**

பாறைகளில் கிடைக்கும் பளிங்கு போன்ற ஒரு தாதுப்பொருள்.

* **இது எப்படி இருக்கும்?**

எந்த வண்ணமும் இன்றி கண்ணாடி போல் இருக்கும்.

* **இதன் பயன் என்ன?**



'பைசோ எலக்ரிக்' எனப்படும் ஒரு இராசாயன சக்தி இதில் உள்ளது. அதனால் இது ஒரு பற்றரி போன்று செயற்படும் தன்மையுடையது. அதனால் ரேடியோ, ராடர், தொலைக்காட்சி, மணிக்கூடு போன்றவற்றில் இதன் சில்லுகள் பயன்படுத்தப்படுகின்றன.

* **கண்ணாடித் தொழிலில் குவார்ட்ஸ் எவ்வாறு பயன்படுகிறது!**

இந்தத் தாதுப் பொருள் சூடு பட்டால் விரியாது. அதிக குளிர்ச்சியிலும் இதற்கு எந்தச் சேதமும் ஏற்படாது. அதனால் சோதனைச் சாலைகளிலும், தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படும் கண்ணாடி குடுவைகள் செய்ய இது பயன்படுகிறது .இதை அதிக சூட்டில் காட்டி உடனே குளிர வைக்கலாம். அதனால் எந்த சேதமும் ஏற்படாது.

* **செயற்கையாக இதைத் தயாரிக்கலாமா?**

தயாரிக்கலாம். தொழில் மயமாகிவிட்ட உலகில் இதன் தேவை அதிகரித்துள்ளது. இயற்கையில் கிடைப்பதை வைத்துத் தேவையைப் பூர்த்திசெய்ய முடியில்லை. அதனால் செயற்கை முறையிலும் தயாரிக்கப்படுகிறது.

## வாரம் ஒரு நாடு

### வட கொரியா



**தலைநகர்** - பியோங்யாங்
**பரப்பு** - 120, 538 சதுர கிலோ மீட்டர்
**மக்கள் தொகை** - 2.31 கோடி
**மொழி** - கொரியன்
**எழுத்தறிவு** - 93%
**சமயம்** - புத்தமதம், கன்பியூஷியனிஸம், டாவோயிஸம்
**நாணயம்** - வோன்
**தனி நபர் வருமானம்** - 910 டொலர்.

**வரலாறு:**

இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து ரஷ்யா, வடகொரியாவை ஆக்கிரமித்துக் கொண்டது. 1948ல் சுதந்திரம் பெற்றது. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை சுப்ரீம் பீப்பிள் அசம்பிளி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். என்றாலும் உண்மையான அதிகாரம் படைத்தது கொரியன் உழைப்பாளர் கட்சி (கம்யூனிஸ்ட் கட்சி)யே ஆகும். கட்சி மத்திய கமிட்டியையும், மத்திய கமிட்டி பொலிட் பீரோவையும் நியமிக்கின்றது 1948 முதல் கொரியாவை ஆண்டு வந்த அதிபர் கிம்உல்சங் 1994 ஜூலையில் காலமானார்.

**பொருளாதாரம்:**

மக்களில் பாதிப்பேர் விவசாயத்தையே நம்பி உள்ளனர். சுமார் 90 சதவிகித நிலங்கள் கூட்டுறவு முறையிலேயே பயிர் செய்யப்படுகின்றன. தனிநபர் விவசாயம் முற்றிலும் இல்லை. நெல், உருளைக்கிழங்கு முக்கிய பயிர்கள். கனரகத்தொழில்கள், துணி ஆலைகள், சீமெந்து ஆலைகள் முக்கியமானவை. டங்ஸ்டன், கிராபைட், மங்கனிஸ் உற்பத்தியில் உலகளவில் ஐந்தாம் இடத்தில் உள்ளது.

## ஐ.நா.தகவல்கள்



நியூயோர்க் நகரில் மான்ஹட்டன் என்ற இடத்தில் ரொக்பெல்லர் நன்கொடையாகக் கொடுத்த நிலத்தில் ஐ.நா.வின் இன்றைய தலைமைச் செயலகம் 1952ம் ஆண்டு துவக்கப்பட்டது.



1956ல் சூயஸ் கால்வாய் மீது இஸ்ரேல், ஃபிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் தாக்குதல் நடத்தியபோது, ஐ.நா.தலையிட்டு சமாதானம் செய்து அங்கு அமைதிப்படையை நிறுத்தியது.

1960 ஜெனரல் அசெம்பிளிபொதுச்சபையில் முன்னாள் சோவியத் யூனியன் ஜனாதிபதி குருஷேவ் ஆவேசமாகப் பேசிட, சுப்பர் பவர் மோதல் துவங்கியது.

## 24 மணி நேரத்தில்...

* நமது இருதயம் 1,03,689 தடவை துடிக்கிறது.
* நம் இரத்தம் 26,88,000 கிலோ மீட்டர் தூரம் செல்கிறது.
* நம் நகம் .000115 சென்ரிமீட்டர் வளர்கிறது.
* நமது உரோமம் .004285 சென்ரிமீட்டர் வளர்கிறது.
* நம் உடல் 1.43 பைண்ட வியர்வையை வெளியேற்றுகிறது.
* நாம் 23.043 தடவைகள் சுவாசிக்கிறோம்.
* நாம் 483 கன அடி காற்றை உள்ளுக்கிழுக்கிறோம்.
* நாம் 70,09,000 மூளை அணுக்களுக்கு வேலை கொடுக்கிறோம்.




படிப்பகம்

www.padippakam.com

# 18

"அதெல்லாம் சரி. இந்தப் பையன் கடத்தப்பட்டு இங்கு வந்திருப்பதை இன்னும் இந்தியாவில் அறிந்து கொள்ளவே இல்லையா?"

"இல்லை. அப்படிப்பட்ட திட்டம் என்னுடையது. நேற்றுக் கூட இந்தியச் செய்தித்தாள் பார்த்தேன். பணத்திற்காகவே அவன் கடத்தப்பட்டு இன்னமும் சென்னையில் இருப்பதாகத்தான் நம்புகிறது போலீஸ். அவர்கள் விழித்துக் கொள்ளுமுன் சி.ஐ.ஏ. வில் ஒப்படைத்து விட்டு அரசாங்க உதவியோடு பாதுகாப்பான வேறு நாட்டிற்குச் சென்று விட முடிவு செய்துள்ளேன் ரெய்ஸா.



நாளைக்கு வெளியே வெறு போனில் இருந்து கண்ணபிரானுடன் பேசி அங்குள்ள நிலமை தெரிந்துகொள்ள வேண்டும். அவருக்கு நம் பழைய போன் நம்பர் தான் தெரியும். இந்த போனில் ஒட்டுக் கேட்கப்படுகிற அபாயம் இருப்பதால் தவிர்க்கிறேன்."

"இதில் பாவம் வெஸ்லியையும், ஆனியையும் வேறு விட்டிருக்கிறீர்களே?"

"அவர்களையும் விலாசம் மாற்ற வைத்ததோடு, ஒரு சில வாரங்களில் வேறு நாட்டில் திருப்திகரமாகக் குடியேற்றி விட எண்ணியுள்ளேன். அவர்களும் சம்மதித்து விட்டார்கள்."

"என்ன சொன்னாலும் எனக்கு ஒரு படபடப்பு இருக்கத் தான் செய்கிறது."

"அது அனாவசியமானது ரெய்ஸா. பார்க்கர் ஸ்மித் எந்த ப்ராஜெக்ட்டிலும் தலைகுனிவைச் சந்தித்ததே இல்லை. தைரியமாக இரு." என்று அவள் நெற்றியில் முத்தமிட்டார்.

★★★

உள்ளூர் பிரஜை வேண்டாம் என்று பப்புவைக் காரிலேயே இருக்கச் சொல்லி விட்டு பரத், சுசி இருவர் மட்டும் பத்திரிகையின் அலுவலகத்திற்குள் நுழைந்தார்கள். ஹோட்டல் ரிஸப்ஷன் அறை போலத்தான் இருந்தது. 'இன்ஃபர்மேஷன்ஸ்' என்று மேஜை மேல் முக்கோணக் கட்டை வைத்துக் கொண்டிருந்தவள் பெண், அமெரிக்கள். லூஸான சட்டைக்குள் அசைவுகள் தெளிவாக இருக்க, வினாடிக் கொருதரம் செம்பட்டைக் கூந்தலை தலையை வெட்டி பின்னால் அனுப்பிக்கொண்டு "யா, யா, யா" என்று தொலைப் பேசிக் கொண்டிருந்தாள். எதிரே இருந்த உயரமான நாற்காலியில் இவர்கள் அமர்ந்துகொண்டு அவள் முடிப்பதற்குக் காத்திருந்தார்கள்.

"ஏன் சுசி, உன்னை மாதிரி இவளும் பனியன்ல எழுதிக்கப் பிரியப்பட்டா, என்ன எழுதிக்கலாம் சொல்லு பார்க்கலாம்."

சுசிலா பதில் சொல்வதற்கு முன் அவள், "நான் எந்த வகையில் உங்களுக்கு உதவ முடியும்?" என்றாள்.

"பல வகைகளில் உதவ முடியும். தற்சமயம் ஒரு தகவல் தேவை. இங்கே மிஸ் ஆனி என்று ரிப்போர்ட்டராக..."

"ஆமாம். சொல்லுங்கள்."

"அப்பாடா. முதலில் எங்களைப் பற்றி. நாங்கள் இந்தியாவில் இருந்து வருகிறோம். அங்கு ஒரு பத்திரிகையில் பணி புரிகிறோம். ஒரு சமயம் மிஸ் ஆனி டெல்லி வந்த போது சந்தித்தோம். நியுயார்க் வரும்போது அவசியம் சந்திக்கச் சொல்லி விட்டு விலாசம் கொடுத்தார்கள். லெக்ஸிங்டன் அவென்யு விலாசம். மதியம் நாங்கள் வந்ததும் ஏர்போர்ட்டில் இருந்து நேராக இந்த விலாசம் சென்று ஏமாந்தோம். வீடு காலி செய்யப்பட்டிருக்கிறது. புதிய விலாசம் அருகில் வசிப்பவர்களுக்குத் தெரியவில்லை. பிறகு நாங்கள் நியுயார்க் ஹில்ட்டனில் சூட் எடுத்துக் கொண்டோம். இங்கே அலுவலகத்தில் விசாரித்தால் தெரிந்து கொள்ளலாமே என்றுதான் வந்தோம்."

அவள் முகத்தில் கொஞ்சம் பரிதாபம் தெரிந்தது.

"சமீபத்தில் டெர்ரரிஸ்ட் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தாள். அதன் பிறகு நிறைய மிரட்டல்கள் வந்தன.

அது தொடர்பாக விலாசம் மாறியிருப்பதாக போனில் சொன்னாள். எங்களுக்கே கூட புதிய விலாசம் சொல்லவில்லை. அவ்வப்போது போன் செய்து அசைன்மெண்ட்டுகளை வாங்கிக் கொண்டு, தபாலில் அனுப்பி வைத்து விடுகிறாள். அலுவலகத்திற்குக் கூட வருவதில்லை."

"அப்படியென்றால், நீங்கள் தபாலில் அனுப்ப வேண்டியவற்றை என்ன செய்கிறீர்கள்?"

"பழைய முகவரிக்கே அனுப்புகிறோம். யாரையாவது அனுப்பி கலெக்ட் செய்து கொள்வாள் என்று நினைக்கிறேன்."

"அப்படியென்றால் ஆனியைச் சந்திக்க வேறு ஏதாவது யோசனை சொல்லுங்கள்."

"சற்றுச் சிரமமான வழி சொல்லட்டுமா? நாளைக்கு மாலை மூன்று பொது நிகழ்ச்சிகளுக்கான அழைப்புகள் பத்திரிகைக்கு வந்தன. ஒரு நிமிடம்" என்று இண்டர்காமில் இரண்டு தடவைகள் இது தொடர்பாகப் பேசி விட்டு, "மூன்று அழைப்புகளும் நேற்று ஆனிக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அந்த மூன்றில் ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மேட்டர் அனுப்பினால் போதும் என்று சாய்ஸ் தரப்பட்டுள்ளது. இதில் எங்கே என்று தேடுவீர்கள்? சிரமம்."

"மூன்று நிகழ்ச்சிகளின் இடங்களையும் சொன்னால், ஏதாவது முயற்சி செய்து பார்க்கிறோமே... டெல்லியில் அவ்வளவு நெருக்கமாகப் பழகினார்கள். பரிசுப் பொருள் எல்லாம் வாங்கி வந்துள்ளோம்."

"புரிகிறது. உங்கள் ஆர்வம் புரிகிறது. ஐந்து நிமிடம் காத்திருங்கள். மூன்று நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகளையும், இடம், நேரம் விபரங்களையும் டைப் செய்து கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். அமெரிக்காவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"இன்று தானே வந்தோம். ஒரு சுற்றுலாப் பயணியாக, இனிமேல்தான் நினைக்க வேண்டும்."

அதற்கு மேல் பேசுவது குற்றம் போல அவள் சட்டென்று தன் வேலைகளில் ஆழ்ந்தாள். சில நிமிடங்களில் பத்திரிகையின் விலாசம் அடித்த கவரில் போட்டு வந்த தகவலை அவனிடம் கொடுத்து, "உங்கள் சூட் எண்? இதற்கு நடுவில் ஆனி போன் செய்தால் சொல்வதற்காகக் கேட்கிறேன்."

"பதினேழு. மிகவும் நன்றி" என்று வெளியே வந்த பின்னர் சுசிலா கேட்டாள், "அவ பனியன்ல எழுதறதா இருந்தா என்ன எழுதணும்னு சொல்ல வந்திங்க பரத்?"

"ரோஸ் அண்ட் வொய்ட்."

"படவா! எக்ஸ்ரே ஐஸ்" என்று விலாவில் கிள்ளினாள். காருக்குள் வந்து, விளக்கு போட்டுக் கொண்டு, பப்புவை டெலிவிஷனை அணைக்கச் சொல்லி விட்டு, அந்தத் தகவல் காகிதத்தைப் பார்த்தான். ஆங்கிலத்தில் இருந்தது.

1. ஐஸ் ஷோ - போட்டிகள் - முதல் நாள்.

நாள்: 24.2.88. நேரம் - பிற்பகல் 2 - 4.30.

இடம்: மேடிஸன் ஸ்கொயர் கார்டன்,
7வது அவென்யு - 33வது தெரு.

2. ஓவியக் கண்காட்சி - ஜான் ஹீப்பரின் ஓவியங்கள்.

நாள்: 24.2.88. நேரம் - காலை 10 - பிற்பகல் 2

இடம்: லிங்கன் செண்டர்,
பிராட்வே - 66வது தெரு.

3. இசை நிகழ்ச்சி - பாடகர் டோனி பென்னட்.

நாள்: 24.2.88. நேரம் - மாலை 6-8.
இடம்: கார்னெஜி ஹால்,
7வது அவென்யு - 57வது தெரு.

"கேலார்ட் போகணும் சார்"

"அது என்ன வெளியூரா?"

"இல்லை. ஹோட்டல் பேரு. போகட்டுமா?"

"தாராளமா. இட்லி இல்லாம எப்படி உயிர்வாழ முடியும்? என்ன, சுசி?"

கேலார்ட்டில் நடராஜர் சிலை இருந்தது. வீணை இசை இருந்தது. ஊதுபத்தி மணம் இருந்தது. நடுநடுவே சிற்பங்கள் இருந்தன. நிறைய இந்திய முகங்கள் இருந்தன. ரெண்டு பேர் மலையாளம் சம்சாரித்துக் கொண்டிருந்தார்கள். பரிசுப் பொருள் போல அலங்கரித்து எடுத்து வந்து வைத்தார்கள்.

சாப்பிட்டு முடிந்ததும் வெளி வந்து,

"இப்போது எங்கே?"

பரத் தனது பாக்கெட் டைரி பிரித்து, "ஃப்ராங்க்ளின் ஸ்ட்ரீட்" என்றான்.

"அங்க யாரு"

"அதான் பார்க்கர் ஸ்மித் காலி செஞ்சிப் போய்ட்ட பழைய விஷயம். போய்ப் பார்க்கலாம்."

பப்பு சூயிங்கம் நீட்டி வேண்டாமென்றதும் ஒன்றைப் பிரித்துப் போட்டுக் கொண்டு வந்தாள். பரத் புகைத்துக் கொண்டே யோசித்தான்.

ஹட்சன் நதியோரமாய் இருந்தது ஃப்ராங்க்ளின் தெரு. அதில் கட்டிட எண் பார்த்து நிறுத்த அது பெரிய அபார்ட்மெண்ட்டாக இருந்தது. கீழே அலுவலகம் இருந்தது. அலுவலகத்தில் மொத்த குடியிருப்புகளிலும் இருப்பவர்களின் பெயர்கள் - ஃப்ளோர் - வீடு எண் எழுதப் பட்டிருக்க. 7வது மாடியில் பார்க்கர் ஸ்மித் 16வது

## பட்டுக்கோட்டை பிரபாகர்

"பப்பு இதைப் பாரேன். இந்த இடமெல்லாம் உனக்குத் தெரியுமா?"

பப்பு வாங்கி அலட்சியமாகப் பார்த்து, "நல்லாத் தெரியும். நியுயார்க் எனக்குத் தண்ணி பட்டபாடு. போகலாமா? இதில எங்கே போகணும் இப்போ?"

"இப்ப வேணாம். நாளைக்குத் தான் போகணும். அப்புறம் உனக்கு ரெய்ன்போ கிரில் எங்க இருக்கு தெரியுமா?" என்றான் பரத்.

"வார்! இவங்களையும் கூட்டிக்கிட்டாப் போறது?" என்றான் சுசிலாவைக் காட்டி ஆச்சரியமாய்.

"என்ன இடம் அது?" என்றாள் சுசி.

"அது வந்துங்க..."

"பப்பு, அதை அப்புறம் பேசிக்கலாம். ஒண்ணுமில்லை சுசி. சலூன். தலையை ப்ளீச் பண்ணி இஷ்டப்பட்ட ஸ்டைல்ல கிராப் அமைச்சுக்கலாம். அதான். வேற ஒண்ணுமில்லை. இப்ப, பசிக்குது. இட்லி, தோசை கிடைக்கிற மாதிரி எங்கயாச்சும் போப்பா."

"இங்க வந்தும் இட்லிதானா?"

"இட்லிங்கிறது அலுக்காத விஷயம் - பாசம் மாதிரி, காதல் மாதிரி, கிடைக்குமில்லே?"

வீட்டில் இருந்தார்.

பீர் அருந்திக் கொண்டிருந்தவனிடம் பரத், "இங்கே பார்க்கர் ஸ்மித் இருந்த போர்ஷன் காலியாக இருக்கிறது என்று தகவல் பெற்று வந்திருக்கிறேன்" என்றான்.

"ஆமாம். நீங்கள் யார்?"

"இந்தியாவில் இருந்து வருகிறோம். பத்திரிகைகளில் வேலை பார்க்கிறோம். அமெரிக்காவில் ஜர்னலிசம் என்னும் தலைப்பில் ஆறு மாதங்கள் தங்கி தகவல் சேகரித்து புத்தகம் எழுத இருக்கிறோம். அந்த ஆறு மாதங்களுக்கு ஹோட்டல் பில் அதிகமாய் வருமென்பதால் போர்ஷன் விரும்புகிறோம் பார்க்கலாமா?"

"ஓ.யெஸ்." என்று ஒரு கப்போர்டைத் திறந்து சாவி எடுத்துக் கொடுத்து, "முதல் லிஃப்ட்டை உபயோகியுங்கள். ஏழாவது மாடி. பதினாறாவது வீடு. பார்த்து விட்டு வாருங்கள். மற்ற விபரங்கள் பிடித்திருந்தால் முடிவு செய்யலாம்."

"நன்றி" என்று சாவியுடன் வெளியே வந்தான் பரத். அடுத்த நிமிடம் ஸ்மித் வாழ்ந்த வீட்டைத் திறந்து உள்ளே வந்தார்கள். பர்னிச்சர்கள் இருந்தன. போன் இருந்தது. பரத்தும், சுசிலாவும் அவசர அவசரமாக அத்தனை அறைகளிலும் புகுந்து தேடினார்கள். கப்போர்டுகளைத் திறந்து பார்த்தார்கள். வீடு அவர் காலி செய்யப்பட்ட உடனேயே உடனே சுத்தப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒரு குப்பையோ, ஒரு காகிதமோ எதுவும் கிடைக்கவில்லை.

பரத் முகத்தில் சற்று ஏமாற்றம் படிந்தது.

ஒரு அறைக்குள்ளிருந்து சுசிலா கத்தினாள். "பரத் இங்க வாங்க."

அந்த அறைக்குச் சென்றால் அவள் இல்லை. டாய்லெட் அறையின் கதவு திறந்து இருக்க, "இங்கே வாங்க" என்றாள்.

போனால், சுவரில் தொங்கின ஸ்டாண்டில் இருந்த துடைத்துக் கொள்ளும் டிஷ்யு காகித ரோலை நீளமாக இழுத்துப் பிடித்திருந்தாள். "இதைப் பாருங்க" என்றாள்.

அந்த ஆறு இஞ்ச் பேப்பர் வாலில் குண்டூசியோ எதுவோ குத்திக் குத்தி தமிழில் நீளமாக வாக்கியம் ஆரம்பித்தது. 'என்னைக் காப்பாற்றுங்கள். நான் சரவணகுமார்.' சுசிலா மெதுவாக அந்தக் காகிதத்தை இழுத்துக் கொண்டே வர ஓட்டைகளிலேயே உருவாக்கப்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்தன. 'என்னைக் கடத்தி வந்திருக்கிறார்கள். இந்த விலாசம் சொல்லி இந்தியத் தூதரகத்திற்குத் தகவல் கொடுத்தால் என்னை மீட்டு விடுவார்கள். இங்கே நான்கு பேர்கள் இருக்கிறார்கள். பார்க்கர் ஸ்மித் - ஆனி - ரெய்ஸா - கார் டிரைவர் வெஸ்லி. தயவு செய்து என்னைக் காப்பாற்றுங்கள்.'

அத்துடன் செய்தி நின்று போயிருந்தது.

"சரி. அவனை இந்த ரூம்ல தான் வச்சிருந்தாங்க. டாய்லெட்டுக்கு அவனை அனுமதிக்கிறாங்க. எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா இந்த செய்தியை அமைச்சி மறுபடி ரோலை சுத்தி வச்சிட்டு வந்திருக்கணும். இங்கிலீஷ்ல எழுதினா கண்டு பிடிச்சிடுவாங்கன்னு தமிழ்ல எழுதியிருக்கான். யாராச்சும் எப்படியாச்சும் இதைப் பார்த்தா உதவட்டும்னு நினைச்சிருக்கான். இல்லைன்னா செய்தி முடிச்சிட்டு, அப்படியே கிழிச்சி சுத்தி வெண்டிலேட்டர் வழியா வெளில போட நினைச்சிருக்கலாம். அதை செயல் படுத்தறதுக்குள்ளே இந்த இடத்தை விட்டு அவனை மாத்தியிருக்கணும். எனவே, கார் டிரைவர் வெஸ்லின்னு ஒரு புது தகவல் கிடைச்சிருக்கு. வா, இந்த லைன்ல கொஞ்சம் இறங்கிப் பார்க்கலாம்."

மூவரும் கீழே இறங்கிவர...

அந்த அலுவலகம் வந்து, "நாளை வந்து எங்கள் முடிவைச் சொல்கிறோம்" என்ற பரத், "எங்கள் காருக்கு நியுயார்க்கின் வழிகள் எல்லாம் தெரிந்த ஒரு திறமையான டிரைவர் கிடைப்பாரா?"

"அண்டர் கிரவுண்டில் பார்க்கிங் ஏரியா இருக்கிறது. அங்கு டிரைவர்களின் ஓய்வறை உள்ளது. அங்கு விசாரித்துப் பாருங்கள்."

குறிப்பிட்ட ஓய்வறையில் சிலர் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். சிலர் டேபிள் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சிலர் கார்ட்ஸ் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

வெஸ்லியைப் பற்றி விசாரித்த போது உடனே விலாசம் கொடுத்தார்கள். ஆனால் தற்சமயம் அங்கே இல்லை என்று கேள்விப்பட்டதாகத் தெரிவித்தார்கள்.

வெஸ்ட் எண்ட் அவென்யுவில் இருந்த அந்த விலாசத்திற்கு வந்த போது இரவு மணி பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அதுவும் ஒரு அபார்ட்மெண்ட் ப்ளாக்காக இருந்தது. வீட்டைப் பார்க்கலாமா என்கிற வித்தை அங்கே பலிக்கவில்லை. வேறு நபர்கள் குடி வந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டார்கள்.

பக்கத்துல பக்கத்துல பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரர்களை விசாரித்த போது இப்போது எங்கே போயிருக்கிறார்கள் என்பது தெரியாது என்றார்கள். சோர்ந்து போய் இன்னும் ஒரே ஒரு வீட்டில் கேட்டு விடலாம் என்று தீர்மானித்தபோது லட்டு போல ஒரு தகவல் கிடைத்தது.

*(தொடர்ந்து வரும்)*

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: வை. றொனிக்கல் வெஸ்லி
வயது: 23
முகவரி: பி 3, எவ் 4, புளூமெண்டால் தொடர்மாடி, கொழும்பு-11.
பொழுது போக்கு: புத்தகம், பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: அப்துல் முனவ்வர்
வயது: 23
முகவரி: 176, குருந்துகஹ எல, அக்குறணை.
பொழுது போக்கு: புத்தகம், வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: கே. சகாதேவன்
வயது: 21
முகவரி: வெதமுள்ள தோட்டம், இறம்பொடை.
பொழுது போக்கு: நாவல், பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: எம். நௌபர்
வயது: 20
முகவரி: ROOM NO. A-5, P.O.BOX-41019, JEDDAH-21521, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை படித்தல்.



பெயர்: ஆர். நவசோதி
வயது: 22
முகவரி: BADANER STR-749, 8048-ZURICH, ZWITZERLAND.
பொழுது போக்கு: உதைபந்து, தொலைக் காட்சி.



பெயர்: எச். பரீனா
வயது: 25
முகவரி: P.O.Box:1121, CODE NO:92362, AL.FERDOUS, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஜெ. நடேசானந்தராஜா
வயது: 21
முகவரி: கடற்கரை வீதி, களுதாவளை-4, களுவாஞ்சிக்குடி.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்: ஏ. ஹஸ்மத் ஹஸன்
வயது: 13
முகவரி: 66, பிரதான வீதி, தர்கா நகர்.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல்.

பெயர்: வெப் பற்றிக்ஸ் வில்லியம்ஸ்
வயது: 25
முகவரி: DEL- GOMITO NO.-2, 40127 BOLOGNA, ITALY.
பொழுது போக்கு: பேனா நட்பு.

பெயர்: எம். இஸ்ஸதீன்
வயது: 23
முகவரி: P.O.BOX-2815, AL-RIYADH. 11461, K.S.A.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ரி. பாபு
வயது: 24
முகவரி: 234/2, பிரதான வீதி, கொழும்பு-11.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எம். ஹிஸாம்
வயது: 15
முகவரி: ஜவுசான் பள்ளி வீதி, 5ம் குறுக்குத் தெரு, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

"போய் வாருங்கள்" என்று அமைதியாகக் கூறினார்கள் முஜீக்குகள்; அந்தச் சோகமயமான வார்த்தை அப் பெண்களின் காதுகளில் வெகுநேரம் ஒலித்துக்கொண்டிருந்தது.

அவர்கள் மீண்டும் அந்தக் காட்டுப் பாதை வழியாக அருணோதய காலத்தின் பசப்பொளியில் அவசரமேதுமின்றி நிதானமாக நடந்து சென்றார்கள்.

"இங்கு, எல்லாம் எவ்வளவு அருமை யாயிருந்தது!" என்று சோபியாவுக்குப் பின்னால் நடந்துகொண்டே வந்த தாய் சொன்னாள்: "எல்லாம் சொப்பனம் மாதிரி இருக்கிறது. மக்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள்! உண்மை யைத் தெரிந்து கொள்ளத் துடியாய்த் துடிக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது தெரியுமா? ஒரு பெரிய திருநாளன்று மக்களெல்லாம் அதிகாலைப் பிரார்த் தனைக்காகத் தேவாலயத்தில் கூடி யிருப்பது போலவும், மதகுரு இன்னும் வராதது போலவும், எங்குமே இருளும் அமைதியும் சூழ்ந்திருப்பது போலவும், அப்போது நம் உடம்பு தவியாய்த் தவிப் பது போலவும், மக்கள் வந்து நிறைந்து கொண்டே இருப்பது போலவும் தோன்று கிறது. அந்தத் தேவாலயத்திலுள்ள விக்ரகத்தின் முன்னால் யாரோ விளக்கு களை ஏற்றி வைக்கிறார்கள்; கடவுளின் இல்லத்துக்கு ஒளி வருகிறது. இருள் கொஞ்சங்கொஞ்சமாக விலகியோடு கிறது."

"எவ்வளவு உண்மை?" என்று உவகையோடு சொன்னாள் சோபியா. "இங்கு மட்டும்தான் கடவுளின் இல்லம் உலகம் முழுவதையுமே தழுவி நிற்கிறது!"

"உலகம் முழுவதையுமா?" என்று தலையை அசைத்துச் சிந்தித்துக் கொண்டே சொன்னாள் தாய். "நம்புவதற்கே முடியாத அவ்வளவு பெரிய உண்மை இது. சோபியா! நீங்கள் எவ்வளவு நன் றாகப் பேசுகிறீர்கள். அருமையாயிருந்தது. உங்களை அவர்களுக்குப் பிடிக்காமல் போய்விடுமோ என்று நான் பயந்திருந் தேன்."

சோபியா ஒரு கணம் மௌனமாக இருந்தாள்; பிறகு அமைதியோடும் சோர் வோடும் சொன்னாள்:

"அவர்களோடு இருந்தாலே நாமும் எளிமை பெற்று விடுகிறோம்."

அவர்கள் இருவரும் ரீபினைப் பற்றி யும் அந்த நோயாளியைப் பற்றியும், கவ னம் நிறைந்த மௌனமும், விருந்தாளி களுக்கு வேண்டிய சின்னஞ் சிறு சேவை களில் கூட மிகுந்த ஈடுபாடும் நன்றி யுணர்ச்சியும் கொண்டிருந்த அந்த இளை ஞர்களைப் பற்றியும் பேசிக் கொண்டே நடந்து சென்றார்கள். அவர்கள் காட்டுப் பிராந்தியத்தைக் கடந்து வயல்வெளிக்கு வந்தார்கள். சூரியன் அவர்களுக்கு எதி ராக மேலெழுந்தது. எனினும் சூரிய னின் முழு உருவமும் வெளியே தெரிய வில்லை. செக்கச் சிவந்த கதிர்களை மட்டும் விசிறி மாதிரி வான மண்டலம் முழுவதும் விரித்து ஒளிபாய்ச்சிக் கொண்டிருந்தது. புல் நுனிகளில் தொங் கிக் கொண்டிருக்கும் பனித்துளிகள் சூரிய கிரணம் பட்டவுடன் வானவில்லின் வர்ண ஜாலம் சிதறி, வசந்தத்தின் கோலா கலத்தோடு புன்னகை புரிந்தன. பறவை கள் விழித்தெழுந்து உற்சாகமயமான கீதக் குரலை எழுப்பி, அந்தக் காலை நேரத்துக்குக் களிப்பூட்டி ஜீவனளித்தன. பெரிய பெரிய காக்கைகள் தங்களது இறக்கைகளைப் பலமாக அடித்து வீசிக் கொண்டும், ஆர்வத்தோடு கத்திக் கொண் டும் வான மண்டலத்தில் பறந்து சென் றன. எங்கிருந்தோ ஒரு மஞ்சலாத்திக் குருவியின் சீட்டிக் குரல் ஒலித்தது. தூரவெளிகள் கண்ணுக்குத் தெரிந்தன. குன்றுகளின் மீது படிந்திருந்த இருட்திரை கள் சுருண்டு மடங்கி மேலெழுந்து மறைந்தன.

"சமயங்களில் ஒருவன் பேசிக்

**அன்றும் இன்றும் என்றும்**
**உலகின்**
**மிகச் சிறந்த**
**முதல் தரத்து**
**நாவல்**
**ஒன்றே ஒன்றுதான்**
**அதுதான்**
**தாய்**

கொண்டே இருப்பான்; அவன் எவ்வளவு தான் வளைத்து வளைத்துப் பேசினாலும் அவன் சொல்லுகின்ற விஷயம் புரிபடுவ தேயில்லை. திடீரென அவன் ஒரு சாதாரண வார்த்தையைக் கூறிவிடுவான். உடனே எல்லாமே விளங்கி விடும்" என்று ஏதோ நினைத்தவளாய்ப் பேசினாள் தாய். "அது போலத் தான் அந்த நோயாளியின் பேச்சும் இருந்தது. நானும் எவ்வளவோ கேட்டிருக் கிறேன். எவ்வளவோ பார்த்திருக்கிறேன். அவர்கள் எப்படித் தொழிலாளர்களைத் தொழிற்சாலைகளிலும், வேற்றிடங்களிலும் விரட்டி விரட்டி வேலை வாங்குகிறார்கள் என்பதை நானும் அறிந்திருக்கிறேன். ஆனால், சிறுவயதிலிருந்தே இதெல்லாம் பழகிப்போய் விடுவதால், அதைப்பற்றிய சுரணையே நம் மனத்தில் இல்லாமல் போய்விடுகிறது. ஆனால் அத்தனை வேத னையையும் அவமானத்தையும் தரும் அவன் சொன்ன அந்த விஷயம் இருக்கிறதே! கட வுளே! தங்களது முதலாளிகளின் சில்லறை விளையாட்டுக்களுக்காக மக்கள் தங்கள் உயிரைக் கொடுத்து உழைத்துக் கொண்டி ருக்க முடியுமா? அதிலே என்ன நியாயம் இருக்கிறது?"

அந்த மனிதனின் நிலையைப்பற்றியே அவளது சிந்தனைகள் வட்டமிட்டன; இந்த மனிதனின் வாழ்க்கையைப் போலவே ஒரு காலத்தில் அவளுக்குத் தெரிந்திருந்த பல பேருடைய வாழ்க்கைகளைப்பற்றிய நினைவு களும் அவள் மனத்தில் மங்கித் தோன்றின.

"அவர்களிடம் அனைத்தும் இருக்கிறது. எல்லாம் திகட்டிப் போய் உமட்டுகிறது என்று தான் சொல்லவேண்டும். எனக்கு ஒரு கிராம அதிகாரியைத் தெரியும். அவன் தனது குதிரை கிராமத்து வழியாக எப்போ தெப்போது சென்றாலும், கிராம மக்கள் அந்தக் குதிரைக்கு வணக்கம் செலுத்த வேண்டும் என்று உத்தரவு போட்டிருந்தான். வணங்காத பேர்களை அவன் கைது செய்து கொண்டுபோய் விடுவான். இந்த மாதிரிக் காரியங்களை அவன் எதற்காகச் செய்ய வேண்டும்? இந்த மாதிரியான செய்கையிலே ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?"

அருணோதய வேளையைப் போலவே குதூகலம் தொனிக்கும் ஒரு பாட்டை மெதுவாகப் பாட ஆரம்பித்தாள் சோபியா.....

❖ ❖ ❖

**தா**யின் வாழ்க்கை ஒரு விசித்திர அமைதியோடு நடந்து கொண்டிருந்தது. சமயங்களில் இந்த அமைதி அவளுக்கு



# தாய்

## மக்சீம் கார்க்கி

வியப்பூட்டியது. அவளது மகனோ சிறையி லிருந்தான்; அவனுக்கு ஒரு கொடிய தண்டனை கிடைக்கும் என்பது அவளுக்குத் தெரியும். என்றாலும் அதைப் பற்றி அவள் நினைக்கின்ற வேளையெல்லாம் அவளையும் அறியாது அந்திரேய், பியோதர், மற்றும் எத்தனை பேர்களுடைய முகங்களும் அவளது மனத்திரையில் நிரம்பித் தோன்றும். மகனின் உருவம் அவளது கண்முன்னால் பிரமாண்ட மாகப் பெருகி வளர்ந்து, அவனது விதியில் பங்கெடுக்கும் மற்ற அனைவரையும் தழுவி அணைத்து மறைத்து நிற்பதாகத் தோன்றி யது. சிந்தனையினூடே தோன்றும் மற்ற எண்ணங்களையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, மகனைப் பற்றிய நினைவை மட்டும் வளர்த்துப் பெருக்குவாள். தட்டுத் தடுமாறிச் செல்லும் அந்த மெல்லிய சிந்தனைக் கதிர்கள் எட்டெட்டுத் திசைகளிலும் சென்று, எல்லா வற்றையும் தொட்டு, சகல தத்துவங்களின் மீதும் ஒளி வீசி, சகல விஷயங்களையும் ஒரு தனி உருவமாக ஒன்று திரட்டி ஒரு மையாக உருவாக்க முயன்று கொண்டிருந் தன. எனவே அவளது மனம் ஒரே விஷ யத்தின் மீது மட்டும் நிலைக்கவில்லை; தன்னுடைய மகனைப்பற்றிய ஏக்கத்தையும் பயத்தையும் மட்டுமே அவள் நினைக்க வில்லை.

சோபியா வந்தவுடனேயே எங்கேயோ சென்றுவிட்டு ஐந்து நாட்கள் கழித்துதான் திரும்ப வந்தாள்; அவள் ஒரே உற்சாகமும் உவகையும் நிறைந்த குதூகலத்தோடு வந்தாள். ஆனால் வந்து சில மணிநேரத்திற் குள்ளாகவே அவள் மீண்டும் போய் விட்டாள்; இரண்டு வாரம் கழித்து திரும்பவும் வந்தாள். வாழ்க்கையின் விரிவான வட்டத்தில் அவள் சுழலுவது போலத் தோன்றியது. இடையி டையே மட்டும் தனது சகோதரனின் வீட்டை எட்டிப் பார்த்து, அவ்வீட்டை அவள் தனது இசையாலும், உற்சாகத்தாலும் நிறைவு பெறச் செய்வது போலத் தோன்றியது.

தாய்க்கு வரவர சங்கீதத்தில் விருப்புண் டாயிற்று. அந்தச் சங்கீதத்தை அவள் கேட்கும் போது இதய சுகம்தரும் இனிய அலைகள் அவளது மார்பின் மீது மோதி மோதி, இதயத்தைக் கழுவி விடுவது போலவும், இதயத் துடிப்பை மிகுந்த நிதானத்தோடு சமனப்படுத்துவது போலவும் தோன்றியது; மேலும் நன்றாக நீர்பாய்ச்சியதால், ஆழமாய் வேரோடிப் பாய்ந்த வித்துக்களைப் போல் அவளது சிந்தனைகள் முளைத்துக்கிளைத் துப் பரந்து பரவின; அந்தச் சிந்தனைக் கிளைகள் அந்தச் சங்கீதத்தின் மகிமையால் வார்த்தைகளாகப் பூத்து வெடித்துப் புன் னகை சொரிந்து வெளிப்பட்டன.

சோபியாவின் கச்சிதமின்மையை மட்டும் தாயால் சமாளித்துக்கொண்டு போக முடிய வில்லை. சோபியா எப்பொழுதும் தான் குடிக்கும் சிகரெட்டுத் துண்டுகளையும், தனது துணிமணிகளையும் கண்ட கண்ட இடத்தில் தாறுமாறாய் விட்டெறிந்தாள். அவளது ஆரவாரமான பேச்சுக்களைத் தாங்கிக் கொண்டிருப்பதோ தாய்க்கு இதை யும் விடச் சிரமமாயிருந்தது. நிகலாயோ தெளிந்த நிதான புத்தியோடும் ஆழ்ந்த பொருளமைதியோடும் அனது வார்த்தைகளை எப்போதும் அளவிட்டு-உயிர்கொடுத்துப் பேசுவான்; சோபியாவின் பேச்சோ இதற்கு நேர் எதிர் மறையானதாகத் தாய்க்குத் தோன்றியது. தன்னை மிகவும் பெரியவளாகக் காட்டிக் கொள்ள விரும்பும் ஒரு குமரியைப் போலவே சோபியா நடந்து கொள்வதாகவும், அவள் மற்ற மனிதர்களையெல்லாம் விளை யாட்டுச் சாமான்களைப் போலவே கருது வதாகவும் தாய்க்குத் தோன்றியது. அவள் உழைப்பின் புனிதத்துவத்தைப் பற்றிப் பேசுவாள். ஆனால் தன்னுடைய கச்சித மின்மையால், தாய்க்கு எப்போதும் அதிகத் தொல்லை கொடுப்பாள்; அவள் சுதந்திரத் தைப் பற்றி காரசாரமாய்ப் பேசுவாள்; என் றாலும் அவள் தனது பொறுமையின்மையா லும், வறட்டு முரண்வாதத்தாலும் பிறரை எப்போதுமே அடக்கியாள விரும்புவதாகவே தாய்க்குத் தோன்றியது. அவளது போக்கு ஒரே முரண்பாடுகள் நிறைந்ததாயிருந்தது. இதைத் தாய் உணர்ந்திருந்ததால், தாய் அவளிடம் எப்போதும் ஜாக்கிரதையாகவே நெருங்கிப் பழகினாள்; நிகலாயிடம் எந்த விதமான நிரந்தரமான அன்புணர்ச்சி கொண் டிருந்தாளோ, அதே உணர்ச்சி அவளுக்கு சோபியாவின் மீது ஏற்படவில்லை.

நிகலாய்க்கு எப்போதுமே பிறரைப் பற்றிய சிந்தனைதான்; அந்தச் சிந்தனையோடு தான், அவன் தனது ஒரே மாதிரியான இயந்திர இயக்கம் போன்ற வாழ்க்கையை நடத்தி வந்தான். காலையில் எட்டு மணிக்கு அவன் தேநீர் குடிப்பான்; தேநீர் குடிக்கும் போதே பத்திரிகையைப் படித்துத் தாயிடம் செய்திகளை எடுத்துக் கூறுவான். அவன் கூறுவதைக் கேட்கும்போது, திடீரென ஓர் உண்மை அவள் உள்ளத்தில் புலனாகிச் சிலிர்க்கும்; வாழ்க்கை என்னும் இந்த மா பெரும் இயந்திரம் எப்படிக் கொஞ்சங்கூட ஈவிரக்கமின்றி மக்களையெல்லாம் அரைத்து நொறுக்கிப் பணமாக மாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை அவள் உணருவாள். நிகலாய்க்கும் அந்திரேய்க் கும் பல விதத்திலும் ஒற்றுமை இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. ஹஹோலைப் போலவே இவனும் மக்களைப்பற்றிக் குரோத உணர்ச்சியற்று பேசினான்; வாழ்க்கை அமைப்பிலுள்ள குறை பாட்டினால்தான் மக்கள் குற்றவாளியா கிறார்கள் என்றே இவனும் கருதினான். ஆனால் புதிய வாழ்க்கை மீது இவன் கொண்டுள்ள விசுவாசம் அந்திரேயினுடை யதைப் போல் அவ்வளவு தீவிரமாகவோ தெளிவாகவோ காணப்படவில்லை. இவன் எப்போதும் ஒரு நேர்மையும் கண்டிப்பும் நிறைந்த நீதிபதியைப் போலத்தான் அடங்கி அமைந்த குரலில் பேசினான். மிகவும் பயங்கரமான விஷயங்களைப் பற்றிப் பேசும் போதுகூட அவனது உதடுகளில் ஒரு சிறு அமைதி நிறைந்த வருத்தப்புன்னகையே நிழலிட்டு மறையும். அந்தச் சமயங்களில் அவனது கண்களும் இளக்க மற்று வக்கிரத்தோடு பிரகாசிக்கும். அந்தக் கண்களில் உள்ள ஒளியைக் காணும் போதெல்லாம் அவளுக்கு ஓர் உணர்ச்சி தோன்றும். இந்த மனிதன் யாரையும் எதையும் மன்னிக்கவே மாட்டான்; இவனால் மன்னிக்க முடியாது என்று கருதத் தோன்றும். அவனுக்கே தனது இரக்க மற்ற இந்தத் தன்மை பிடிக்கவில்லை. எனவே அவனுக்காக அனுதாபப் பட்டாள் தாய். அவன் மீது அவள் கொண்டி ருந்த பாசம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது.

ஒன்பது மணிக்கு அவன் வேலைக் குப் புறப்படுவான். போனபிறகு, அவள் வீட்டையெல்லாம் சுத்தப்படுத்துவாள். பிறகு மத்தியான உணவைத் தயாரிப்பாள். குளித்து விட்டு, தூய உடைகள் அணிந்து கொள்வாள்; தன் அறைக்குள் வந்து உட் கார்ந்து புத்தகங்களைப் புரட்டி அதி லுள்ள படங்களைப் பார்த்துக் கொண்டி ருப்பாள். அவள் இதற்குள்ளாகவே புத்த கங்களைப் படிக்கத் தெரிந்து கொண்டிருந் தாலும், மிகுந்த சிரமத்தோடும் அதிக கவனத்தோடும்தான் அவளால் அவற் றைப் படிக்க முடியும். அப்படிப் படித் தால் அவள் சீக்கிரமே களைப்புற்றுப் போவாள்; ஒரு வார்த்தைக்கும் மறு வார்த்தைக்கும் உள்ள தொடர்பைக் கூட அவளால் உணர முடியாது. குழந்தை படங்களைப் பார்த்துக் குதூகலிப்பது போல அவளும் அப்படங்களைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தாள். அந்தப் படங்களில் அவள் ஒரு புதிய அற்புத உலகத்தைக் கண்டாள்; தொட்டுணர முடிவது போன்ற அந்தப் புதிய உலகத்தை அவள் அந்தப் படங்களிலிருந்து புரிந்து கொண்டாள். அவளது கண்முன்னால் மாபெரும் நகரங்களும் அழகிய கட்டிடங்களும், யந்திரங்களும், கப்பல்களும், ஞாபகச் சின்னங்களும், இன்னும் மனிதக் கரங்கள் சிருஷ்டித்த எத்தனை எத்தனையோ பொருட் செல்வங்களும் தோன்றின; அந்தப் படங்களில் அவள் இயற்கையின் படைப்பாற்றலைக் கண்டாள். பல்வேறு விதமான இயற்கைக் காட்சிகள் அவள் மனத்தைத் திகைக்க வைத்தன. வாழ்க்கை என்பது எல்லையற்று விரிந்து பெருகிக் கொண்டிருந்தது; கண்களின் முன்னால் அவள் இதுவரையில் அறிந்திராத ஓர் அதிசயத்தை, ஒரு மகோந்நதத்தை எடுத்துக் காட்டியது. அது அவளது விழிப்புற்ற இதய தாகத்திலே தனது குறையாத அழகாலும் அமோகமான வளத்தாலும் நிறைவைப் பொழிந்து கிளர்ச்சியுறச் செய்தது. விலங்கு இனங் களை விளக்கும் சித்திரப் புத்தகத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்வதில் அவளுக்கு ஒரு தனி ஆனந்தம். புத்தகம் அன்னிய மொழியிலிருந்த போதிலும், அந்தச் சித் திரங்களிலிருந்தே இவள் இந்தப் பூலோ கத்தின் விசாலத்தையும் அழகையும் செல் வத்தையும் உணர்ந்தறிய முடிந்தது.

(தொடர்ந்து வரும்)

# சொல்லத்தான் நினைக்கிறான்

**ந**ண்பன் விஜய் தன்னைத் தேடி வந்திருப்பதை- அதுவும் ஒரு பக்கம் பொழுது விடியும் முன்னரே- வியப்புடன் வரவேற்றான் ரகு.

"என்னடாப்பா பத்து மணிவரைக்கும்



இழுத்துப் போர்த்திட்டு படுக்கும் நீ இன்னைக்கு இத்தன காலங்காத்தாலே.... அதுவும் என்னைத் தேடி வந்திருக்கே?" ஏகத்தாளமாக இழுத்தான்.

நேரடியாக விசயத்துக்கு வந்தான் விஜய். "நான் ஒரு பொண்ணை காத லிக்கிறேன். அதுக்கு உன்னோட உதவி தேவை!" ரகு யோசித்தான். "என்னடா இது? நேற்று வரைக்கும் நல்லாத்தான் இருந்தே! நல்ல புள்ளையாய்! தெருச் சுற்றாம, சைட் அடிக்காம படிப்பே கதின்னு இந்த

**ஷர்மிளா இஸ்மாயில்**
**-கண்டி-**

யுனிவர்சிடியிலேயே நல்லா பாஸ் பண்ற முதல் ஆளா வருவேன்னு சபதமெல்லாம் போட்ட நீ... நீயா...? எப்படி அது திடீர்க் காதல்?"

புன்னகைத்த விஜய் கட்டிலின் நுனியில் அமர்ந்து கொண்டான். "அது அப்படித்தான். உன்னைப்போன்ற மரக்கட்டைக்கெல்லாம் புரியாது; தெரியாது. முதல் பார்வையிலேயே என் இதயத்தை இழுத்துக் கொண்டு போய்ட்டா. இந்தா இந்த எட்ரஸ் அவளோடது. நீ தான் கவிதை-ஐ மீன்-கவிச்சக்கரவர்த்தியாச்சே. என் காதலை வெளிப் படுத்துற மாதிரி நாலு வரி எழுதிக்கொடு. போதும். அதுவும் புதுக் கவிதையா இருக்கணும். ஓ.கே!"

அவன் பதிலை எதிர்பாராது விஜய் போய் விட்டான். ரகு மனதுக்குள் சிரித்துக் கொண்டான். "நேற்று இல்லாத மாற்றம் என்னது? காற்று என் காதில் ஏதோ சொன்னது" கர்ண கடூரமாய் விஜய் பாடிக் கொண்டு போவது கேட்டதும் வாய் விட்டே சிரித்துவிட்டான். கடந்து சென்ற நாட்களில் விஜயின் காதலி யாரெனத் தெரிந்தது.

'ஏய்! விஜய், என்னடாப்பா இது...? நம்ம ளோட படிக்கிற யாரையாவது லவ் பண்ணு வேன்னு பார்த்தேன். நீ என்னடான்னா ஒரு கஷ்டஜீவனம் பண்ற ஏழைக் குடும்பத்து பெண்ணா- அதுவும் ஐந்து பெண்பிள்ளைகள் உள்ள குடும்பத்துல போய் விழுந்திருக்கே. உங்க குடும்பம், அந்தஸ்த்து, உன்னோட படிப்பு இதெல்லாம் வெச்சுப் பார்த்தா - அதோட உன்னோட "பேரன்ட்ஸ்" இத ஒத்துக் கவே மாட்டாங்க.'

இப்படி இதையெல்லாம் சொல்லத்தான் நினைத்தான் ரகு. ஆனால் வார்த்தைகள் வர வில்லை. தனக்குத்தானே மகிழ்ந்து - சிரித்து களித்திருக்கும் நண்பனுடைய முகத்தைப் பார்த்ததும் ஏதும் சொல்லத் தோன்றவில்லை. தான் யோசித்தவற்றைக் கூறி விஜயின் மனதை நோகடிக்க அவன் விரும்பவில்லை. மற்றும் தன் சொற்கள் அவன் செவியில் ஏறும் நிலையில் அவனில்லை என்றும் உணர்ந்து ரகு மௌனியானான்.

காதலின் சின்னச் சின்ன சந்தோசங்கள்... நெகிழ்வுகள்.... நிகழ்வுகளையெல்லாம் ரகுவிடம் கூறி சிலிர்த்தான் விஜய். ரகுவினால் விஜயின் காதலுக்கு ஆதரவளிப்பது தவிர வேறேதும் செய்ய முடியவில்லை; நண்பனின் மகிழ்வில் தானும் கலந்திருந்தான்.

திடீரென விஜய் ஒரு நாள் சோர்ந்திருந் தான். ரகு விசாரித்தான் "என் காதல் விடயம் வீட்டுக்கு தெரிஞ்சாச்சுடா. அப்பா ஏசி லெட்டர் போட்டிருக்கார். உடனே வரச் சொல்லி எழுதியிருக்கார்."

"என்னடா செய்யப் போற?" ரகு ஆதுரத்துடன் கேட்க, "ஒண்ணு மில்லடா... ஒண்ணுமேயில்ல. என் காதல் என்னோடயே இருக்கும். அம்மா, அப்பா யார் சொல்லியும் நான் கேட்கப் போறதில்ல. என் மனசுக்குப் பிடிச்ச பெண்ணோட வாழும் உரிமை எனக் கிருக்கு." சூடாக வார்த்தைகளை உதிர்த்து வெளியேறினான் விஜய்.

ரகுவிற்கு தர்மசங்கடமான நிலை. காதலை முற்றவிட்டது தவறோ? தான் ஒரு நல்ல நண்பனாய் ஆரம்பத்திலேயே இதை தடுத்திருக்க வேண்டாமோ? தடுமாறினான் ரகு. விஜயின் தந்தை வந்திருந்தார். விஜய் பாத்ருமினுள் புகுந்து கொண்டான். "நானில்லை என்று சொல்" கட்டளை வேறு. "அநியாயம்.. இன்றைக் குப் போய் இங்கே வந்து தொலைந்தேனே.." முணுமுணுத்தவாறே "அ...அங்கள் விஜய் வெளியே போய்ட்டான். வர லேட்டாகும்!" ரகு தடுமாறினான். விஜயைத் தேடி வந்த ரகு வசமாய் அவரிடம் அகப்பட்டுவிட்டான்.

அவர் நின்று நிதானித்தார் "சரிடாப்பா நீயாவது இருக்கியே. நீயும் என் பிள்ளை மாதிரி தான். நல்லா கவனி. விஜய் நல்லா படிச்சு எங்க குடும்பத்து கௌரவத்தை காப்பாற்றி நல்ல மனஷனா வரணும்னு தான் நாங்க நினைக்கிறோம் இடையில இந்த காதல், கீதல்னு தடுமாறி என் மானத்தை கப்பலேத்த நினைச்சானோ... நான் பொல்லாதவனாயிடுவேன். காதலிக் கிறார் பெரிய சாஜஹான்! இதெல்லாம் என்கிட்ட சரிவராது. புரிஞ்சிக்கிட்டியா? நீ கூட அவனோட நல்ல நண்பன் தானே? ஏண்டாப்பா இவன் இப்படி தலைகீழா போற மாதிரி விட்டுட்டுப் பார்த்திருக்கியே? உனக்கே நல்லதாப் படுதா? கொஞ்சம் புத்தி சொல்லியிருக்கப்படாது? நாங்க சொல்லறதை விட நீ சொன்னா கேட்பான். சொல்லுவியா?"

"அங்கள்... காதல்ங்கிறது ஒருத்தரோட தனிப்பட்ட விடயம். அதில நாங்களோ, நீங்களோ அன்னியம் தான். தலையிட முடியாது. என்ன தான் என் நண்பனாயிருந் தாலும் இதைப்பற்றி வேண்டும், வேண் டாம்னு சொல்ல எனக்குரிமை இல்லை. அதனால.. நான் எதுவுமே சொல்ல முடியாது."

இப்படி சொல்லத் தான் நினைத்தான் ரகு. ஆனால் வார்த்தைகள் தொலைந்த வனாய் மீண்டும் மௌனித்து விட்டான். எப்படிச் சொல்வது? ⊗



படிப்பகம்

www.padippakam.com

# ஆசை வதை

**கௌரிபாலன்**

**பொ**ன்னியை எதிர்பார்த்து காத்திருந்த விசுவம், பொன்னியைக் கண்டதும், "ஏலோய் புள்ள, இம்புட்டு நேரம் என்ன பண்ணினே?" என்று கேட்டன்.

"ம்...ம்..வயல் வரம்பில கூட்டாஞ்சோறு ஆக்கி விளையாடிற்று இருந்தேனாக்கும்."

"என்ன புள்ள சொல்றே".

"பின்ன என்னவாம், அறுத்தபாதி அறுக்காதபாதியா அறுத்த புல்லோட, வெடி கேட்டு, நெஞ்சு விறைச்சு வந்திருக்கேனாக்கும். இம்புட்டு நேரம் என்ன பண்ணின எண்டு கேட்டா என்ன சொல்றதாம்?"

"சரி புள்ள முதலாளி கூப்பிட்டனுப்பிச்சாராம். என்னாண்டு பாத்திட்டுவாரன்."

"இந்த நேரம் எதுக்கு கூப்பிட்டாராம்?".

"தெரியல்ல புள்ள. நான் போயிட்டு வாரன்."

"சரிங்க, சின்னராசு எங்க போச்சு?".

"கண்ணுக்குட்டிய புடிச்சிண்டு அந்தண்ட போனான் புள்ள, பார்த்துக்க கன்னு குட்டி இடறிவிட்டிரும்!" கணவனுக்கு படலையை திறந்துவிட்ட பொன்னி மகன் சின்னராசுவிற்கு குரல் கொடுத்தாள்.

"டோய் சின்னராசு இத்தண்ட வாடா, புல்லெல்லாம் தூக்கி பெரிசுக்கும் போட்டு கன்னுக்கும் போடுடா." நன்கு பரிச்சயமான குரலுக்கு மனிதன் மட்டுமல்ல விலங்குகளும்கூட கட்டுண்டு போகும்.

பொன்னியின் குரலைக் கேட்டதும், இரு இளம் கன்றுகளும் நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டு வந்தன.

"அனேய், இந்த 'விசாலாச்சி' என்ன பன்னிச்சி தெரியுமா? அங்கிட்டு திரும்பி எதையோ பார்க்கிற மாதிரி பார்த்துச்சு, நான் என்னாண்டு அங்கால பார்த்தாக்கா, இங்கிட்டு திரும்பி ஒரே ஓட்டமா வந்திருச்சி". சொல்லிக்கொண்டே 'விசாலாச்சி' நாமம் கொண்ட தன் செல்லப் பிராணியை கொஞ்சினாள். வாலை முறுக்கினாள், வலி பொறுத்தது, அன்புக்குக் கட்டுப்பட்டு 'அம்மா..மா' என்று சொல்லி செல்லமாய் முட்டித் தள்ளியது விசாலாச்சி.

"போடா உன்கிட்ட இனிமே நான் கதைக்கமாட்டன்." கன்றை விட்டு நழுவிய கரம் அன்னையின் காத்தை ஊஞ்சலாக்கி உல்லாசம் கண்டது. அன்னையின் காத்தில் ஊஞ்சலாடியபடி குடிலுக்குள் தாவிற்று அந்த இளம் கன்று.

✦✦

**இ**டக்கை புற்களைப் பற்ற வலக்கை லாவகமாக புல் அறுத்தது, ஆனால் மனம் மட்டும் ஒன்றாமல் தவித்தது. எத்தனை நாளைக்குத் தான் ஊரான் தோப்பில் குடி இருப்பது? பொன்னிக்கு மனம் சலித்தது. சொந்த இடம் ஒன்றும் அதிக தூரமில்லை, இங்கிருந்து பார்த்தால் ஒரு கூப்பிடு தூரம்தான். ஆனாலும் இந்த ஒரு கூப்பிடு தூரத்திலேயே அகதியாய் ஊரான் தோப்பில் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. பொன்னி தன் சொந்த இடம் நோக்கி பார்வையைத் திருப்பினாள், குடியிருப்புக்கள் இருந்த அந்த இடம் இப்போது வெறும் பற்றைக் காடாய் தூரத்தே தெரிந்தது. 'போய்ப் பார்த்தால் என்ன' மனம் உந்தித் தள்ளிற்று.

அரிவாளை எடுத்துக் கொண்டு குடியிருப்பை நோக்கி நடக்கத் தொடங்கினாள் பொன்னி. வயல்வெளி கடந்து, பற்றைக் காடாய்க் கிடந்த குடியிருப்புக்குள் கால் வைத்தாள் பொன்னி. குடியிருப்புக்குள் நடக்கும் போது மனம் உல்லாச ஊஞ்சல் ஆடியது. முள்ளந்தண்டில் சிலிர்ப்பு ஏற்பட்டது. மயிர்க்கணுக்கள் விறைத்து நின்றன, மனம் படபடத்து சிலிர்த்தது. ஒற்றையடிப் பாதையில் இருந்து இறங்கி தான் குடியிருந்த அந்த குடியிருப்பு-சுவர்கள் வீழ்ந்து பாழ் அடைந்து கிடந்த- குடிலை நோக்கி திரும்பி இரண்டடி எடுத்து வைத்தாள் பொன்னி.

கும்...ம்...ம்.. "அம்மா...மா..." பொன்னி தூக்கி வீசப்பட்டாள்.

மிதிவெடி தன் வேலையைக் காட்டியது. கால் துண்டிக்கப்பட்டு இரத்தவெள்ளத்தில் கிடந்தாள்- தன்னிலை உணர்ந்தாள் பொன்னி.

நிச்சயமாய் யாரும் இங்குவரப் போவதில்லை, இரத்தம் ஓடியே இங்கு கிடந்து சாக வேண்டியதுதான். உயிருக்காக போராடத் தொடங்கினாள் பொன்னி.

தவண்டு தவண்டு கைகள் சோர்ந்தன. இரத்தம் சொட்டிய துண்டாடப்பட்ட கால் புற்களிலும், வயல் வரம்பிலும் உரசி, உரசி வலிகண்டது. மயக்கம் கண்களை செருகத்தொடங்கியது. இனித் தன்னால் போராட முடியாத நிலையை உணர்ந்தாள் பொன்னி. தலையை உயர்த்திப் பார்த்தாள். மங்கலாக எல்லா இடங்களும் ஆடியது. எதுவும் புரியாத நிலையில் கத்தினாள் பொன்னி, "ஐயோ...என்னைக் காப்பாத்துங்கோ...."

மூன்று நாட்களுக்குப் பின் உணர்வு திரும்பினாள் பொன்னி. ஞாபகம் வந்து கடவுளையெல்லாம் கூப்பிட்டுக்கொண்டிருந்த விசுவம் ஓடி வந்தான், பொன்னி நினைவு திரும்பியதைக் கேள்விப்பட்டு.

"ஏங்க நான் எங்க இருக்கன்?" பொன்னி கேட்டாள். "ஆஸ்பத்திரியில்தான் புள்ள.., கடவுள் நம்மள கைவிடல்ல புள்ள.., விறகு பொறுக்கவந்த ராசாத்தியக்கா பார்த்ததால தப்பின புள்ள. ஏன் புள்ள என்ன நடந்திச்சு?" விசுவம் அழுதான்.

"நம்ம இடத்த பார்க்கலாம் எண்டு போனேனுங்க"

"ஏம் புள்ள அங்க எதுக்குப் போனே? போகக்கூடான்னு தெரியுமில்ல?"

"போகனும் போல தோனிச்சுங்க அதான் போனேன். ஏங்க இப்படி ஒத்த காலோட இருக்கிறதக்காட்டிலும் சாவுறது மேல் என்னு தோணுதுங்க".

"அப்பிடி எல்லாம் சொல்லாத புள்ள, நீ உசிரோட இருந்தா அது போதும் புள்ள எனக்கு. கவலைப்படாம தூங்குபுள்ள. நான் போய் ஏதாச்சும் கொண்டாறன்".

"வேணாங்க எனக்கு ஒன்னும் வேணாங்க. காசுக்கு என்னங்க பண்றீங்க, ரொம்ப சிலவாச்சாங்க...?".

"சீச்..சீ.. அதொன்னும் பெரிசா சிலவாகல்ல புள்ள. முதலாளி வீட்டதான் கடன் வாங்கினான் புள்ள. உனக்கு என்ன திங்கனும் போல இருக்குன்னு சொல்லு புள்ள, நான் கொண்டாறன்.".

"ஐயோ.. எனக்கு ஒன்னும் வேணாங்க".

"காசப்பத்தி கவலப்படாத புள்ள, சொல்லு புள்ள, என்ன கொண்டரா".

"கோழிக்கறியோட சோறு திங்கனும் போல கிடக்குங்க.".

"சரி நீ தூங்கு புள்ள நான் கொண்டாறன்."

வைத்தியசாலையில் இருந்து புறப்பட்ட விசுவத்தின் சிந்தனை இனி யாரிடம் கடன் பெறுவது என்பதில் தான் சுற்றி வந்தது. முதலாளியைத் தவிர வேறு யாரிடமும் பெற முடியாது. எண்ணம் எண்ணுவதுடன் நின்றது. கால் செயலில் காட்டியது.

"விசுவம் என்னால் இயன்றவரை உனக்கு உதவி செய்தாச்சு, இதுக்குமேல கேட்காதப்பா, என்னட்ட தாறதுக்கு காசு இல்லை. மனிசிட்ட கேட்டுப்பார். கன்னுக் குட்டி வாங்க காசு வைச்சிருந்தவள். விரும்பினா உன்ர கன்னுக்குட்டிய குடுத்துப்போட்டு காசு வாங்கிப் போ." முதலாளி நகர்ந்தார். முதலாளி தவிச்ச முயல் அடிப்பது புரிந்தது; ஆனாலும் வேறு வழி இருப்பதாக தெரியவில்லை விசுவத்துக்கு.

கன்று கைமாறியது. கோழிக்கறி அடுப்பில் கொதித்தது.

பொன்னிக்கு கோழிக்கறி சமைத்துக் கொடுத்த திருப்தியில் உறங்கிப் போனான் விசுவம். ஆனால் சின்னராசுவால் தூங்க முடியவில்லை. தந்தையைப் பார்க்கும் போது சின்னராசுவிற்கு ஆத்திரம்தான் வந்தது. ஆசை ஆசையாய் வளர்த்த கன்றை முதலாளியம்மாவுக்கு தாரைவார்த்ததை பொறுக்க முடியவில்லை. கன்று கதறி கதறி போகமறுத்து அடம் பிடித்ததும், ரோட்டில் விழுந்து படுத்ததும், அப்பா கயிற்றால் அடித்ததும் சின்னராசுவின் கண் முன் நிழலாடியது. 'பாவம் இப்ப என்ன செய்யுதோ' கவலைப்பட்டான் சின்னராசு. சாமக் கோழி கூவுவது கேட்டது. "இரவோட இரவா கன்னுக் குட்டிய அவுத்துட்டு வந்தா என்ன" தனக்கு தானே கேட்டுக் கொண்டான். செயலில் காட்டவும் முனைந்தான்.

முதலாளி வீட்டு படலையில் இரும்புப் பூட்டு உள் பக்கமாய் தொங்கியது. உள்ளே போக முடியும். ஆனால் கன்றுடன் திரும்புவது கஷ்டம். தனக்குள் நினைத்தபடி படலையில் கால் வைத்து ஏறி உட்புறம் குதித்தான் சின்னராசு. சின்னராசுவைக் கண்ட 'விசாலாச்சி' துள்ளிக் குதித்து தன் மகிழ்ச்சியை தெரிவித்தது.

கன்றை அவிழ்த்த சின்னராசு கன்றை இழுத்துக்கொண்டு காட்டுப் பக்க வேலிக்கு ஓடினான். வேலியை நெருங்கியதும் கன்று மிரண்டது. போக மறுத்தது. எவ்வளவு இழுத்தும் கன்று நகர மறுத்தது. கன்றின் பின்புறமாக கன்றை தள்ளி நகர்த்த முயன்றான் சின்னராசு. திடீர் என்று பறித்துக் கொண்டு வேலியை நோக்கிப் பாய்ந்தது 'விசாலாச்சி' பாய்ந்த வேகத்தில் அலறியது. மின்சாரக் கம்பிகளுக்கு இடையில் தீப்பொறி பெரும் வெளிச்சத்தை ஏற்படுத்தி இருந்தது. கன்று துடிதுடித்து இறந்தது. எஜமானை காப்பாற்றிய திருப்தி அதற்கு. ●



# புதிய தபால்காரன்




**நான்** க.பொ.த. (உ/த)வில் சித்தியடைந்தேன். என் திறமைக்கு ஏற்ற தொழில் எங்குமே கிடைக்கவில்லை. என் கல்வி விதை விழுந்த இடத்தைப் பார்த்துவிட்டு எல்லோரும் பல கனவு கண்டனர். என்னோடு படித்த என்னைவிட திறமை குறைந்தவர்கள் பெரிய இடங்களில் தொழில் செய்கின்றார்கள். ஆனால்..... நான்... இன்னும்....

விரக்தி என்னை நுகர்ந்ததால் நான் பேனா ஆயுதம் ஏந்தினேன். வெள்ளைத் தாளில் நின்று போராடினேன். என்மன வெடிப்பையும் ஆதங்கத்தையும் கவிதையாக... சிறுகதையாக....நாடகமாகப் பிளந்தேன். எனது சுயரூபமே அல்ல இது. இயலாமையின் கொதிப்புத்தான் அது. என் ஆக்கங்களை படித்துவிட்டு இரசிகர்களின் அன்புத்தொல்லை அதிகரித்தது. தினமும் ஐந்து ஆறு கடிதங்கள் இரசிகர்களின் முகவரிகளைச் சுமந்து என் முகவரிக்கு வரும். கடிதங்களை வாசிப்பதும், பதில் கடிதம் போடுவதும் என் தொழிலானது. சுருக்கமாகச் சொன்னால், இலக்கியம் என் பொழுது போக்கில்லை; தொழில். இதில் ஓர் அற்புதம் எனக்கு.

நிலவானும்,நிலவும்,கடலும்,காற்றும்...அந்த ஒற்றைப் பனை மரமும் இலக்கியத்தை என் தொழிலாக அங்கீகரித்தன. ஆனால்.... அமைவனதினைவாய்- சாக்கடை நுளம்பாய், இரண்டாம் தரப்பிரஜையாய் நான் வாழும் உரசியது. ஊரின் வாயில் நான் பல்லாக்குப் போனேன். இலக்கியம் சோறு போடுமா என்றது ஊர்.

"அவனுக்கு பைத்தியம்தான் பிடிச்சிரிக்கி" என்று என் நிம்மதி குட்டையைக் குழப்ப குண்டு போட்டனர். சமூகப் பழியால் என்னைவிட தாயே அதிகம் பாதிக்கப்பட்டாள். "டேய்.. இது எல்லாவற்றையும் விட்டு விட்டு எப்படியாவது நாலு காசு சம்பாதிடா." என்றவாறே கைக்குட்டை கண்ணீரை என்னை நோக்கி வீசினாள். நான் அதில் வெடித்துச் சிதறிப் போனேன்.

திடீரென்று எனது ஊரில் ஏற்பட்ட அனர்த்தத்தால் தமிழ் பிரதேசத்துக்குள் முஸ்லிம்களும், முஸ்லிம் பிரதேசத்துக்குள் தமிழரும் செல்ல முடியாதநிலை உண்டானது. எனது பகுதிக்கு ஒரு தமிழரே தபால்காரராக இருந்ததால், எமது பகுதிக்கு வந்துபோவதற்கு பயந்த எமது பகுதியில் உள்ள எவருக்கும் அவர் கடிதம் கொண்டு வந்து கொடுக்கவில்லை.

மற்றவர்களின் துடிப்பின் அடர்த்தி எனக்குத் தெரியாது. எனக்கு மூளைக்குள் நடைமுறையில் வந்து வெடித்த சோகம். இரசிகர்களின் கடிதத்தை வாசிக்காமல் இருக்கமுடியவில்லை.

என்னோடு போய் கடிதத்தை வாங்கிக் கொண்டு வருவதற்கு, நண்பர்களைக் கூப்பிட்டேன். அவர்கள் பயந்து மறுத்து விட்டார்கள். என்தொழில் அழிந்து விட்டதாக ஒரு பிரமை. வேறுவழியின்றி நான்மட்டும் தபால் கந்தோருக்குப் போனேன். என்னைக் கண்டதும் எனது ஊர் தபால்காரர் என் கையிலே கடிதக்குவியல் ஒன்றைத்தந்தார். அத்தனையும் என் இரசிகர்களிடமிருந்து எனக்கு வந்தவை.

எண்ணிப்பார்த்தேன். அறுபத்தியாறு கடிதங்கள். இரண்டு வாரங்களாக வராமல் தேங்கிக்கிடந்த கடிதங்கள்தான் அவை. அவற்றை எடுத்துக்கொண்டு என் ஒற்றைப் பனைமர கந்தோருக்கு போவதற்காக நான் திரும்பும்போது. மீண்டும் என்னை தபால்காரர் கூப்பிட்டார். எனது பக்கத்து வீட்டில் நாகுரும்மா.. என்ற கிழவியிருக்கிறாள். இந்தக் கடிதத்தை அவளிடம் கொடுக்குமாறு கூறி என்னிடம் அக்கடிதத்தைத் தந்தார்.

நாகுரும்மாக் கிழவியின் மகன் வெளிநாட்டில் வேலை செய்கிறான். அவன் தான் அக்கடிதத்தை அனுப்பி இருந்தான். நேற்று அவள் என்னிடம் மகனின் கடிதம் இன்னும் வரவில்லையே என்று அழுதாள்.

நேரத்தைப் பார்த்தேன்- பகல் பன்னிரண்டு மணி. அக்கடிதத்தை கிழவியிடம் கொடுத்துவிட்டு என் அந்த ஒற்றைப் பனைமர கந்தோருக்கு போவோம் என்று நினைத்துக்கொண்டு, எனக்கு வந்த அந்த அறுபத்தியாறு கடிதங்களோடு கிழவியின் கடிதத்தையும் வைத்துக்கொண்டு கிழவியின் வீட்டை நோக்கி துவிச்சக்கர வண்டியிலே சென்றேன்.

உள்ளே போவதற்கு நேரம் போதாததால். வீதியிலே நின்றவாறு துவிச்சக்கர வண்டியின் பெல்லை அடித்தேன். பெல் சத்தம் கேட்டதும் பாட்டி ஓடிவந்தாள். நான் அவளுக்குரிய கடிதத்தை அவளிடம் நீட்டினேன்.

கடிதத்தை வாங்கும்போது என்னை இனங்கண்டு விட்டாள். வாங்கும்போது மற்றக்கையை ஊன்றி அவதானித்தாள். அதில் கடிதக்குவியல் இருந்தது.

"எப்ப மகன் உனக்கு பியோன (தபால்காரன்) வேலை கிடைத்தது..? நீ படித்த படிப்புக்கு உனக்கு ஒரு வேலையும் கிடைக்க வில்லை என்று உன் அம்மா அழுத அழுவைக்கி... உனக்கு பியோன் வேலை கிடைத்து விட்டது பார்த்தாயா..?" அவள் அடுக்கிக்கொண்டே போனாள்.

நான் அதிர்ந்து போய் சிலையானேன்.




**ஜன்ஸி கபூர்-அநுராதபுரம்**

கூடிகார முட்கள் நான்கைத் தஞ்சமடைந்தபோதுதான், எனக்குள் அச்ச விபரீதம் விசுர்க்க ஆரம்பித்தது. இன்னும் பஸ்ஸைக் காணவில்லை. இன்று பஸ் வராவிட்டால்.... கற்பனை சிறகை விரித்தது. இரவு தங்கி நிற்பதற்கு "பாஸ்" எடுக்க வேண்டும். ஏதாவது அசம்பாவிதம் நடந்து விட்டால், 'ஊருக்குப் புதியவன்' என்ற ரீதியில் பல விசாரணைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடும். சுதந்திரமற்ற மனித வாழ்வை யுத்தம் விதைத்து விட்டதால் ஒவ்வொருவரும் அனுபவிக்கிற வேதனைகளும், சோகங்களும்....!

முன்பெல்லாம் மனிதன் தனது ஆறறிவால் நிறைவேற்றப்பட்ட சாதனைகளை எண்ணிப் பெருமைப்பட்டது உண்டு. ஆனால் இன்று..? ஐந்தறிவை விட வேலைமாட, குருதி நனைய, சதை கிழிய, கண்காட்சி பொருளாக... ஓ! உத்தரவாதமில்லாத உயிருக்காக தினமும் போராட வேண்டியிருக்கிறது! வீட்டை விட்டு வீதிக்கு வந்தாலே மரண பயம் குரல் வளையை நெருக்குது. இந்த நிம்மதியற்ற வாழ்க்கையை எத்தனை நாள்தான் வாழ்வதோ?

யதார்த்த சூழ்நிலையால் எழுந்த சிந்தனைக்கு சற்று ஓய்வைக் கொடுத்துவிட்டு மீண்டும் பஸ்தரிப்பை நோக்குகிறேன். நீண்ட கியூ! வவுனியாவிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் போக காத்திருக்கும் அந்தக் கியூவுக்குள் அடங்காமல், பஸ் வரும் வரை அங்குமிங்குமான புத்தகசாலைகளுக்குள் நுழைகிறேன். பல நாவல்கள் சிரித்தன.

முன்பென்றால் சாப்பிடாமல் கூட கதை வாசிப்பேன். ஆனால்இப்போது யுத்தம் சிந்தனையை மாற்றிவிட்டது. முற்றுப்பெறாத அகதி வாழ்விலும், முடிவு புரியாத எதிர்காலத்திலும் மூழ்கித் தவிக்கும் நிலையில், ஏனோ பொழுது போக்கு அம்சங்களை நாட மனம் மறுக்கிறது. இது கூட ஒரு வகையில் விரக்திதான் போலும். நீண்ட நாட்களின் பின் பார்வைக்கு நாவல் தரிசனம். அவற்றை விழிகள் இலவசமாய் மேய்ந்தபோது. அந்த புத்தகத்தில் மனம் மொய்த்தது.

அது லீலா கிருஷ்ணனின், "அன்புள்ள ஆவி". கூடவே மலர்மதி ரீச்சரும் எனக்குள் சிரித்தாள்.

நானும், மலர்மதியும் தொழில் முறை நண்பர்கள். ஆண், பெண் எனும் வேலிகளை தகர்த்தெறிந்து விட்டு முழுமையான நண்பர்களாய் மாறி பல விடயங்களை விவாதிப்போம். சிரிப்போம். முறைப்போம். சினப்போம். அப்பப்பா சிறு பிள்ளைத் தனமான உணர்ச்சிகள். ஒரு நாள், 'அன்புள்ள ஆவி' எங்கள் விமர்சனத்துக்குட்பட்டது. மலர்மதி கொதித்தாள். "வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடத் தெரியாத கோழை அமுதினைக் கொல்லாம காதல் எதற்கு? காதலிப்பாங்க தடையேற்பட்டா தற்கொலையே காதலையும் சாகடிப்பாங்க. சகிக்க முடியல" அலுத்தாள்.

நானோ விடவில்லை. ஆண்பிள்ளையாச்சே!

"என்ன அப்படிச் சொல்றீங்க? காதலென்பது உணர்வு, மனம் ரெண்டையும் ஊடுருவக் கூடியதால, அடுத்த ஜென்மத்திலேயாவது ஜெயிப்போமென்று நினைக்கிறது தப்பா?"

"என்னவோ இந்த மறுபிறப்பெங்கிறது வெறும் டூப்"-அவள்

"இல்ல மலர், எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. போன ஜென்மத்தில நானும் நீங்களும் பாம்பும், கீரியுமா பொறந்திருக்கோமோ போல."

நான் கூறி முடிப்பதற்குள் கலீரென மலர்மதி சிரிக்க, அவளுடன் நானும் சேர்ந்து கொள்ள....இயற்கையும் சிரித்தது. என் இனிய மலர்மதியை யுத்தம் பிரித்தபோது நானும், அவளும் வெவ்வேறு துருவங்களானோம். ம்.... மலர்மதியின் நினைவுச் சுழியிலிருந்து என்னை யதார்த்த சூழ்நிலை சுய நினைவுக்குள் தள்ளுகிறது.

"ஐயோ.... பாம்" பெண் கதறல் ஒலியால், பஸ்தரிப்பு அலங்கோலப்படுகிறது- ஆரவாரப்படுகிறது. நானோ செய்வதறியாது திகைத்து நிற்கிறேன். முகம் வியர்க்கிறது. ஆண் பிள்ளை என்றால் பயப்படக்கூடாது என்ற போலி வேலியை சமூகம் விரித்திருக்கிறதே! காலில் ஆணி அடித்த உணர்வு. நகரவே முடியவில்லை. மௌனமாக மரண நாடி நெருங்குகிறதே!

"டமார்" எனும் சப்தம் காற்றலையில் ஒலித்தாலும், நிசப்தம்...? மெதுவாக கண் திறந்த போது, எல்லோர் முகத்திலும் எரிச்சல், வெட்கம் கலந்த பரபரப்புடன், 'பாம்' என்றலறிய பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

விசயம் இதுதானுங்கோ- பஸ்தரிப்பில் திடீரென பாம்பைக் கண்ட அப்பெண் அலறியிருக்கிறாள். பயத்தில் 'பு' எழுந்து வாய்க்குள் ஒளிந்து கொண்டதால் 'பாம்' ஆகி எல்லோரையும் நடுங்க வைத்துவிட்டது. எல்லாம் யுத்தத்தினால் வந்த வினைதான்!



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியநயம்

தருவது ரசிகன்

## நரகத்தால் வந்தவன்



அவள் கண்கள் காதுவரை விரிந்ததைப் பார்க்க பொய்யாமொழிக்கு ஆச்சரியம் வரவில்லை.

எல்லாமே வைரக்கற்கள். கண்களையே கூசவைக்கும் ஒளிமிகுந்த கற்கள்.

திரைகடல் ஓடி கொண்டுவந்த வைரங்கள்.

"எல்லாமே எனக்குத்தானா?" என்றாள்! அவள் மோகினி.

நாள் தோறும் அவளுக்கு ஒரு நாயகன் கிடைப்பான். அவள் தொழில் அப்படி.

மனதில் என்ன இருக்கிறது என்பதல்ல. மடியில் எவ்வளவு இருக்கிறது என்று மட்டும் பார்க்கும் தொழில்.

மடி கனமாக இருந்தால் மஞ்சம் சுகமாக விரியும்.

தருவதற்கு ஏற்ப கொடுக்கப்படும். கொடுக்கல்-வாங்கல்.

பொய்யாமொழி கொடுத்தது அதிகம். அதற்குப் பதிலாக மோகினி அவனுக்கு காட்டியது புதிய உலகம்.

இல்லம் என்ற ஒன்று இருப்பதையும், அங்கு தனக்காக ஒருத்தி தூங்காமல் இருப்பதையும் பொய்யாமொழி மறந்து போனான்.

இல்லத்தரசி தாம்பூலத்தை மடித்துத் தான் கொடுப்பாள்.

மோகினியோ தனது இதழ்களில் தாம்பூலத்தை எடுத்து ஈரப்படுத்திவிட்டு, இதழ்களால் ஊட்டி விடுவாள்.

"வெற்றிலைச் சாற்றில் தேன் கலந்தது போல் இருந்தது நீ தந்த போது!" கிறங்கிப் போவான்.

விளக்கை அணைத்தால்தான் இன்ப விளக்கம் என்று நிபந்தனை போடுவாள் அவன் இல்லத்தரசி.

விளக்கிருந்தால்தான் விளக்கம் கிடைக்கும் என்றால், "போதுமோ, மேலும் தூண்டவோ திரியை" என்று கேட்பாள் மோகினி.

ஒரு முத்தமிடவே முழு யுத்தம் புரிய வேண்டும் அவளோடு.

இவளோ, "எத்தனை வேண்டும்? விடியும் வரை போதுமா? விடிந்த பின்பும் வேண்டுமா?" என்று கொடுத்துக் கொண்டே கொக்கி போடுவாள்.

"முழுதாகப் பார்க்க வேண்டும். தடை வேண்டாம், உடை வேண்டாம், பிரமன் படைத்ததை இந்த பரமன் பார்க்கக் கூடாதா?" என்று கேட்டால், அனுமதி பெறுவதற்கு முன்னரே சமயத்தில் விடிந்துவிடும் அங்கே.

இங்கோ, "உனக்குத்தான் பூக்கடை. எடுத்துக்கொள். கோர்த்துக்கொள். நீயே ஆடையாக வந்து மூடிக்கொள்" என்று அழைப்புத்தான்.

பொய்யாமொழிக்கு இல்லத்தரசி கசந்து போனாள். மஞ்சத்தரசி மகிழ வைத்தாள்.

வைரங்கள், இரத்தினங்கள். முத்து மாலைகள், ஆடைக்குப் பதிலாக ஆபரணங்கள்.

கிடைக்க, கிடைக்க விழிகள் விரிந்தன. களிப்புக் கொடுத்து கணக்குத் தீர்த்தாள்.

தேடிய செல்வம் தேயத் தொடங்கியது. தினமும் இன்பத்தில் தோய்ந்தவன், தேய்மானக் கணக்கை பார்க்கத் தவறினான்.

"மோகினி வா நீ. தா உன் மேனி. இன்று ஏன் தாமதம் உனக்கு, தவிக்கிறது இந்தத் தேனீ!" என்றான்.

மோகினி திரும்பியும் பார்க்கவில்லை.

"கோபமா ராணி. மயிலிறகாய் ஒரு முத்தம் தரவா, கொஞ்சும் சுகத்தால் கோபத்தை குளிர்விக்கவா?" என்று கேட்டான்.

அதற்கும் பதில் இல்லை. எழுந்தான். நெருங்கித் தொட்டான். அணைத்துக் கொள்ள கைகளை விரித்தான்.

"வேண்டாம்."

"ஏன்?"

"நீங்கள் இங்கு வந்து ஒரு வாரம் உருண்டோடிவிட்டது."

"அதனால் என்ன? ஒரு வாரம் என்பது இன்பக் கடலில் ஒரு துளிதானே! ஒரு யுகமானாலும் தீராத மோகம் நெஞ்சின் உள்ளே இருப்பது மெய்தானே! வாடி மோகினி."

"தாயார் வேண்டாம் என்கிறார்கள்!"

முதல் முறையாக அதிர்ந்தான் பொய்யாமொழி.

"ஏனாம்?"

"மருதநாட்டு இளவரசர் நாளை வருகிறார் இங்கே!"

"ஏன் வருகிறார்?"

"என்னை வாங்குவதற்கு?"

"என்ன?!"

"இதிலென்ன ஆச்சரியம்! வசதி இருப்பவர் கரங்களில் தாவும் கிளிகள்தானே நாங்கள்!"

"நான் உன்னை உயிராய் நினைத்தேன். உறவாய் மதித்தேன்."

"நானா சொன்னேன். உங்களிடம் வைரம் இருந்தது. என்னிடம் வளம் இருந்தது. பண்டமாற்றுப் போல யாவும் நடந்தது. நன்றி, வணக்கம். வசதியிருந்தால் மீண்டும் வருக. இதுதானே நமது தொழில் மந்திரம்."

"இராட்சசியடி நீ!"

"உறவு இனித்தால் இன்பவல்லி, உறவு வேண்டாம் என்றால் இராட்சசி. நன்றாயிருக்கிறது உமது பேச்சு. நல்லது போய் வசதியிருந்தால் வாரும். இறுதியாக நீர் தந்த



வைரக்கற்கள் அத்தனை தரமானவை அல்லவாம். அடுத்த தடவை வருவதாக இருந்தால் வளமான வைரங்களோடு வருவது நல்லது."

இடிவிழுந்தவன் போலானான். எல்லாம் இழந்து இல்லம் திரும்பினான்.

கதவு திறந்தவள் விழிகளில் இரண்டு தீப்பந்தங்கள்.

"யார் நீர்?" என்றாள்.

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் உன்னவன்"

"என்னவன் என்று ஒருத்தன் இருந்தவன் எவளவனோ ஆகிவிட்டான்." என்றாள் உரமான குரலில்.

குலுங்கி அழத் தொடங்கினான்.

"அழும், நன்றாக அழும். நரகத்தில் உம்மை நீரே இட்டீர். அங்குதான் உழன்றீர். இது வீடு. நரகத்தில் இருந்து வருபவருக்கு கதவு திறக்காது. கருணையும் என் நெஞ்சில் பிறக்காது. கண்ணகி செய்த தவறால் நாடெங்கும் கோவலன்கள். போய்வாரும், நரகங்கள் நாட்டில் உண்டு. அங்கு உமக்கு ஓர் இடமும் உண்டு."

"மன்னித்துக் கொள்!"

"முன்னரும் மூன்று தடவை மன்னித்தேன். திருந்தட்டும் என்று இதயத்தை கல்லாக்கிப் பொறுத்திருந்தேன். பொறுப்பதுதான் பெண்ணிற்கு அழகு என்று நீர் நினைத்துக் கொண்டீர். போதும். போய்வாரும்."

கதவை அடைக்க முன்னர் இறுதியாகச் சொன்னாள்;

"விலைமகளிர் தோள்கள் மெல்லியவையாக இருக்கலாம். ஆனால் ஒழுக்கம் என்ற வரையறை இல்லாத தோள்கள் அவை. அதை உணராத கீழ் மக்கள் அந்த நரகத்தில் கிடப்பர். நீரும் கீழ் மக்களில் ஒருவனானீர்."

"வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாட்
பூரியர்கள் ஆழும் அளறு"

குறள்-919, அதிகாரம்-92

## குறுக்கெழுத்துப் போட்டி இல-135

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | | 3 |
| | ■ | 4 | | | | |
| 5 | 6 | | ■ | ■ | ■ | |
| | 7 | | | | ■ | |
| ■ | | ■ | 8 | | 9 | |
| 10 | | | | ■ | | ■ |
| | ■ | 11 | | | | ■ |

### இடமிருந்து வலம்

01. ஒவ்வொரு நாட்டிலும் பல சிறப்பான இவைகள் உள்ளன.
02. உலகில் சிறந்த உல்லாசக் கடற்கரை இங்குண்டு.
04. நமது பாட்டன்மாரின் திருமணத்திற்கு முன் இந்நகையைப் புனுவதை ஒரு விழாவாகக் கொண்டாடுவார்கள்.
05. சிறப்பான சவாரிக்கு இதைச் சீராகப் பிடிக்க வேண்டும்.
07. உண்பதற்கு உருசியாகவும் இருக்கும் இளைஞர்களின் முகத்தில் வளருவதற்கு இது கொடுத்தால் கம்பீரமாகவும் இருக்கும்.
08. கானகத்தில் மட்டுமல்ல, சில மனிதர்களிடத்திலும் இது மறைந்திருக்கும்.
10. உண்மையுடன் நேர்மையைக் கலந்து உழைப்பவனுக்கு வருமானத்துடன் நல்ல இதுவும் கிடைக்கும்.
11. நோய் காவுவதில் இதற்கு இணை வேறு எதுவுமில்லை.

### மேலிருந்து கீழ்

01. மகாபாரதத்தில் ஒரு பாத்திரம்.
02. இது இல்லாவிட்டால் இன்று எதுவும் இயங்காது.
06. இவர்க்குத் தாயென்றும் தாரமென்றும் பேதமில்லையாம்.
09. இதனைப் பட்டவர் நெஞ்சம் போல் கலங்கினானாம் இலங்கை வேந்தன்.
10. எந்த மருத்துவரும் எவருக்கும் இதனைச் சிபார்சு செய்வார்கள்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 20.01.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-135
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-133ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கோ | 2 வ | ல | ன் | ■ | 3 சோ | டா |
| வா | லி | ■ | ■ | 4 ச | ம் | ■ |
| ■ | மை | ■ | 5 த | ட் | ப | ம் |
| 6 அ | ■ | 7 தி | ரு | ட | ல் | ■ |
| 8 க | ல் | யா | ண | ம் | ■ | 9 பே |
| ந் | ■ | ன | ம் | ■ | 10 ப | ரி |
| 11 தை | ல | ம் | ■ | 12 உ | வ | கை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 133இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. சி. ராஜேந்திரன், பாமன்கடை.
2. எம். முஸம்மில், கலேவல.
3. ஆர். தாட்சாயினி, மடுல்சீமை.
4. செல்வி.பாத்திமா பர்ஸானா, புத்தளம்.
5. வி. ரஜீவ், இறக்குவானை.
6. எம். இம்தியாஸ், ஏறாவூர்-3.
7. பி. கஜேந்திரன், ராஜகிரிய.
8. செல்வி. ஏ. மஞ்சுளா, திருகோணமலை.
9. திருமதி. நஸீமா ஆப்தீன், கண்டி.
10. எம். காசிம், பாணந்துறை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள்

**★ டியர் சிந்தியா! வாழ்க்கையில் யாருக்காவது அன்பு காட்டி துன்பப்பட்டதுண்டா?**

ஜொஹாரா ஹுஸைன், தியத்தலாவ.

அகம் அறியாமல் அன்பு காட்டுவது கூடாது என்று ஒரு பொலிஸி இருப்பதால் மனச் சேதங்கள் குறைவுதான்.

**★ முரளிதரன் மீதான குற்றச்சாட்டு அபாண்டம் அல்லவா?**

ஏ. வேணுகோபால், கண்டி.



அப்படித்தான் தெரிகிறது. எனினும் முரளிதரனின் பந்து வீச்சை குளோசப்பில் பார்க்கும்போது ஒரு சந்தேகப் பொறி தட்டத்தான் செய்கிறது என்பது சிலரது வாதம். முடிவு சர்வதேச கிரிக்கெட் சபையின் கையில்தான் இருக்கிறது. முரளியை இழப்பது இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு பேரிழப்பு.

**★ ரஜினிகாந்த் அரசியலுக்கு வரமாட்டார் போல் இருக்கிறதே?**

வி. கஜேந்திரன், கொழும்பு-5

இறுதியாக சென்றவாரம் விடுத்திருக்கிறார் ஒரு அறிக்கை: "இப்போது என்னை அரசியலுக்கு இழுக்காதீர்கள்" என்று தற்காலிக கும்பிடு போட்டுவிட்டார். 'இப்போது இழுக்காதீர்கள்' என்பதில், எப்போதும் வரமாட்டார் என்று முடிவு செய்து விடக் கூடாது என்ற அறிகுறியும் தெரிகிறது.

**★ குஷ்பு, நக்மா, ரோஜா, வினிதா இவர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்?**

க. சுதர்சன், செங்கலடி.

பின்னவர்கள் மூவருக்கும் ஆடை குறைந்தால்தான் அழகு. முன்னவர் ஆடையிலும் அழகு. குஷ்பு குஷ்புதான். இல்லாவிட்டால் கோவில் கட்டியிருப்பார்களா என்ன!

**★ சிந்தியா! ஏன் நன்றிக்கு மட்டும் நாயை ஒப்பிடுகிறார்கள்?**

ஜிப்ரி, அக்கரைப்பற்று-06

அந்த விடயத்தில் ஒப்பிட மட்டும் மனிதர்கள் தட்டுப்பாடாக இருப்பதால்!

**★ அதிகாரப் பரவல் நடைமுறைக்கு வருமா?**

என்.இந்திராநேரு, நீர்கொழும்பு.

வைத்திருப்பவர்கள் வழங்க முன் வந்தால் மட்டும்....!

**★ டியர் சிந்தியா! பொறுமைக்கு எல்லை உண்டாம். அந்த எல்லை எதுவரை?**

நபீஸா காதர், அநுராதபுரம்.

பொறுமைசாலிகள் பொட்டுப் பூச்சிகளாக நினைத்து மிதிக்கப்படுவதுதான் எல்லையாக இருக்கவேண்டும்.

**★ சமீபத்தில் உங்களைக் கவர்ந்த தமிழ் அல்லது இந்தி திரைப்படம் எது?**

எச்.எப். பஸ்லியா, திருக்கோணமலை.

என்னைக் கவர்ந்தது என்று சொல்லுமளவுக்கு சமீபத்தில் எதுவுமில்லை. என் நேரத்தை கவர்ந்தவை என்றால் ஒரு பட்டியலே இருக்கிறது.

**★ மூன்று நாள் காதலித்து மூன்றாம் நாள் இருவரும் ஓடிப்போய் விட்டார்கள். இது எவ்வாறான காதல்?**

ஜெ.ஜெகதீஸ்வரி, திருக்கோணமலை.

அண்ணலும் நோக்க அவளும் நோக்கிய காவியக் காதல் மலர்ந்தது ஒரு நொடிக்கும் குறைவான நேரத்தில்தானே! அதனோடு ஒப்பிடும்போது மூன்றுநாள் பரவாயில்லை. ஆனாலும் இது அவசரக் காதல் என்பதில் ஐயமேயில்லை.

**★ மகாபாரதத்தில் கர்ணன் கொலையுண்ட முறை ஏற்க முடியாததல்லவா?**

வே.தினகர், கெலிவத்த.

முடியாது. ஏற்றுக் கொண்டால் எவரையும் எப்படி வேண்டுமானாலும் கொல்லலாம், வெற்றி மட்டும் கிடைத்தால் போதும் என்றாகிவிடும். மகாபாரதத்தில் கழிக்கப்பட வேண்டியவை பல உண்டு. அதில் அதுவும் ஒன்று.

**★ மனிதன் மனிதனாக வாழ என்ன செய்ய வேண்டும் சிந்தியா?**

ஏ.எச். ராஸின் மொகமட், ஏத்தாலை.

தன்னைவிட வேறு மனிதர்களே இல்லை என்று நினைப்பதை முதலில் துறக்க வேண்டும்.

**★ டியர் சிந்தியா! அரசியல்வாதிகளுக்கும், கோவில் பூசாரிமார்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

கே. முகுந்தன், அக்கரைப்பற்று-07

அரசியல்வாதிகள் கடவுளுக்கே தந்திரம் சொல்லிக் கொடுப்பவர்கள். பூசாரிமார்கள் மந்திரம் மட்டும்தான் சொல்லிக் கொடுப்பார்கள்.

**★ இலங்கைத் தமிழர் பிரச்சனை தமிழக பத்திரிகைகளில் மீண்டும் முக்கியத்துவம் பெற்று வருகிறதே?**

எம்.ராஜேஸ், பதுளை.

அனுதாபமும் உண்டு. கிண்டலும் உண்டு. சமீபத்தில் குமுதம் சஞ்சிகையில் ஒரு ஜோக்:

"மன்னா! எதிரி நாட்டுப் படைகள் வந்துவிட்டன. என்ன செய்வது?"

"மக்களை ஊரைவிட்டு காலி செய்யச் சொல்லி, என்னைப் பாதுகாப்பாக எங்காவது அழைத்துச் செல்லுங்கள்."

**★ நடிகர் சரத்குமார் அரசியலில் குதித்து விட்டாரா?**

கே. சுரேந்தர், புத்தளம்.

ரஜினியைவிட வேகமாக ஜெயாவை சாடி வருகிறார். வேகத்தைப் பார்த்தால் நல்ல புளியங்கொம்பாக பார்த்து பிடித்து விடுவார் போலத்தான் தெரிகிறது.

**★ காதலின் பின் திருமணம், திருமணத்தின் பின் காதல், இரண்டிலும் சுவைமிக்கது?**

வே.யோகன், கல்பிட்டி.

காதலித்து கைப்பிடித்துக்கொண்ட பின்னரும் காதல் தொடரக்கூடாது என்று விதி ஒன்றும் இல்லை யோகன். ஆகவே உமது கேள்வியே தப்பு.

**★ தினமுரசுக்கு தற்பெருமை என்று சொல்கிறார்களே?**

செல்வி நஜிமா அஹமட், கல்முனை-04

நியாயமான தற்பெருமை இருக்கலாம்-தவறில்லை. தாழ்வு மனப்பான்மைதான் தவறு. நீங்கள் அழகாக இல்லை என்று நீங்களே நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது நஜிமா. அதுதான் தாழ்வு மனப்பான்மை.

**★ ஆயுதம் போட்ட விமானத்தில் சென்ற முக்கிய புள்ளி எப்படித் தப்பினார்?**

வி.சிவசேகர், பலாங்கொடை.

தப்பியவரின் சாமர்த்தியத்தை பாராட்டலாம்: அந்த செய்தி உண்மையாக இருந்தால். ஒரு வேளை இந்தியா நாடக மாடினால்......? தப்பியது உண்மையானால் இந்தியா வெட்கப்படுவது தான் நியாயம்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம்

## அங்கம் 15

# இராமனை இளவரசனாக்க அரசனுக்கேனிந்த அவசரமோ......?

இராமனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டு வதற்கு அயோத்தியின் அரசவை ஏகோபித்த ஒப்புதலை வழங்கிவிட்டது. இதனால் தசரத மாமன்னர் பூரிப்படைந்தார். நாட்டு மக்கள் இராமன் மீது வைத்துள்ள பேரன்பு அவர் அறிந்ததே! அவனுடைய ஒழுக்கம், தர்மசிந்தனை, நீதிபரிபாலன முறைமை அத்தனையையும் அவன் குடிமக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கினையும் அவர் அறிவார்.

ஒருவர் எத்தகைய உத்தமராக இருந்த போதிலும் எவனாவது ஒருத்தன் அந்த உத்தமரிடத்திலும் ஏதாவது ஒரு குறையைக் கண்டு பிடித்துக் குற்றம் சாட்டுவான். அரசவையிலும் இராமனுக்கு எதிராக அவ்வாறு ஏதாவதொரு குறை கூறுவோர் இருக்கக் கூடும். அவன் எத்தகைய புரளி யைக் கிளப்புவானோ தெரியாது என்று மன்னர் மனதில் ஒரு மூலையில் ஒரு சோகரேகை படர்ந்திருந்தது. ஆனால் சபை யில் இராமனுக்கு எதிராக எவரும் தானும் எழவில்லை என்பதனைக் கண்ணுற்ற மாமன்னர் மனம் நிறைவு கண்டது.

உடனடியாகவே வசிட்ட மாமுனிவருக் கும் அரசவையின் ஏகோபித்த முடிவினைச் சொல்லி அனுப்பினார். அரசருக்கு நம்பிக் கையான தன் மெய்காப்பாளனான உபேந்திரனே அரசரின் தகவலுடன் முனி வரிடம் சென்றார். அத்துடன் தனது மூத்த மனைவியும் பட்ட மகிஷியும் இராமனின் அன்னையுமான கோசலா தேவியிடமும் சென்று மகன் இராமனுக்கு இளவரசுப் பட்டம் கட்டுவதற்கு அரசவை முடிவெடுத்து விட்டதை கூறுமாறும் உபேந்திரனிடம் கூறி அனுப்பினார் மன்னர்.

அமைத்தியன் சுமந்திரனை அழைத்த மன்னர் தசரதர், இராமனை தன்னிடம் அழைத்து வருமாறு சொல்லி அனுப்பினார். தந்தை தன்னை வருமாறு அழைத்ததும் அந்தப்புரத்திலிருந்த இராமன் உடனடியாக எழுந்து சுமந்திரனுடன் அரண்மனை சென்று தந்தையின் தாள் பணிந்தான். தன்னை நோக்கி தன் மகன் இராமன் வருவதைக் கண்ட தசரத மன்னர், தேவேந்திரனே தன்னிடம் வருவதாகக் கருதினார். முன்னெப் போதுமில்லாத வகையில் அவருள்ளம் குதூகலித்தது. சிறு குழந்தையைப் போல் காணப்பட்டார். தன் தாள் பணிந்திருந்த மகனைத் தூக்கி நிறுத்தி அணைத்து முத்த மாரி பொழிந்தார்.

தனது தந்தை புதிய உற்சாகத்துடன் காணப்பட்டமைக்கான காரணத்தை இராமன் அறிய மாட்டான். அழைத்து வரச் சென்ற சுமந்திரனிடமும் எதனையும் கேட்டறியவும் இராமன் முயற்சிக்கவில்லை. "தந்தை வரச் சொன்னார்" என்பது மட்டும் தான் இராமர் காதில் விழுந்தது. தாமதமில்லாமல் தந்தை யிடம் ஓடிச் சென்றார்.

### பட்டத்துக்குரியவன்

"மகனே இராமா! என் மூத்த மனைவி யின் மகன் நீ. எமது வம்ச வழக்கப்படி மன்னனின் மூத்த மகன் தான் பட்டத்துக் குரியவன்; எனக்கோ வயதாகிவிட்டது. என் உருவத்தை கண்ணாடியில் காணும்போது எனது தலையிலும் தாடியிலும் நரை முடிகள் அதிகரித்துவிட்டதை அவதானித்தேன். சூரிய வம்சத்தில் வழிவழிவந்த எனது மூதாதையர் கள் கட்டிக்காத்த இந்த இராச்சியபாரத்தை இன்று வரை தேவகிருபையால் சிறப்புறச் சுமந்து வந்தேன். இனிமேலும் இப்பாரத்தை என்னால் சுமக்க முடியாது. ஆகவே உனக்கு உடனடியாக இளவரசுப் பட்டத்தினை அளித்து விரைவில் அயோத்திமாநகரின் அரியணையில் உனை அமர்த்த முடிவெடுத் துவிட்டேன். அரசவையிலுள்ள அனைவரும் தங்கள் பூரண சம்மதத்தை அளித்துவிட்டார் கள். உன்னுடைய சம்மதத்தை அறியவே உனை அழைத்தேன். உன்னுடைய எண்ணம் என்னவோ அதனைக் கூறு வாயாக"

இவ்வாறு தசரத மன்னர் கூறி இராமனு டைய முகத்தைப் பார்த்தார். தன்னைக் காணவரும்போது இராமனுடைய முகம் எத்தகைய நிலையில் இருந்ததோ அத்தன்

## இராஜகுமாரன்

மையிலிருந்து அந்த முகம் எள்ளளவும் மாறுபடவில்லை என்பதைக் கண்டார். பட்டாபிஷேகம் என்றதும் இராமனுடைய முகத்தில் புத்தொளி பிறக்கும், மகிழ்ச்சிப் பெருவெள்ளம் பிரவகிக்கும் என்று மன்னர் எதிர்பார்த்தார்; ஏமாற்றமடைந்தார். சிறிதள வேனும் மாற்றம் காணப்படவில்லை என்ப தனால் மன்னருக்கு ஐயம் உண்டாயிற்று.

"தந்தையே! தங்களுக்கு எது நல்லது என்று படுகிறதோ, அதனைச் செய்யுங்கள். தங்கள் கட்டளையைச் சிரமேற் கொண்டு பணிந்து நடப்பதே என் கடமை" என்று மிகவும் அடக்கத்துடன் சொன்னார் இராமர்.

"சரிமகனே! இளவரசுப்பட்டமளிப்பு விழாவினை சீக்கிரமே நடத்துவதற்கு எண்ணுகிறேன். நீ அந்தப்புரம் சென்று அம்மா, சீதை முதலானோருடன் இரு.



வசிட்ட மகரிஷிக்கும் செய்தி அனுப்பியுள் ளேன். அவர் வந்ததும் உரிய சுபமுகூர்த் தத்தை நிச்சயித்து விட்டு சொல்லி அனுப்புகிறேன்" என்று கூறி மகனை அனுப்பிவிட்டு, விபரிக்க முடியாத மனோ நிலையுடன் அரண்மனையில் முன்னும் பின்னும் உலாவிய வண்ணம் இருந்தார் மன்னர். கட்டுக் கடங்காத குதிரை போல் அவருடைய சிந்தனை சீறிப்பாய்ந்து கொண்டிருந்தது.

### சிந்தையிலேற்பட்ட சலனங்கள்

தசரதர் அயோத்தியாபுரியின் அரிய ணையில் ஏறுவதற்கு முன்னரே கோசலை (கௌசல்யா) என்ற அழகிய இளவரசியை மணம் முடித்தார். பல்லாண்டுகள் கோசலை யுடன் வாழ்ந்தும் குழந்தைச் செல்வம் கிட்ட வில்லை. இதனால் சுமத்திரை என்ற மற்றோர் நாட்டு இளவரசியையும் மணந்து கொண்டார். ஆண்டுகள் பல உருண்டோடி யும் பிள்ளைப் பேறின்மையால் இறுதியாக கேகய நாட்டு இளவரசியான கைகேயியைக் கரம் பிடித்தார். கைகேயியைத் திருமணம் முடிக்கும்போது அவளுடைய தந்தை கேகயநாட்டு மன்னருக்கு ஒரு வாக்குறுதியை தசரத மன்னர் தந்திருந்தார். அயோத்தியா புரியை தசரதமன்னருக்குப் பின்னர் கைகேயி யின் வயிற்றுப் பிள்ளையே அரசாளும் உரிமை பெற வேண்டும் என்பதுதான் அந்த வாக்குறுதி.

மூன்று அரசிகளுக்கும் குழந்தைப் பாக்கியம் கிட்டவில்லை. புத்திரகாமேட்டி யாகம் நடைபெற்று, தேவ பாயாசம் பிரசாதமாகப் பெறப்பட்டு அதன் மூலமே மூன்று அரசிகளும் ஏககாலத்தில் கருவுற்று நான்கு அரசகுமாரர்கள் பிறந்தனர். மூத்த மனைவியான கோசலை இராமனையும் அடுத்தவளான சுமித்திரை இலக்குவனை யும் சத்துருக்கனையும் ஈன்றெடுத்தாள். இளையவளான கைகேயி பரதனைப் பெற்றாள்.

நான்கு குழந்தைகளும் ஒரே வயிற்றுப் பிள்ளைகள் போல் மிகவும் ஐக்கியமாக வளர்ந்து வந்தனர். சாதாரணமாக பல தார மணம் புரிந்த ஒருவருக்கு ஏற்படும் சிக்கல் மூன்று மனைவிகளையும் மணந்த தசரதருக் கும் ஏற்படவே செய்தது. இளையவளான கைகேயி வயதிலும் மிகவும் இளையவள். அத்துடன் ஏனைய இருவரையும் விட அழகிலும் சிறந்து விளங்கினாள். இதனால் தசரத மன்னரின் ஆசைக்குரியவளாக அவள் ஆகிவிட்டாள். கோசலையும் சுமத்திரையும் தங்களுக்குள் ஓரளவு ஒத்துப் போகக் கூடியவர்களாக இருந்தபோதிலும் கைகேயி அவர்களிடமிருந்து சற்று ஒதுங்கியே இருப்பாள். தசரதர் தன்னிடமே அதிக பிரியமுடையவராக இருக்கிறார் என்பதனால் அவளுக்குக் கொஞ்சம் கர்வமும் தலை யெடுக்க ஆரம்பித்திருந்தது. இதன் காரண மாக மூத்த அரசிகளுக்குப் போதுமான மதிப்பளிப்பதில் தயக்கம் காட்டலானாள். அத்துடன் அரசியல் விவ காரங்கள் எதிலும் அறிவும் இல்லை; அக்கறை காட்டுவது மில்லை.

எவ்வாறிருப்பினும் அரசகுமாரர்கள் நால்வரிடத்திலும் மூன்று அன்னையரும் பிரியம் காட்டுவதில் எக்குறைபாடும் இருக்க வில்லை. கைகேயி இராமனிடத்தில் அதிக அன்பு கொண்டிருந்தாள். அதேபோல் சிறிய தாயாராகிய கைகேயி மீது இராமனும் அதிக பாசம் கொண்டவனாகக் காணப் பட்டான்.

இராமனுக்கு இளவரசுப்பட்டம் கட்ட வேண்டும் என்ற முடிவெடுத்த பின்னர், தசரதச்சக்கரவர்த்திக்கு பலதரப்பட்ட எண் ணக் கொந்தளிப்புகள் ஏற்பட்டன என் பதனைக் குறிப்பிட்டோமல்லவா? கைகேயி யின் சுபாவம் அப்போது தசரதரின் சிந்தனை களில் புகுந்து அவரைக் குடைய ஆரம்பித்தது. அவளைக் கரம் பிடிக்கும்போது அவளுடைய தந்தையான கேகய நாட்டு மன்னருக்குக் கொடுத்த வாக்குறுதி பற்றியும் சிந்திக்கலா னார். இராம ருக்கு இளவரசுப் பட்டம் வழங்குவதற்கு கேகய நாட்டிலிருந்து ஆட் சேபக் குரல் எழக் கூடுமோ என்ற கவலையும் மன்னரை ஆட்கொண்டது. ஆகவே இராம ருக்கு இளவரசுப்பட்டம் சூட்டும் விழா வினைத் துரிதமாக நடத்த வேண்டும் என்றும் துணிந் தார்.

வசிட்ட மாமுனிவர் அப்போது அங்கு வந்து சேர்ந்தார். உபேந்திரன் மூலமாக முனிவர், மன்னர் அழைத்த காரணத்தை அறிந்து அகமும் முகமும் மலர அங்கு வந்து சேர்ந்தார். தன்னைப் போலவே மன்னரும் மகிழ்ச்சிக் கடலிலாடியவண்ணமிருப் பார் என்றுதான் முனிவர் நினைத்து வந்தார். மன்னரைக் கண்டதும் முனிவர் திகைப் புற்றார். மன்னர் கலவரக்கடலில் மூழ்கியவரா கக் காணப்பட்டார். முனிவரை தகுந்த முறையில் வரவேற்று ஆசனமளித்து அமரச்செய்த அரசர், "மாமுனிவரே! எனது மூத்தமகன் இராச்சந்திரனுக்கு யுவராஜப் பட்டம் சூட்ட முடிவெடுத்தேன்; அவையி னரும் அமைச்சர்களும் பிரதானிகளும் முழு மனதுடன் என் கருத்தினை ஆமோதித்து விட்டனர்.

"இன்றுள்ள நிலையில் எனக்கே தடுமாற்றங்கள் ஏற்படு கின்றன. கெட்ட கனவு களைக் கூடக் காண நேர்ந்தது. தாமதிக் காமல் இராச்சிய பாரத்தை இராமனிடம் ஒப் படைக்க வேண்டும். இது சித்திரை மாதம்; வசந்த ருது; எங்கும் புத்தம் புது மலர்கள் பூத்துக் குலுங்கி உவகையூட்டும் காலம். ஆகவே, நாளைக் காலை உதயத்தின் போதே இராமனுக்கு இள வரசுப்பட்டம் சூட்ட முடியுமா? அதற்கான சுபவேளை இருக் கிறதா? தயவுசெய்து உடன் கணித்துக் கூறுங்கள்" என்று மன்னன் அவசரமும் அங்க லாய்ப்பும் நிறைந்த குரலில் கூறினான்.

### வீணாகிப்போன வசிட்டரின் அறிவுரைகள்

மிகக் குறுகிய காலத்தில் மனக்கணக்கைப் போட்டே, அடுத்தநாளே சுபவேளை இருக் கிறது என்பதனை முனிவர் கூறினார். இருப்பினும் அந்தச் சுபவேளையில் பல இடையூறு களும் ஏற்பட இடமுண்டு என்றும் சூசகமாக முனிவர் மன்னரிடம் எடுத்துரைத்தார்.

"சிறிதுகாலம் தள்ளிப் போட்டு, வேற்று நாட்டு அரசர்கள், அயோத்திக்குக் கப்பம் கட்டும் குறு நில மன்னர்கள் ஆகியோருக்கும் அழைப்போலை அனுப்பி மிகச்சிறப்பாக விழாவினை நடத்தலாமே" என்று முனிவர் கூறிய அலோசனையினை தசரத மன்னர் ஏற்பதாயில்லை. எது எவ்வாறாயினும் அடுத்த நாள் உதயத்தின் போது இராமனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டிவிட வேண்டும் என்று மன்னர் திடமாகவிருந்தார்.

இராமருக்கு இளவரசுப்பட்டம் கட்டுவது பற்றி தன்னிடம் ஏற்கனவே வந்து அபிப் பிராயம் கேட்ட போது இருந்த தசரதரின் மனோநிலை வேறு என்பதனையும் மிகத்துரித மாக அக்கைங்கர்யத்தை முடித்துவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த தசரதரின் நிலையினையும் முனிவர் ஒப் பிட்டுப் பார்த்தார். மாபெரும் தவோ வலிமை யுடையவரல்லவா? தசரதரின் அவசரத்துக் கான காரணத்தை அறிந்து புன்முறுவல் பூத்தார். எதிர்கால விளைவுகளையும் உணர்ந்து கொண்டு மன்னனிட்ட பணியினை மறுப்புக்கூறாது நடாத்துவதற்குச் சித்த மானார் அவர்.

அடுத்த நாள் உதயத்தின் போதே யுவராஜப்பட்டம் சூட்டுவதானால் அதற்குரிய ஆயத்தப்பணிகள் எவ்வளவோ கிடக்கின்றன. சாத்திரரீதியாக சம்பிரதாயச் சடங்குகள் யாவும் முறைப்படி செய்ய வேண்டியிருப் பதனால் அவற்றுக்கான சகல ஏற்பாடுகளை யும் முன்னின்று நடாத்துமாறு அர்சர் மாமுனி வரிடம் கேட்டுக்கொண்டார். முக்கியமான பணிகள் முடிவடைந்ததும் இராமனிடம் சென்று நோன்பு நோற்கும் முறையினைக்கூறி அதற்கான சங்கற்பத்தினைச் செய்து வைக்கும் படியும் மன்னர் முனிவரிடம் வேண்டிக் கொண்டார்.

முனிவர் அப்பாற் சென்றதும் சுமந் திரரை அழைத்து மீண்டும் இராமனை அழைத்து வரும்படி சொன்னார். அப்போது தான் இராமர் தனது தாயாரான கோசலை யின் அந்தப்புரம் சென்றிருந்தார். சீதையும் சுமித்திரையும் இலக்குவனும் கூட அங்கிருந் தனர். இதற்கிடையில் இராமருக்கு இளவரசப் பட்டம் சூட்டுவதற்கு அவையினர் அளித்த ஒப்புதல் பற்றிய தகவல் அங்கு பரவி விட்டது. அந்தப்புரம் மற்றும் அரண்மனை மட்டுமல்ல, அயோத்தி மாநகரெங்கும் அந்த நற்செய்தி காட்டுத் தீபோல் பரவிக் கொண்டது.

### மன்னர் விடுத்த மறு அழைப்பு

இராமன் தன் தாயின் அருகில் சென்று அவர்தாள் பணிந்து ஆசி பெறும் அதே வேளையில் அமைச்சர் சுமந்திரன் அங்கு வந்து சேர்ந்தார். அரசர் உடன் அழைத்து வருமாறு சுமந்திரன் கூறியதும் ஏனையோர் என்னவோ ஏதோ என்று எண்ணத்தலைப் பட்டனர். இராமர் எப்போதும் போல் 'ஏன்' என்று காரணம் கேட்காமல் சுமந்திரன் பின்செல்ல ஆயத்தமாகிவிட்டார். "அம்மா! மகாராஜா அழைத்துள்ளார். உடனே சென்று அவரைப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.

இராமனை மீண்டும் கண்ட தசரதர் மகனை அணைத்து உச்சி மோந்தார். "மகனே! என் மனம் ஒரு நிலையில் இல்லை. யுவராஜ பட்டாபிஷேகத்தைப் பின் போட வேண்டியதில்லை. நாளைக்காலை உதயத்தின்போது நல்ல சுபமுகூர்த்தம் இருப்பதாக நமது குருநாதர் கூறுகிறார். ஆகவே உடனடியாகவே சீதையுடன் நீயும் விரதத்தை மேற்கொள்ள வேண்டும். இன்றிரவு நீங்கள் இருவரும் துறவிகளைப் போல் மரவுரிதரித்து, உபவாசமிருந்து தரை யில் படுத்துறங்க வேண்டும். குருநாதர் சற்று நேரத்தில் உன் இருப்பிடம் வருவார். நோன்பிற்கான சங்கற்பம் செய்து கொள். நாளை அதிகாலை கண்விழித்து நீராடி–உரிய சம்பிரதாயச் சடங்குகளுக்கு ஆயத்தமாகிவிட வேண்டும்" என்றார்.

இராமன் ஆறுதலாக தன் தந்தையின் வார்த்தைகளை மந்திரமாக ஏற்றுக் கொண் டான். உடனடியாக தனது இரதத்திலேறி கோசலையின் அந்தப்புரம் சென்றடைந்தான், தன் கணவன் அயோத்தி மாநகரின் ஈடிணை யற்ற அரியாசனத்தில் அமரும் நாள் அதிக தூரமில்லை என்று சீதை ஆனந்த வானில் மிதந்து கொண்டிருந்தாள். தன் வயிற்றி லுதித்தவன் அப்பெருவள நாட்டின் மாமன்ன னாக முடிசூடும் நாள் வந்து கொண்டிருக் கிறது என்ற பூரிப்பில் கோசலை மூழ்கிக் கிடந்தாள். தன் அன்புக்குரிய அண்ணன் அயோத்தியாபுரியின் அரசகட்டிலேறப் போகிறான் என்ற பெருமையில் உள்ளமெல் லாம் புளகாங்கிதமடைந்தவனாக இலக் குவன் நின்று கொண்டிருந்தான். இம்மூவரும் இன்பக் களிப்பில் மூழ்கிக்கிடக்கும் அதே வேளையில் இராமனுடைய இரதம் அந்தப்புர வாயிலை வந்தடைந்தது. ஓடிச்சென்ற இலக்குவன் தேரிலிருந்து இறங்கும் அண்ணனுக்குக் கை கொடுத்து தரையில் இறக்கிவிட்டான். ஒரு முறை அழைத்து இளவரசுப்பட்டம் பற்றிக் கூறியனுப்பிய மன்னர் இராமனை இரண்டாவது தடவை ஏன் அழைத்தாரோ என்று காரணம் தெரியாது தடுமாறி நின்ற தாயும் தாரமும் தம்பியும் இராமனுடைய முகத்தில் எதுவித மாற்றமும் காணாமல் வழமையான அதே சாந்தம் தவழ்வதைக் கண்டு திகைத்தனர்.

இன்பத்தைக் கண்டு அளவுக்கதிகமாக மகிழ்ச்சியில் மூழ்கி விடாத தன்மையும் துன்பத்தைக் கண்டு துவண்டு விடாத நெஞ்சமுமுடையவர்கள் மேன்மக்கள் என்று சான்றோர் பகர்கின்றனர். இன்பம் ஏற்படும் போது அளவு கடந்து அகமகிழ்வு கொள்ளா மலிருக்க பலரால் முடியும். ஆனால் துன்பத் தைச் சகிப்பது என்பது சிரமமான தொன்றே.

இராமன் இரதத்திலிருந்து இறங்கி மீண்டும் தன் தாயாரிடம் சென்று, அடுத்த நாளே பட்டாபிஷேகம் நடைபெறவிருப்பதாகக் கூறினார். தன் அன்புக்குரியவளை தன் ஓரக்கண் பார்வையினால் பார்த்து, அப்பார் வையிலேயே தகவலைப் பகிர்ந்து கொண் டாள். தம்பி இலக்குவனை அழைத்து "தம்பி நமது அயோத்தியாபுரி மிகவும் பெரிய நாடு. இதனை எமது தந்தையைப் போல் தனித்து நின்று பரிபாலனம் புரியும் ஆற்றல் எனக் கிருப்பதாகத் தெரியவில்லை. எனது வலது கரம் போல் உறுதுணையாக நீ இருந்து உதவ வேண்டும். அதே போல் எமது தம்பிமாரான பரதனும் சத்துருக்கனும் உறு துணை புரிவார்கள் என்றே நம்பு கிறேன்," என்று இராமர் கூறியதும் இலக்கு வன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஆறாகப் பெருகியது. சகோதரர்கள் இருவரும் உணர்ச் சிப்பிளம்பாக ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து நின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி இல—13

பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்

**சரியான விடை** ஊடலினால்

1. ச. ஊர்மிளாதேவி
   ஹெய்கித்த, வத்தளை.
2. உ. சந்திராதேவி
   கண்டி வீதி, கினிகத்ஹேன.
3. இ. கண்ணமுத்து.
   கிளிவெட்டி, மூதூர்.
4. இ. சம்சுதீன்
   சம்மாந்துறை.
5. ச. சகாதேவராசா, கல்லடி, மட்டக்களப்பு.

### இராமாயணப் போட்டி 15

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:–** தசரதன் மனைவிகளில் தனித்து விளங்கியவள் யார்?

ஜனவரி 20ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:14.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல— 1772
கொழும்பு.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (PRO/7/95)
www.padippakam.com




# இளமையில் கொல்!



ஆசைகளே துன்பங்களுக்கு காரணம் என்பது புத்தரின் வாக்கு. அது சரியா தவறா என்பது ஒரு புறமிருக்க, இளமையில் ஆசைகளை கொன்றுவிட்டு துறவிகளாக மாறும் திடம் வியப்பானதுதான். படத்தில் உள்ள சின்ன வயதுத் துறவிகள் தாய்லாந்தைச் சேர்ந்தவர்கள். பால் வடியும் வதனம். ஞானம் பெறும் உந்துதல் வயதைவிட மனதுக்கு முதிர்ச்சியை கொடுத்துவிட்டது. மதத்தை வைத்து மனங்களில் மதம் வளர்க்காமல் மக்களை பண்படுத்த நாளை இவர்கள் முயன்றால் சரிதான்.




# மொத்தமாய் எத்தனை?



படத்தில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பவை பொம்மைகள் அல்ல, உண்மையான டாங்கிகள். (முடிந்தால் பொறுமையாக எண்ணிப் பாருங்கள்.) இந்த டாங்கிகளையெல்லாம் சதக், சதக், டமார் டமார் என்று உடைத்து அழித்துவிட்டார்கள். காரணம் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்.

கிழக்கு ஜெர்மனும், மேற்கு ஜெர்மனும் இணைந்த பின்னர் இரு நாடுகளின் படைபலம் அசுரபலமாகி விட்டது. டாங்கிகளும் பல லட்சம். எனவே ஆயுதக் குறைப்புக்கு முன்மாதிரியாக பத்தாயிரத்தி ஐநூறு டாங்கிகளையும், 13 இலட்சம் துப்பாக்கிகளையும் அழித்து விட்டார்கள். அழிக்கப்பட நிறுத்தப்பட்ட டாங்கிகள்தான் படத்தில்.

# என்று திரும்புவது?



எந்தையும், தாயும் கொஞ்சிக் குலவிய பூமி இது என்று கூத்தாடுவது இனி எப்போது? வடபுலப் போர் துரத்திய மனிதர்களும் வேரோடு பிடுங்கப்பட்ட மரமும் ஒன்றுதான். ஆனால் சாய்ந்த மரம் நிமிராது. மக்கள் அப்படியல்ல. நம்பிக்கைகள் வேகம் தரும். உரம் தரும். மீண்டும் வாழ்வு வரும் என்று காத்திருக்கும் பலம் தரும்.

உணவும், மின்சாரமும் மட்டும் இடம் பெயர்ந்த மக்களை திருப்பி அழைக்கப் போதுமானவை என்று அரசு நினைப்பது தப்பாகப் போகிறது.

யாழ்ப்பாணத்தில் கொடி பறந்ததோடு எல்லாம் தீர்ந்துவிட்டது என்பது மாதிரி தெற்கில் ஒரு பகுதி மக்கள் நம்பலாம். ஆனால் இனித்தான் பிரச்சனையே ஆரம்பம்.

வெற்றி கண்களை மறைக்குமானால் சரியான அரசியல் தீர்வுதான் இறுதியானதும், உறுதியானதுமான சமாதானத்திற்கு உத்தரவாதம் என்பது அரசுக்கு மறந்து போகும்.

விளைவு: களங்கள் மாறும், காலம் முழுக்கப் போர் தொடரும்.




# ஆதரவு வேட்டை




யாழ்ப்பாணத்தில் படைத்தரப்பு கொடி ஏற்றிக்கொண்டிருந்த போது, வெளிநாடுகளில் புலிக்கொடிகள் உயர மாபெரும் ஊர்வலங்கள் வீதிகளை நிறைத்தன. (படத்தில் கனடா ஊர்வலம்)

அரசு போரை நிறுத்த வேண்டும். புலிகள் இயக்கத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் பிரதான கோரிக்கைகள்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களில் பாதிக்கும் மேலானவர்கள் புலிகளின் பின்னடைவு தமிழ் மக்களின் அரசியல் பலத்திற்கும் பலத்த அடியாகிவிடும் என்று நினைப்பது நூறுவீதமான உண்மை.

இத்தனை இழப்புக்கள் கொடுத்த பின்னரும் ஒரு நல்ல முடிவு ஏற்படாமல் போவதோ என்ற எண்ணமும் வெளி நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மத்தியில் புலிகளின் செல்வாக்கை உயர்த்தியுள்ளன.

# இப்போதும் ஹீரோதான்




17.1.1917.

மக்கள் திலகம் கருவறையில் இருந்து பூமிக்கு வந்தது அன்றுதான். தனது ஏழு வயது முதல் தாங்கிய துயரங்கள் அனைத்தையும் விடாமுயற்சியால் வெற்றி கொண்ட நாயகன்.

வாழ்க்கையை புரிந்து கொண்டது, சினிமாவைப் புரிந்து கொண்டது, மக்களைப் புரிந்து கொண்டது, மூன்றும்தான் அந்த மூன்றெழுத்து நாயகனை மக்கள் கடலின் ஹீரோவாக்கியது.

காலையில் எழுவது 4 மணி. உறங்குவது இரவு 12 மணி.

கட்டியணைத்து டூயட் பாட மட்டும்தான் தெரியும் என்றவர்களின் வாயை அடைத்து, தோல்வி காணாமல் ஆட்சிக் கட்டிலில் தொடர்ந்து இருந்து சாதனை படைத்தவர்.

எம்.ஜி.ஆர். தொடர்பாக பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும் யாவருக்கும் உடன்பாடானது: "எம்.ஜி.ஆர் ஒரு உண்மையான கதாநாயகன்."


படிப்பகம்

www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஜன.21-27,1996
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL
முரசு 137



# வடக்கில் பறந்த புலிகளின் விமானம் தலைநகருக்கு





## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## ஆபத்து

## கிரிக்கெட் சாதனைகள்

## பட்டுச்சேலைப் பரிசுத் திட்டம்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## உரியதைத் தரலாம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இலங்கை வானொலியில்
புதிய தமிழ் அலைவரிசை
ஆரம்பிக்கப்பட்டுள்ளதை வரவேற்கலாம்.

ஜனாதிபதியின் செய்திதான்
ஏமாற்றமளித்துவிட்டது.
பொங்கல் பரிசாக
புதிய அலைவரிசையை
தமிழ் மக்களுக்கு தந்துள்ளதாக
தெரிவித்துள்ளார் ஜனாதிபதி.

ஜனாதிபதியிடமிருந்து
எதிர்பார்த்த பொங்கல் பரிசு
அலைவரிசையல்ல;
அரசியல் தீர்வு!

அத்திவாரமே
ஆட்டம் காணும் போது
கட்டிடத்துக்கு
வர்ணக்கலர் பூசுவதுபோல
அரசியல் தீர்வை
எதிர்பார்த்திருந்த நேரத்தில்
அலைவரிசையை
பொங்கல் பரிசு என்று
அறிவித்ததும் அமைந்துவிட்டது.

அலைவரிசையை
புதிதாகத் தந்தது
நிச்சயமாக நல்ல விடயம்.
வெகுஜனத் தொடர்பு சாதனங்களில்
தமிழுக்கு உரிய இடம்
தரப்படுவது குறித்த
அரசின் அக்கறைக்கும்
நல்லதோர் எடுத்துக்காட்டு!

அதனை
பொங்கல் பரிசு என்று
அறிவித்ததுதான்
யானைப் பசிக்கு சோளப்பொரி!

இன்னொரு விடயத்தையும்
அரசு கவனிக்க வேண்டும்.
இடம்பெயர்வுகளும்,
பற்றித் தடைகளும்
பெருந்தொகையான
தமிழ் பேசும் மக்களை
வானொலிகளில் இருந்து
அந்நியப்படுத்தி இருக்கின்றன.

இந்த நிலையில்
பொங்கல் பரிசான
புதிய அலைவரிசையும்
இலட்சோப இலட்சம்
செவிகளை எட்டமுடியாதுள்ளது.

கடந்த கால ஆட்சியாளர்கள்
அபகரித்த அலைவரிசையை
மீண்டும் தந்துள்ளதாக
ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

அவரது கூற்று பண்பாடானது.
"சேரவேண்டியதை
சேர்ப்பித்துள்ளேன்" என்றுதான்
நியாயமாக சொல்லியிருக்கிறார்.

தமிழ் பேசும் மக்களது
அரசியல் கோரிக்கைகளும்
அதேபோல நோக்கப்பட்டால்
கெட்ட போர் பட்ட மரமாகிவிடும்.

அலைவரிசையை
திருப்பி ஒப்படைக்க
யாருடைய சம்மதத்தையும்
ஜனாதிபதி கேட்கவில்லை.

தமிழ் பேசும் மக்களின்
அரசியல் கோரிக்கைகளை
நிறைவேற்றவும்- அவர்
இனவாதிகளது சம்மதத்தை
எதிர்பாக்கத் தேவையில்லை!

ஏனெனில்,
தமக்கு உரியதல்லாதவற்றை
தமிழ் பேசும் மக்கள்
கேட்கவில்லை; கோரவுமில்லை.

தமிழ் பேசும் மக்கள்
தமது பராம்பரிய பூமியில்
எப்படி வாழ வேண்டும்,
எதை எதை அனுபவிக்கவேண்டும்
என்பதை இனவாதிகள்
எப்படித் தீர்மானிக்க முடியும்?
அவர்களிடம் தீர்மானிக்கும்
பொறுப்பை எப்படிக்
கொடுக்க முடியும்?

அப்படிக் கொடுக்க நினைத்து
ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டதுதான்
யுத்தத்தில் வந்து நிற்கிறது.

எனவே-அலைவரிசை
விடயத்தில் செய்தது போல
அரசியல் தீர்வு விடயத்திலும்
அரசுதானாக முன்வந்து
உரியதைத் தரவேண்டும்.
அது ஒன்றே
நாட்டுக்கு நம்பிக்கை தரும்.

❑ ❑ ❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்
–ஆசிரியர்–

## பழிவாங்குதல்

ஒருவனுக்கும் தீமைக்கு தீமை செய்யாதிருங்கள் என்கிறார் பவுல் 'பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதில்செய்வேன்' என்று கர்த்தர் சொல்லுகிறார். (ரோ 12.19.) அதனால் பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள் முதலியவற்றை எங்கள் இருதயத்தில் இருந்து எடுத்துப் போடுவோமாக. அவற்றை மறந்து விடுவோமாக.

'அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்'. (1பேதுறு 5:7) அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம் முதலிய ஆவியின் கனிகளை பெற்றுக் கொள்வோமாக.

உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் என்று இயேசு சுவாமி சொன்னாரே. பரிசுத்த ஆவியானவர் நிச்சயம் நமக்கு உதவி செய்வார். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள். பிதாவின் அன்பை எண்ணி என்றென்றும் அவரை ஸ்தோத்தரிப்போமாக.

ஆர்.தேவராஜ், கட்டுகஸ்தோட்டை

## ஆன்மீகம்



## ஸலாம் சொல்லுங்கள்!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

★ "முஸ்லிமாகிய நீங்கள் ஒருவரையொருவர் சந்தித்தால் முதலில் ஸலாம் கூறிவிட்டு மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள்".

★ "உங்களில் யார் ஸலாம் கூறுவதில் முந்திக் கொள்கிறாரோ அவர் அல்லாஹ்வின் அருளுக்கும் நாயகம் (ஸல்) அவர்களின் ஷபா அத்திற்கும் மிகவும் தகுதியுடையவராவார்".

★ "ஸலாமானது என்னைச் சார்ந்தவர்களுக்குக் காணிக்கையாகும். மேலும், அது காபிர்களை விட்டும் பாதுகாவலாகவும் உள்ளது."

★ "ஸலாம் என்பது அல்லாஹ்வின் திருநாமங்களில் ஒன்று. அதனைத் தங்களுக்கிடையில் பரப்பிக்கொள்ளுங்கள்."

★ ஸலாம் கூறாமல் யாராவது பேசினால் அவருடன் பேச்சைத் தொடர்வதற்கு விரும்பாதீர்கள்".

★ "மனிதர்களுள் மிகச் சிறந்தவர் ஸலாத்தை முந்திக்கொள்பவர்"

மனிதர்களிடத்திலே ஒற்றுமை, சமத்துவம் ஏற்படவேண்டும், சாந்தியையும், சமாதானத்தையும் சாற்றும் சான்றாண்மை மிக்க ஸலாத்தை உங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் கூறிக்கொள்ளுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஏனெனில் நட்புணர்வுகளை காண்பதில் நபி(ஸல்) அவர்கள் நல்லதோர் நாகரிகத்தை அமைத்திருக்கிறார்கள்.

எனவே, நாங்களும் ஒருவருக்கொருவர் அமைதியை ஏற்படுத்திக்கொள்ள ஸலாத்தினைத் தெரிவிப்போம்!

மசூத், காத்தான்குடி-03.

## கவிதைப்போட்டி இல-134

### பரிசுக்குரிய கவிதை

### இழுத்து மூடு

இழுத்து மூடு இழுத்து மூடு.
இழந்தசொத்து பெற்றதுன்பம்,
கழுத்துவரை தொடராமல்,
இழுத்துமூடு சென்றஆண்டை
இழுத்துமூடு தொலையட்டும்!

ம. துஷ்யந்தன், மட்டக்களப்பு.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

#### அலரும் பொன்னான வாழ்வு

முந்தியபோரால் முகிழ்த்த வறுமை
முடிவின்றி உயர்ந்திட்ட நேரம்,
சிந்திய கண்ணீர் கரையின்றி ஓட
சித்தத்துள் மலர்ந்தது புது எண்ணம்!
எந்தை மாதா பூமியாள் இருக்கையில்
எதற்கு நம் மனதுக்குள் கவலை?
அந்தியும் காலையும் கொத்தியே பயிரிட்டால்
அலருமே பொன்னான வாழ்க்கை!

திருமதி. மல்லிகா பத்மநாதன், பசறை.

#### வளமாகும் நிலம்

வடமராட்சியில்
இடம் பெயர்ந்து
வன்னியில் வந்து இங்கு
விளை நிலங்களை
வளம் படுத்தும் பாலகரோ?

சீ. தேவன், வாழைச்சேனை.

#### புது நெல்

கண்ணி வெடிகளை
களையெடுத்து மண்ணில்
பொன் நெல் விளைக்க
புறப்பட்ட சித்தர்களோ?

சதா கணபதி, உடபுஸ்ஸலாவ.

## கவிதைப் போட்டி இல-137




### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 27.01.1996.

–முகவரி–

கவிதைப் போட்டி இல: 137. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

#### யாருக்காக....?

கொத்தி பயிரும் இட்டிடலாம்
"கொறித்திட" நாம் இருப்போமா?..

ரி. ராஜன், காரைதீவு.

#### அழைக்கின்றாள்

பதுங்குகுழி வேண்டாம் தம்பி!
வா பல்லாங்குழி விளையாட.

எம். சௌந்திரராஜன், ராஜகிரிய.

#### என்ன பயன்?

தேசமே செத்தபின்பு,
தோண்டித்தான் என்ன பயன்?

நஸபியா பஹூர்தீன், புத்தளம்.



#### மீண்டும் தோண்டுவேன்

கொடிய போரில் மடிந்துபோன
மனிதர்களை மட்டும்
இம்மண்ணில் புதைப்பேன்!
மறைந்துபோன
மனிதாபிமானத்தை
மறுபடியும் தோண்டி எடுப்பேன்!

பெ. அழகர்சாமி, மட்டக்களப்பு.

#### நம்பிக்கை

புதையுண்ட எதிர்காலம்
இருளாகி யிருக்குமா?
வதைபட்ட வெண்புறா
சிதையா திருக்குமா?
மண்ணுக்குள் புதைந்த
மனிதம்தான் கிடைக்குமா?

எப்.லெனாட்குமார்,
ஹப்புத்தளையூர்.

#### புதிய ஆண்டின் தீர்மாணம்

கடந்த ஆண்டு
இழப்புக்களை
கணக்குப்பார்க்க
எலும்புக்கூடு
சேகரிப்பில்
இறங்கிவிட்டாயோ?

செல்வி. சுப்ரமணியம் வாணீஸ்வரி,
-அப்பர் கலஹா.

#### யார் வருவாங்க?

ஆஸ்த்தி யிருக்கையில்
அப்பா சாவுக்கு
ஆயிரம் பேர் வந்தாங்க!
அது தொலைந்ததால்
அம்மா சாவுக்கு
அயலார் மட்டும் வந்தாங்க!
ஆஸ்த்தியு மயலாருமின்றில்லை
அண்ணன் சாவுக்கு
யாருமில்லை!

பீ.எம்.எம்.அன்ஸார். பு-தெ-வெலிகம.

#### அடக்கம்

அக்கா பார்த்திருக்கத்
தம்பி குழி வெட்டி
அம்மா அழுது நிற்க
அப்பாவை அடக்கம் செய்தான்!

சீ. தங்கவடிவேல், மட்டக்களப்பு.

#### தமிழன் நிலை

காடு வெட்டி
நாடு செய்வீர்......
இன்னோர் யுத்தம்
வரின்
எங்கு செல்வீர்?

ந.சதீஸ்வரன், கண்டி.

## வாசக(ர்) சாலை

### முன்கூட்டியே தந்தாய்

யாழ்ப்பாணத்தில் 'ரிவிரெச' நடவடிக்கையின் போது நடந்த இரு தரப்பு செய்திகளையும் துணிந்து தந்தது முரசு மட்டும்தான். மக்களை வெளியேற்றவில்லை புலிகள் என்று சொன்ன பி.பி.ஸி. வானொலிகூட கடந்தவாரம் தனது தவறை ஒப்புக்கொண்டது. பி.பி.ஸியில் கடந்தவாரம் ஒலி பரப்பான ஒரு அறிக்கை யாழில் நடந்த சம்பவங்களை காலம் கடந்து தந்தது. அவற்றையெல்லம் முரசு முன்கூட்டியே தந்துவிட்டதை பாராட்டியேயாக வேண்டும்.

எம்.பவானி சங்கர், கொழும்பு-11

விடுதலைப் புலிகள் இல்லையென்றால் தமிழர்களின் சுயகௌரவம் என்னாகும் என்ற கேள்வி எனக்குமுண்டு. அதற்காக அவர்கள் விடும் தவறுகளை சுட்டிக்காட்டக்கூடாது என்று அவர்கள் நினைப்பது சரியாகாது. செய்தியாளர்களும் அவற்றை மக்களுக்கு மறைக்கக்கூடாது. முரசின் பாணி சரியானதான்; தொடருங்கள்.

கு.இந்திரகுமாரன், கோவில்குளம், வவுனியா.

இராஜதந்திரியார் மேலெழுந்தவாரியாக எல்.ரி.ரி.ஈ.யை தொட்டுவிட்டு, அரச தரப்பாரை மட்டும் ஒரு பிடிபிடிக்கிறார். வழக்கமான தமிழ் விமர்சகர்களின் பாணி தொற்றிக் கொண்டதோ என்று ஐயம் வருகிறது.

வ.மணிமேகலை, திருக்கோணமலை.

### சரிதான்

புலிகள் மக்களை வெளியேற்றியது நியாயம்தான். இல்லாது போனால் உயிரிழப்புக்கள் எண்ணிலடங்காதவையாக இருந்திருக்கும். வெளியேற்றுவதில் நடைபெற்ற அவசரக் கோலங்கள் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

வி.பிரகாஷ், கொழும்பு-6.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:**

*ப.நந்தன், டெமேரியாகுறூப்-பசறை.
*சுகிர்தினி தியாகராஜா, மட்டக்களப்பு.
*ஆரிகா ஆதம்பாவா, கல்முனை-06.
*எஸ்.ரி.ரமீஸ், அக்கரைப்பற்று-06
*என்.எம்.அஜர்தீன், நிக்கவெவ.
*வ.பிர்தௌஸ், கிண்ணியா-03.
*ஏ.லத்தீப் ஷிப்லி, புத்தளம்.
*ஜஹானி நாஸிர், நாத்தாண்டியா.
*நுஸ்ரத் ஜஹான் ஹனீபா, மாத்தளை.
*ஹுஸைன் எவனிங், மாத்தளை.
*வி.காந்தன், கல்முனை.
*ஈ.திருச்செல்வம், மட்டக்களப்பு.
*நஸீராஜ் சம்சுதீன்.
*முகமது வாபிர், புல்மோட்டை-01
*பஹ்மியாசரீப், காத்தான்குடி-05.
*வடிவேல் சுரேஸ் கிருஸ்ணா, மட்டக்களப்பு.
*கி.பவானி, மாத்தளை.
*மங்களா வாமதேவன்.
தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.
*எஸ்.எம்.சுபியான், நிகவெவ.
*எம்.எஸ்.ஷாஹீன் ரிஷா, எருக்கலம்பிட்டி.
*வரதன் விஜயகுமார், பொகவந்தலாவ.
*சிவாஜினி சதாசிவம், மாத்தளை.
*என்.எம்.தாஹா, கிண்ணியா-01
*வீ.ஸ்ரீதரன், மூதூர்.
*ஜெயா முருகுப்பிள்ளை, குருக்கள்மடம்.
*எம்.எஸ்.ஈதுல் அஸ்மியா, கந்தளாய்-07
*கே.புவனலோஜினி, இறக்குவானை.
*சித்ரா முருகையா, அவிசாவளை.
*எம்.ரி.எம். முபள்ளல், கஹட்டோவிட்ட.
*பார்லினா முஹம்மட், 10ம் யூனிட்.



இராஜதந்திரியாரும், நாரதரும் இரு வேறு கோணங்களில் அலசுவதால் நாட்டு நடப்பின் இரு பக்கத்தையும் அறியமுடிகிறது.

என்.எம். நாஸீர், மருதானை.

கார்லோஸ் தொடர் கார்லோஸ்போலவே ஒரு கலக்குத்தான். உலக அரங்கில் பின்னப்பட்ட சதிவலைகள் கார்லோஸ் தொடர்மூலப் நம் கண்களுக்கும் தெரிகிறது.

சி.மாலினி, பேராதனை வளாகம்.

அரசியலிலும், ஆட்சிகளிலும் எத்தனை எத்தனை சூழ்ச்சிகள்! பாவம் கார்லோஸ். அவன் ஒரு அம்புதானே! மனித வெடிகுண்டு சூப்பர்.

ஜெ.ஜலால்டீன், பாணந்துறை.

'முரசு ஒருதரம் சொன்னால் அது நூறுதரம் சொன்னமாதிரி.' அரசியல் கணிப்புக்களைத்தான் சொல்லுகிறேன்.

சி.தயாளன், வவுனியா.

இராஜகுமாரனின் இராமாயணம் இலக்கியக் கடலில் நம் இதயத்தை நனைக்கிறது.

இது வெறும் புகழ்ச்சியில்லை.

திருமதி இராஜமாணிக்கம், மாத்தளை.

20ம் பக்கத்தில் வண்ணத்தோடு அரிய தகவல்கள்தரும் 'லியோடெ'க்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

அன்பின் இராஜதந்திரியாரே!

"வேலியே பயிரை மேயும்" விந்தை அன்று தொட்டு இன்றுவரை தொடர்வரை சிறப்பாக கூறினீர். நன்றி.

சுபா, கண்டி.

அன்பின் முரசே, இராமாயணப் போட்டியில் ஒரு முறை பரிசு பெற்றவருக்கு மறுமுறை பரிசு வழங்காது மற்றவர்களுக்கு வழங்கினால் பலருக்கும் வாய்ப்பளிக்கலாம் தானே?

பாதிமா றிஹானா பாருக் , உலப்பனை எஸ்டேட்.

வாரம் எழு நாட்களிலும் நடைபெறும் செய்திகளை எங்களுக்கு ஒரே நாளில் அறியத் தருகிறாய். முரசுக்கு எமது நன்றிகள்.

சரவணகுமார் ஜெய்சங்கர், ரொஸ்ஸல்ல.

நாமும் நாடுவது...!

அனைவரையும் அசத்தும் அறுவையரங்கம் வரவேற்கத்தக்கது. அச்சொட்டான அரசியலை அறிய அனைவரும் அண்டவேண்டியது முரசையே! எனவே நாமும் நாடுவது தினமுரசையே!

எஸ்.பத்மா, உமாஜினி, நவ்சாத், கொழும்பு-10.



படிப்பகம்

www.padippakam.com

# தலைநகரில் தாக்குதல் நடத்தும் திட்டம்!

# எதிரணிக்கும் புலிகள் குறி வைக்கலாம்?

# தரைப் பாதையை திறக்க படைத்தரப்பு முஸ்தீபு!

**'அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கைக்கு அரசு தயாராகிவருகிறது. பெருந்தொகையான ஆயுத தளபாடங்கள் கொழும்பை வந்தடைந்துள்ளன. மேலும் கொள்வனவு செய்வதற்கான பேரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன' என்று புலிகள் இயக்க சர்வதேச செயலகம் தெரிவித்துள்ளது. இதேவேளை தலைநகரில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த புலிகள் திட்டமிட்டமையும் தெரியவந்துள்ளது. படகொன்றில் கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான வெடிமருந்துகள் உடப்பு கடற்கரையில் கைப்பற்றப்பட்டதையடுத்து புலிகளது தாக்குதல் திட்டம் வெளியாகியுள்ளது.**

(நமது நிருபர்)

### இரு முனையில்

கிழக்கு மாகாணத்திலும், வடக்கிலும் பாரிய இராணுவ நடவடிக்கையை ஒரே நேரத்தில் மேற்கொள்ளும் திட்டம் படைத்தரப்பிடம் இருப்பதாக தெரியவருகிறது.

வடபகுதியில் தரைப்போக்குவரத்தை திறப்பதற்கு வழிசெய்யும் வகையில் அங்கு அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

அதேவேளை கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பாரிய இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கான ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

கிழக்கை புலிகளிடம் அரசு பறிகொடுத்துவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டி வருகிறது.

எதிர்வரும் தேர்தல்களில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை வைத்தே பொதுஜன முன்னணியின் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும்.

அந்த நேரத்தில் கிழக்கில் புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்தினால் அரசாங்கத்திற்கு சங்கடங்கள் ஏற்படலாம். அதனால் கிழக்கில் புலிகளை பலமிழக்கச் செய்யும் இராணுவ நடவடிக்கைகள் முதன்மையாகியுள்ளன.

### தேர்தலுக்கு முன்னர்

எதிர்வரும் தேர்தல்களுக்கு முன்னர், கிழக்கில் படைத்தரப்பின் கைகளை மேலோங்கச் செய்வது, யாழ்ப்பாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கணிசமான அளவு மக்களை உள்ளடக்கக் கூடிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகள் இரண்டும் செய்யப்பட்டாக வேண்டும்.

அப்படியானால்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் குற்றச்சாட்டுகள், குறைகூறல்களில் இருந்து அரசாங்கம் தப்பிக்கொள்ள முடியும். தேர்தலிலும் கணிசமான வாக்குகளை கவர முடியும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் இவ்வாறு திட்டமிடும்போது புலிகள் அதனை முறியடிக்கும் உபாயங்களை யோசித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தாக்குதல்களை நடத்துவதைவிட, வெளியேதான் அவர்களது கவனம் திரும்பியுள்ளது.

குறிப்பாக தலைநகரில் பாரிய தாக்குதல் ஒன்றுக்காக அவர்கள் திட்டமிட்டு வருவதாக நம்பப்படுகிறது.

சமீபத்தில் புத்தளம்-உடப்பு பகுதியில் பெருந்தொகையான வெடிமருந்துகள் பொலிசாரிடம் சிக்கியிருந்தன.

தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக இருக்கின்றன. அதனால் தலைநகருக்கு வெளியே புலிகளது இரகசிய விநியோக தளம் இயங்கிவருவதாக நம்பப்படுகிறது.

கடல்வழியாக வெடிமருந்துகள் கொண்டுவரப்பட்டு இரகசிய தளத்தில் வைக்கப்பட்டிருக்கும். தேவைப்படும் போது குறிப்பிட்டளவு வெடிமருந்துகள் தலைநகருக்குள் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும்.

வவுனியா வழியாக லொறிகள் வருவது தடைப்பட்டுள்ளதால் கடல் வழிப்பாதை மூலமாகவே விநியோகம் செய்யும் வாய்ப்பும் அதிகமுள்ளது என்று புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது கைப்பற்றப்பட்டுள்ளவை ஒரு தொகுதி வெடி மருந்துகள் மட்டுமே. இதற்கு முன்னரும் முல்லைத்தீவில் இருந்து வெடிமருந்துகள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

### புலிகளின் திட்டம்

யாழ்ப்பாண வெற்றியை வைத்து எதிர்வரும் தேர்தல்களில் அரசாங்கம் பாரிய வெற்றிகளைப் பெறுவதை புலிகள் தடுக்கவே முற்படுவர் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

தேர்தல்களில் தொடர் வெற்றிகளைப் பெறுவதுமூலம் அரசாங்கம் தனது அரசியல் செல்வாக்கை உயர்த்திக் கொள்வதை புலிகள் விரும்பமாட்டார்கள். அவ்வாறு ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் யுத்தத்திலும் அரசின் கை மேலோங்கும் என்பதும் புலிகளுக்குள்ள நெருக்கடியாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் காமினி திசநாயக்கா புலிகளால் கொல்லப்பட்டார். அதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுதாப வாக்குகள் குவியும்; சந்திரிக்காவுக்கு அசுரப் பெரும்பான்மை கிடைக்காமல் போகலாம்; தெற்கில் ஒரு அரசியல் நெருக்கடி தோன்றும் என்று புலிகள் எதிர்பார்த்தனர், என்பதையும் அந்த விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதனால் தலைநகரில் எதிரணித் தலைவர்களுக்கும் ஆபத்து இருக்கிறது. அவர்களையும் புலிகள் குறிவைக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

## பிரபா விஜயம்

இடம்பெயர்ந்து வன்னியில் உள்ள மக்களைச் சந்தித்து குறைகளை கேட்டறிந்தார் பிரபாகரன்

இடம்பெயர்ந்த மக்களுக்குள் அதிருப்திகள் ஏற்பட்டுவருவதையடுத்தே பிரபாகரன் திடீர் விஜயம் செய்து இடம்பெயர்ந்த மக்களை சந்தித்தார்.

பஜுரோக்கள் மற்றும் வேன்கள், டபுள் கப் வாகனங்கள் மத்தியில் பிரபாகரன் வந்திறங்கியபோது பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. பிரபாகரன் சென்ற பகுதியைச் சுற்றி கரும்புலிகள் பாதுகாப்பு வளையமாக நின்றனர் என்றும் கூறப்படுகிறது.

முன்கூட்டியே நோட்டம் பார்க்கப்பட்டு பாதுகாப்பான பகுதி என்று தெரிவு செய்யப்பட்ட இடங்களுக்கு மட்டுமே பிரபாரன் சென்றிருந்தார்.

## 95ல் புலிகள் தாக்கியவை:

1995 இல் தமது இராணுவ நடவடிக்கையால் முப்படைகளுக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து புலிகள் ஒரு பட்டியல் வெளியிட்டுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு: அவ்ரோ விமானம்-02, புக்காரா-01, வை 8 ரக விமானம்-01, பெல் ரக ஹெலி-02, யுத்தக் கப்பல்கள்-02, கட்டளைக் கப்பல்-01, டோறா-05, சவட்டன்-01, டாங்கிகள்-08, பவள் கவச வாகனங்கள்-12, ஏனைய இராணுவ வாகனங்கள்-06. இவை யாவும் முற்றாக செயலிழக்கச் செய்யப்பட்டவை என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

## ஊர்காவல் படையால் ஊருக்கு நாசம்

(சஞ்ஜீவன்)

திருக்கோணமலை லிங்கநகர் பகுதியில் உள்ள தண்ணீர்க் குழாய்கள் ஊர்காவல் படையினரால் அடித்து நொருக்கப்பட்டன.

திருமலையில் லிங்கநகரில் தமிழ் குடும்பங்கள் மீளக்குடியேறி உள்ளனர். அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக ஊர்காவல் படையினர் மிரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 13.1.96 அன்று ஆயுதம் தாங்கிய ஊர்காவல் படையினர் லிங்கநகருக்குள் புகுந்து, அங்கிருந்த தண்ணீர் குழாய்களை அடித்து நொருக்கினார்கள்.

இது தொடர்பாக லிங்கநகர் பகுதி மக்கள் பொலிசாரிடம் முறைப்பாடு செய்தனர். சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படுவதாகவும், மேலும் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்வதாகவும் திருமலை பொலிஸ் அதிகாரி உறுதியளித்துள்ளார்.

லிங்கநகரில் மீளக்குடியேறிய மக்களுக்கான குடிநீர் விநியோகம் ஈ.பி.டி.பி. யினரால் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. சுமார் 250 தமிழ் குடும்பங்கள் லிங்கநகரில் மீளக்குடியேறியுள்ளனர்.

## படைத்தரப்போடு தமிழ் குழுக்கள்

கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைக்கு உதவ ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கமும் முன்வந்துள்ளன.

ரெலோ இயக்கத்தினர் ஏற்கெனவே மட்டக்களப்பில் படையினருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். திருமலையில் வெள்ளைவேன் நடவடிக்கைக்கும் ரெலோ ஒத்துழைத்து வருகிறது.

இதுவரை படைத்தரப்பினரிடம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் இணைந்து செயற்படவில்லை. தற்போது கிழக்குமாகாண நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவும், படையினருடன் தமது உறுப்பினர்களை அனுப்பிவைக்கவும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இசைந்துள்ளது.

படையினருடன் இணைந்து செயற்படும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களுக்கு ஊர்காவல் படையினருக்கு வழங்கப்படும் ஊதியம் வழங்கப்படும் என்று தெரிகிறது.

## ரஜினி ஆதரவுடன் தனித்துப் போட்டி

இந்தியப் பிரதமர் நரசிம்மராவை தமிழக காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான மூப்பனார் கடந்தவாரம் சந்தித்து பேச்சு நடத்தினார்.

தமிழ்நாட்டில் ஜெயலலிதாவுடன் காங்கிரஸ் கூட்டுச்சேரக்கூடாது. ரஜினிகாந்த் ஆதரவுடன் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டும், என்று மூப்பனார் வலியுறுத்தி உள்ளார்.

எதிர்வரும் தமிழக சட்டமன்றத் தேர்தல்களில் நான்கு முனைப் போட்டி ஏற்பட உள்ளது.

தி.மு.க. தலைமையில் உள்ள கூட்டணி காங்கிரஸ் கூட்டணி, வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையிலான கட்சிகளின் கூட்டணி, அ.தி.மு.க. ஆகிய நான்கு அணிகள் மோதலில் குதிக்கும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை திருச்சியில் ஜெயலலிதா கட்-அவுட்டுகளுக்கு போட்டியாக ரஜினிகாந்த் கட்-அவுட்டுகள் வைக்கப்பட்டன. அதனால் நகரில் பதட்டம் ஏற்பட்டது.

இறுதியில் பொலிசார் தலையிட்டு ஜெயலலிதா, ரஜினி கட்-அவுட்டுக்களை அகற்றினார்கள்.

## இடம்பெயர்வுக்கு புலிகள் கட்டுப்பாடு

### இலவசப் படகுச் சேவையும் இரத்து

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறுமாறு புலிகள் இயக்கத்தினர் முன்பு கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

தற்போது அந்த முயற்சியை புலிகள் கைவிட்டுள்ளனர்.

தற்போது வன்னியிலும், கிளிநொச்சியிலும் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பல்வேறு பிரச்சனைகள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

அகதி முகாம்களிலும் பல்வேறு பிரச்சனைகள் தோன்றிவருகின்றன.

பெரும் தொகையானவர்கள் வவுனியா வருவதற்கு அனுமதி கேட்டு புலிகள் இயக்கத்தின் பாஸ் வழங்கும் அலுவலகங்களுக்கு செல்கின்றனர். பாஸ் வழங்க மறுத்தால் அதிருப்திகள் ஏற்படுகின்றன.

இவ்வாறான நிலையில் மேலும் பெருந்தொகையான மக்கள் வன்னிப்பகுதிக்கு வந்தால் பிரச்சனைகள் பெரிதாகிவிடும். கட்டுப்படுத்துவதும் கஷ்டமாகிவிடும் என்று புலிகள் நினைக்கிறார்கள்.

தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் இடம் பெயர்ந்தோர் உட்பட கிட்டத்தட்ட நாலரை இலட்சம் மக்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் வன்னிப்பகுதிக்கும், கிளிநொச்சிக்கும் இடம் பெயர்ந்தால் நிலமை மோசமாகிவிடும் என்று கருதப்படுகிறது.

இதனையடுத்து தற்போது தென்மராட்சியிலிருந்து கிளாலியூடாக கிளிநொச்சிக்கு வருவோர் தொகையை புலிகள் இயக்கத்தினரே கட்டுப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

கிளாலி படகுச் சேவையை இலவசமாக நடத்திவந்த புலிகள் இயக்கத்தினர் தற்போது பணம் வசூலிக்கவும் ஆரம்பித்துள்ளனர்.

## குடியிருப்புக்கள் திறப்பு விழா

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியிலும், கிளிநொச்சியிலும் தங்கியுள்ள மக்களுக்கான குடியிருப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இரண்டு குடியிருப்பு திட்டங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் இம்மாதம் இருபத்தியொன்பதாம் திகதிவரை பதினேழு குடியிருப்புத் திட்டங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இதேவேளையில் யாழ்ப்பாணம் வடமராட்சியில் பருத்தித்துறை கோட்ட ஆசிரியர்கள் என்ற பெயரில் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. "ஆசிரியர்களும் ஆயுதம் ஏந்துவதற்கு சிறீலங்கா அரசினால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்" என்று அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகள் மூடப்படலாம்

வடக்கிலும், கிழக்கிலும் பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக செய்திகள் கிடைத்துள்ளன.

இராணுவ நடவடிக்கைகளின் விளைவுகளைப் பொறுத்து பாடசாலைகளுக்கு மீண்டும் ஒரு குறுகிய கால விடுமுறை விடப்படலாம் என்று கூறப்படுகிறது.

## 14 ஆயிரம் தமிழ் அகதிகள் நிலை என்ன?

யாழ்ப்பாணத்தில் நடந்துவரும் போர் நடவடிக்கை காரணமாக தமிழ்நாட்டில் உள்ள 14 ஆயிரம் இலங்கை தமிழர்களின் நிலை நிச்சயமற்றதாக உள்ளது என தேசிய மனித உரிமை கமிஷன் கூறியுள்ளது.

இதுகுறித்து மேலும் தேசிய மனித உரிமை கமிஷன் கூறியிருப்பதாவது:

இலங்கையில் இருந்து வெளியேறிய தமிழர்கள் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தமிழ்நாட்டில் அகதிகளாக உள்ளனர். அகதிகள் என்ற பெயரில் இவர்கள் பல்வேறு முகாம்களில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்ட முகாம்களில் சிறை வைக்கப்பட்டுள்ள இவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தங்கள் வீடுகளுக்கு செல்ல விரும்புகின்றனர். இலங்கையின் வேறு பகுதிகளுக்கு செல்வதை இவர்கள் விரும்பவில்லை.

உடனே இவர்கள் யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலை உள்ளது. காரணம் யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள நிலைமையில் இவர்கள் யாழ்ப்பாணத்திற்கு செல்வதை டில்லியும் விரும்பவில்லை. இலங்கையும் விரும்பவில்லை. இவர்கள் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு இது சரியான தருணம் இல்லை என இரண்டு நாட்டு அரசுகளும் எண்ணுகின்றன.

மேலும் தமிழ்நாட்டில் பல்வேறு முகாம்களில் தங்கியுள்ள அகதிகளில் புலிகளும் இருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். யாழ்ப்பாணத்துக்கு இவர்களை திருப்பி அனுப்ப இந்தியா விரும்பாததற்கு காரணம் இலங்கை சென்று மீண்டும் இந்தியாவுக்கு வந்து கலவரத்தை உண்டு பண்ணலாம் என இந்தியா நினைக்கிறது.

தமிழ்நாட்டில் மிகவும் பாதுகாக்கப்பட்ட முகாம்களில் 30 ஆயிரம் இலங்கை தமிழ் அகதிகள் இருந்தனர். இவர்களில் 16 ஆயிரம் பேர் கடந்த ஆண்டு கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எஞ்சியுள்ள 14 ஆயிரம் பேர் யாழ்ப்பாணம் செல்ல விரும்புகின்றனர்.

தமிழ்நாட்டில் இருக்கும் இலங்கை தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பும்படி இந்திய அரசை தேசிய மனித உரிமைக்கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால் எந்த இடத்துக்கு செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்களோ அந்த இடத்துக்குத்தான் அவர்களை அனுப்பி வைக்க வேண்டும். அவர்கள் விருப்பத்துக்கு மாறான இடத்துக்கு அனுப்பக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த அகதிகள் அனைவரும் யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே திரும்புவோம் என்று கூறுவதால் இவர்களை திருப்பி அனுப்புவதில் சிரமமும், காலதாமதமும் ஏற்பட்டுள்ளது என்று இந்த அமைப்பின் தலைவர் நீதிபதி மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

நீதிபதி மிஸ்ரா தலைமையிலான தேசிய மனித உரிமைக் குழு உறுப்பினர்கள் இந்த முகாம்களுக்கு சென்று அவர்களிடம் உள்ள குறைகளைக் கேட்டறிந்தனர்.

## திறக்கப்பட்ட வீதிகள்

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு நகருக்கு செல்வதற்கு தடை செய்யப்பட்டிருந்த சகல பிரதான வீதிகளும் கடந்த வாரம் முதல் பொதுப் போக்குவரத்திற்காகத் திறந்துவிடப்பட்டுள்ளன. இதே போல் ஏறாவூர் பொலிஸ் நிலையப் பாதுகாப்பை ஒட்டி தடை செய்யப்பட்டிருந்த ஏறாவூர்-கொழும்பு பிரதான வீதியும் கடந்தவாரம் முதல் பொதுப் போக்குவத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வீதி அடிக்கடி மூடப்படுவதும், திறக்கப்படுவதுமாக இருப்பதாலும் வீதி மூடப்படும்போது புதிய வீதியால் செல்லும் அறிவிப்புப் பலகைகள் இல்லாததாலும் பயணிகள் எங்கே செல்வது என்று தெரியாமல் திணறுகிறார்கள்.

மட்டக்களப்பு வீதிப் போக்குவரத்துக்கள் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அடிக்கடி தடை செய்யப்படுகின்றன. இதனால் பயணிகள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

## 50 லொறிகளில் உணவுப் பொருட்கள்

### 20ம் திகதி முதல் செல்ல ஏற்பாடு

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்கு பின்னர் யாழ் குடாநாட்டில் இருந்து வன்னி, கிளிநொச்சி பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ள மக்களது தொகை 3 இலட்சத்து 38 ஆயிரத்தி 888 பேர். (17.1.96வரை)

கிளிநொச்சியில் தங்கியுள்ளவர்கள், 1 இலட்சத்து 24 ஆயிரத்தி 876 பேர்.

மன்னாரில் தங்கியுள்ளவர்கள்; 21 ஆயிரத்தி 416 பேர்.

முல்லைத்தீவில் 99 ஆயிரத்தி 744 பேர்.

வவுனியாவில் படையினரது கட்டுப்பாட்டு பகுதியில் 3 ஆயிரத்து 678 பேர். புலிகளது கட்டுப்பாட்டு பகுதியில் 29 ஆயிரத்தி 178 பேர்.

அகதி முகாம்களின் எண்ணிக்கை: கிளிநொச்சியில் 64, முல்லைத்தீவில் 35, மன்னாரில் 14, வவுனியாவில் 07.

ஜனவரி முதலாம் திகதி முதல் 14ம் திகதி வரை வவுனியாவில் இருந்து 450 லொறிகளில் உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சிக்கு 232 லொறிகள், முல்லைத்தீவுக்கு 141 லொறிகள், மன்னாருக்கு 34 லொறிகள், வவுனியாவுக்கு 43 லொறிகள்.

தினமும் 30 முதல் 35 லொறிகள் வட பகுதிக்கு உணவுப் பொருட்களுடன் செல்லுகின்றன. அவற்றின் எண்ணிக்கையை தினம் ஒன்றுக்கு 50 ஆக அதிகரிக்க வேண்டும் என்ற ஈ.பி.டி.பி., புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எதிர்வரும் 20ம் திகதி முதல் தினமும் 50 உணவு லொறிகள் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

# காதோடு காது உதர்ர்ர்



**எம்.எம்.சி. தாக்கப்பட்டார்** : பாரதி கிராமத்தில் வசித்துவரும்- மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் வே.இராசமாணிக்கம் பாது காப்புப்படையினரால் தாக்கப்பட்டார். தான் எம்.எம்.சி. என்று சொன்னதுமே- அடி, உதை அதிகமாக இருந்ததாக, எம்.எம்.சி. அழுது கொண்டு சொன்னார். யாரிடம் போய் முறையிட இந்த அலங்கோலத்தை- என அங்கலாய்ப்பதைவிட வேறு என்ன செய்துவிடமுடியுமென கேட்கின்றனர்- ஊறணிக்கிராம மக்கள்.

**கலாநிதி சந்தானம்** : ஊவா மலையகம் - நமக்களித்த சிறந்த கல்விமான் கலாநிதி எஸ். சந்தானம்- முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர். புலிகள் இவரை- வந்தாறுமூலை வளாகத்திலிருந்து மதிலுக்கு மேலாக தூக்கி கடத்தியபோது, தவறி ஒரு தடவை விழுந்து விட்டாரம். "விழுந்தால் பரவாயில்லை. 'வாருங்கள் போவோம்" என்று கூறி அழைத் துச் சென்றனராம். எவருக்குமே தெரியக் கூடாது-மூச்... "நாங்கள் சென்று ஒரு மணித் தியாலத்திற்குப் பின்னர்தான் சங்கதி வெளியாக வேண்டும்," என்றும் உத்தரவாம் விடுவிக்கப் போன இரு பெரும் மதகுருமாரும்- மண் முனைக்குப்போய் வெறுங்கையோடு திருப்பி னார்கள். பின்னர் என்ன நினைத்தார்களோ விடுவித்து அனுப்பிவிட்டார்கள்.

**செபம் பலிக்குமா?** : வடக்கு கிழக்கு மாகாண சபையில் கல்விக்குப் பெரியவர் ஒருவர் ஓய்வுபெறும் காலம் நெருங்கிவிட்டதாம். ஆதலால் - மாவட்டத்தில் கல்விக்குப் பெரியவர் ஒருவர் இப்பதவியைக் கௌவிக் கொள்ள வேலூர் கொலனிக்குள் வசிக்கும் அமைச்சர் ஒருவர் வெஸ்லியில் படிப் பித்த ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரிடம் போய் வருகிறாராம். பொறுத்திருந்து பார்ப்போம் - ஓய்வுபெற்ற இரத்தினத்தின் செபம் பலிக்குமா என்று.

**காணிக்குக் கிராக்கி** : யாழ் குடா நாட்டில் இடம் பெயர்ந்த தமிழர்கள், தமிழர் பிரதேச மான மட்டக்களப்புக்கு வராமலில்லை. தப்பித் தடவி வந்தேவிட்டார்கள். அதனால்- காணிகளுக்கும் விலை அதிகரித்துள்ளதாம். "யாழ்ப்பாணத்து மக்கள் காசிக்காரர் அல்லே" என்று மட்டக்களப்பார் முணு முணுக்கிறார்கள்.

# காட்டூண் மூலை




# பணிப்பெண்களின் பொருட்கள் அபகரிப்பு

**ம**த்திய கிழக்கில் பணி புரிந்து விட்டு நாடுதிரும்பி தமது வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்த ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை ஆகிய ஊர்களைச் சேர்ந்த மூன்று பணிப் பெண்களினதும் பொருட்கள் மட்டக்களப்பு- சந்திவெளியில் வைத்து ஏறாவூர் நிருபர் 01.01.96 அன்று ஆயுதம் தாங்கிய நபர்களால் அபகரிக் கப்பட்டுள்ளன. புலிகள்தான் தங்கள் பொருட்களை பறித்துச் சென்றார்கள் என்று பொருட்களைப் பறி கொடுத்தவர்கள் கூறுகிறார்கள்.

ரேடியோ, ரேப் ரெக்கோடர், தங்க நகைகள், கடிகாரங்கள், உடுதுணிகள், மற்றும் பல நானாவிதப் பொருட்கள் பறித்துச் செல்லப்பட்டவற்றில் அடங்கியிருந்தன என்று தெரியவருகிறது.

தாங்கள் விமான நிலையத்திலிருந்து வாடகைக்குப் பெற்ற (4500/-ரூபா) வேன்காரர் ஓட்டமாவடிக்கு அப்பால் செல்ல மறுத்ததால் தாங்கள் ஓட்டமாவடியிலிருந்து மற்றொரு வேனை ரூபா 3750/- க்கு வாடகைக்கு பெற்று வந்து கொண்டிருந்த போதே தமக்கு இக்கதி நேர்ந்ததாகவும் இந்த அப்பாவி ஏழைப்பெண்கள் தமது துர்ப்பாக்கிய நிலையை கண்ணீருடன் கூறினர்.

சந்திவெளியில் வசிக்கும் தமிழ் மக்களும் இச்சம்பவத்தையிட்டு கவலை தெரிவித் தனர். இந்த ஏழைப்பெண்களுக்கு நடந்த சம்பவத்தையும், இன ஐக்கியத்தைச் சீர் குலைக்கும் எந்த நடவடிக்கையையும் ஒற்று மையை வலியுறுத்தும் தமிழ், முஸ்லிம் மக்கள் வன்மையாகக் கண்டிக்கின்றார் கள்.

ஓட்டமாவடியிலிருந்து போக்குவரத்து பஸ்ஸில் செல்வதாயின் ஏறாவூருக்கு 5.50 சதம், காத்தான்குடிக்கு 9.25 சதம், கல் முனைக்கு 17.50 சதமும் பஸ் கட்டணம் செலவாகும். இந்தச் செலவுக்கே வாடகை வேன்காரர் 3750/- பெற்றிருக்கின்றார்.

# துயரமும் தொல்லையும் - சோதனைச் சாவடிகளில்!

(ஏறாவூர் நிருபர்)

**ம**ட்டக்களப்பு நகருக்குள் பிரவேசிக்கும் பிரதான பாலதில் கடும் சோதனைக்குட்பட்ட பின்னரே நகருக்குள் செல்ல முடியும். எனினும் அச்சாவடிகளைக் கடக்கும் பெண் களை அங்குள்ள பெண் இராணுவ உத்தி யோகத்தர்கள் படாத பாடுபடுத்துவதாக சோதனைக்குள்ளாகும் பெண்கள் சலித்துக் கொள்கிறார்கள்.

இளம் பெண்களுக்கு மட்டுமல்லை வயோதிபப் பாட்டிகளுக்குக் கூட கடும் தொல்லை தருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இளம் பெண்களின் உடைகளைக் களையு மாறு கேட்டு பின்னர் கைகளில், கால்களில் தொடைகளில் கிள்ளல் இடம்பெறுவதாகவும் துயரமாக பேசப்படுகிறது. சிலர் அழுது கொண்டு வந்த சந்தர்ப்பமும் உண்டு. ஏச்சுப் பேச்சுக்கள், அதட்டல், முறைத்தல் தேவையற்ற கேள்விகளைக் கேட்டல் என்பன வும் இடம்பெறுவதாக அறிய முடிகிறது. இத்தகைய செயல்களில் பெண் இராணுவ உத்தியோகத்தர்கள் ஈடுபடுவதால் நீண்ட வரிசையில் அதிகளவு நேரம் காத்திருக்க வேண்டியும், அலுவல்களுக்குச் செல்வோர் பிந்திச் செல்ல வேண்டியும் ஏற்படுகிறது. இதுபோன்ற நெருக்கடி நிலையை செங்க லடியை அடுத்துள்ள கொம்மாதுறை இராணுவமுகாமிலும் பெண்களுக்கு ஏற்படு கிறது.

# கொடுப்பனவுகள் ஏன் தாமதம்?

(காரைதீவு நிருபர்)

**க**ல்முனை கல்விமாவட்டத்தில் 219 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் நிலவுகிறது. கடந்த ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 27 ஆசிரியர்கள் இங்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கல்விப்பணிப்பாளர் ஐ.எம்.இஸ்ஸதீன் தெரிவித்தார்.

இதனிடையே வட-கிழக்கில் 44 உதவி வைத்திய அதிகாரிகள் இதேதினத்தில் நிய மிக்கப்பட்டுள்ளனர். 19 பேர் திருகோணமலை யிலும், 18 பேர் அம்பாறையிலும், 4 பேர் மட்டக்களப்பிலும், 3பேர் வவுனியாவிலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி மற்றும் சுகாதார திணைக்களங் களில் பெருந்தொகையானோர் கடமையாற்று வதனாலோ என்னவோ அரசினால் கூறப் பட்ட ஆபத்துக்கால கொடுப்பனவு வழங்கு வதில் பலத்த தாமதம் ஏற்பட்டது. கல் முனைக் கல்விப்பிரிவினர்ஆக நவம்பர் மாதத் திற்கு மட்டும் மேற்படிகொடுப்பனவை வழங்கியுள்ளனர். "எங்கே மிகுதி கொடுப் பனவு?" ஆசிரியர்கள் அங்கலாய்க் கிறார்கள்.

# கட்டாக்காலிகளுக்கு ஜாலி

(அம்பாறை நிருபர்)

சம்மாந்துறைப்பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் பல்வேறு அசௌ கரியங்கள் ஏற்பட்டுவருகின்றன.

கட்டாக்காலிமாடுகளின் தொல்லையை ஒழிப்பதற்குச் சம்மாந்துறைப் பிரதேச சபை கண்டிப்பான பலநடவடிக்கைகளை மேற் கொண்டும் பயன்கிடைக்கவில்லை.

சம்மாந்துறைப்பிரதேசசபை அலுவலகத் திற்கு அருகில் அமைந்திருக்கும் நெசவுக் கிராம பயிற்சி நிலையத்தைச் சுற்றிவரப் பாதுகாப்பான வேலியோ, சுவரோ இல்லா மையால் மேற்படி பயிற்சி நிலைய வளவு இரவுபகலாகக் கட்டாக்காலி மாடுகளின் உறைவிடமாக மாறியிருக்கின்றது.

# அஞ்சலகத்தில் அதிகாரிகள் பற்றாக்குறை

(திருமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டத் தபாற் கந்தோர்களில் மீண்டும் அதிகாரிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு வழங்கவேண்டிய சேவை களை வழங்குவதில் அஞ்சலக உத்தியோகத் தர்கள் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள்.

ஜனவரி 1ந் திகதி தொடக்கம் பதின்மூன்று உத்தியோகத்தர்கள் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றதாலேயே உத்தியோகத்தர் பற்றாக் குறை ஏற்பட்டது. இவர்களுக்குப் பதிலாக இடமாற்றங்கள் மூலமோ, புதிய நியமனங்கள் மூலமோ உத்தியோகத்தர்கள் நிரப்பப் படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

மூதூர், கிண்ணியா அஞ்சலகங்களில் தலா ஒவ்வொரு உத்தியோகத்தரே பணியாற்றுகிறார்கள். இவர்களுக்குச் சுகயீனம் ஏற்பட்டால் கந்தோரையே இழுத்து மூடிவிட வேண்டிய அபாய நிலை தோன்றி யுள்ளது.

தோப்பூர், நிலாவெளி ஆகிய தபாற் கந்தோர்களுக்கு திருகோணமலைத் தபாற்கந் தோர் அதிகாரிகளே சென்று பணியாற்ற வேண்டியிருக்கிறது. இவ்விடங்களுக்கு நிரந்தரத்தபால் அதிபர்கள் கிடையாது.

"சேவைகளில் குறைவந்தால் விழுந் தடித்துக் கொண்டு விளக்கம் கோரும் அதிகாரிகள் உத்தியோகத்தர் பற்றாக்குறை விடயத்தில் மட்டும் கண்ணை மூடிப் பால் குடிக்க முனைவது ஏன்?" இவ்வாறு முரசு நிருபரிடம் வருத்தத்துடன் தெரி வித்தார் பெயர் சொல்ல விரும்பாத அதிகாரி ஒருவர்.




**கலை அலங்கார வகுப்புக்கள்**

சிகை அலங்காரம்
அழகுக்கலை
மணப்பெண் அலங்காரம்
4 மாத கற்கை நெறி

ஆரம்பம் 01.02.1996

**FASNAZ BEAUTY SALON**

இல.142, டபிள்யு.ஏ. சில்வா மாவத்தை, கொழும்பு -06. தொலைபேசி: 589457

**உளநல உதவிநிலையம் இடமாற்றம்**

இல. 14, கிறீன் வீதி, மட்டக்களப்பில் இயங்கி வந்த எமது அலுவலகம் 1/1/1996 தொடக்கம் இல. 1A, மேல்மாடி தெரு (UPSTAIR ROAD) மட்டக்களப்பு என்னும் புதியவிலாசத்தில் இயங்குகிறது.

பணிப்பாளர்,
உளநல உதவிநிலையம்,
மட்டக்களப்பு.

தொ.பேசி இல. 065-2842

**BRIGHT ன் தபால் மூலம் கல்விச் சேவைகள்**

**வெளிவாரி பட்டப்படிப்பு**
**G.A.Q., B.A. 1st Com., B.Com**

இலங்கை பல்கலைக்கழக பட்டங்களை வீட்டில் இருந்தவாறே தபால்மூலம் கற்றுக்கொள்ளலாம். பயிற்றப் பட்ட ஆசிரியர்களோ அல்லது க.பொ.த (உயர்தர)ப் பரீட்சையில் மூன்று பாடங்களிற் சித்தியும் 180 புள்ளிகள் பெற்றோரும் இக்கல்விநெறியை தொடராலாம்.

வெளிவாரி மாணவராக பதிவு செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும். இப்பாடநெறி பற்றிய மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 50/- பெறுமதியான காசுக்கட்டளையை The Director B.B.C. எனும் பெயருக்கு SEA STREET SPO மாற்றக் கூடியதாக அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

**ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான கைநூல் (1995 வெளியீடு) வெளிவந்துவிட்டது**

292 பக்கங்களுடன் 35 மாதிரி வினா விடைகளுடன் வெளிவந்துள்ளது. பொது அறிவு, மொழி அறிவு, நுண்ணறிவு வினாவிடைகளை உள்ளடக்கியது.

விலை 250/- V.P.P. உண்டு

*விபரங்களை பெற விரும்பும் மாணவர்கள் விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க*

**SPOKEN ENGLISH / SINHALA**

*மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க தபால்மூலம் கற்றுத்தரப்படும். ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்து DIPLOMA சான்றிதழ் பெற்றதோடு சிறந்த கற்கை நெறியென பாராட்டியும் உள்ளனர். மாணவர்களின் விருப்புக்கேற்ற முறையில் நவீன உளவியல் அடிப்படையில் பாடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. மிக சிறந்த கல்வி நெறிக்கான கட்டணம் 350/- மாத்திரமே.*

*மேலதிக விபரங்கட்கு பாடநெறியை குறிப்பிட்டு தொடர்பு கொள்ளவும். (இப்பாடத்திற்கான ஆங்கில/சிங்கள ஒலிப்பதிவு நாடா CASSETTE உண்டு)*

**BUSINESS ENGLISH - வியாபார ஆங்கிலம்**

*வியாபார கடிதங்கள் எழுதும்முறை, உத்தியோக விண்ணப்ப படிவங்கள் எழுதும் முறை, கடிதங்களில் பாவிக்கப்படும் சிறந்த வாக்கிய அமைப்பு முறை, ஆங்கில நேரடி உரையாடல், தொலைபேசி உரையாடல் ஆகியவற்றை உட்படுத்திய இரண்டு மாத பாடத்திட்டம். இப்பாடத் திட்டத்திற்கான கட்டணம் 100/- மாத்திரமே.*

**EFFECTIVE ENGLISH WITH GRAMMAR**
**செயற்திறனுடைய ஆங்கில இலக்கணம்**

*பாடசாலை மாணவர்கட்கு பயன்தரக்கூடிய முறையில் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரையான மாணவர்கட்கான நூல் மாதாந்தம் வெளிவரவுள்ளது. விலை 50/- தொடர்ந்து பெறுபவர்கட்கு சலுகை கட்டணத்தில் வழங்கப்படும்.*

**வெற்றிக்கனி இதழ் 7 முதல் 16 வரை**

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாணவர்கட்கு 1995 புலமைப்பரிசில் வினாப்பத்திர அடிப்படையில் வெளிவர வுள்ளது. 1995 வினாவும் விடையும் வெற்றிக்கனி வழிகாட்டியாக வெளிவந்துள்ளது. விலை 25/-
வெற்றிக்கனி 1 முதல் 6 வரை தொகுப்புநூல் வெற்றிக் கனி களஞ்சியம் 250/- வெற்றிக்கனி இதழ் 7 முதல் 16 வரை தொடர்ந்து பெறவிரும்புவோர் தொடர்பு கொள்க.

**METHOD OF BOOK KEEPING**
**கடைக்கணக்கு எழுதும் முறை**

கடைக்கணக்கு முதல் கம்பனிக் கணக்கு வரை எவ்வாறு பேணப்படும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத்தரப்படும். இது ஆறுமாத Diploma பயிற்சி நெறியாகும்.

**G.C.E. (O/L) மாணவர்கட்கு கல்வி மஞ்சரி**

1996ல் க.பொ.த. சாதாரணதர பரீட்சை மாணவர் களுக்கு தமிழ்மொழி இலக்கியம், வரலாறும் சமூகக் கல்வியும், கணிதம், விஞ்ஞானம், வர்த்தகமும் கணக்கியலும், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் பாடப் பொழிப்பு, வினாவிடை நூல் விலை 100/-
தொடர்ச்சியாக மாதாந்தம் பெறும் மாணவர்கட்கு கழிவு உண்டு.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
**S-27, FIRST FLOOR, P.O.BOX 162 ,**
**COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,**
**COLOMBO - 11. T.P. 434770**

விரும்பும் பாடநெறி :....................
பெயர் :....................
விலாசம் :....................




படிப்பகம்

www.padippakam.com

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு நடந்ததாகக் கிடைத்த செய்தியொன்று தலைநகரில் பாதுகாப்பு வட்டாரங்களுக்கும் எட்டியிருக்கிறது.

யாழ் குடாநாட்டில்-சாவகச்சேரிக்கு சமீபமாக புலிகளது மென்ரக கிளைடர் விமானம் வானில் வட்டமிட்டுவிட்டு இறங்கியிருக்கிறது.

நூற்றுக்கணக்கான மக்கள் நேரில் பார்த்திருக்கிறார்கள்.

நேரில் கண்டவர்களில் சிலர் வவுனியா வந்து சொல்ல, அந்தச் செய்தி பாதுகாப்பு வட்டாரங்களின் செவிகளையும் எட்டியிருக்கிறது.

ஏற்கெனவே ஒரு தடவையும் கிளிநொச்சிப் பகுதியில் புலிகளது குட்டி விமானம் வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கப்பட்டது.

மக்கள் பார்க்கக் கூடியதாக தமது விமானத்தை புலிகள் பறக்க விட்டுக் காட்டியதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பின்னடைவால் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனங்களை களைவதற்கான ஒரு முயற்சியாகவும் அது இருக்கலாம்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டும் அவசியம் புலிகளுக்கு இருக்கிறது.

விமானப் பறப்புச் செய்தி, புலிகள் ஏதோ செய்யப்போகிறார்கள் என்ற நினைப்பை ஏற்படுத்தியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

அதேசமயம் தலைநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் வானை நோக்கியும் செய்யப்பட்டுள்ளன.

விமானம் மூலமாக தாக்குதல் நடத்துவதானால் முக்கியமான இலக்கொன்றைத்தான் புலிகள் தெரிவு செய்வார்கள்.

தாக்கிவிட்டு விமானம் திரும்பிச் செல்லமுடியும் என்ற உத்தரவாதம் இருக்காது.

தலைநகரில் பல நிலைகளில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஒன்றில் இருந்து தப்பித்தால் இன்னொன்றில் மாட்டிக்கொள்ள வேண்டியே ஏற்படும்.

புலிகளிடம் இருப்பதோ ஒன்று அல்லது இரண்டு கிளைடர் விமானங்கள் தான் என்று வைத்துக்கொண்டால், அவற்றை முக்கியத்துவமற்ற தாக்குதலில் இழக்க விரும்பமாட்டார்கள்.

அதனால் பிரதான இலக்கு ஒன்று தான் தேர்வு செய்யப்படும். விமானத்தில் இருந்து பாரசூட் மூலமோ, அல்லது விமானத்தோடோ தற்கொலைத் தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிடக்கூடும்.

அநேகமாக தலைநகரில் தான் அப்படியான ஒரு தாக்குதல் நடத்தப்படலாம் என்று நம்பப்படுகிறது.

வடக்கில் இராணுவ முகாம்கள்மீது தாக்குதல் நடத்த விமானத்தை பயன்படுத்த மாட்டார்கள். ஏனெனில் அதனால் தமது தாக்குதலை இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றமுடியாது என்று புலிகள் நினைக்கக் கூடும்.

தலைநகரில் தாக்கினால்தான் அரசுக்கும் நெருக்கடியை ஏற்படுத்தலாம். பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக அதிக படையினரை ஈடுபடுத்தும் தேவையையும் தோற்றுவிக்கலாம். வெளியுலகின் முன்பாகவும் உடனடியாகத் தெரியக்கூடிய தாக்குதலாகவும் அது இருக்கும் என்று புலிகள் கணக்குப் போடலாம்.

ஆகவே, புலிகளது விமானப் பறப்புச் செய்தி தலைநகரப் பாதுகாப்புக்குத்தான் அச்சுறுத்தல்.

புலிகளது குறியில், பட்டியலில் முதலாமிடத்தில் இருப்பவர்கள் இருவர். ஒருவர் ஜனாதிபதி சந்திரிக்கா, இன்னொருவர் அனுருத்த ரத்வத்த.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைதான் இன்றைய ஹுரோ. ஜனாதிபதி சந்திரிக்கா வெளியுலக ஆதரவைத் திரட்டிக் கொடுக்க, அனுருத்த ரத்வத்த வடக்கில் படை நடவடிக்கைகளுக்கு உற்சாகம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதியைவிட ரத்வத்தை மீதுதான் புலிகளுக்கு கோபம் அதிகம். ஆனால் ரத்வத்த பாதுகாப்பு விடயத்தில் கெட்டிக்காரராக இருக்கிறார். அவரது நடமாட்டங்கள் இரகசியமானவை.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின போல ரத்வத்தை அலட்சியமாக நடமாடுவதில்லை. தனது எதிரி யார் என்றும், எப்படிப்பட்டவர்கள் என்றும் ரத்வத்தைக்குத் தெரியும். அதனால் எந்நேரமும் விழிப்பாக இருக்கிறார். எங்கே இருக்கிறார் என்பதே கண்டுபிடிக்க முடியாத விஷயமாக இருக்கிறது.

எனவே, ஜனாதிபதி சந்திரிக்காவின் நடமாட்டங்களையே புலிகள் கூடுதலாக கவனிக்கக் கூடும். அவ்வாறு கவனித்த சிலரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதிமீது புலிகள் தாக்குதல் நடத்துவதானால் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு செய்தது போன்ற பாணியில் மேற்கொள்ள முடியாது.

அதுதவிர, ஜனாதிபதி கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்கூட கடைசிநேரம் வரை இரகசியமாகவே வைக்கப்படுகின்றன.

அதனால் வேறு விதமான தாக்குதல் உத்தியைப் புலிகள் பிரயோகிக்க முற்படலாம் என்று பாதுகாப்புத் தரப்பு உஷாராக இருக்கிறது.

வேறுவிதமான தாக்குதல் உத்திகள் எவையாக இருக்கலாம் என்று பட்டியலிட்டால், அதில் விமானத் தாக்குதல் உத்திக்கும் இடம் உண்டு.

அதனால் ஜனாதிபதி உட்பட முக்கியமானவர்கள் தங்கும் இடங்களை சுற்றிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதைவிட, முக்கியமானவர்கள் தங்கும் இடங்களைப் பற்றிய இரகசியங்களை பாதுகாப்பதே புத்திசாலித்தனம் என்ற கருத்தும் இருக்கிறது. படை உயரதிகாரி ஒருவர் அப்படித்தான் அபிப்பிராயம் சொல்கிறார்.

லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி போன்றவர்கள் விமானத்தாக்குதல் அபாயங்களுக்கு பலமுறை உள்ளானவர்கள்.

விமான எதிர்ப்பு ஆயுதங்களைவிட, அடிக்கடி தங்குமிடங்களை மாற்றிக் கொள்ளும் இரகசிய ஏற்பாடுகள் மூலமே அவர்கள் தப்பிக் கொள்ள முடிந்தது.

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் அப்படித்தான். அவர் எங்கே இருக்கிறார் என்று தெரிந்தால் இலங்கை விமானப்படையின் சகல விமானங்களும் அங்கு போய் குண்டுமழை பொழியத் தயாராக உள்ளன.

அடிக்கடி தனது தங்குமிடங்களை மாற்றிக்கொள்ளும் தந்திரம்தான் பிரபாகரனையும் பாதுகாப்பாக வைத்திருக்கிறது.

தற்போதைய நிலையில் சர்வதேச அளவில் உயிரபாயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள தலைவர்களது பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் ஜனாதிபதி சந்திரிக்காதான்.

புலிகளது விமானப் பறப்புச் செய்தி அவரது முதலாமிடத்தை மேலும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தைப் பிடித்து வைத்துக் கொண்டு நாடு அமைதியாக இருக்க முடியாது என்பதைத் தெரிவிக்க புலிகள் பல வழிகளில் முயல்வார்கள் என்பது இரகசியமல்ல.

யுத்தம் மக்களை மட்டுமல்ல தலைவர்களையும் நிம்மதி இழக்கச் செய்துள்ளது. தலைநகரையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

## சாவகச்சேரியில் புலிகளின் விமானம்!



# சந்திரசேகரனின் கணக்கு

நாரதர்

**அ**ப்படி என்னதான் ஏனைய தமிழ் கட்சிகள் சொல்லிவிட்டன! கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் ஏன் வருத்தப்படுகிறார்?

அதிகாரங்கள் போதாது என்றுதான் தமிழ் கட்சிகள் சொல்லியிருக்கின்றன. தீர்வு வேண்டாம், நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று அவை சொல்லவில்லை.

இன்னமும் சொல்லப் போனால், தமிழ் கட்சிகள் தமது நிலைப்பாடுகளை வலியுறுத்தும் வேகம் போதவில்லை; அறிக்கைகள் விடுவதோடு காரியம் முடிந்துவிட்டதாக நினைத்துக் கொள்கின்றன.

மூத்த தலைவர் "அடைந்தால் தமிழ்நாடு அல்லது சுடுகாடு," "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆளநினைப்பதில் என்ன குறை?" என்றெல்லாம் பேசி 1977இல் மகத்தான வெற்றியீட்டியவர் சிவசிதம்பரம்.

சமீபத்தில் கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி கொடுத்திருக்கிறார் சிவா. "அரசின் தீர்வு முயற்சிகளை தமிழ் கட்சிகள் குழப்பக் கூடாது" என்று சொல்லியிருக்கிறார்.

ஜனாதிபதிகூட தமிழ் கட்சிகளைப் பார்த்து சொல்லாத ஒரு விடயத்தை சிவா சொல்லியிருக்கிறார்.

வடக்கு-கிழக்கு பிரிக்கப்படக் கூடாது. என்ற வகையில் ஏனைய தமிழ் கட்சிகளையும் அரசியல் தீர்வு விடயத்தில் பொது நிலைப்பாட்டுக்கு கொண்டுவர வேண்டியவர் சிவசிதம்பரம்.

ஆனால் அவரோ "கிடைப்பதை பெற்றுக் கொள்ளுங்கள், வேறு எதுவும் கேட்டு தொல்லை கொடுக்காதீர்கள்" என்று புத்தி சொல்லப் புறப்பட்டிருக்கிறார்.

எல்லைகள் மாற்றப்படும் என்று சொல்கிறார் ஒரு அமைச்சர். ஜனாதிபதி நினைத்தால் பிராந்திய சபைகளைக் கலைக்கலாம் என்று சொல்கிறார் இன்னொரு அமைச்சர்.

தீர்வு யோசனைகளை சட்டரீதியாக அரசாங்கம் வெளியிட்டுள்ளது. அடுத்து பாராளுமன்ற தெரிவுக்குழு பரிசீலிக்கப்போகிறது.

அரசின் தீர்வு யோசனையின் சட்டபூர்வ வடிவம் கூட திருப்திதராத நிலையில், பாராளுமன்ற தெரிவுக்குழுவும் தனது பங்குக்கு என்ன செய்து முடிக்கப் போகிறதோ தெரியவில்லை.

தீர்வு யோசனை சட்டதீதியாக முன்வைக்கப்பட்டுவிட்டதாக அரசு சொல்லிக் கொண்டிருக்க, இனவாதிகள் புதிய வாதங்களைத் தொடுக்கப் போகிறார்கள்.

தமிழ் கட்சிகளும் மௌனமாக இருந்தால் என்னாகும்?

என்னவேண்டுமானாலும் ஆகட்டும், தமிழ் கட்சிகள் பார்த்துக்கொண்டிருந்தால் போதும் என்று சொல்கிறார் சிவா.

இதைச் சொல்வதற்கு சிவா தேவையில்லை. தினேஷ் குணவர்த்தனா போதும்.

போராட வேண்டிய நேரங்களில் விட்டுக் கொடுப்பது, வாதாட வேண்டிய தருணங்களில் வாயை சாத்திக்கொள்வது போன்ற அணுகுமுறைகள்தான் ஆபத்தானவை.

சிவாவுக்கு என்ன நடந்துவிட்டது? சிங்கத்துக்கு வயதானாலும் சீற்றம் குறைவதுண்டோ? ஆம் என்று பதில் சொல்ல வைத்துவிட்டாரே!

* * *

**யா**ழ்ப்பாணத்தில் படையினரின் நடவடிக்கைகளில் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களும் இணைந்திருக்கலாம் என்ற சந்தேகம் புலிகளுக்கு இருக்கிறது.

ஆனால், இன்றுவரை எந்தவொரு தமிழ் கட்சியும் யாழ்ப்பாண இராணுவ நடவடிக்கையில் பங்கு கொள்ளவில்லை.

படையினர் கைப்பற்றியுள்ள பகுதிகளுக்கு செல்வதில் தமிழ் கட்சிகள் ஆர்வம் காட்டுவது மட்டுமே உண்மை.

அதற்கு ஒரு எச்சரிக்கை செய்வதைப் போலத்தான் கடந்தவாரம் நெடுந்தீவில் புலிகள் ஒரு தாக்குதல் நடத்தினார்கள்.

நான்குபுறமும் கடலால் சூழப்பட்ட நெடுந்தீவு-ஈ.பி.டி.பி. இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

ஐந்து அல்லது ஆறு பிளாஸ்டிக் படகுகளில் நூறு பேர் வரையான புலிகள் சென்று தாக்குதல் நடத்தினார்கள். ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் திருப்பித் தாக்கினார்கள். சுமார் 5 மணிநேரம் மோதல் இடம்பெற்றது.

ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் நின்றால் கடல் மூலமாக சுற்றிவளைக்கப்படலாம் என்பதால் புலிகள் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

ஈ.பி.டி.பி தரப்பில் இருவர் பலியானார்கள். புலிகள் தரப்பில் மூவர் காயமடைந்தனர்.

ஏனைய தமிழ் கட்சிகளும், ஈ.பி.டி.பியும் யாழ்ப்பாணத்திற்கு செல்வதை அச்சுறுத்துவதுதான் புலிகளது நோக்கம்.

இதேவேளை கிழக்கில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் உதவிசெய்ய ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கம் முன்வந்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தல் பிரசாரத்தில் படைத்தரப்போடு இணைந்து செயற்படுவதாக ஏனைய தமிழ் அமைப்புக்கள் மீது குற்றம்சாட்டியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

அப்போதிருந்த ஐ.தே.க. அரசாங்கம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை ஒதுக்கி வைத்திருந்தது. அதனால் 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்ற ரீதியில் ஏனைய தமிழ் கட்சிகளை சாடியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

தற்போது வாய்ப்புக் கிடைத்துள்ளதால் கிழக்கில் புலிகளை ஒரு வழி பண்ண உதவி செய்யப் புறப்பட்டிருக்கிறது.

கிழக்கில் காடுகள் பற்றிய விபரமறிந்த சில உறுப்பினர்களை முதல்கட்டமாக படையினருடன் கலந்து இறக்கிவிட சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே ஈ.பி.ஆர்.எல்.எஃப். தான் கடந்த சிலவாரங்களுக்கு முன்பாக போர் நிறுத்தம் கேட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்க விஷயம். இப்போது போருக்கு ஆள் விநியோகம் செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் கட்சிகளின் விமர்சனங்கள் எல்லாம் 'எனக்கும் கிடைத்தால் சரிதான், இல்லாவிட்டால்தான் விமர்சனம்' என்ற பாணியில்தான் இருக்கின்றன.

* * *

**ம**லையகத்தில் பொதுவான சுயேச்சைக் குழுவை நிறுத்திப் போட்டியிட சந்திரசேகரன் தயாராக இருக்கிறார்.

இ.தொ.காவுக்கு அதிக இட ஒதுக்கீடு செய்து ஆசனங்களைப் பகிரவும் தயார் என்று தனக்கு நெருக்கமான வட்டாரங்களில் சொல்லியிருக்கிறார்.

மலையக மக்கள் முன்னணிக்கு அதனால் என்ன லாபம்? மலையக மக்கள் முன்னணியை கவனத்தில் எடுக்கவே தேவையில்லை என்று சொல்லிக் கொண்டிருந்த இ.தொ.கா. இப்போது கூட்டுக்கு வரத்தயாராக இருப்பதே பெரிய வெற்றிதான் என்று கணக்குப் போடுகிறது மலையக மக்கள் முன்னணி.

இ.தொ.காவுக்குள் மலையக மக்கள் முன்னணியும் சந்திரசேகரனும் பரம விரோதிகள் என்று இனிச் சொல்ல முடியாமல் போகும்.

இ.தொ.கா உறுப்பினர்களோடு சந்திரசேகரன் ஆட்கள் நெருக்கமாகவும் ஒரு வாய்ப்பிருக்கும்.

அந்த உறவு மலர்ந்து கனிந்து நல்ல நிலையில் இருந்தால் தொண்டாவின் பின்னர் இ.தொ.காவில் கணிசமான பகுதி சந்திரசேகரனை நோக்கி வரலாம் என்று புத்திச்சாலித்தனமான கணக்குப் போடப்படுகிறது.

ஒன்று கலப்பது என்பது தற்போதைக்கு நடக்கமுடியாத விஷயம்.

தேர்தலில் கூட்டு சாத்தியமாகலாம். சாத்தியமாகாவிட்டாலும் கூட கூட்டுக்காக செய்யப்பட்ட முயற்சிகள் தமக்கு சாதகமாக அமையும் என்பது மலையக மக்கள் முன்னணியின் எதிர்பார்ப்பு.

இந்த இரு தரப்புக்கும் அப்பால் மலையக தமிழ் மக்களது நலன்கள் குறித்து அக்கறையுடையவர்கள், இ.தொ.காவும், மலையக மக்கள் முன்னணியும் ஒன்று கலக்காவிட்டாலும் பொது விடயங்களில் இணைந்து செயற்பட்டாலே போதும். பல காரியங்களை சாதிக்கலாம். இல்லாவிட்டால் மலையக மக்களது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்கிறார்கள். அதுதான் உண்மையும்கூட.



# அதிரடி அய்யாத்துரை



**யா**ழ்ப்பாணம் போகவேண்டும் எண்டு மேலிடத்தைகேட்டு ஒரே நச்சரிப்பாம். அப்படியானால் முதலில் கிழக்கில் ஒரு கை தாருங்கோ; திறமையைப் பார்த்து யாழில் சான்ஸ் தருவோம் எண்டு கூறப்பட்டதாம். ஓ.கே. சொல்லிப்போட்டார்களாம். யார் எண்டு தெரியுமோ? வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முன்னாள் அதிகாரக் கட்சியினர்தான்.

**ம**லைப்பகுதி தனித்துவமானவர் அதிகாரமுள்ள 'சக்தி'யோடு நடத்திய பேச்சு திருப்தியாய் முடியேல்லையாம். தனித்துவக் கட்சி உரிய முறையில் நடக்கவில்லை. 'சக்தி' போட்டியிட்ட தேர்தலிலும் முழு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை எண்டு பழைய கதைகளை 'சக்தி' சுட்டிக்காட்ட தனித்துவ தலைவர் முகம் கறுத்துப்போனாராம். பழைய பிரச்சனை ஆய்விலையே நேரம் போய்விட்டதால் புதிய பிரச்சனை பேச வேறு ஒருநாள் குறிக்கப்பட்டதாம்.

**அ**திகார மட்டக் கூட்டங்களின் உள்விஷயங்கள் பத்திரிகைகளுக்கு கசியும் விடயத்தால் 'சக்தி'யானவர் கசப்படைந்துள்ளாராம். அதிகாரமுள்ள ஒருவருக்கு 'டோஸ்' விழுந்ததாம். அப்படி டோஸ் விழுந்த சங்கதியும் மறுநாள் ஆங்கிலப்பத்திரிகையில் வந்ததுதான் நெத்தியடி.

**வ**வுனியாவுக்கு போய் மக்களைச் சந்தித்தாராம் கூட்டான கட்சியின் நிலத்தார். பெரிய பொட்டு வைத்த ஒருத்தரை நிலத்தார் கூட்டிக்கொண்டு போனவராம். 'ஐயா வாறார், ஐயா வாறார்' எண்டு சொல்லிக் கொண்டு முன்னாலை போவதுதான் அவருக்கு இடப்பட்ட பணியாம். இட்ட பணியை கச்சிதமாய் அவர் செய்து முடித்தாலும், ஐயாவைச் சனம் கேள்வி கேட்டு துளைச்சுப் போட்டுதுகளாம். போனவேகத்திலை திரும்பிவந்து போட்டார்.

**வ**வுனியாவிலை ஒரு கடும் நோயுள்ள சிறுவனுக்கு கொழும்பு வர அனுமதி கொடுப்பதில் தாமதம் செய்யப்பட்டது. பின்னர் பலர் எடுத்துச் சொல்ல அதிகாரிகள் மனம் இரங்கி அனுமதி கொடுத்திருந்தவையாம். முகாமுக்கு போன நிலமானவருக்கு யாரோ அதனைச் சொல்லிப் போட்டினம். அதிகாரிகளைக் கூப்பிட்டு ஒரு துள்ளுத் துள்ளிப்போட்டு வந்திட்டார். நிலமானவர் போனகையோடை சிறுவனைக் கூப்பிட்ட அதிகாரிகள் என்ன செய்தவை தெரியுமோ? சிறுவனுக்கு கொழும்பு செல்ல கொடுத்திருந்த அனுமதியை வாங்கிக் கிழிச்சுப் போட்டினமாம். உள்ளதையும் கெடுத்த கதை.

**பு**துவருசம் பிறந்தபிறகு தடை அரண்களில் நின்றவர்கள் வாகனங்களை மறிச்சுக் கொண்டிருந்தவை. 'பத்திரிகை' எண்ட பெயர் பலகையோடு செல்லும் வாகனங்களும் மறிக்கப்பட்டன. வாகனத்தில் இருந்தவை அடையாள அட்டை காட்ட முற்பட, "உது வேண்டாம் கலண்டர், டயறி ஏதாவது இருக்குதோ?" எண்டு கேட்கப்பட்டதாம். சகல சென்றிகளிலும் கேட்கப்பட்ட பொதுக் கேள்வி அது. புதுவருசத்தில் அடையாள அட்டையைவிட அழகான கலண்டர் உதவும்!

**வ**ன்னியிலை குறைந்த விலைக்கு காணிகளை வளைச்சுப்போடும் விஷயத்திலை பசையுள்ள பலர் கடும் முயற்சியில் இறங்கியிருக்கினமாம். யாழ்ப்பாணத்திற்கு திரும்பிச் செல்ல காலம் எடுக்கும். அந்த நேரத்திலை நல்ல லாபம் வைத்து விற்றுப் போட்டுப் போகலாம் எண்டு நினைக்கினமாம்.

**வா**னொலியிலை புதிய அலைவரிசை வந்திருக்கல்லோ. அறிவிப்பாளர்கள் விடயத்திலும் அவதானமாக இருக்கிறது நல்லது. அல்லது அலைவரிசைகள் அறுவரிசைகளாக மாறிப்போடும். செய்தி வாசிப்புக்களும் வரவர திணறல் வாசிப்பாக மாறிவருகிறது. தவறுக்கு வருந்துவதும் கிடையாது.

**தொ**லைக்காட்சி நாடகம் ஒன்றில் இன ஒற்றுமையை வளர்க்க தமிழும் சிங்களமும் கலந்து காட்சிகள் போடப்படுகிறது. பிராங் புஸ்பநாயகம் மட்டும் தமிழில் இயல்பாக நடிக்கிறார். ஏனையோர் தமிழை டமிளாகப் பேசி சீரியஸான வசனங்களிலும் சிரிப்பு வரச் செய்கிறார்கள். நடிகர்களுக்கும் பஞ்சமோ? நல்ல நாடகமும் நடிகர்களால் கெடும் என்பதற்கு உதாரணம்.

**ப**தவி ஆசையின் ஆரம்பம் எங்கே இருக்கிறது? இவர் சொல்வது சரியா பாருங்கள்:

**ஆசை**

பேருந்துகளில்
இடம்பிடிக்க
மக்கள்
போட்டி போடுவதிலிருந்தே
ஆரம்பமாவதுதான்
பதவி ஆசை.

(கே. செல்வகுமார்)


படிப்பகம்

www.padippakam.com

# 62 அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# கொள்ளைகளும்— மாட்டிவிடும் தந்திரங்களும்

## அரசியல் தொடர் அற்புதன்— எழுதுவது

### கண்டனம்

சகல இயக்கங்களும் கொள்ளை நடவடிக்கைகளை கண்டித்தன. கொள்ளைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

கொள்ளை நடவடிக்கைகளை கண்டித்து தமிழீழ இராணுவம் (TEA) ஒரு காரசாரமான துண்டுப்பிரசுரம் வெளியிட்டிருந்தது.

அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது இதுதான்:

"வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதை போல தமிழ் மக்களால் போற்றிப் பாதுகாத்து பேணி வளர்க்கப்பட்ட இயக்கங்கள் இன்று தமிழ் மக்கள் மீதே பாய்ந்துவிட்டன. எமது போராட்டத்தின் மூலவேரையும் ஆட்டம் காணச் செய்துவிட்டன.

மக்களே எமது பலம், மக்களே எமது மூச்சு, மக்கள் விடுதலையே எமது இலட்சியம், மக்களே கிளர்ந்தெழுங்கள் என்றெல்லாம் வார்த்தைக்கு வார்த்தை மக்கள், மக்கள் என்று கோஷமிட்டவர்கள் இன்று தம் மக்களையே மேயத் தலைப்பட்டுவிட்டனர்.

புத்தூர் கொலை, கொள்ளைகளில் சி.ஐ.ஏயின் கைவண்ணம் தெரியுதென்பர்.

காரைநகர் வேலை மொசாட்தான் என்பர். இந்த சி.ஐ.ஏ பூச்சாண்டி எத்தனை நாள்தான் வேலை செய்யும்.

மக்களே! விடுதலைப் போராட்டத்தை சிதறடிக்கும் எத்தர்களை இனம்கண்டு நிராகரியுங்கள்."

அதுதான் தமிழீழ இராணுவத்தினர் வெளியிட்ட துண்டுப் பிரசுரம்.

அவர்கள் மறைமுகமாகத் தாக்கியது ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை.

இப்பிரசுரம் வெளியான சில நாட்களின் பின்னர் நடைபெற்ற ஒரு சம்பவத்தை சொல்கிறேன்.

### மின்கம்பப்பூசை

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரை இரு இளைஞர்கள் வழிமறித்தனர்.

மோட்டார் சைக்கிளை தம்மிடம் தந்துவிடுமாறும், பின்னர் திருப்பி தருகிறோம் என்றும் சொன்னார்கள்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர் புத்திசாலி. அவர் மறுக்கவில்லை. வாருங்கள் தம்பி, வீட்டில் வைத்து தருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

வீட்டுக்குப் போனார்கள் இளைஞர்கள். அயலவர்களை திரட்டி வைத்திருந்த மடக்கிப்பிடித்தார் இளைஞர்களை. கடும் பூசைக்குப் பின்னர் அந்த இளைஞர்கள் தமது இயக்கப் பெயரை சொன்னார்கள்.

"நாங்கள் 'தமிழீழ இராணுவம்'." ஒரு மின்கம்பத்தில் அந்த இளைஞர்களை கட்டி வைத்தனர் ஊர்மக்கள்.

சம்பவத்தைக் கேள்விப்பட்டு ஒரு வேனில் வந்தனர் தமிழீழ இராணுவத்தினர். மக்கள் பார்க்கக்கூடியதாக அந்த இளைஞர்களுக்கு நாலு சாத்துச் சாத்திவிட்டு தமது வேனில் ஏற்றிச் சென்றுவிட்டனர்.

### தனியாரிடம் கொள்ளை

புத்தூரில் நடைபெற்ற கொள்ளை தொடர்பாக தமிழீழ இராணுவம் கண்டித்திருந்தது அல்லவா.

அக்கொள்ளை நடவடிக்கை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்டது.

தனியார் வீடொன்றில் நடைபெற்ற அக்கொள்ளை நடவடிக்கையில் அந்த வீட்டு உரிமையாளரான இராசதுரை ஸ்ரீஇராமச்சந்திரன் என்பவர் கொல்லப்பட்டார்.

தனிப்பட்ட கொள்ளையர்கள்தான் வீட்டுக்குள் வருகிறார்கள் என்று நினைத்துவிட்டார் இராமச்சந்திரன். அதனால்தான் எதிர்ப்புக்காட்டினார்.

அதனால் இராமச்சந்திரன் கொல்லப்பட்டார். அதன்பின்னர் காரைநகரில் உள்ள ஒரு வீட்டிலும் கொள்ளையிடப்பட்டது. அதுவும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால்தான் மேற்கொள்ளப்பட்டது.

அரியாலையில் உள்ள பிரபல வர்த்தகர் வீடொன்றும் கொள்ளையிடப்பட்டது. பல லட்சம் ரூபாய்கள் பெறுமதியான நகைகளோடு ஆயுதம் தாங்கியவர்கள் பறந்துவிட்டார்கள். அரியாலை கொள்ளை நடவடிக்கை புலிகள் இயக்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

புலிகள் இயக்கத்திலும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திலும் தனியார் கொள்ளைகளில் ஈடுபடுவதற்காக இரகசியமான அணிகள் இருந்தன.

அந்த இயக்கங்களில் இருந்த ஏனையோருக்கு தமது இயக்கத்தினர்தான் கொள்ளைகளில் சம்பந்தப்படுகிறார்கள் என்பது தெரிந்திருக்கவில்லை.

### கச்சேரிக் கொள்ளை

யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் ரெலோவின் முகாமுக்கு அருகில் இருந்த இரண்டு வீடுகளில் ஒரே இரவில் கொள்ளையிடப்பட்டது.

கொள்ளையை நடத்தியவர்கள் புலிகள். கொள்ளை நடிவடிக்கைக்கான குழுவை அனுப்பிவைக்கும் போது கிட்டு சொன்னது இது:

"சில நேரங்களில் மொட்டையன் வருவான். சுட்டுப் போடவேண்டாம். துப்பாக்கியைக் காட்டி குப்புறப் படுக்க வையுங்கள்".

கிட்டு மொட்டையன் என்று குறிப்பிட்டது, புலிகள் இயக்க அரியாலைப் பொறுப்பாளராக இருந்த பிரேமை. மொட்டைப்பிரேம் என்று அவர் அழைக்கப்படுவது வழக்கம்.

கொள்ளையை நடத்துவது தமது ஆட்கள் என்று தெரியாமல் பிரேம் தலையிட்டாலும் என்றுதான் அந்த முன்னெச்சரிக்கை.

ரெலோ முகாமுக்கு அருகில் கொள்ளைகள் நடந்தமையால், ரெலோதான் கொள்ளை அடித்திருக்கலாம். அவர்களது சென்றி இருக்கக் கூடியதாக வேறு யாரும் செய்திருக்க முடியாது என்று மக்கள் நினைத்துக் கொண்டனர்.

அப்படி நினைக்கட்டும் என்றுதான் ரெலோ முகாமுக்கு அருகில் உள்ள வீடுகள் புலிகளால் தெரிவு செய்யப்பட்டன.

அரியாலைப் பொறுப்பாளராக அப்போதிருந்த 'மொட்டைப் பிரேம்' தற்போது கனடாவில் இருக்கிறார். தற்போது அவர் ஒரு கனடா பிரஜை.

### சிறுப்பிட்டிக் கொள்ளை

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுப்பிட்டி பகுதியிலும் ஒரு கொள்ளை நடைபெற்றது.

சிறுப்பிட்டி ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் கோட்டையாக இருந்தது.

சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக ஈ.பி.ஆர்.எல்.எஃப். பல போராட்டங்களை நடத்தியது.

சிறுப்பிட்டியிலும் அவ்வாறான போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதனால் சிறுப்பிட்டியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பலமாக இருந்தது.

சிறுப்பிட்டியில் உள்ள வீடொன்றில் கொள்ளையடிக்க திட்டமிட்டார்கள் புலிகள்.

ஆறு பேர் கொண்ட குழுவொன்று அதற்காக தயாராக்கப்பட்டது. ஆறு பேரும் புலிகளது உளவுப்பிரிவைச் சேர்ந்தவர்கள். அப்போது உளவுப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவர் வாசு.

ஆறு பேரிடமும் இருந்த சயனைட் குப்பிகளை வாங்கிக் கொண்டார் வாசு. "கொள்ளையடிக்கும் போது ஒருவரோடு ஒருவர் பேசும்போது 'தோழர்' என்று அழைத்துக் கொள்ளுங்கள். மறக்க வேண்டாம்" என்று சொல்லியனுப்பினார் வாசு.

'தோழர்' என்ற பதம் பாவிக்கப்பட்டால் அது ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீது சந்தேகம் வரச்செய்யும் என்று வாசு நினைத்தார்.

கொள்ளைக்கு சென்று கொண்டிருந்த போது, சிறுப்பிட்டியில் சென்றிக்கு நின்ற புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் வாகனத்தை மறித்திருக்கிறார்.

வாகனத்தில் இருந்து இறங்கியவர்கள் அவரை மடக்கி நல்ல சாத்துப்படி கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள்.

தன்னைத் தாக்கியவர்கள் தனது இயக்க உளவுப்பிரிவினர் என்பது அடிபட்டவருக்கு தெரியவே தெரியாது.

### தோழர்கள்

ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தினர் நடத்திய தனியார் கொள்ளைகளில் பங்குபற்றும் குழுவினருக்கு ஒரு கண்டிப்பான உத்தரவு வழங்கப்படுவது வழக்கம்.

"எக்கட்டத்திலும் மறந்தும் கூட தோழர் என்ற வார்த்தையை உச்சரிக்க வேண்டாம்." என்றுதான் அந்த உத்தரவு.

அப்படியிருந்தும் கூட அவசரத்திலும், பதட்டத்திலும் பழக்கதோஷம் காரணமாக 'தோழர்' என்று அழைத்துத் தொலைத்த சம்பவங்களும் உண்டு.

அதுவும் ஒருவகையில் நல்லதாகப் போனது. எப்படி என்கிறீர்களா?

ஈ.பி.ஆர்.எல்.எஃப் முகாமுக்கு ஓடி வந்து முறையீடு செய்யப்படும்.

"கொள்ளையிட்டவர்களில் ஒருவர் இன்னொருவரை 'தோழர்' என்று அழைத்தார்." என்று சொல்வார்கள் முறையீட்டாளர்கள்.

அதைக்கேட்டுவிட்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக பதில் கூறுகிறவர் சொல்வார்: "பார்த்தீர்களா,பார்த்தீர்களா எங்கள் ஆட்கள் என்றால் 'தோழர்' என்ற வார்த்தையை இப்படிப்பட்ட நேரத்தில் பயன்படுத்தி இருக்க மாட்டார்கள் அல்லவா? எம்மை மாட்டிவிட நினைக்கும் ஏதோ ஒரு இயக்கம்தான் செய்திருக்க வேண்டும்."

மக்களுக்குள் பெரிய குழப்பம். சகல இயக்கங்களும் தனியார் வீடுகளில் நடக்கும் கொள்ளைகளைக் கண்டிக்கின்றன.

அப்படியானால் யார்தான் காரணம்?

ஏதோ ஒரு இயக்கம்தான் செய்கிறது என்பது மட்டும் மக்களுக்கு புரிந்தது.

ஆனால் ஒன்று, யாழ்ப்பாணத்தில் பெரும் பணக்காரர்களாக இருந்தவர்களது வீடுகளில்தான் கொள்ளைகள் நடத்தப்பட்டன.



வடக்கு-கிழக்கில் வங்கிகள் மூடப்பட்டு இருந்தன. இருந்த சில வங்கிகளும் பலத்த பாதுகாப்புடன் இருந்தன.

இயக்கங்களுக்கு தமது உறுப்பினர்களை பராமரிக்கவும், ஏனைய தேவைகளுக்கும் பெருமளவு நிதி தேவைப்பட்டது.

நிதித் தேவையை நிறைவு செய்ய பெரும் பணக்காரர்கள் குறிவைக்கப்பட்டனர்.

தவறாகப்பட்டாலும் சில நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவையாக இருந்தன. என்பதும் மறுப்பதற்கில்லை.

### கலைஞர் முழக்கம்

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் ஒரு பேரணி நடைபெற்றது.

பேரணியில் ஒரு சித்திரம் காணப்பட்டது. ராஜீவ் காந்தியும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் கட்டித் தழுவிக் கொண்டிருக்க எம்.ஜி.ஆர். அதனை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருப்பதுபோல அந்தச் சித்திரம் வரையப்பட்டிருந்தது.

பேரணியில் வானைமுட்ட எழுந்த கோஷம் இது: "காப்போம், காப்போம், ஈழத் தமிழர்களைக் காப்போம். மலரட்டும், மலரட்டும், தமிழீழம் மலரட்டும்."

பேரணியின் முடிவில் கலைஞர் கருணாநிதி உரையாற்றினார்.

"தமிழீழம் என்ற தனிநாடு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் ஏற்கவில்லை என்று ராஜீவ் காந்தி கூறியிருக்கிறார். ஜெயவர்த்தனாவின் வாயிலிருந்து வரவேண்டியது, அவருக்குச் சிரமம் இல்லாமல் ராஜீவ் காந்தியின் வாயிலிருந்து வந்திருக்கிறது." என்று கூறிய கருணாநிதி, ஒரு கட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டு, "இலங்கைத் தமிழர்களுக்காக ஆயுதம் ஏந்தவும் தயார்" என்று கூறியபோது மைதானம் அதிர கரகோசம் எழுந்தது.

### ஈரோசின் அறிக்கை

ஈரோஸ் இயக்கத்தின் தலைவர் என்று வே.பாலகுமாரின் பெயரையே பத்திரிகைகள் வெளியிட்டுவந்தன.

ஈரோஸ் சார்பாக பாலகுமார் அடிக்கடி கருத்துக்கள் சொல்லிக் கொண்டிருந்தார். அதனால் அவர்தான் தலைவர் என்று கருதப்பட்டார்.

அதனால் ஈரோஸ் இயக்கத்திற்குள் சில புகைச்சல் ஏற்பட்டுவிட்டது.

விளைவு, ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

"ஈரோஸ் தனிமனித தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் அமைப்பல்ல. ஜனநாயக அடிப்படையில் கூட்டுத் தலைமைத்துவத்தையே நாம் கொண்டிருக்கிறோம். திரு.பாலகுமார் ஈரோசின் அதி உயர் தலைமைப் பீடமான புரட்சிகர நிறைவேற்றுக் குழுவில் இருக்கிறார். அமைப்பின் நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருக்கிறார்.

ஆனால் சில பத்திரிகைகள் அவரை வெறுமனே பேச்சாளராகவும், வேறு சில பத்திரிகைகள் அவரது தனித்தலைமைதான் ஈரோசை வழி நடத்துவதாகவும் கூறிவருகின்றன. இவை தவறான கருத்துக்களாகும்."என்றது அறிக்கை.

### நடைபவனி

1985 இன் பிற்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் நடைபவனி ரோந்துக்களை மேற்கொண்டு வந்தனர்.

கண்ணிவெடித் தாக்குதல்களில் இயக்கங்கள் கூடுதலான தேர்ச்சி பெற்று வந்தமையால், வாகனங்களை தவிர்த்துவிட்டு நடை பவனியை ஆரம்பித்தது இராணுவம்.

எனினும், நடைபவனி ரோந்தும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தான் நடைபெற்றது.

இயக்கங்களின் கைகள்தான் யாழ்ப்பாணத்தில் ஓங்கத் தொடங்கியிருந்தன.

யாழ்ப்பாணக்குடாநாடு மெல்ல, மெல்ல படையினரின் கட்டுப்பாட்டை விட்டு விலகியது.

அக்கட்டத்திலும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா சொன்னது இது:

"இன்னும் ஒரு வருட காலத்திற்குள் பயங்கரவாதிகளை முறியடித்து விடுவோம்."

ஜே.ஆர்.சொல்லி வாய்மூடுவதற்கு இடையில் மட்டக்களப்பில் கண்ணி வெடிகள் வெடித்தன. (தொடர்ந்து வரும்)

## வை. 8 மீது 'ஒலிகன்' தாக்குதல்

18.11.95 அன்று காலை 7.40 மணியளவில் பலாலி படைத்தளத்திற்கு சம்பமாகவைத்து வை.8.ரக விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

பலாலி படைத்தளத்தில் இறங்குவதற்காக கடற்பரப்பின் மேலாக தாழப் பறந்தபோதே வை. 8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

ஒலிகன் ரக சிறு பீரங்கிகளால் கடலில் படகில் இருந்து புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

முல்லைத்தீவுக் கடலில் ஐரிஸ்மோனா கப்பலை பணயமாக வைத்து இரண்டு போராப் படகுகளை புலிகள் தாக்கினார்கள் அல்லவா. அவற்றில் இருந்து நான்கு ஒலிகன் பீரங்கிகளை புலிகள் கைப்பற்றியிருந்தார்கள். அவற்றின் மூலமே வை 8 சுட்டு வீழ்த்தப்பட்டது.



போராப் படகில் கைப்பற்றப்பட்ட ஒலிகன் ரக பீரங்கிகளை புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் பார்வையிடும் காட்சி தான் படத்தில் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது – இராஜதந்திரி

# சூரிய நமஸ்காரத்துக்கு ஆப்பு வைத்த 'ஒப்பரேஷன் சூரியக்கதிர்'

வருடந்தோறும் தமது வீட்டு முற்றங்களில் கோலமிட்டுப் பொங்கும் வடபகுதித் தமிழர்களில் எத்தனைபேர் இத்தடவை பொங்கல் பெரு நாளைக் கொண்டாடினார்கள் என்பதே கேள்வி.



லட்சக்கணக்கான தமிழ் மக்கள் தமது வீடு வாசல்களைவிட்டு வெளியேறி அகதிகளாக உள்ளனர். இந்நிலையில் தமது வாழ்வில் ஒரு புதிய ஆரம்பத்தைக்குறிக்கும் தைப்பொங்கல் திருநாளை மனதாரக் கொண்டாடும் நிலையிலோ அல்லது அப்பண்டிகையைப் பற்றி நினைக்கும் நிலையிலோ வடக்கு-கிழக்கின் மக்கள், குறிப்பாக வடபகுதி மக்கள் இன்றில்லை என்பது மட்டும் தெளிவு.

சூரியனுக்குப் பொங்கலிட்டு வணங்குவதே தைப்பொங்கல்.

ஆனால் 'சூரியக்கதிர்' என்ற பெயரில் ஆயுதப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை, இந்த ஆண்டு தமிழர்களையும், அவர்களது சூரியநமஸ்காரத்தையும் பாழாக்கிவிட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தமது அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைக்கப்போவதாகச் சொல்லியிருந்தார். அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தை மாதமே தமிழர்களுக்குரிய முதன்மையான மாதம். எனவே அம்மாதத்தில் அரசியல் தீர்வு யோசனைகளை முன்வையுங்கள் என்று ஜனாதிபதியிடம் கேட்டிருந்தனர்.

இது தவிர கடந்தவாரம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் விடுத்திருந்த வேண்டுகோளொன்றில், அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைகளைக் குழப்ப வேண்டாம் என்று ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளிடம் கேட்டிருந்தனர்.

ஆனால் இந்த வேண்டுகோள் விடுக்கப்படவேண்டியவர்கள் தமிழ் அரசியலாளர்களல்லர். தென்னிலங்கையின் பேரினவாதக் கும்பல்களை நோக்கியே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்த வேண்டுதலை விடுத்திருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் அரசியல் தீர்வுத் திட்டங்கள் எவ்வாறு தட்டிக்கழிக்கப்பட்டுவந்தன, தமிழ் மக்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டார்கள்-வஞ்சிக்கப்பட்டார்கள் என்பதனை தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்குச் சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

பண்டா-செல்வா ஒப்பந்தம் நிறைவேறியிருந்தால் இன்று இந்த நாட்டில் இரத்தக்களரிக்கு இடமிருந்திராது என்று கூறும் ஒரு சாராரும் இருக்கின்றனர்.

ஆனால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை முன்வைக்கத் தயாராக இருந்த சந்திரிகாவின் தந்தையார் பண்டாரநாயக்கா தமது கையாலேயே அதனை தமது வீட்டு வாசலில் வைத்துக் கிழித்தெறிந்தார்.

இதன் பின்னர் ஏற்பட்ட தீர்வு ஒப்பந்தங்களுக்கும் இதே கதியே ஏற்பட்டன. இந்நிலையில் தமிழர்களுடைய உரிமைகளை ஆட்சியாளர்கள் வழங்க முன்வந்தாலும் பேரினவாதிகள் அதனைக் குழப்பும் வகையில் தம்மைக்கூர்மையாக வைத்துள்ளார்கள் என்பதே கடந்தகாலங்களில் நிதர்ஷனமாகியுள்ளது.

1977ம் ஆண்டு பொதுத்தேர்தல் பிரசாரத்தின்போது தனிநாடு, தமிழீழம் என்ற கோரிக்கைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியே உரமூட்டியிருந்தது. இதன் அடிப்படையிலேயே அன்று கூட்டணி பெருவெற்றியையும் பெற்றிருந்ததுடன் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாகவும் இடம் பிடித்தது.

ஆனால் காலப்போக்கில் ஜே.ஆர்.அரசாங்கம் கொண்டுவந்த மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்கவும் கூட்டணியினர் முன்வந்திருந்தனர்.

தமிழீழம், தனிநாடு, சமஷ்டி என்றெல்லாம் முழங்கியவர்கள் மாவட்ட அபிவிருத்திசபை என்ற குறைந்தளவிலான ஒரு தீர்வுத்திட்டத்தை ஏற்க முன்வந்திருந்தனர்.

இருந்தபோதிலும் அவர்கள் தமிழீழம், தனிநாடு என்று மூட்டி விட்ட தீ, யாழ்ப்பாணத்தில் நன்கு உள்ளார்ந்தமாக எரியவே ஆரம்பித்திருந்தது.

இன்று சுமார் இரு தசாப்தங்களுக்குப் பின்னர் அரசியல் வானில் ஒலிக்கும் கூட்டணியினரின் குரல்கள், தமிழீழம், தனிநாடு என்பவைபற்றி எதனையும் குறிப்பிடாததாக இருக்கின்றது.

விரிவான முறையில் அரசியல் புத்திஜீவிகள் மட்டத்தில் தயாரிக்கப்பட்ட பல தீர்வுத்திட்டங்கள் கடந்த காலங்களில் எவ்வாறு கிழித்தெறியப்பட்டன என்பதையும் கூட்டணியினர் நன்கு அறிந்திருக்கவேண்டும்.

அத்துடன் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவதாகவும் இருக்கின்றது.

அரசியல் தீர்வு யோசனைகளை ஆட்சியாளர்கள் கொண்டிருக்கலாம்; அத்தீர்வுயோசனைகள் கடந்த கால தீர்வுகளை விட மேம்பட்டத்தாகவும் இருக்கலாம். ஆனால் அத்தீர்வுயோசனை எவ்வளவு தூரம் நாட்டுமக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும்? அத்தீர்வுயோசனைகளில் உள்ள அம்சங்கள் எவ்வளவு தூரம் வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்கு ஏற்புடையவையாக இருக்கும்? என்பவையே பிரதானகேள்விகளாக உள்ளன.

அரசாங்கம் தீர்வுயோசனைகளில் பலவற்றைத் தெரிவித்துள்ளது.

ஆனால் அந்த யோசனைகளில் அரசியல் தீர்வின் அடிப்படை அம்சமான வடக்கு-கிழக்கு இணைப்புக்குறித்து எதுவும் உறுதியாக இல்லை.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பே தீர்வுத்திட்டத்தின் மூலாதாரமாக இருக்கவேண்டியதாகின்றது.

அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும், இந்த வடக்கு-கிழக்கு இணைப்பையே வலியுறுத்தி நிற்கின்றன.

ஆனால் சந்திரிகா அரசாங்கம் இத்தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து அது பற்றி ஆரம்பத்தில் பிரஸ்தாபித்தபோது, வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராக தென்னிலங்கையில் பல குரல்கள் எழுந்தன.

தென்னிலங்கையின் புத்திஜீவிகள், கல்விமான்கள், உயர்பதவிக்காரர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்று கையெழுத்து வேட்டையை நடத்தி வடக்கு-கிழக்கு இணைப்புக்கு தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது.

அரசியல் தீர்வு யோசனைகள் தோல்விகண்டு விடலாம் என்ற அச்சம் ஆட்சியாளர்களிடமும் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே தென்னிலங்-கையில் கிராம, நகர மட்டங்களில் தீர்வு யோசனைகள் குறித்து கருத்தரங்குகள், கூட்டங்களை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் நடத்தி வருவதையும் காணமுடிகின்றது.

# வட பகுதி மக்களின் மன வைராக்கியத்துக்கு சவால் விடும் இன்றைய சூழ்நிலைகள்



எனவே ஆட்சியாளர்களே தமது தீர்வுத் திட்டம் குறித்து சரியான மதிப்பீடுகளைக் கொண்டிருக்காத இத்தருணத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளை நோக்கி அத்தீர்வுத்திட்டத்தைக் குழப்ப வேண்டாம் எனத் தெரிவித்திருப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

அரைகுறையான முறையில் மாவட்ட அபிவிருத்திசபை, பின்னர் மாகாண சபை என்றெல்லாம் கடந்த காலங்களில் தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டபோது அவற்றை ஏற்பதற்கும் கூட்டணியினர் தயாராகவே இருந்தனர்.

ஆனால் மேற்படி தீர்வுத் திட்டங்கள் தோல்விகண்டு அத்தீர்வுத்திட்டங்களுக்கு மேலானவகையில் புதிய தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயங்கள் வெளிவந்தபோது, அந்த அபிப்பிராயங்களுக்கும் கூட்டணியினர் 'சலாம்' போடவே செய்தனர்.

இந்நிலையில் ஏனைய தமிழ் கட்சிகளிடம் அரசியல் தீர்வு யோசனைகளைக் குழப்ப வேண்டாம் என்று கூறியுள்ள கூட்டணியினர் தமது திட்ட வட்டமான அரசியல் தீர்வுத் திட்டம் குறித்துத் தெளிவுபடுத்த வேண்டியவர்களாகின்றனர்.

அரசாங்கம் அரசியல் தீர்வு யோசனைகளைத் தயாரித்து வைத்துள்து. ஆனால் இத்தீர்வு யோசனைகள் எவ்வகையிலும் இறுதியும், முடிவுமானவையல்ல.

இத்தீர்வுயோசனைகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவினாலும், பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு மூலமாகவும் மட்டுமல்ல; எல்.ரி.ரி.ஈ.யினரால் கூட ஏற்கப்படவேண்டியதாக இருக்கின்றது.

எனவே தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும் அதேவேளை அது குறித்து பரந்துபட்ட பேச்சுக்களையும் ஆரம்பிக்கவேண்டியது இன்றியமையாததாகின்றது.

அரசியல் தீர்வு யோசனைகளை முன்னெடுப்பதில் வெளிநாட்டு மத்தியஸ்த்தம் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

எல்.ரி.ரி.ஈ.யினர் கூட ஒரு மூன்றாவது சக்தியின் மத்தியஸ்தத்துடன் பேச்சுக்களுக்கு வரத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூட முன்பு தமது கருத்துக்களை வெளியிட்டபோது, தமது அரசாங்கத்தினால் முடியாவிட்டால் வெளிச்சக்தியொன்றின் உதவியுடனாவது சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இன்றைய காலகட்டத்தில் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளை ஒரு நடுநிலையான மத்தியஸ்த்தத்துடன் ஆரம்பிக்கவேண்டியதே அவசியமானதாகின்றது.,

ஏனெனில் எங்கே, எங்கிருந்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்பதும், எத்தகைய சூழ்நிலையில் அப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்பதுமே பிரதான கேள்வியாக உள்ளன.

சர்வதேசரீதியாக இலங்கையின் பிரச்னையை ஒத்த பிரச்னைகளுக்கு மூன்றாவது சக்தியின் மத்தியஸ்த்தம் பெரிதும் துண்ணபுரிந்திருக்கவே காணப்படுகின்றது.

இந்நிலையில் ஒரு நேர்த்தியான தீர்வுக்கு வெளிநாட்டு மத்தியஸ்த்தம் ஒன்றைக் கொண்டுவருவதில் எவ்வித குறைபாடும் இருக்கமுடியாது.

ஆனால் அந்த மூன்றாவது சக்தியின் மத்தியஸ்த்தம் என்பது மிகவும் நடுநிலையானதாகவும் இருதரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாகவும் இருக்கவேண்டியதாகின்றது.

அரசியல் தீர்வு யோசனைகள், மற்றும் அரசியல் தீர்வுமுயற்சிகள் பற்றிப் பிரஸ்தாபிக்குமுன்னர் வடக்கே இருந்து இடம்பெயர்ந்துள்ள லட்சக்கணக்கான மக்களின் பரிதாப நிலைகுறித்தே சிந்திக்கவேண்டியதாகின்றது.

வடக்கே தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ள மக்கள் அகதிகளாகவும், அநாதரவாகவும் அபலைகளாகவும் மாறியுள்ளனர்.

குடிபெயர்ந்துள்ள மக்கள் பெரும் பாதிப்புக்களை அடைந்து வருவதாக வடக்கே இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அத்தகைய தகவல்கள் தவறானவை, மக்களுக்கு போதியளவில் வேண்டியவை கிடைக்கின்றன என்று மறுபுறத்தே இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்களின் சௌகரியங்கள், அசௌகரியங்களைவிட அவர்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டிய பணியே விரைவுபடுத்தப்பட வேண்டியதாக இருக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சர் கேர்னல் அனுருத்தரத்வத்தை எதிர்வரும் சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டங்களுக்கு முன்பதாக வடக்கே, அங்கிருந்தும் குடிபெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என்று கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கை அரசியல் சார்ந்ததாகவா? அல்லது இராணுவ அணுகுமுறைகள் சார்ந்ததாகவா? இருக்குமென்பதே இடம் பெயர்ந்த மக்களின் மனதில் எழும் கேள்வியாக இருக்கின்றது.

வடக்கே இராணுவம் பெரும் பலத்துடன் யாழ்ப்பாணம் நோக்கி நகர ஆரம்பித்ததாலேயே அங்கிருந்தும் அப்பாவி மக்கள் அகன்றுள்ளார்கள்.

இதன்மூலம் எந்தவொரு இராணுவ அழுத்தங்களையும் ஏற்பதற்குத்தாம் தயாராக இல்லை என்பதனையே அவர்கள் நிரூபித்துள்ளனர்.

வடக்கே மீண்டுமொரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்ற செய்திகளும் வலுவடைந்து வரக் காணப்படுகின்றன.

எனவே தொடர்ந்து 'மரண அவஸ்த்தை' களுக்குள் வாழும் ஒரு சூழ்நிலையையே வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்கொள்ளவேண்டிய நிலை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் எத்தகைய கஷ்ட-நஷ்டங்களுக்கு மத்தியிலும் வடபகுதி மக்கள் மனந்தளராது வாழ்ந்து வந்தனர்.

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளில் யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களின் பெறுபேறுகள் அகில இலங்கை ரீதியாக இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளமை, யாழ்ப்பாண மக்களின் மன வைராக்கியத்துக்கு சான்றாக இருக்கின்றது.

ஆனால் தற்போது தோன்றியுள்ள நிலை இந்த வைராக்கியத்துக்குக்கூட சவால் விடுவதாகவே இருக்கின்றது.



படிப்பகம்

18 எழுதுவது ரசிகன்

# மனித வெடிகுண்டு

**சென்றவாரம்**

சவுதி அரேபியா – மற்றும் ஈரான் எண்ணெய் வள அமைச்சர்களை தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டினார் ஈராக் உப அதிபர் சதாம் ஹுசைன் (இன்றைய அதிபர்). அதற்காக கார்லோஸ் தலைமையில் அனுப்பப்பட்ட அதிரடிக் குழுவினர் எண்ணெய் வள அமைச்சர்களது கூட்டம் நடைபெறும் கட்டிடத்துக்குள் தந்திரமாக புகுந்து கொள்கின்றனர்.

**இனி.....**

# இன்னும் எம்மை என்ன செய்யப் போகிறான்

லிப்ட் கதவு விரிந்தது. கார்லோஸ் முதலில் வெளியே பாய, அவனைத் தொடர்ந்து இயந்திரத் துப்பாக்கிகளோடு அதிரடிக் குழுவினர்.

மாநாட்டு மண்டபத்துக்குள் காவலிருந்த பொலிசார் முதலில் திகைத்து, மறு நொடியே உஷாராகி, "யாரும் அசையக் கூடாது" என்ற கார்லோசின் கட்டளைக்கு பணிந்துநிற்க,

அன்ரன் ரிச்லர் என்ற பொலிஸ்காரன் கார்லோஸ் கவனம் வேறுபுறம்



**இதுவரை உலகில் நடைபெற்ற பணயக் கடத்தலில் மிகப் பாரியது 1975 டிசம்பரில் கார்லோஸ் குழுவினரால் செய்யப் பட்டதுதான். உலகில் மிகப் பெரிய பணக்கார நாடுகளின் அமைச்சர்கள் கார்லோஸின் காலடியில் உயிர்பிச்சை கேட்டுக் கிடந்தனர்.**

திரும்பிய ஒரு நொடியை மிக துல்லியமாகக் கணக்கிட்டு,

கார்லோஸ் மீது பாய்ந்து, இயந்திரத் துப்பாக்கியை பற்றிக்கொள்ள,

கார்லோஸின் இடதுபுறத்தில் நின்ற குரோச்சியா தனது பிஸ்ரலை உயர்த்தி, விசையைத் தட்டினாள்,

பிஸ்ரல் ஏமாற்றவில்லை. பொலிஸ்காரனின் கழுத்தில் குண்டு பாய்ந்தது.

அவன் தரையில் சரிந்தான். தரையில் சரிந்தவனின் சட்டைக் கொலரில் பிடித்து இழுத்துவந்த குரோச்சியா,

திறந்திருந்த லிப்ட்டுக்குள் அவனை காலால் உதைத்து தள்ளி, பட்டனை அமுக்க, லிப்ட் மூடிக்கொண்டு, தரையை நோக்கி நழுவியது.

அந்த பரபரப்புக்கிடையிலும் கார்லோஸ் குரோச்சியாவை வியப்போடு நோக்கினான்.

இதுவரை தான் சந்தித்த பெண்களுக்குள் குரோச்சியா தனித்துவமானவள் என்று தனது மனதில் குறித்துக் கொண்டான்.

சுடுவார்கள். எதற்கும் துணிந்தவர்கள் என்று தெரிந்ததும் ஏனைய பொலிசார் ஒருங்கி வழிவிட,

கார்லோஸும் குழுவினரும் மாநாட்டு மண்டபத்துக்குள் நுழைந்தபோது,

பயந்ததுபோல நடித்து முதல் ஆளாக தனது இரு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்திக் கொண்டவர் ஈராக் பிரதிநிதிகளின் பாதுகாவலர் அல் - கஃபாலி.

மாநாட்டு மண்டப உள் அமைப்புப் பற்றி கார்லோஸுக்கு தகவல் கொடுத்ததே அவர்தான்.

கார்லோஸும் அல்-கஃபாலியும் கண்களால் பேசிக் கொண்டதை யாரும் கவனிக்கவில்லை.

அப்போதுதான் அல் கஃபாலி ஒரு தவறு செய்தார்.

அந்த மண்டபத்தைவிட்டு மெல்ல நழுவி ஓட முற்பட்டார்.

அதுவும் ஒரு நாடகம் என்று அறியாத குரோச்சியா அவரை நோக்கி ஓடினாள்.

கார்லோஸ் தவிர அந்தக் குழுவில் உள்ள எவருக்கும் தமது நடவடிக்கைக்கும் ஈராக்குக்கும் உள்ள தொடர்பு தெரியாது.

அல் கஃபாலி தகவல் கொடுத்ததும் தெரியாது.

அதனால்தான் கஃபாலி நழுவ முற்பட்டதை தடுக்க தனது பிஸ்ரலுடன் ஓடினாள் குரோச்சியா.

கார்லோஸால் தடுக்க முடியவில்லை எப்படி விளக்குவது? இரகசியம் பரகசியமாகி விடுமே.

குரோச்சியாவின் பிஸ்ரல் கஃபாலியின் முதுகில் பதித்தது.

"நில். மீறினால் பிணமாவாய்" என்ற குரோச்சியாவை பயிற்சிபெற்ற பாதுகாவலரான கஃபாலி சட்டென்று திரும்பி மடக்கி இடையில் கைகொடுத்து இழுத்தபடி மண்டபக் கதவுக்கு வெளியே செல்ல,

கார்லோஸ் குழுவில் இருந்தவர்கள் கார்லோஸ் எந்த உத்தரவும் போடாமையால் அசைவற்று நின்று கொண்டிருக்க,

டுமீல்!

வெடிச்சத்தம் கதவுக்கு வெளியே கேட்டது. கார்லோஸ் கலீன் மீது பார்வையைச் செலுத்த, அவன் துப்பாக்கியை முன்னே நீட்டியபடி ஓடி வெளியே கண்ட காட்சி:

குரோச்சியா.. அழகான குரோச்சியா, துணிச்சலான குரோச்சியா,

அவள்.. அவள்..

செத்துப்போகவில்லை. கஃபாலியை செத்துப்போகச் செய்திருந்தாள்.

இரத்தம் நெஞ்சில் இருந்து கொட்டக் கொட்ட,

நிச்சயமாய் செத்துப் போயிருந்தார் அல் கஃபாலி.

அவரது உடலை சோதனையிட்ட குரோச்சியாவின் கையில் தட்டுப்பட்டது, கஃபாலி தனது சட்டையின் மார்புப் பகுதியில் மறைத்துவைத்திருந்த பிஸ்ரல்.

கஃபாலி நினைத்திருந்தால் அதனை உருவி குரோச்சியாவை சுட்டிருக்க முடியும்.

அவர் நடத்தியது நாடகம் என்பதால் அப்படி செய்ய நினைக்கவேயில்லை.

"பிஸ்ரல் இருந்தும் பாவிக்கவில்லை, முட்டாள்" என்று முணு முணுத்தாள் குரோச்சியா.

குரோச்சியா உள்ளே வந்தபோது அவள் இரு கரத்திலும் இரண்டு பிஸ்ரல்கள் இருந்ததை வைத்து, நடந்தது என்னவென்று கார்லோஸுக்குப் புரிந்து விட்டது.

குரோச்சியாவைப் பாராட்டுவதா? கஃபாலிக்காக வருத்தப்படுவதா? சதாம் ஹுசைன் என்ன நினைப்பாரோ? கார்லோஸ் குழம்பிப் போனதில் சூழலைக் கவனிக்கத் தவறினான்.

எந்தவொரு சூழலிலும் தலைவன் குழம்பக்கூடாது. குழம்பினால் அணி மொத்தமும் குழம்பிவிடும்.

லிபியாவின் பிரதிநிதிகளில் ஒருவரான யூசெஃப் இஸ்மிரலி. கட்டுமஸ்தான உடம்பு. ஆயுதப் பயிற்சியிலும் தேர்ச்சி உண்டு. எதிரியை ஒரு நொடியில் மதிப்பிடும் புத்திசாலித்தனமும் உண்டு.

கார்லோஸ் குழம்பியதை புரிந்துகொண்டு அவன் கரத்தில் இருந்த இயந்திரத் துப்பாக்கியை குறிவைத்து பாய்ந்து, கார்லோஸின் மணிக்கட்டில் தனது வலது கரத்தை கத்தியாகப் பாவித்து ஒரு வெட்டு வெட்ட, இயந்திரத் துப்பாக்கி இப்போது யூசெஃப் இஸ்மிரலியின் கைக்குப் போனது.

திகைத்துப்போன கார்லோஸ், யூசெஃப் தன்னை நோக்கி சுடப் போவதை ஊகித்து சட்டென்று தரையில் விழுந்து படுத்துக் கொள்ள, குண்டு கதவில் பாய்ந்தது.

தரையில் படுத்த கார்லோஸ் தனது இடுப்பில் இருந்த பிஸ்ரலை கண்ணிமைக்கும் நேரத்தில் உருவி, யூசெஃப் இஸ்மிரலிமீது சுட்டான்,

சரியான குறி.

நெஞ்சில் குண்டுபாய மல்லாந்து சரிந்தார் யூசெஃப் இஸ்மிரலி.

எழுந்த கார்லோஸ் பிஸ்ரலை இடுப்பில் செருகிக்கொண்டு, யூசெஃப்பிடம் இருந்த தனது துப்பாக்கியை எடுத்துக்கொண்டு,

மூச்சுவருகிறதா என்று அவரது மூக்கருகே கைவைத்து பார்த்த போது, யூசெஃப் செத்துப் போயிருந்தார்.

குழு முழுவதும் தமது தலைவன் கார்லோஸை வியப்போடு நோக்கிற்று.

"குயிக் மூவ்" என்றான் கார்லோஸ்.

மற்றொரு கதவு திறந்து துப்பாக்கிகளோடு உள்ளே பாய,

வெளியே நடப்பது எதுவும் ஏ.சி. செய்யப்பட்ட உள் மண்டபத்துக்குள் கேட்காதிருக்க,

தீவிர விவாதத்தில் இருந்த எண்ணெய் வள அமைச்சர்கள் உச்சபட்ச அதிர்ச்சியில் திணற, இதயம் பலவீனமான சிலர் தமது நெஞ்சை பிடித்துக் கொள்ள,



யமானி
சவூதி அரேபிய
எண்ணை வள அமைச்சர்



ஜம்ஷிட்
ஈரான்
எண்ணை வள அமைச்சர்

கார்லோஸின் குரல் உயர்ந்தது; "எல்லோரும் தரையில் படுத்துக் கொள்ளுங்கள். ஒரு தலை உயர்ந்தாலும் உடனே குண்டு பாயும்."

அதேநேரம் கலீனும், குரோச்சியாவும் உள் மண்டப மின்சார பல்புக்களை நோக்கி குறிதவறாது சுட்டுத்தள்ள,

உள்மண்டபத்தை இருள் விழுங்கி ஏப்பமிட்டது.

அமைச்சர்களும், பிரதிநிதிகளும் தரையில் விழுந்து படுத்துக் கொள்ள, இருளுக்கு தன் கண்களை பழக்கப் படுத்திக் கொண்டு விட்டு, கார்லோஸின் குரல் கம்பீரமாக ஒலித்தது.




"என் பெயர்தான் கார்லோஸ். அறிந்திருப்பீர்கள். இரக்கம் என்பது என் அகராதியில் கிடையாது. குரோச்சியா! தரையில் கிடக்கும் எண்ணெய்க் குதங்களை எண்ணிப்பார்?"

குரோசியா தன் ஜீன்ஸ் பொக்கற்றில் இருந்து பென்டோர்ச் எடுத்து, சின்ன வெளிச்சத்தில் தரையில் கிடந்த அமைச்சர்களின் தலைகளை எண்ணிவிட்டு,

"பதினொரு பேர்" என்றாள்.

"பெறுமதியான தலைகள் உலகிலேயே அதிக பெறுமதியான தலைகள். ஆனால் என்ன ஒரு பிரச்சனை என்றால் எங்கள் துப்பாக்கிகளுக்கு உங்கள் பெறுமதி தெரியாது. உங்கள் ஒவ்வொரு தலையும் எத்தனையோ ஆயிரம் கோடி பெறும், அந்தக் கோடிகள் எல்லாம் ஒரு துப்பாக்கிக் குண்டின் முன் தூசு பெறும்."

சொல்லிவிட்டு கார்லோஸ் சிரித்தான். தரையில் கிடந்தவர்கள் தங்களை கார்லோஸ் என்ன செய்யப் போகிறான் என்று தெரியாமல் தவிக்க,

"எண்ணெய் விலை எவ்வளவு என்று நீங்கள் தீர்மானிக்க முடியும். உங்கள் உயிரின் விலை என்னவென்று நான்தான் தீர்மானிக்க வேண்டும்"

என்றான் கார்லோஸ்.

கார்லோஸ் குழுவினரின் கண்களில் படாமல் ஒரு உருவம் மெல்ல மெல்ல நகர்ந்து ஒரு அறைக்குள் புகுந்து கொண்டது.

அந்த அறைக்குள் இருந்த தொலைபேசியில் பொலிசாருக்கு தகவல் சொன்னது.

அப்போது நேரம் பகல் 11.45.

(தொடர்ந்து வரும்)

அமெரிக்க சஞ்சிகைகளில் வெளியான படம் ஒன்று பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தி விட்டது.

அமெரிக்க ஜனாதிபதி பில்கிளிண்டன் தனது அருமைத் துணைவியாரின் கழுத்தை நெரிக்க, பாவம் கிளாரி என்ன பாடு படுகிறார் பாருங்கள்.

ஆக்கிவிடலாம் என்று நினைத்துவிட்டனர்.

அந்த நினைப்போடு செய்தியைப் படித்தபோது ஏமாற்றம் காத்திருந்தது.

படத்தில் இருப்பது கிளிண்டனும் அல்ல, கிளாரியும் அல்ல. அவர்களை உரித்து வைத்தது போல உள்ள வேறு இருவர்.

# 'ஐயோ பாவம் கிளாரி'



கிளிண்டனின் அரசியல் எதிரிகளுக்கு மகாசந்தோசம். இந்தப் படம் ஒன்றே போதும். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாய்க்குலங்களின் அமோக எதிர்ப்பை வைத்து கிளிண்டனை 'கிலீன் போல்ட்'

கிளிண்டன் போலவும், கிளாரி மாதிரியும் இருந்த இரண்டு பேரைத் தேடிப்பிடித்து அமெரிக்காவையே கலக்கி விட்டார்கள் பத்திரிகைக்காரர்கள்.

போலிகள் ஜாக்கிரதை.

## புற்றுநோய் நிபுணர் டாக்டர் திருமதி வாணி உ.பிள்ளை அவர்களை இந்தவாரம் சந்திக்கிறோம்.

**"வணக்கம் டாக்டர். உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. புற்றுநோய் விடயத்தில் நீங்கள் ஒரு நிபுணர். அதனால் என்னிடம் உள்ள கேள்விகளுக்கு திருப்தியான விடைகிடைக்கும் என்பதால் இரட்டிப்பு மகிழ்ச்சி."**

"நன்றி. கேளுங்கள்!"

**"எனது தம்பிக்கு 6 வயது. மூளைப் என்றும் அது வலது சிறுநீரகத்தில் உள்ளது என்றும் கூறுகிறார்கள்- வைத்தியர்கள். மறுவாரம் இவருக்கு சத்திரசிகிச்சை. இவர் நிலையை சிறிது எடுத்துக் கூறுங்கள் டாக்டர்."**

"இச்சிறுவனுக்கு Wilms Tumour என்னும் புற்றுநோயாக இருக்கலாம். இது அதிகமாக இவ்வயதுச் சிறுவர்களுக்கு ஏற்படவாய்ப்புண்டு. ஆரம்ப

# ஹலோ டாக்டர்

கட்டமாக இருந்தால் சத்திரசிகிச்சையும் பின் மருந்துகள் ஏற்றுவதனாலும் இந்நோய் மாற்றக்கூடியதாகவோ - கட்டுப்படுத்தக்கூடியதாகவோ அமையும். சிறுவயதில் ஏற்படின் இருக்கும் குணங்கள் வயது ஏறியபின் 5-6 வயதில் வரும்போது தன்மை மாறும். உங்கள்

**புற்றுநோய் ஏற்பட்டு சத்திர சிகிச்சையின் பின் கதிர் சிகிச்சை செய்கிறார்கள். இவருடைய புற்று நோய் மாறக்கூடியதா டாக்டர்?"**

"அதிகமாக இந்த வயதுச் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய கட்டிப்புற்றுநோயில் 40% மூளைப்புற்று நோயாகலாம். இவற்றில் பலவகையுண்டு. சத்திரசிகிச்சையின்போது புற்றுநோய்க் கலங்கள் முற்றாக அகற்றப் பட்டிருப்பின், நுண் காட்டியால் பார்க்கக் கூடிய அளவு கலங்கள் மட்டுமே இருப்பின் கதிர்ச்சிகிச்சை மூலம் தொலைத்துவிடலாம். மூளையில் இந்தநோய்க்கலங்கள் ஊடுருவி பரவக்கூடிய சாத்தியமுள்ள இடங்களனைத்தும் கதிர்ச்சிகிச்சைக்கு உட்படுத்தப் படும். இந்தப் புற்றுநோய்வகை தகுந்த வைத்திய சிகிச்சை மேற்கொள்ளப்பட்டால் 45-55% சிறார் 5 வருடத்துக்கும் அதற்கு மேலும் வாழக்கூடியதாக இருக்கும். இதை 5 Year Survival என்பார்கள்."

**"கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் உள்ளவர்கள் கதிர்ச்சிகிச்சை செய்து கொள்வது நல்லதா? சத்திர சிகிச்சை செய்து கொள்வது நல்லதா?"**

"கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் பல கட்டங்களில் அமைந்தது. ஆரம்பக் கட்ட நோய்க்கு சத்திரசிகிச்சை, கதிர்ச்சிகிச்சை இரண்டுமே பயன் கொடுக்கும். இருந்தாலும் புற்றுநோய்க் கலங்கள் அயலிலுள்ள வேறு இழையங்களுக்கோ நெறிகளுக்கோ பரவியிருந்தால் சத்திரசிகிச்சையை விட கதிர்ச் சிகிச்சையே சிறந்தது. இதனால் பல பின் விளைவுகளைத் தவிர்க்கக் கூடியதாயிருக்கும்."

**"எனது பெரிய தந்தையார் உணவு உண்ணுவதற்கு மிகவும் சிரமப்படுகிறார். சோறு கறி சாப்பிட முடியாது. கடந்த 4 மாதமாகச் சிரமப்பட்ட இவர் இப்போது தண்ணீரும் குடிக்க கஷ்டப்படுகிறார். சில சமயம் வாந்தி ஏற்படுகிறது. அயலிலுள்ள வைத்தியர் இது புற்றுநோயாக இருக்கலாம் என்று சந்தேகித்து-சில எக்ஸ்ரே படங்களை எடுத்து யாரேனும் விசேஷ வைத்தியரிடம் காட்டச் சொல்கிறார். இது புற்றுநோயாக இருக்குமா?"**

"அதிகமாக 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு நாளுக்கு நாள் ஏற்படும் விழுங்குவதற்கு கஷ்டமான நிலை புற்றுநோயாக இருக்கும் என்னும் சந்தேகத்தை எழுப்பலாம். உங்கள் வைத்தியர் சொன்னதுபோல் Barium Swallow என்னும் எக்ஸ்ரே படங்களும் Oesophagoscopy எனும் களப்பரிசோதனையிலும் இந்நோயைக் கண்டறியலாம். இதனால் தகுந்த வைத்தியரை நாடச்சொல்லுங்கள்."

**"2 வயதுச் சிறுவனான என்தோழியின் மகனுக்கு வயிற்றில் கட்டியொன்றுள்ளது.**



தோழியின் மகனுடைய நோய் அதிகம் பாதிப்புள்ளவர்க்கமா இல்லையா என்பது சத்திர சிகிச்சையின் பின் Pathology பரிசோதனையின் பின்பே தெரியவரும்."

**"எனது தந்தையின் சகோதரிக்கு வயது 20. அவருக்கு முரசுவீங்கி முரசால் இரத்தம் வருகின்றது. சிலர் இது இரத்தப் புற்றுநோய்க்கு அறிகுறி என்கின்றனர். அப்படியும் இருக்குமா?."**

"முரசு வீங்கி இரத்தம் வருவதும் இரத்தப்புற்று நோய்க்கு ஓர் காரணமாயினும்- இதற்கு மேலும் பல காரணங்கள் இருக்கலாம். வாய்ச் சுகாதாரம் சீர்கெட்டு இருப்பது முரசு வீக்கத்துக்கு காரணமாகலாம். எதற்கும் தகுந்த பரிசோதனைகள் வேண்டும்."

**"எனது பெரிய பாட்டாவின் வயது 60. இவருக்கு வாயில் ஒரு மாதமாக ஓர் புண் ஏற்பட்டு இருக்கிறது. இது வாய்ப்புற்று நோயின் அடையாளமாக இருக்குமா டாக்டர்?"**

"வயது வந்தோர்க்கு இவ்விதப் புண்கள் ஏற்படுவது நல்லதல்ல. இதனைத் தகுந்த வைத்தியரிடம் காட்டி பரிசோதனை செய்வது நல்லது. உடல்நிலை நன்றாக இருந்தால்- புற்றுநோயாக இருந்தாலும் கதிர்ச்சிகிச்சை மூலம் குணம் பெறலாம்."

"நன்றி டாக்டர்."

www.padippakam.com

# எப்படி.. எப்படி.. அது எப்படி?

என்னமோ நடக்குது. எப்படியோ இருக்குது. நம்பமுடியாத நடப்பெல்லாம் நடக்குது. அப்படித்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. செய்தியைக் கேளுங்கள். தமிழ்நாட்டில் ஈரோடு பகுதியின் அருகே கொங்கனாம்பள்ளி என்றொரு கிராமம் இருக்கிறது. அங்கு ஒரு நாய் குட்டி போட்டது. மூன்று குட்டிகள். அதிலென்ன ஆச்சரியம் என்பீர்கள்? மூன்றுமே பூனைக் குட்டிகள் போல இருக்கின்றன. இந்த தகவலை படத்துடன் வெளியிட்டுள்ளது தமிழகத்தின் பிரபல தினசரியான 'தினத்தந்தி'.



# மொத்தம் 37

அவுஸ்த்ரேலியாவில் மெல்போர்ன் நகரில் திரு-திருமதி எம்.பி.ஃபோர்ட் தம்பதிகள் பன்றி வளர்த்தார்கள். 1993 செப்டம்பர் 21ம் திகதி அவர்கள் வளர்த்த பன்றி 37 குட்டிகள் போட்டது. உடனே உலக சாதனைப் புத்தக நிறுவனத்திற்கு தகவல் போனது. சாதனை படைத்த பன்றியும், குட்டிகளும் மட்டுமல்ல திரு ஃபோர்ட்டும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துவிட்டார். அந்தப் பன்றிக்கு நன்றி சொல்லியிருப்பார் ஃபோர்ட்.



## தகவல் பெட்டி

# தலையானது தரையின் மேலே

இந்தியாவின் யோகாசனப் பயிற்சி நிலையத்தில் கிளிக்கான படம் இது.

ஆயிரக்கணக்கானோர் ஒரே நேரத்தில் தலைகீழாக சிரசாசனம் செய்யும் காட்சி.

சிரசாசனம் செய்வதால் உடலுக்கு எண்ணற்ற ஆதாயங்கள் கிடைக்கின்றன. உடல் எடை குறைவதும், இரத்த ஓட்டம் சீராவதும் முக்கியமான பலன்கள். உடலுக்கு ஆரோக்கியமான சிரசாசனம் புகைப்படத்திற்கும் அழகாகயிருப்பது விழிகளுக்கு வியப்பூட்டுகிறது அல்லவா. மீண்டும் ஒரு முறை படத்தை பார்த்துக் கொள்ளுங்கள்.



# கவனிக்க யாரும் இல்லை

என்ன இதெல்லாம்? கூர்ந்து பாருங்கள். எல்லாமே கார்கள்தான்! இதென்ன கார் பார்க்கிங்கா? இல்லை, இல்லவேயில்லை. விலை போகாத கார்களை இப்படி அடுக்கி வைத்திருக்கிறார்கள். கார் உற்பத்தியில் பலத்த போட்டி. விதம் விதமான கார்கள் சந்தைக்கு வருகின்றன. அதனால் பழைய ரக கார்களை வாங்க ஆள் இல்லை. படத்தில் இருப்பது இங்கிலாந்தின் 'போட்' நிறுவனம் தாயரித்த கார்கள். ஜப்பான் கார்கள் புதிய தொழில் நுட்பத்துடன் சந்தைக்கு வந்துவிட்டதால் இவற்றை யாரும் திரும்பியே பார்க்க வில்லையாம். நம் நாட்டில் என்றால் தவித்த முயல் அடிக்க ஒரு கியூவே நிற்கும். அங்கு அப்படியில்லை.



# கல்யாணமாம் கல்யாணம்



ஆயிரம் பேருக்கு திருமணம், ஐயாயிரம் பேருக்கு ஒரே மேடையில் திருமணம் என்றெல்லாம் தமிழ்நாட்டில் ஜெயலலிதா கலக்குவதெல்லாம் சர்வசாதாரணம். படத்தில் பாருங்கள், எல்லோருமே கல்யாண ஜோடிகள். உலகில் நடை பெற்ற மாபெரும் கல்யாண விழா இதுதான். மொத்தம் 35 ஆயிரம் ஜோடிகளுக்கு கல கலப்பாக கல்யாணம் நடத்திவைக்கப்பட்டது. 35 ஆயிரம் ஜோடிகளும் ஒன்றாகக் குழும ஒரு இடம் வேண்டுமல்லவா. 1988இல் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற சியோல் மைதானத்தில் ஜோடிகளை நிறுத்தி மோதிரம் மாற்ற வைத்தார்கள். தென்கொரிய ஜனாதிபதி தலைமையில் இந்தக் கலாட்டா கல்யாணம் நடைபெற்றது. கிறிஸ்தவ நிறுவனம் ஒன்றுதான் இந்த திருமணங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. உலக சாதனைத் திருமணம். ஜெயலலிதா அறிந்தால் பொறாமைப் படப்போகிறார்.

# கால்கள் ஐந்து

தமிழ் நாட்டில் நாய் அதிசயங்கள் அதிகமாகிவருகின்றன. தமிழ்நாட்டில் விழுப்புரம் பகுதியில் நாய் ஒன்று குட்டிகளைப் போட்டது. அதில் ஒரே ஒரு குட்டி மட்டும் ஐந்து கால்களோடு அதிசயக் குட்டியாக இருக்கிறது. வாலுக்கு பக்கத்தில் இருக்கும் அந்த ஐந்தாவது கால் படுகுள்ளம். அதனால் நடக்க முடியாது. இருப்பது ஐந்துகால். நடப்பது நாலுகாலில்தான்.





படிப்பகம்

www.padippakam.com

# கசட் விற்பனையில் சாதனை ஹம்மா, ஹம்மா 45 இலட்சம்

ஏ.ஆர். ரகுமானை சென்ற ஆண்டின் சிறந்த கலைஞராக சிறப்பித்துள்ளது குமுதம் சஞ்சிகை. அதற்குப் பொருத்தமானவர்தான் ரகுமான்.

நம் நாட்டு வானொலிகளிலும் ஏ.ஆர். ரகுமான் பாடல்கள்தான் வழிந்து கொண்டிருக்கின்றன. தொலைக் காட்சிகளிலும் அதே. அதே.

சென்ற ஆண்டு இந்தியாவில் மட்டும் பம்பாய் பட பாடல்கள் இந்தியில் தூள் கிளப்பிவிட்டன. இந்தியில் கசட் உரிமைபெற்ற பாலிகிராம் நிறுவனம் படு திருப்தியில் இருக்கிறது. 45 இலட்சம் கசட்டுக்கள் விற்றுத்தீர்ந்துவிட்டன என்றால் சும்மாவா.

பம்பாய் பாடல் கசட்டுக்கள் விற்பனையில் சாதனைபடைத்துவிட்டதால் ரகுமானின் பாடல் கசட்டுக்களுக்கு விற்பனை உரிமை பெற பலத்த போட்டி நிலவுகிறது.

அகில இந்திய அளவில் ஏ.ஆர். ரகுமானின் இசை பிரபலம் பெற்றுவிட்டது. பிரபல இந்தி இசை அமைப்பாளர்கள் பலர் கூட ரகுமான் இசையைக் கொப்பியடிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

"மிகக் குறுகிய காலத்தில் மிகச் சில பாடல்கள் மூலம் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியவர் ஏ.ஆர். ரகுமான்" என்று குமுதம் சொல்லியிருப்பது மெத்தச்சரி.

## விசிட்

'தொட்டு தொட்டு பேசும் சுல்தானா, தொட்டவுடன் நெஞ்சில் தில்லானா' என்று தொடங்கும் பாடலுக்கு 50 நடனக் கலைஞர்களுடன் துள்ளியாடினார் ரம்பா. பாடல் இடம் பெறும் ப... போலியன் இருவரும் இணைந்து நடித்துவரும் படம். ஆ... நடிக்கிறார் நெப்போலியன்.

சங்கீதா மன்சூர் அலிகான், கவுண்டமணி, செந்தில், ம... ராதிகா, யுவஸ்ரீ, ராஜ் சுந்தரம், (பிரபுதேவாவின் அண்ணர்) ஆகியோர் நடிக்கின்றனர். பாடல் காட்சியில் ரம்பாவோடு ஆடுகிறார் ராஜ் சுந்தரம்.



பிரபு-ரோஜா
படம் பரம்பரை

## இயக்கம் தீவிரவாதி

எப்போதுமே சர்ச்சைகளை கிளப்பும் நடிகர்கள் பட்டியலில் உள்ளவர் மன்சூரலிகான். அவர் புதிதாக தயாரிக்கப் போகும் படத்திற்கு வைத்துள்ள பெயர் 'போராளி'. அதுமட்டுமல்ல படத்தை இயக்கப் போவது ஒரு புதியவராம். அவரது பெயர்தான் வயிற்றை கலக்கப் போகிறது. இயக்குநர் பெயர், தீவிரவாதி. மன்சூரலிகான் தானோ?

## பட்... சிகரெட்... பட்

பம்பாய் நடிகைகளுக்கு தமிழ் படங்களில் நடிக்க சென்னைக்கு வந்தால் சில பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

பம்பாயில் என்றால் பகிரங்கமாகவே சிகரெட் பிடிக்கலாம். மது குடிக்கலாம். ஆண் நண்பர்களோடு அரட்டை அடிக்கலாம்

சென்னையில் என்ன நினைப்பார்களோ என்று தயக்கம். அதனால் அடக்கியே வாசிக்கிறார்கள்.

'கல்லூரி வாசல்' படத்தில் நடிக்கும் பூஜாபட் சற்றுத் துணிச்சலாக பகிரங்கமாகவே புகைபிடிக்கிறார். ஊதி ஊதித் தள்ளுகிறார். அவரோடு நெருங்கி நடிக்கும் பிரசாந்த்துக்கு சிகரெட் வாசனை பிடிக்குமா என்று தெரியவில்லை.

## ரம்யாவின் திருமணம்?

'கில்லாடி ராஜா' படத்தில் நாகார்ஜுனுடன் பிசின் போல ஒட்டிக் கொண்டு நடித்திருக்கிறார் ரம்யா கிருஷ்ணன். நாகார்ஜுனின் காதலிகள் பட்டியலில் ரம்யா கிருஷ்ணனும், மனிஷா கொய்ராலாவும் இருக்கிறார்கள். அவர்களின் பிடியில் நாகார்ஜுன் சிக்கிவிடாமல் போராடிக் கொண்டிருக்கிறார் அமலா.

இதற்கிடையே தனது திருமணம் தற்போதைக்கு இல்லை என்று பேட்டி கொடுத்திருக்கிறார் ரம்யா கிருஷ்ணன்.

தனது திருமணம் பற்றி ரம்யா கிருஷ்ணன் சொல்வதைக் கேளுங்கள்: "திருமணம் செய்தால் காதல் திருமணம்தான் செய்து கொள்வேன். என் சகோதரி அனுமதித்தால்தான் திருமணம் நடக்கும். திருமணத்திற்கு பின்னர் நடிக்கக் கூடாது என கணவர் தடை செய்ய முடியாது. அது என் விருப்பம்."

## ஸ்ரீதேவிக்கு பிடித்த நடிகர்

ஸ்ரீதேவி ஷாருக்கானுடன் ஒரு புதிய படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். படப்பிடிப்புக்கு இடையே இருவரும் அடிக்கடி பேசிக் கொள்கிறார்கள். ஷாருக்கானை மிகவும் மரியாதையாக ஷாருக்ஜி என்று அழைக்கிறாராம் ஸ்ரீதேவி. ஜி போட்டு அழைக்காதீர்கள். அப்படி அழைத்தால் நானும் ஜி, ஸ்ரீஜி என்று கூப்பிடுவேன் என்றாராம் ஷாருக்கான்.

ஷாருக்கான் எந்த நடிகையுடன் நடித்தாலும் சேர்ந்து நின்று தனிப்பட்ட புகைப்படம் எடுக்க போஸ் கொடுப்பதில்லை. ஆனால் ஸ்ரீதேவியை அணைத்துக் கொண்டு நின்று போஸ் கொடுக்கிறார்.

இந்த விஷயம் ஷாருக்கானின் மனைவி கௌரிக்கு தெரிந்தால் வீட்டில் ரகளை ஏற்படலாம் என்று பேசப்படுகிறது.

## அருமையான யோசனை

அன்றுதான் முதலிரவு. ஆசையோடு நெருங்கவரும் கணவரை அண்டவிடாமல் துரத்துகிறார் மனைவி. வெறுத்துப் போன கணவர் சித்த வைத்தியர் ஒருவரை அணுகி ஆலோசனை கேட்கிறார். அவர் ஒரு பொடி கொடுக்கிறார். அந்தப் பொடியைப் பாலில் கலந்து சாப்பிட்டுவிட்டு பாடுகிறார் கணவர். பயந்து நடுங்கிப் போனார் மனைவி. அப்படியொரு குரல். பிறகென்ன காரியம் நல்லபடியாய் முடிந்தது. இந்த அருமையான ஐடியா இடம்பெறும் படம் 'காலம் மாறிப் போச்சு'. துரத்தும் மனைவி கோவை சரளா. பாடி மிரட்டியவர் வடிவேலு.

## நகைச்சுவை சாமி

மம்முட்டியும், அரவிந்தசாமியும் இணைந்து நடிக்கும் 'புதையல்' படம் முடியும் தறுவாயில் இருக்கிறது. மம்முட்டி இராணுவ அதிகாரியாக நடிக்கிறார். அடிதடிகளும் உண்டு. அரவிந்தசாமி நகைச்சுவை கலந்த கதாநாயகனாக வருகிறார். ஆம்னியும், பம்பாய் அழகி ஷாக்ஷியும் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள்.

பல இலட்சங்களை தண்ணீராய்க் கொட்டி இராணுவம் சம்பந்தப்பட்ட காட்சிகளை படமாக்கியிருக்கிறார்கள். திரைக்கு வர தயாராகிறது.

## முகப்பில்

பிரபு

ஊர்வசி
படம்:- அருவாவேலு

## புலி பொறந்த மண்ணு

ராஜ்கிரண் வெளியார் படங்களில் நடிக்க ஒப்புக் கொண்ட பின்னர் பல படங்கள் அவர் கைவசம் வந்து விட்டன. ராஜ்கிரண் புதிதாக நடிக்கும் படம் 'புலி பொறந்த மண்ணு'. (நிச்சயமாக நம்நாட்டில் திரையிடப்பட மாட்டாது)


வெள்ளைக்காரர்களை எதிர்த்து படை திரட்டிப் போராடிய ஒரு தமிழ் இளைஞனின் கதை. ராஜ்கிரணின் ஜோடியாக நடிப்பவர் சௌந்தர்யா.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் சிதுரைபாண்டியன். இவர் முன்னர் 'ஊழியன்' படத்தை இயக்கியவர்.

## ஜெயராமுக்கு 31

நடிகர் ஜெயராம் தனது 31 வது பிறந்தநாளை சமீபத்தில் கொண்டாடினார். பிறந்தநாள் விழாவுக்கு குஷ்புவுக்கு அழைப்பும் விடமறந்து போனார். (திட்டமிட்ட மறதி)

ஜெயராமுக்கு தமிழ் படவுலகம் நன்றாக பிடித்துவிட்டது. அதைவிட நன்றாக ஒத்துழைக்கும் நடிகைகளையும் ரொம்பப் பிடித்துவிட்டது.



சரத்குமார்-நக்மா
படம் ரகசியபொலிஸ்

## பிஸியான சுகன்யா

ஞானப்பழம், மகாபிரபு போன்ற படங்களில் நடித்து முடித்துவிட்டு. இந்தியன், பரிவட்டம், சேனாதிபதி போன்ற படங்களில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார் சுகன்யா. 96ம் ஆண்டு அவருக்கு ராசியான ஆண்டாக மாறினால் ஆச்சரியமில்லை.

## ரகசிய பொலீஸ்

கடந்த ஆண்டு வெளிவந்த ரகசியப் பொலிஸ் படம் முதலில் டல்லடிக்க ஆரம்பித்து பின்னர் திடீரென்று வேகம் பிடித்தது. நக்மா-சரத் நடித்த காதல் காட்சிகளும் (ரொம்ப சூடு) பிரமாண்டமும்தான் படத்தின் வெற்றிக்கு காரணம் என்று கூறப்பட்டது. அதல்ல காரணம், ஜெயலலிதாவை எதிர்த்து சரத்குமார் போர்க்கொடி உயர்த்தியதுதான் ரகசியப் பொலிஸ் படமும் சூடு பிடித்தது என்ற பரவலான பேச்சு. ஜெயலலிதாவை எதிர்த்தால் படம் ஓடும் என்றால், பல நடிகர்கள் களத்தில் குதிக்கப்போகிறார்கள்.



## கௌரவ சுஹாசினி

'இந்திரா' படத்தை தமிழில் இயக்கி, 'பிரியங்கா' என்ற பெயரில் அதனை இந்தியிலும் தயாரித்து வெளியிட்டுவிட்டார் சுஹாசினி.

இனிமேல் சுஹாசினி நடிக்க மாட்டார் என்றுதான் நம்பப்பட்டது. அதனைப் பொய்யாக்கிவிட்டு 'இரட்டை ரோஜா' படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கிறார் சுஹாசினி.

கணவனை பணத்துக்காக விற்பனை செய்துவிட்ட ஊர்வசியை திருத்தும் பாத்திரமாம் சுஹாசினிக்கு. கதை பிடித்ததால் ஈடுபாட்டோடு நடிக்கிறார்.

## மாறியது கொள்கை

ஒரே நேரத்தில் ஒரு படம்தான் நடிப்பது என்ற கொள்கையை மாற்றிக் கொண்டுள்ளார் சத்யராஜ். சேனாதி, சிவசக்தி ஆகிய இரு படங்களிலும் ஒரே நேரத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். 'சேனாதிபதி' கிராமத்து காதல், மோதல் நிறைந்த படம்.

'சிவசக்தி'யில் கள்ளக் கடத்தல் செய்பவராக நடிக்கிறார் சத்யராஜ். முன்பு 'மக்கள் என் பக்கம்' படத்திலும் கள்ளக் கடத்தல்காரனாக நடித்திருந்தார்.

'அடிமை' படம் பாதியில் கைவிடப்பட்டுவிட்டது. இயக்குநர் செல்வமணிக்கும், தயாரிப்பாளருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்குத்தான் முறிவுக்கு காரணம்.

## விலைக்கு வாங்கிய கணவன்

'இரட்டை ரோஜா' படத்தில் ராம்கிக்கு இரண்டு ஜோடிகள். ஒருவர் குஷ்பு, இன்னொருவர் ஊர்வசி. ராம்கியை காதலிக்கிறார் குஷ்பு. அதற்கு குறுக்கே நிற்கிறார் ராம்கியின் மனைவி ஊர்வசி. அவருக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்து ராம்கியை கணவனாக்கிக் கொள்கிறாராம் குஷ்பு.

## யாரை நினைத்து வைத்தது?

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை மனதில் வைத்துக் கொண்டு பெயர் வைத்திருப்பார்கள் போல இருக்கிறது. புதிய படமொன்றின் பெயர் தான் அப்படி நினைக்க வைக்கிறது. "ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே" அதுதான் படத்தின் பெயர். இயக்குவது செந்தில் நாதன். அருண்பாண்டியனும், மன்சூரலிகானும் கதாநாயகர்கள். ராஜஸ்ரீதான் கதாநாயகி.



ராம்கி-முரளி
படம் இருவல்லவர்.



படிப்பகம்